
அறிஞர் அண்ணாவின்

# பொன் மொழிகள்

வானதி பதிப்பகம்



அண்ணாவின்

# பொன்மொழிகள்

2C 4179

தொகுத்தவர் :—

மலர்க்கொடி

மலர்க்கொடி பதிப்பகம்,

மதுரை-1.

முதற் பதிப்பு—1969.
பதிப்புரிமை உடையது.

மலிவுப் பதிப்பு

உள்நாடு விலை ரூ. 1-00.
வெளிநாடு விலை ரூ. 1-50.

# அண்ணாவைப்பற்றி...!

குள்ள உருவர், குறும்புப் பார்வை, விரிந்த நெற்றி, பரந்த நெஞ்சு, கவலையில்லாத தோற்றம், நகை தவழும் முகம், சீவாத தலை, சிறிதளவு வெளிவந்த தொப்பை, இடுப்பில் பொடிமட்டை, கையில் வெற்றிலைபாக்கு பொட்டலம் ... இந்தத் தோற்றத்தோடு, காட்சியளித்து ஏழை எளியவர், படித்தவர் பாமரர் இதயமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறாரே, அவர் தான் அண்ணாதுரை! அறிஞர் அண்ணா!!

ஏனைய எழுத்தாளர்களின் எழுத்தில் தமிழைக் காண்கிறோம். அறிஞர் அண்ணாவின் எழுத்திலோ தமிழரையே காண்கிறோம்.

அவருடைய உரையாடலிலும், சொற்பொழிவிலும் எழுத்திலும், அவசரச் சிந்தனை கிடையாது!

அண்ணாவின் எழுத்திலும், பேச்சிலும், உரையாடலிலும் கண்டெடுத்த முத்துக்கள் கடலினும் பெரிது. அவற்றையெல்லாம் தொகுத்திடுவது எளிதல்ல!

எண்ணிச் சுவைத்து, உரையாடி எழுதி, படித்துப் பார்த்து நெஞ்சமெல்லாம் இன்ப அமுதம் பெருக்கெடுத்தோடச் செய்யும் பொன்மொழிகளை, சிறு சுவடியாக்கித் தந்துள்ளோம்.

உண்மையிலேயே அண்ணா அமரராக வாழும் அகமாகிய தமிழகம் அவரது பொன்மொழிகளைப் பெரிதும் வரவேற்கும் என்று நம்புகிறோம்!

அண்ணாவுக்கு அளிக்கும் அன்புக் காணிக்கையாக இந்நூலை மலிவுப் பதிப்பில்—மிகக் குறைந்த விலையில்—மிகச் சிறந்த முறையில் உருவாக்கியுள்ளோம். அன்பர்கள் பெரிதும் விரும்புவர் என்ற எண்ணமே எங்கள் உழைப்புக்கு ஊதியம்!

—பதிப்பகத்தார்.

# அண்ணாவின்

# பொன்மொழிகள்!

புதியனவெல்லாம் நம் நாட்டுப் பழம் பெரும் பொக்கிஷங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவை என்று பேசிப் பூரிப்பதிலே பெருமை ஏதாவது உண்டா?

★

ஒரு நாட்டின் வாழ்வு, மற்ருேர் நாட்டின் பொருளாதாரச் சக்கரத்திலே பிணைக்கப்பட்டுவிடுவது சாதாரண விஷயமல்ல; கைதியின் நிலை! அந்த நிலை திராவிடத்துக்கு ஏற்பட்டுள்ளது.

★

ஏழையின் வயிற்றிலடித்துத் திரட்டிய பணத்தை உருட்டி வைத்துக்கொண்டிருக்கும் செல்வந்தர்கள், பழனிப் படிக்கட்டிலே, பவுனை இழைக்கிருர்கள். கோயிலில் கும்பாபிஷேகத்துக்குப் பாழாக்குகிருர்கள். மடாதிபதிகட்கும் குருமார்கட்கும் காணிக்கை தருகிருர்கள்.

★

மற்ற இடங்களில் ஜூவஸ், மினர்வா, அபாலோ, நெப்ட்யூன், தார், ஒடின், ஜூபிடர் முதலிய எண்ணற்ற கடவுள்களை வேலையினின்றும் நீக்கிவிட்டனர். இங்கு இன்றும் காட்டேரி, முனியனைக்கூடக் கைவிடவில்லை.

★

ஒருவர்மீது ஒருவர் காதல் கொள்ளுதலை மிகப்பெரிய கண்டம் எனக்கூறலாம். காதல் கொள்வதிலும் அபாயம்பற்றிக் கொண்டிருப்பது உண்மை. காதலர்கள் ஒரு சில காலத்திற்கே அன்னியோன்னிய உறவாடி இன்பவாழ்க்கை வாழ்கிருர்கள். சில காலத்திற்குப் பிறகு, அவர்களுள் நேசப்பான்மையும், ஒற்றுமையும் வளர்வதற்குப் பதிலாக வேற்றுமை தலைகாட்ட ஆரம்பிக்கிறது!

★

காதல் ஒன்றின் காரணமாக மட்டும் ஒருவரையொருவர் ஏற்று மணவாழ்க்கையில் பிரவேசித்தல் அறிவுடைமை ஆகாது ஆகவே, ஆண்களும் பெண்களும் உண்மையறிந்து விவாக விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

★

வேகமுள்ள காதல் உணர்ச்சியோடு அழகும், ரசிப்பும் சேர்ந்து விட்டால், அதை எதிர்க்க முடிவதில்லை.

★

பூரண வயதானவர்களிடந்தான் காதல் தோன்றுகிறது என்பதில்லை. காதல், இளமையின் ஆரம்பகாலத்தில்கூட இருக்கிறது.

★

கதியற்று, தாய்நாட்டை விட்டு வேறுநாடு போவோர் அக்கிகாரவாசிகள் அல்லர்.

★

சரித்திரத்தைப் பலவாறு மாறுபடுத்தி இருப்பதால் கூரிய புத்தியால் அனுதாபத்துடன் சுயநல பித்தலாட்டப் பிரசாரமாகிய தடித்த திரையைக் கிழித்தெறிந்து அதனுள் மறைந்திருக்கும் உண்மைகளைப் பகுத்தறிவுடன் கண்டுபிடித்து வெளியிடவேண்டும். சரிதமும் இலக்கியமும் சான்றோர் சொல்லும் திராவிடம் தனிநாடாக இருந்ததை மெய்ப்பிக்கின்றன.

★

திருட்டுத்தனமாகக் கனிதேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன்நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும். முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்துவிடுவானோ, வந்துவிட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன்பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும்போதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும். அடிக்கடி தோட்டத்துச் சொந்தக்காரன் வந்தால் எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்! ஆனால், அவன் மனம் இருப்பது தரையில்! இங்கும் நிலைக்கேற்ற நினைப்பில்லை. காரணம், எப்படி மூன்றுவது அடுக்கு மாடியில் உலவும் தொழிலாளிக்கு அந்த மாடிவீடு

சொந்தமில்லேயோ, அதுபோல மரஉச்சியில் கனிபறிப்பவனுக்கும் அந்த மரம் சொந்தமில்லை.

★

மாடாகப்போ! மரமாகப்போ! கல்லாகி கண்ணிழந்துபோ! என்று சாபம் கொடுக்கக்கூடிய காலமல்ல இது. எனவே, சாபம் கொடுப்பதற்குப் பதிலாக, மாடே, மரமே, கல்லே, கபோதி! என்று பலப்பல வசைமொழிகளை வீசிப்பார்க்கின்றனர், சீர்திருத்தம் கோருவோர்மீது! வசைமாரி கண்டு சீர்திருத்தவாதிகள் வருத்தப்படப் போவதில்லை.

★

நமது பிள்ளைகளிடம், நான்கு மாம்பழங்கள் வைத்திருந்தேன். அதை இரண்டு பேருக்குக் கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம்? என்று கணக்குப் போடுவோம். பிள்ளைகளோ மாம்பழம் எத்தனை என்று யோசிப்பதைவிட, மாம்பழத்தின் ருசி எப்படியிருக்கும் என்று யோசிப்பதில் நினைப்பை அதிகமாக செலுத்துவார்கள். ஆனால், இப்படியல்ல ஜெர்மனியில் பிள்ளைகளுக்குக் கணக்குப்போடுவது! 4 டாங்கிகள் தான் நம்மிடம் இருக்கின்றன. எதிரியிடம 8 டாங்கிகள் இருக்கின்றன. எப்படி இந்த 4 டாங்கிகளைக்கொண்டு எதிரியைத் தோற்கடிப்பது என்ற முறையில் கேள்வி இருக்கும் இன்னும் நிமிடத்திற்கு 60 மைல் வேகத்தில் செல்லும் விமானம காலை 7 மணிக்கு இங்கிருந்து கிளம்பி இலண்டனில் குறித்த இடத்தில் குண்டு வீசிவிட்டுவரவேண்டுமானால், எத்தனைமணி பிடிக்கும் என்று கேள்வி இருக்கும்!

★

திருத்தணி, திருப்பதி, திருவாரூர், சிதம்பரம் போன்ற திவ்ய க்ஷேத்திரங்களையும் ஆங்காங்கு நடக்கிற விழாக்களைப்பற்றியும் தெரிந்துகொள்ளக் காட்டுகிற அளவுக்கு ஆசையை, ரேடியோவின் மூலம் லண்டன், கல்கத்தா, இரங்கூன் ஆகியவைபற்றித் தெரிந்து கொள்வதில் காட்டமாட்டார்கள்.

★

அழகு இருந்தும், ஆர்வம் தரும் சக்தி இருந்தும், கலை உள்ளத்தைத்தரும் திறம் இருந்தும், கவனிப்பாரற்று—பருவமும் அழகும் இருந்தும், மணாளன் இல்லாத காரணத்தால் மங்கிய நிலவென உள்ள நம்நாட்டு விதவை போலவே உள்ளனர்—மறுமணம் செய்துகொள்ள

யும் அவர்கள் தயார்!—படகில் செல்ல, காட்டுப் பாதையில் நடக்க, ஆற்றங்கரையிலே உலவ, நேரம் ஏது?

★

பேச்சு—கருத்தின் தொகுப்பு; கருத்து —சிந்தனையின் விளைவு; சிந்தனை—காண்பன, கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம் ஒரே பொருள்! காண்போருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி, வெவ்வேறு கருத்தை அண்டி, அதற்கேற்ற முறையிலே பேச்சு பிறக்கச் செய்யும்; வேப்பிலை, வைத்தியர்—பூசாரி என்னும் இருவருக்கும் வேறான எண்ணம் தருவதுபோல!

★

கண் இருந்தும் குழியில்விழ, வேகமாகச் செல்பவனைக் கண்டால் கைகொட்டிச் சிரிக்கமாட்டோமா? கனி இருக்கக் காயைத் தேடித் திரிபவனைக் கண்டு, கேலிபேசாதிருப்போமா? வெண்ணெயை பறித்துக் கொண்டுபோக இடங்கொடுத்துவிட்டு, நெய் தரும்படி வேறோர் இடத்திலே நின்று கெஞ்சுபவனைக் கண்டால் சிரிப்பு வராமலிருக்குமா? ரஷ்யா சிரிப்பது இம்முறையிலேதான்! மனிதனை மனிதன் நாகரீகத்தின் பேரால் சுரண்டுவதையும் சுரண்டப்படுபவன் சூட்சமத்தைத் தெரிந்து கொள்ளாமலிருப்பதையும் கண்டு ரஷ்யா சிரிக்கிறது. ஏனெனில், அங்கு சுரண்டல் தொழில் ஒழிந்துவிட்டது!

★

யவனநாட்டுக் கலங்கள் தமிழ்நாட்டுக் கடற்கரையை முத்தமிட்டன. தமிழ்நாட்டு முத்துக்களை, இத்தாலிய நாட்டு எழிலரசிகள் தங்கங்களைக் கொடுத்து வாங்கினார்கள், தமிழ்நாட்டு மன்னனொருவன் ஈழநாடு சென்று வெற்றி பெற்றான். இமயத்தில் சேரசோழ பாண்டியர் களது இலச்சினைகள் பொறிக்கபபட்டன. தமிழர்களை எதிர்ப்பவர்கள் இலர். எட்டுத்திக்கும் வெற்றி முரசு கொட்டினார்கள். போரும் காதலும் அவர்கள் போற்றிய பொருள்கள்.

★

செய்தித் தாளிலே பிரெஞ்சுப் புரட்சி, பிரான்ஸ் நாட்டில்கொண்டாடப்படுவதையும் படிக்கிறார்கள். நம்நாட்டில் விநாயகசதுர்த்தி விழாக் கொண்டாடுவதையும் படிக்கிறார்கள். யாராவது சிந்தித்தார்களா? ஏன் நம்நாட்டிலமட்டும் விழா இவ்வளவு மோசமாக இருக்க வேண்டும்?

★

பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால்தான் மக்களுக்கும் பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும்; மனத்திலுள்ள மாசு நீங்கும்; காலத்துக்குத் தக்கதுபோலக் கருத்து வளரும்.

★

சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ள மாணவர்கள், கிராமாந்தரங்களுக்குச் சென்று அங்குள்ள பாமரமக்களுக்கும் அறிவு புகட்டவேண்டும்.

★

பணமுதலாளித்துவத்தைவிட, நில முதலாளித்துவமிருக்கிறதே அது, மனிதத்தன்மையை மாய்ப்பதிலே முதல்தரமானது.

★

பகுத்தறிவை முன்நிறுத்தி உழைப்பதே; இந்தியாவின் தற்கால இன்றியமையாத் தேவை.

★

கண்ணுக்கு எட்டிய தூரம் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டு காட்டு ராஜாக்களைப்போலக் காலந்தள்ளுபவர்களுக்குச் செல்வத்தையும் சுகத்தையும் சொத்துக்களையும் தேடிக்கொடுப்பதற்காகத்தான், காலையிலே கோழியுடன் எழுந்து, இரவு கோட்டான் கூவும்போது கொல்லைமேட்டைப் பற்றியே எண்ணி உழவன் உழல்கிறான்.

★

காலமெல்லாம் பாடுபடுபவனை அரைப்பட்டினியாகவே வைத்திருப்பதால், அடிமையாக நடத்துவதால், அவன் விவசாயத்தில் அக்கறையற்றுப் பிறகு திறத்தையும் இழந்துபோவதுடன், சமயம் கிடைத்ததும், இந்தச் செக்குமாட்டு வேலையைவிட, எங்கேயாவது கல் உடைக்கவாகவேனும் போகலாம் என்று நகரத்திற்குப் போய் விடுகிறான்.

★

சலிப்பும், சோகமும் நிரம்பிய விவசாயி ஓர்புறமும் அதிகாரமும் ஆணவமும் கொண்ட சுகபோகி மற்றோர்புறமும் இருந்து கொண்டு, விவசாயத்தை எப்படி வளமுள்ளதாக்க முடியும்?

★

அறிவுள்ள மனிதன் தன் வாழ்க்கைக்கு ஓர் இடம் தேடுகிறான். ஆம் அவன் வாழவிரும்புகிறான். வறியோனை வதைய மறுக்கிறான்.

வஞ்சகனாக வாழ்வது தன் மானத்தை அழிக்கும். எனவே அதனை வெறுக்கிறான். உள்ளது போதுமென்று உரைக்க மறுக்கிறது உள்ளம்! ஏனெனில் கண்ணெதிரே வளமுள்ள வாழ்வு நடத்துபவர் தெரிவதால்! எனவே, வாழ்வுக்கான போர் நடத்துகிறான்!

★

நிலமற்ற கூலி விவசாயியினாலும், உரிமை கொண்டாடி உழைக்க முன்வராத பண்ணை முதலாளியினாலும் நாட்டின் செல்வநிலை உயராது.

★

ஏழை! வாழ்வு சுமையாகி, அவன் வளைந்துபோகிறான். வாயில் லாப்பூச்சி; பொறுமையின் இருப்பிடம்; உழைப்பதில் அலுப்புத் தட்டாதவன், என்று அவனைப்பற்றிப் பேசப்படுகிறது. பாதி வாழ்வு அவனுடையது; அந்தப் பரிதாப உண்மையை இந்தப்பசப்பும் திரை போட்டு மூடி வைக்கிறார்கள்.

★

பல இனம், பலமொழி, பலகலை, பலகோட்பாடுகள் நிரம்பியுள்ள ஒரு பரந்த நாட்டில் மாறுபட்ட மக்கள் அனைவரையும் ஓர் ஆட்சியின்கீழ் கொண்டுவர முடியாது.

★

விஞ்ஞானத்தின் விளைவு, சுகபோகிகள் கையில் சிக்கிவிட்டது. மக்கள் உழைபபைக் குறைத்து, உற்பத்தியைப் பெருக்கும் சாதனங்கள் பலவும் சிலரிடமே குவிந்துவிட்டன. மக்களின் நல்வாழ்வு இவர்களின் லட்சியமாக இருக்கவில்லை. ஆதலால் பசிபசி என்னும் அழுகுரல், அதிகமாகிவிட்டது!

★

ஆதிக்கக்காரர்களின் பிடியில் சிக்கி, நாயினும் கேடாய் நலிந்து, வாழ்வு வளைந்து, மடமை மிகுந்து, உடலும் உள்ளமும் நைந்து, உருக்குலைந்து போயிருக்கும் ஒரு சமுதாயத்தினிடம்—பேசும் திறம் சிறிது பெற்றுள்ளோர், கல்வி கேள்விகளில் சித்தி பெற்றுள்ளோர், ஆதிக்கக்காரர்களை அதட்டிக் கேட்கவும், அதற்கான உரிமைக்குப் போராடவும் முந்துவர்.

★

சூழ்நிலையே மனிதரில் சிலரைக் குற்றவாளி ஆக்குகிறது. சமுதாய நிலை, கள்ளனை — காமுகனை — கொலைகாரனை — குடியனை — எத்தனை — பித்தனை — பிச்சைக்காரனை — வெறியனை உண்டாக்குகிறது.

★

கதைகளின் அமைப்பு படித்துக்கொண்டு போகும் போதே ஓர் உயர்தரமான படக்காட்சியைக் காண்பதுபோல்அமைய வேண்டும்.

★

திராவிடனின் கண்கள், ஏர்முனை, போர்முனை, கடலடி காட்டும் பாதை, வாய்க்கால், வரப்பு, நாட்டு நிலை இவைகளின் மீது செல்லும், ஆரியரின் கண்களோ, சத்தியலோகம், அதல, சுதல, விதல, தராதல, பாதாள லோகங்கள் ஆகியவற்றின்மீது செல்லும்!

★

பொதுமக்களின் கட்டுப்பாடான கிளர்ச்சியும், அந்தக்கிளர்ச்சியை நடத்திச் செல்லும் தலைவர்களுக்கு கஷ்ட நஷ்டங்களை ஏற்கும் துணிவும், அத்தகைய கிளர்ச்சியை ஆதரிக்கும் பண்புள்ள பத்திரிகையின் பலமும் ஒன்றுகூடினால், மமதைகொண்ட எந்த ஆட்சியையும் மாற்றிவிட முடியும்!

★

காலம் மாறக்கூடியது; மாறிக்கொண்டுதானிருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

★

பாட்டாளி கொடிய பணக்காரனுக்கு அடிமை; பணக்காரன், பூசாரிக்கு அடிமை; பூசாரி, ஏட்டுக்கு அடிமை; ஏடு, கலைக்கு அடிமை; கலை, கலா ரசிகர்களுக்கு அடிமை; கலாரசிகர்கள், பழமைக்கு அடிமை; அடிமைத்தனம் அறுபடும் மார்க்கத்தைப்பற்றிப் பாடுங்கள் என்கிறோம், கவிகளைப்பார்த்து!

★

தமிழ் நாட்டிலே காதலைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும் புலவர்கள் அதிகம் பேசுவதற்கும், எழுதுவதற்கும் காரணம், தமிழ் நாட்டின் இயற்கை எழில்!

★

இந்தச் சாதி மட்டம்; அந்தச் சாதி உசத்தி என்று ஜாதி மட்டக்கோலை நாம் வைத்திருக்கும் வரையில், இந்த நாடு நற்கதியடைய மார்க்கமில்லை!

★

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு பற்றி பிரசங்க பூஷணம் பேச்சானந்தர் சரமாரியாகப் பேசுகிறார். 'காண்பதெல்லாம் மாயை. பூண்பதெல்லாம் மாயையே காண்' பாடுகிறார். கல்யாணி ஆலாபனம். கைவிரலிலே 'ப்ளுஜாகர்' வைரம்! பக்கத்திலே வெள்ளிச் செம்பு; கற்கண்டு பொடிபோட்டுக் காய்ச்சிய பசும்பால் உள்ளே! பேசும் பொருள் கவனமிருக்கிறதா? மாயாவாதம்!

★

மாயாவாதமும் மனமருட்சியும் வாலிபர்களிடம் நெருங்க நடுங்கும். வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரம், வீணரின் கொட்டத்தை அடக்கியாக வேண்டுமென்ற வீரம், ஆபத்துக்களைப் பொருட் படுத்தாமல் அநீதியைக் கண்டால், கொதித்தெழுந்து தாக்கும் பண்பு, வாலிபர்களிடையே மிகுந்திருக்கும். சும்மாயிருப்பதா? நாம் என்ன சொரணையற்றவர்களா? புறப்படு, போரிடு, அநீதி ஒழியுமட்டும்; அல்லது நாம் ஒழியும்வரை போர், இந்தப் பேச்சுத் தான் வாலிபர் செவியேறும்.

★

கோபமாக இருக்கும்போது குப்பன் கூறுகிறான். அவனவன் ஜாதி அவனவனுக்கு உயர்வுதானய்யா என்று! அவனே, பிறகு குளிர்ந்த மனதுடன் இருக்கும்போது, என்ன இருந்தாலும் அவா மேல்ஜாதிக்காரர் என்று பேசுகிறான், குளிர்ந்த மனதுடன் இருக்கும் போது மேல்ஜாதிக்காரன் கூறுகிறான். குப்பா! ஜாதியிலே என்னடா இருக்கிறது? எல்லாம் அவாள் அவாள் குணத்தைப் பொறுத்து இருக்கிறது, என்று! ஆனால், கோபம் பிறந்தாலோ அவர் கொக்கரிக்கிறார், குதிரையும் கழுதையும் ஒன்றாகுமா? கையிலே உள்ள ஐந்து விரலும் ஒரே அளவா? என்றெல்லாம்! இதுபோலத்தான் இந்த சிறந்த இலட்சியத்தைப் பற்றி மக்கள் பேசுவதைக் கூர்ந்து கவனித்தால், ஊஞ்சல் ஆடுவது போல சறுக்குமரம் ஏறுவதுபோல சமதர்மப் பேச்சு காணப்படும். சட்டம் ஜாதியைக் கவனித்துத் தடைபோடாது!

★

இதிலா? அதிலா? எதில் கிடைக்கும் கருதாத களிப்பு? என்று ஆராய்கிறான், அறிவுடைய மனிதன்! சித்தாந்தத்திலே,

வேதாந்தத்திலே, மோனத்திலே, பரமன் பற்றிய ஞானத்திலே, கலையிலே எதிலெல்லாம் கிடைக்கும் 'வாழ்வின் சுவை' என்று தேடிய வண்ணம் இருக்கிறான், தெளிவுள்ள மனிதன்! அஃதற்றவன் ஆமையாகிறான்!

★

குண்டலம் அணிந்த குருமார்களையும், குருந்தடிபிடித்து உலவிய உத்தமரையும் ஏககாலத்தில் கண்டபோது, கண்டறியாதன கண்டோம் என்று களித்தனர்! காதகனுக்குக் கண்ணிலேயும் கருத்திலேயும் கடுவிஷம் — கொன்றான் உத்தமரை — அருளொழுகும் கண்ணுடையவர் என்று மக்கள் கூறக்கேட்டும், ஏசுவைச் சிலுவையில் அறைந்த வஞ்சகர் போல!

★

மனம்போன போக்கிலே மற்றவர்கள் பேசவும் எழுதவும், அதனைக் கண்டு மனம் பதறாமல் பணியாற்றி வருவதுமே, தூய தொண்டுக்கு அடையாளம்!

★

எவரும் எந்தவிதமான காலித்தனத்திலும் ஈடுபடுவது ஆகாது! அதுதான் அவர்தம் முறை—அவ்வளவுதான் அவர்தம் திறம்—அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு என்னிடம் உள்ள பற்று, நம்பிக்கை, அன்பு, என்றால் அப்படிப்பட்டவர்கள் கழகத்தில் இருப்பதை, நான் என் இதயத்தில் எறியப்படும் ஈட்டி என எண்ணாமல், வேறு எப்படிக் கருதமுடியும்?

★

கல்லோ, சுடுசொல்லோ, செருப்போ, மறுப்போ—எதனை எவர் வீசினாலும், அவை என் மீது வீசப்பட்டதாகவே நான் கொள்கிறேன்! எனக்கு, கேவலத்தைக் கஷ்டப்பட்டுத் தேடிக் கொடுக்கும் சிறுமைச் செயலாகவே கருதுகிறேன். எனவே, இறைஞ்சுகிறேன்—கோபம், கொந்தளிப்பு, அருவருப்பு, மனக்கசப்பு அகற்றுமின்! இழிசெயலில் ஈடுபடாது, கழகத்தின் ஏற்றம் வளர உழைத்திடுமின்!

★

இந்தக் கழகம், கல் போடலாமா—செருப்பு வீசலாமா—என்று பிறர் கேட்கவேண்டும் என்பதற்காகவே, சிறிய சம்பவங்களையும் பெரிதாக்கிக் காட்டச் சில ஏடுகள் காத்துக் கிடக்கும் காலம்! இதனை

நன்கு உணர்ந்து நடந்திடும் பொறுப்பினை அனைவரும் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

★

பூக்கடைக்காரனுக்கு புண் ஏற்பட்டு, மருந்து தடவிக்கொண்டிருக்கலாம். அந்த மருந்து நாற்றமடிக்கக்கூடும். ஆனால் அவன் கடை மல்லிகையின் மணம் போயாவிடும்? காய்ச்சல் காரணமாக சாறும் சோறும் கசப்பாயிருக்கலாம்; ஆனால், சாறும் சோறும் எல்லோருக்குமா கசப்பாக ஆகிவிடும்?

★

வைரக்கடை முதல் வட்டிக்கடை வரையில் சிற்றுண்டிக்கடை முதல் செருப்புக்கடை வரையில், எல்லா வியாபாரங்களையும் வடநாட்டாரே கைப்பற்றிக்கொண்டுவிட்டால், தென்னாட்டின் பொருளாதார நிலை என்னவாகும் ?

★

தென்னாடு வளம்பெறவேண்டுமானால் எந்த ஆட்சி எப்போர்ப்பட்ட திட்டத்தை வகுத்தாலும் முடியாது. வடநாட்டானை வெளியேற்றி, அவனுடைய சுரண்டலையும் நிறுத்தினாலொழிய, திராவிடத்தின் வறுமையை ஒழிக்கமுடியாது !

★

வெட்டுக்கிளியும் வேங்கையும், வலுவிலே ஒன்றுகா! எனினும், இரண்டும் பாயத்தான் செய்கின்றன !

★

மரத்தை வண்டு துளைத்திடக் காணும் விறகுவெட்டிக்கு காரியம் எளிது என்ற எண்ணம்தானே எழும் !

★

விளக்கம் என்பது, உள்ள நிலைமையை எடுத்துக் கூறுவது தானே !

★

ஒவ்வொரு சூழ்நிலையும் ஒவ்வொரு கதை சொல்லும், ஒவ்வொரு புள்ளினமும் ஒவ்வோர் இசைபாடுவதுபோல ! மழையாகப் பெய்யும் போது ஒரு ஓசை; காட்டாறுகப்போகும்போது வேறோர் இரைச்சல்; அருவியாகும்போது மற்றோர் வகையான ஒலி ! எல்லா இடத்திலும் காண்பது தண்ணீரைத்தான் ! எனினும் வெவ்வேறு ஒலியன்றோ

கேட்கிறோம்? காற்றினில் ஆடை விலகுகிறது, கொடிகள் அறுபடுகின்றன, செடிகள் சிதறுகின்றன, மரங்கள் பெயர்ந்துவிடுகின்றன— சில வேளைகளிலே, அதே காற்று பூங்கொடியைப் புள்ளினம் ஊஞ்சலாக்கி மகிழவைக்கிறது! வெப்ப நாட்களில் விருப்பம்; குளிர் நாட்களிலே அருவருப்பு! காற்றின் மீது குறையா? நிலைமை, நினைப்புக்குக் காரணம். நிலைமையை ஏற்படுத்தியது காற்ற? அல்லவே! சூழ்நிலைதான்! எனினும் ஒவ்வொன்றுக்கும ஒவ்வோர் 'காப்பியம்' ஏற்பட்டுவிடுகிறது

★

கசையடியால் ஏற்பட்ட புண்ணுக்கும், களத்திலே பெற்ற புண்ணுக்கும் பொருள், தன்மை, தரம் எல்லாவற்றிலும் மிகுந்த வேறுபாடு உண்டு! புலவர்கள் புகழ்ந்திடுவர், களத்திலேற்பட்ட புண் காணின்!

★

தாயை இழந்த மான்குட்டிகள், அலறித் துடிக்கின்றன. சிங்கக் குட்டிகளோ, மானிறைச்சியைத் தின்று ஆடுகின்றன; சிங்கம் கண்டு மகிழ்கிறது; குகையிலே குதூகலம்; புதரருகே புலம்பல்! உலகமே, அழிவுச் சக்தியும் அதனை மீறி எழும் சக்தியும மோதிக்கொள்ளும் போர்க்களம்!

★

காற்றே இல்லையென்றால் ஒரே புழுக்கம்! காற்று அதிகமானால் எதுவும் சிதறும், அடிபெயரும்! எனவே, அதனை—உணர்ச்சியை முறைபடுத்துதல் வேண்டும். அதனை முறைபபடுத்துவதே, அறிவாளர் கடன்!

★

மரப்பொந்தோ, மாளிகையோ—எங்கு அழிவு நுழையினும் அலறல், கதறல் கிளம்புகின்றன!

★

கொல்லன் பழுக்கக் காய்ச்சின இரும்பை சம்மட்டியின்மீது வைத்து அடித்து எதிரியின் மார்பைக் குறிபார்த்து வீசக்கூடிய கூர்வேலாக்கித் தருவதுபோல் ஆச்சாரியார் நாம் நாட்டை ஆட்சி செய்ய நல்ல பயிற்சியளித்து வருகிறார், சிறைக்கு அனுப்புவது மூலம்!

★

வீணையின் கம்பிகளை இழைப்பதை நிறுத்திவிடுவதால் அதன் நாதத்தை அழித்துவிட முடியாது. சீப்பை ஒளித்துவைத்து விடுவதால் கல்யாணத்தை நிறுத்திவிட முடியாது!

★

யார் யார் சனாதனக் கோட்டைகளைத் தகர்த்தெறியவேண்டுமென்று கருதுகிறார்களோ, யார் யார் மக்கள் உள்ளத்தில் படிந்துள்ள மாசுகளைத் துடைத்துச் சீர்திருத்த வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, யார் யார் மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்க வேண்டுமென்று முனைகிறார்களோ அவர்களெல்லாம் திராவிடர்கள். அவர்கள் வங்கத்திலே பிறந்தாலும் சரி, சிந்துவிலே இருந்தாலும் சரி அவர்கள் திராவிடர்கள் தான்!

★

பெரும்படை, பட்டாளம், போலீஸ், ஜெயில் இவை இருப்பதால் உரிமைப் போராட்டம் நடக்க வழியில்லையென்று எந்த சர்க்காரும் எண்ணக்கூடாது.

★

பொதுவுடைமைத் தத்துவத்துக்கும் கழகக் கொள்கைக்கும் அதிக வித்தியாசமில்லை கம்யூனிஸ்டுகள் பொருளாதாரத் துறையினில் மட்டும் கவனம் செலுத்துகிறார்கள் அவர்கள் சமுதாயத் துறையிலே, சமூக சீர்திருத்தத்திலே முதலில் நாட்டம் செலுத்திய பின்னர்தான் பொருளாதாரத் துறையிலே சர்க்காரிடம் போரிடவேண்டும் என்பது நம் விருப்பம். அப்போதுதான் வெற்றியும் எளிதில் கிடைக்கும்.

★

சமுதாயத் துறையிலே ஒரு புரட்சியை உண்டாக்கிய பின்னர் தான் மக்கள் லெனினை வரவேற்றார்கள். ஒரு வால்டேர் தோன்றிய பின்னர்தான் ஒரு லெனின் தோன்ற முடிந்தது. லெனின் தோன்றுவதற்குமுன் ஒரு வால்டேர். ஒரு ரூஸோ தோன்றியாகவேண்டும்.

★

போப்பின் கொடுமையைக் களைந்து எறிய—உலகம் தட்டையாக இல்லை, உருண்டையாக உள்ளது என்று சொல்ல—அண்டத்தில் உள்ளவற்றைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கண்டு தெரிவிக்க—அலைகடலின் ஆழத்தை அறிந்துகூற, பல அறிஞர்கள் தோன்றிப்

பாதையை அழகுறச் செப்பனிட்ட பின்னர்தான் புரட்சித்தேவன் தோன்றி வெற்றியுடன் உலாவ முடிந்தது.

★

நம் நாட்டிலே உண்மைச் சரித்திரம் நிலவவேண்டுமானால் ஜாதிபேதம் ஒழியவேண்டும். ஜாதிக்கோட்டையை இடித்துத் தகர்த்தால்தான் அடிப்படை இறுகிக் கெட்டியாக இருக்கும் மூடப்பழக்க வழக்கங்களை முறியடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் அஸ்திவாரம் பலமாக இருக்கும்.

★

தொழிலாளர்களில் பலர் மாயப்பிரபஞ்ச வாழ்வைப்பற்றியும் ஆண்டவன் திருவடியில் இரண்டறக் கலப்பது எப்படி என்பதைப் பற்றியும் சிந்தனை செய்துகொண்டிருக்கிறார்களே, அதை முதலில் போக்கடிக்க வேண்டும். நாம் வாழப்பிறந்துள்ளோம் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

★

மானைக்கொல்ல புலியார் ஏன் விரும்புகிறார்? மானைக்கொன்றால்தான் புலியார் வாழமுடியும். நம்மைச் சுரண்டித்தான் பிர்லாக்கள் பிழைக்க வேண்டும் என்ற நிலையிருந்தால், நாட்டுக்கும் காட்டுக்கும் என்ன வித்தியாசம்?

★

தெருவுக்குத்தெரு திருப்புகழ் பஜனை, தெருவுக்குத்தெரு உடுக்கைச்சத்தம், வீதிக்கொரு பிள்ளையார் கோவில்—இப்படியிருந்தால், எப்படி லெனின் பிறப்பான்? எப்படி மாசேதுங் பிறப்பான்?

★

என்னதான் தஞ்சாவூர் சம்பா, அருமையான விதையாக இருந்தாலும்—பதமான விதைதான் என்று பாறையிலே தூவினால் பலன் கிடைக்குமா?

★

நேருவுக்கு அமெரிக்காவில் வரவேற்புக்கு மேல் வரவேற்பு. உபசாரத்திற்கு மேல் உபசாரம். விருந்துக்குமேல் விருந்து! இவ்வளவும் ஏன்? நேருவை அமெரிக்க முதலாளிகளிடம் சிக்க வைப்பதற்காகவே!

★

மணிமுடி தரித்த மன்னர்கள், குருமார்கள், மடாதிபதிகள், ஜீயர்கள், தம்பிரான்கள் முதலியோரால் ஒரு நாட்டின் முற்போக்கு தடைபடுகிறது.

★

பஞ்சாங்கமில்லாத வீடுகளை நீங்கள் காணமுடியாது. நாள் பார்க்காத மக்களை நீங்கள் பார்க்க முடியாது. சகுனம் கேட்காத ஜென்மங்களை நீங்கள் காண்பது அரிது. மார்கழித்திருநாள் கொண்டாடாத மக்கள் மிக மிகக் குறைவு சித்திரா பௌர்ணமிக்குப் பொங்கலிட்டுப் படைக்காத வீடுகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பஞ்சாங்கம் பார்க்கும் பழைய புத்தி அடியோடு ஒழிந்தாலொழிய மக்கள் பகுத்தறிவைப் பெற முடியாது.

★

சொக்கநாதர், அரங்கநாதர், மீனாட்சி, காமாட்சி கோயில்கள் இன்னும் இருக்கின்றன. இவைகள் குறைந்தால்தான் நாடு முன்னேறும்.

★

நாட்டிலே நல்லறிவு பரவினால்தான் அடிப்படை பலமாக இருக்கும்

★

கிணற்றினை ஒரு ஆணியைக்கொண்டு தோண்டிவிட முடியாது கடப்பாறை இருந்தால் கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தோண்டி முடிக்கலாம் ஆணியை உபயோகித்தால் கையில்தான் காயம் உண்டாகும்.

★

நாகரீகமென்பதன் பொருள் விலங்கினங்களைவிட மனிதன் குறைவாக வேலை செய்து அதிக பயன் அடைவதுதான்.

★

கோழியோடு அதிகாலையில் விழித்தெழுந்து கோட்டானோடு தூங்குகிறான் நம் தொழிலாளி. ஓயாமல் உழைத்து உழைத்து அருமையான பொருள்களை உற்பத்தி செய்கிறான் தொழிலாளி. ஆனால் அவன் வாழும் வாழ்க்கை எப்படி? சுருங்கச் சொன்னால் அவன் வாழ்வது மிருக வாழ்க்கைதான்! மிருகங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுகூட ஏழைத் தொழிலாளிக்கு கிடைக்கவில்லை. உற்பத்தியைப் பெருக்கும் தொழிலாளி உயர முடிகிறதா?

★

மக்களிடையே காணப்படும் மூடப் பழக்கவழக்கங்களை முறியடிக்க ஜாதிமதக் கோட்டையைத் தகர்த்து சுக்கு நூருக்கவேண்டும். ஒவ்வொருவரும் வாக்குறுதியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

★

ஸ்தாபனம்—அதாவது அமைப்பு — பலருடைய எண்ணங்களைத் திரட்டி பலருடைய சக்திகளை ஒருங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஓர் பொது இடம்—பாசறை. பாசறையிலே பலவிதமான போர்க் கருவிகளும் வீரர்களும் தேவை — கருவிகளின் எண்ணிக்கையும் வகையும் வாய்ந்துகொண்டு இருக்கவேண்டும்.

★

பாசறையின் உபயோகம் அதிகப்படவேண்டுமானால், வாள் மட்டும் போர் போலக் குவித்து வைத்துக்கொண்டு, கேடயம் தேடாமல் இருப்பதோ; விற்களைக் குன்றெனக் குவித்துக்கொண்டு அம்புகள் இல்லாமலிருப்பதோ; துப்பாக்கிகளைக் கிடங்குகளில் குவித்து வைத்துக் கொண்டு வெடிமருந்து தேடாமலிருந்துவிடுவதோ; இவை யாவும் ஒழுங்காகவும் தேவைக்கேற்ற அளவும் இருந்து இவைகளைத் திறம்பட உபயோகிக்கும் ஆற்றலுள்ள வீரர்கள் இல்லாதிருப்பதோ; வீரர்கள் இருந்தும் இவர்களை நடத்திச் செல்லும் படைத்தலைவன் இல்லாதிருந்தால் பாசறை இருந்து என்ன பயன்? அழகிய சிலை போலிருக்குமே தவிர, பயன் தரும் மனிதராக இருக்கமுடியாது.

★

சிலருடைய தயாள குணத்தினால், ஒரு பெரிய கூட்டத்தில் வளர்ந்து வரும் தொல்லைகளைப் போக்கிவிடமுடியாது.

★

இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர, ஆர்வமூட்ட, அகமகிழ்ச்சி பிறக்க; நன்னெறியைக் காட்டப் பயன்படவேண்டும்.

★

கந்தசாமியும் கலெக்டர்! கார்த்திகேயனும் கலெக்டர்! கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர்! கந்தசாமி பில்கலெக்டர்! அதுபோல, இந்தியும் ஆட்சிமொழி! தமிழும் ஆட்சிமொழி! இந்தி எதற்கு ஆட்சி மொழி என்றால், எல்லா நாடுகளும் இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்ள அது பயன்படும் ஒரு ராஜ்யத்திற்கும்—மற்றொரு ராஜ்யத்திற்கும் அது பயன்படும். சட்டங்கள் இயற்றப்பட்டால் மொழியில்

எழுதப்படும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த மொழியிலே பிறப்பிக்கப்படும் கார்டு கவர்களில் அந்த மொழிதான் பொறிக்கப் படும். இரயில்வே பிளாட்பாரத்தில் உள்ள பலகைகளில் அந்த மொழிதான் இருக்கும்—அப்படிப்பட்ட ஆட்சிமொழியானது இந்தி அது—ஜில்லா கலெக்டர்.

★

வாழைப்பழத்தை உரித்துச் சாப்பிடுவது மிக எளிதான காரியம். பலாப்பழத்தை உரித்துச் சாப்பிடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

★

தமிழும் ஆட்சிமொழி — அது பில்கலெக்டர்! இன்னின்ன வரி கொடுங்கள் என்று வாங்கி, பில்கலெக்டர் முனிசிபாலிடியில் கொடுப்பது போல தமிழை இன்னின்ன இடத்தில் படியுங்கள் என்று எடுத்துச் சொல்வதற்குத்தான் தமிழ் இங்கே ஆட்சிமொழியாக இருக்கிறது.

★

வீடு சின்னதாக இருக்கும் காரணத்தாலேயே மனம் சின்ன தாக இருக்கும் என்று அர்த்தமல்ல!

★

மாற்றான் தோட்டத்து மல்லிகை யென்பதால் அதற்கு மண மிருக்காது என்று உரைப்பவனல்ல நான்.

★

சுதந்திரக் குழந்தைக்குப் பாலூட்டி விட்டால் மட்டும் போதாது. தாலாட்ட வேண்டும். சொக்காய் போடவேண்டும். விளையாட்டு காட்ட வேண்டும். இது அத்தனையும் தாயே செய்துவிட முடியாது. மாமன்மார் விளையாட்டுப் பொம்மைகள் தர, தங்கை தாலாட்டுப்பாட, உற்றார் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொஞ்சிட இவ்விதம் வளரவேண்டும் சுதந்திரக் குழந்தை.

★

மலர் பறித்திட பூங்கா அமைக்கும் வேளையிலே பசும்புல் தரையிலே ஒளிந்திருந்து காலினைத் தீண்டும் நச்சரவுபோல கிளம் பிற்று சீனப்படையெடுப்பு.

★

உத்தமர் வாங்கித்தந்த விடுதலையை மறைத்துக் கூறுபவன் ஏமாளி!

★

வெற்றிவாகை சூடி, பேரரசு அமைத்த பெருவீரர்கள் வாழ்ந்த வீரபுரி இந்நாடு மாவீரர்கள் நடாத்திய போர் பற்றி புலவர்கள் இயற்றியுள்ள காவியம் பல பெற்ற நாடு. கூனன் நிமிருவான். கோழையும் வீரனாவான், புலவர்கள் பாடியுள்ள பரணி படித்தால்!

★

மண்ணாசை மட்டுமே காரணம் சீனப்படை எடுப்புக்கு? என்றால், இல்லை. மண்ணாசையுடன் வேறோர் நோக்கமும் இருக்கிறது. அது இந்தியாவிலேயே வெற்றிகரமாக நடைபெற்றுவரும் ஜனநாயக முறைக்கு வேட்டு வைத்துத் தகர்த்துவிட்டு ஆசியா முழுவதிலும் சர்வாதிகார முறையைப் புகுத்தவேண்டும் என்பதும் ஆகும்

★

இந்தியாதான் உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக அமைப்பு புதிய ஜனநாயகம் என்று கூறுவர் — இருக்கலாம். ஆனால் இதுதான் உலகிலேயே மிகப்பெரிய அளவிலே நடைபெற்றுவரும் ஜனநாயக அமைப்பு என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

★

முத்தமிழ் என்றால் அது முக்கனித் தோட்டம். மா, பலா, வாழை என்பவை இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழுக்கு உவமை.

★

பரலோகத்தைப் படம் பிடித்துக் காட்டுவனவாக உள்ளன பழைய இசைகள். அவை தற்காலத்துக்குத் தேவையான சிந்தனைக் கருத்துக்களை அள்ளிவீசும் அறிவுத் தென்றலாக மாறவேண்டும்.

★

கலிங்கத்துப் பரணியிலே தமிழனின் வீரம் நன்கு எடுத்துரைக்கப்படுகிறது கடினமான பிரதேசத்தைக் கைப்பற்ற பூதத்தை அனுப்பிக் கைப்பற்றியதாகக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது. வேதங்களையோ, வேதியர்களையோ அனுப்பியதாகக் கூறவில்லை.

★

சங்க நூல்களைச் சங்கையறக் கற்றால் அதிலே எவ்வளவோ அரிய கருத்துக்களைக் கண்டு மகிழலாம்!

★

கலைகடலிலே பாய்மரக் கப்பலிலே செல்ல முடியுமா? பாய்மரக் கப்பலிலே போனால் பாய்தான் மிச்சமாகுமே தவிர ஆள் மிச்சமாக முடியாது.

★

உயர்ந்தவன், தாழ்ந்தவன், தீண்டாதவன் என்ற பாகுபாடுகளை ஏற்படுத்திய புராணங்களை ஒழிக்க வேண்டும்.

★

தனிமனிதனின் பண்பாட்டைவிட பொதுமக்களின் நலன்தான் முக்கியம். தனி மனிதனுக்கும் பண்பாடு தேவைதான். தனிமனிதனின் பண்பாட்டைக் கருதிப் பொது மக்களின் நலனைக் கவனிக்காமல் இருக்கக்கூடாது.

★

தோட்டம் நல்ல தோட்டமாக இருந்தால்தான் மரஞ்செடிகளும் வளரும். காயும் கனியும் தோப்பும் நல்ல தோப்பாக இருக்கும். தோட்டம் கெட்டிருந்தால் மரஞ்செடி எப்படி வளரும்?

★

புராணங்களால்தான் மக்கள் மாக்களாக்கப்பட்டனர். உயர்ந்தவன், தாழ்ந்தவன், செல்வன், வறிஞன், தீனன், தீண்டாதவன் போன்ற கீழ்த்தரமான பாகுபாடுகளைக் கற்றுக் கொடுக்க ஏற்பட்ட புராணங்களை மாற்றியே தீரவேண்டும். மனிதனாக வாழவேண்டிய அறிவுப்பட்டியலை ஆயிரமாயிரம் தயாரித்துத்தர அறிஞர்கள் அறப்பணி ஆற்றவேண்டும்.

★

கலம் ஓட்டிய மனிதன் களவாடியதேன்? கட்டிடமெழுப்பிய மனிதன் கள்ளக் கையெழுத்திட்டதேன்? போர்முரசு கொட்டிய மனிதன் போக்கிரியானதேன்? பொன்னெடுத்த தமிழன் பொய் பேசியதேன்? கண்ணியத்தைப் பெற்ற மனிதன் கற்பழித்ததேன்? நல்லவனாக இருந்தவன் நாடோடியானதேன்? எல்லாவற்றிற்கும் காரணம் சூழ்நிலை

★

திருஞானசம்பந்தரைப் பற்றியும் இரணியனையும் நரசிம்மனை யும் பற்றி நாட்டு மக்களிடம் காட்டினால் போதாது. அலெக்ஸாண்டர், நெப்போலியன் போன்றோரின் உருவத்தை நாட்டு மக்களின் மனத்திலே கொண்டுவந்து நிறுத்தவேண்டும்.

★

விதி நமது பரம்பரை நோய்—பூர்வீகச் சொத்து. ஆஸ்ரமத்திலே பிறந்து அரண்மனையிலும் குடிசையிலும் சரிசமமாகப் படர்ந்த பழம்பெரும் நோய்.

★

பழம் அழுகுவதுபோல, மலர் கசங்கி மணத்தை இழந்துபிறகு கெட்ட வாடை கொள்வதுபோல, தழை சருகு ஆவதுபோல, கட்டிடங்கள் கலைந்து குப்பைமேடு ஆவதுபோல, பலப்பல தத்துவங்களும் ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஓர் நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.

★

செல்லுபடியாகாத நோட்டுகளைச் சேகரித்து வைத்து சிறு பிள்ளைகள் விளையாடினால் கேடு அதிகம் இல்லை. ஆனால் அந்த நோட்டுகள் செல்லுபடியாகவேண்டும் என்று வாதாடினால் நாட்டுக்கு கேடு

★

விதி என்னும் சட்டமறைன், டார்ப்பிடோ, விமானம், விஷப்புகை, வெடிகுண்டு இவைகளைப் போன்ற படைக்கலங்களைக் கொண்டு இல்லை. அப்படிப்பட்ட படைக் கலங்களைக் கொண்ட ஒரு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபட்ட நமக்கு—காலமெனும் செல்லரித்த ஏடுகள், அவைகளிலே காணப்படும் கருத்துக்குழப்பம் தரும் கற்பனைகள், அந்தக் கற்பனைகளை நம்பிப் பிழைக்கும் கூட்டங்கள் ஆகிய இவ்வளவு படைக் கலன்களை மட்டுமே கொண்டுள்ள விதிக்கு அடிமைத்தனம் என்னும் பழமையை முறியடிப்பது முடியாத காரியமல்ல!

★

அண்ணா! கட்டளையிடுங்கள், கடமையைச் செய்கிறோம். என்று அடிக்கடி வற்புறுத்தினார்கள். நான் கட்டளையிடுபவனல்ல. அத்தகைய நிலையிலே உள்ளவனுமல்ல! சிலர் என்னை வழிகாட்டுங்

கள். வாகை சூடி வருகிறோம் என்பார்கள். நான் வழிகாட்டியுமல்ல என்றே அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். வழிகாட்டி, மத சம்பந்தமாக வந்த ஒரு வைதீக வாடை அடிக்கும் சொல்!

★

நமக்கு இடையில் ஏற்படும் சபலங்களை விரட்டிடும் துணிவு மட்டும் வந்துவிட்டால் நாம் நிச்சயம் வெற்றியடைவோம்.

★

கண்ணன் சிறு வயதிலேயே வெண்ணெயைத் திருடும் நேரத்திலேயே, திருடாதே என்று தடுக்காததால் பெரிய வயதில் சேலையையே திருட ஆரம்பித்துவிட்டான்.

★

மழை பெய்தால் ஒதுங்கி நிற்போம் சிறிது நேரம்—ஓய்ந்து விட்டால் [illegible] தொடர்ந்து நடப்போம். பனி, மழை, வெய்யில், குளிர் [illegible] நிறுத்தாது—பாதையை [illegible]

★

சட்டசபை அலங்காரமானது. எம். எல். ஏ. பதவி லாபகரமானது மந்திரிப் பதவி மயக்கம் தரக்கூடியது.

★

சென்னை மாநில மோட்டார் போக்குவரத்தை தோழர் ஜி. டி. நாயுடுவை அழைத்து, அவரையே [illegible] மேனேஜராக இருந்து நடத்தச் சொல்லுங்கள். [illegible] அவர்களாக நடத்தும் [illegible] பேருந்துகள். [illegible] தீர்ப்பளியுங்கள். பிறகுப் புரட்சிக் கதைகள் மனதில் உருண்டு உருண்டு வரும்.

★

[illegible] அளவு இந்தியா—பூசணி அளவுதான் இலங்கை. ஆனால் யானை பூசணியிடம் பிச்சை கேட்கிறது. இந்தியாவிற்கு இலங்கை அரிசி அனுப்புகிறது.

★

மனதை மயக்கும் மாயக்கள்ளன் தேர்தல்.

★

வளர்ந்திருக்கும் ஆர்வத்தை வகைப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் நம்மையே அது கொன்றுவிடும். ஆர்வத்தை அளவில்லாமல் வளர்த்திருக்கிறோம் — அதற்கேற்ற பணியாற்றும் வழி அமைக்க வேண்டும்.

★

அடக்குமுறைகள் எல்லாம் விளையாட்டுக் கருவிகள்.

★

லட்சியத்தை அடைய கஷ்ட நஷ்டம் அடைதல் எனும் விலை கொடுத்தாகவேண்டும்.

★

நமக்கு சூத்திரர், கீண்டப்படாதவர், நாலாம் ஜாதி ஐந்தாம் ஜாதி என்கிற பெயர்கள் தான் இருக்கின்றன. இது சரியா? சம்மதமா? இது மாற்றப்படவேண்டாமா? அதற்கானவை செய்ய வேண்டாமா? இதைச் செய்வதைவிட மந்திரிப் பதவி கவர்னர் பதவி ஆகியவைகள் பெரிதும் அவசரமும் அவசியமுமானவை?

★

முதலில் சமுதாயத்தில் பிறவியின் பேரால் உள்ள பேதங்களை ஒழித்தாகவேண்டும். அதுவே, இந்நாட்டு சமதர்மத்திற்கு முதல் படியாகும்.

★

மாபெரும் சனியனான ஜாதிமத பேதத் தொல்லைகள் மனித சமூகத்தைவிட்டுத் தொலையவேண்டுமானால், மனிதனுக்கு விஞ்ஞான அறிவும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை.

★

எட்டுமுறை சிறை சென்ற தீரன். தமிழரின் தீரத்தைப் பாடி, ஆச்சாரியார் ஆட்சியைச் சாடி, அறுபதாம் ஆண்டிலே வெஞ்சிறை புகுந்த வெற்றிவீரன், வாலிபர், தோழன். வற்றாத பகுத்தறிவின் காவலன். அவர் காணாத களம் இல்லை! வெற்றி பெறாத போரில்லை!

★

பதவியில் நமமை உட்காரவைக்க மாட்டார் பணம் காசு தரமாட்டார் சட்டசபைக்கு அழைத்துச் செல்லமாட்டார். பட்டம் வாங்கித் தரமாட்டார். ஒரு பாராட்டுரைகூட வழங்கமாட்டார் என்பதை அனுபவப் பூர்வமாகத் தெரிந்திருந்தும், ஆயிரமாயிரம் இளைஞர்கள் அவருக்குத துணை நிற்பது, வேறு எங்கும் காணமுடியாத அற்புதம்—பெரியாரின் பெரு வெற்றி.

★

உழைக்காது வாழும் மனிதர்கள் வாழும்போது விதைக்காது விளையும் கழனி ஏன் இருக்காது ?

★

அரசன் உழைப்பதில்லையே தவிர வேறு வேந்தரின் படை எடுப்புக்கும, ஊாக்கோபததுக்கும அஞ்சி வாழ வேண்டும்.

★

மன்னன் ஆளப்பிறந்தவன் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஆழப் பதிந்திருக்கும் வரையிலேதான், மன்னன் மணிமுடி தரித்து வாழ முடியும். கோபமோ, குமுறலோ கொப்பளித்தால் கோல் உடையும்.

★

சதுர்க்கச்சேரி நடைபெறறுக்கொண்டிருக்கும் ஒரு அரண்மனையைத தரைமட்டமாக்க வேறோர் அரண்மனை சதியாலோசனை மண்டபமாக மாறி இருக்கும் !

★

ஆஸ்ரம வாழவு, அரண்மனை வாழ்வு இரண்டிலே எது விதைக்காது விளையும் கழனி ?

★

அரண்மனை மமாதை மருட்டும இடம் !

★

கங்கைக் கரையிலே இருநதவர்கள் அரசர்களை அடிபணியச் செய்யும் நிலையில் இருக்குமபோது அவர்கள் ராஜகிரியில் அரண்மனையில் உலாவும் அரசராகப் பிறக்கவில்லையே, அல்லது அரசன் ஆகவில்லையே என்று கவலைப்படக் காரணம் உண்டா ?

★

முகாரி முடிந்து அடாணா ஆரம்பமான நாள் ! மாடப்புரு வல்லூறைத் துரத்திய நாள் ! மன்னர் மருண்ட நாள் ! சீமான்களின் திலை சிதறிய நாள் ! ஒட்டப்பரெல்லாம் உதையப்பரான நாள் ! விலங்கு

பூட்டப்பட்டு வேதனையை அடைந்த கரங்களிலே வீரவாள் ஜொலித்த நாள்! விடுதலைநாள்! வீரரின் வெற்றித் திருநாள்! வெறியரின் வீழ்ச்சி நாள்!

★

சட்டசபை நுழைவு சாரமற்றது. அதிகாரபீடம் வெறும் ஆர்ப்பாட்டம். சர், பகதூர் பட்டங்கள் வெறும் பகல் வேஷம். மந்திரிப்பதவி முதலியன மாயாஜால அரசியல் வித்தை!

★

சட்டசபையின் சிறப்பை, மந்திரி மண்டலத்தின் மாண்பை, நிர்வாகசபையின் நிம்மதியை, அதிகாரத்தின் ஆனந்தத்தை காங்கிரஸ் வேண்டுமானால் கண்டுகளிக்கட்டும் பெற்றுப் பெருமிதமடையட்டும். நாம், மறந்த இன உணர்ச்சியை மறுபடி தேடவும், இழந்த இன்பத்தைத் திரும்பப் பெறவும், தேய்ந்த இலட்சியத்தைப் புதுப்பிக்கவும் மருண்ட மனத்தை மலர்விக்கவும் கொண்ட கருத்தை முடிக்கவும் வகையான வழிகோலலாம். வாழ்வில் அது வளம்தரும்.

★

காற்று வீசாதபோது வேண்டுமானால் விசிறிகொண்டு காற்றைப் பெறலாம். விசிறினால் வரும் காற்றைத் தடுக்கலாம், விசிறியை வீசி எறிவதால்! ஆனால் காற்று இயற்கையாக வீசுவதைத் தடுக்க, ஏன் என்று கேட்க எவரால் முடியும்?

★

கணக்கற்ற காலமானாலும் தொடர்ந்து போராட்டத்தை நடத்த நெஞ்சிலே உரம் வேண்டும். தியாகம் செய்யத் திடம் வேண்டும்.

★

புலியிடம் மான் மன்றாடி மனம் வைத்து உயிர்ப்பிச்சை அளிக்கும்படி வேண்டுவது இயற்கை. நடக்கக் கூடியது ஆனால், புலி மானிடம் பயந்து அடங்கி ஒடுங்கி நடுங்கி உயிர்ப்பிச்சை கேட்பது என்றால் விவேகமுள்ள பேச்சா?

★

ஆரியக்கலை கற்பனை மிகுந்தது. திராவிடக்கலை உண்மை நிறைந்தது. ஆரியவீரம் ஆண்டவனுடைய அவதார லீலைகளை அடிப்படையாகக் கொண்டவை. திராவிடருடைய வீரமோ, கலிங்கத்துப் பரணியில், சிலப்பதிகாரத்தில் காணக்கிடக்கிறது.

★

வில்வீரன் ஒருவன் வில்லிலே நாணேற்றி, அம்பைப் பூட்டி விசையாக விடுகிறான் ஒரு புலியைக் குறிவைத்து. அம்பு வில்லினின்றும் விடுபட்டது. மிகவேகமாக புலியின் உடலை ஊடுருவிச்சென்று அருகிலிருந்த வாழைமரத்திலே பாய்ந்து நின்றுவிட்டது. இந்நிகழ்ச்சி உண்மையானது. உருவகப்படுத்தியதன்று! அம்பு புலியின் உடலைத் துளைத்துச் சென்றது என்பது அம்பின் கூர்மையையும் வேகத்தையும் அதை எறிந்தோனுடைய சக்தியையும் குறிதவறாத திறமையையும் குறிக்கிறது. புலியைத் துளைத்தபின் அம்பின் வேகம் குறைகிறது, தடையேற்பட்டதால்! எனவே புலியைத்துளைத்த அம்பு வாழையைத் துளைத்துச் செல்ல முடியாமல் அதிலேயே பதிந்து நின்றுவிட்டது. வில்வீரனின் செய்கை இவ்விதம் கூறப்படுகிறது திராவிடக் கலையிலே!

★

இராமனது அம்பறாத் தூணியிலிருந்து அம்பு புறப்பட்டது. புறப்பட்டு இராவணனது உடலெங்கும் சீதையென்னும் சிந்தனை எங்கே எங்கே என்று தேடித்தேடி அங்கெல்லாம் பாய்ந்து வெளிப்பட்டுக் கடலிலே சென்று குளித்துப் புனிதமாகி மீண்டும் இராமனது அம்பறாத் தூணியில் வந்தமர்ந்தது என்று கூறிக் கலை இயம்புகிறது. இத்தகைய செயல்கள் கலைக்கு உதவுமா? ஆராய்ச்சிக்குத்தான் நிற்குமா? கற்பனை என்று காணும்போதே கருத்திற் படவில்லையா? இதுதான் ஆரிய வீரம்!

★

ஆகாயத்திலே விமானம் ஓடுவது எப்படி என்று கேளுங்கள். தெரியாது. கப்பல் போவது எப்படி? தெரியாது. தண்ணீருக்கு அடியிலே ஒரு கப்பல் போகிறதே தெரியுமா? தெரியாது. இந்தியாவில் எத்தனை மாகாணம்? தெரியாது. மற்றும் தந்தி, டெலிபோன், ரயில் இன்னபிற இயங்குவது எதனாலே? தெரியாது. என்றுதான் பெரும்பாலான கிராமமக்கள் பதிலுரைப்பர். ஆனால், அவனைக் கேளுங்கள் எமனுக்கு என்ன வாகனம் என்று? உடனே பதில் தருவான், எருமைக்கடா என்று! நாட்டின் நிலைமை இவ்விதம் நலிந்துளது. அறியாமை அரசோச்சுகிறது. உலுத்தர்கள் ஊராள்கின்றனர். உழைப்பாளிகள் உதாசீனம் செய்யப்படுகின்றனர்.

★

பாராண்ட இனம் பராரியாய் வாழ்வதா? கனக விசயரைக் கல்தூக்க வைத்த இனம் கயவரின் காலடியில் கிடப்பதா?

★

பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள். நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள். அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால் அவன் அண்டியிருப்பது குனிந்து நுழையவேண்டிய குடிசை! ஏன் இந்தப் பேதம் இந்த நாட்டிலே?

★

வளமில்லாத நாடு வறுமையுடன் இருந்தால் ஆச்சரியமில்லை. பாங்கற்ற நாட்டிலே பஞ்சம் மிகுந்துளது என்றால் குற்றம் கூறுவோர் இல்லை அரபு நாட்டுப் பாலைவனத்தில், ஐஸ்லாந்தில் எஸ்கிமோ நாட்டுப் பனிக்காட்டில் வளமிராது. இங்கு நீர் வளத்திற்கும் நில வளத்திற்கும், குடி வளத்திற்கும் குறைவில்லை. மக்கள் மனவளம் ஒன்றுதவிர. வற்றாத ஜீவநதிகள், அவைகளால் வளர்க்கப்படும் வயல்கள். அவைகளில் விளையும் வகைவகையான மணிகள், நஞ்சை புஞ்சை ஆகியவை ஏராளம் உண்டு இந்த நாட்டில்! நாடெங்கும் சாலைகள் சோலைகள்! அவற்றில் கனிகள் குலுங்கும் அதைக்கண்டு கவிகள் பல தீட்டுவர். மண்ணுக்கு அடியில் பொன். கடலுக்குள்ளே முத்து. காட்டிலே சந்தனம் கஸ்தூரி வகைகள். இத்தனை இயற்கை எழிலுடன் விளங்கும் இந்த நாட்டில் இல்லாமை இருக்கக் காரணம் என்ன? மக்கள் உழைத்து உழைத்துத் தேய்ந்து உற்சாகமிழந்திருப்பதேன்?

★

பொதுவுடைமையெனும் போர்வையைப் போர்த்திக்கொண்டு ஒரு சிலர் புறப்பட்டிருக்கின்றனர். அவர்கள் முதலாளி யார் என்று தெரியாமலேயே முதலாளிகளை ஒழிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். பாவம்! பணக்காரர்களையெல்லாம் முதலாளிகள் என்று அவர்கள் தவறாகக் கருதிக்கொண்டு வீண் வேலையிலீடுபடுகின்றனர். ஆண்டவன் பேரால் ஆயிரமாயிரம் வேலி நிலங்களும், கோடானு கோடி பொருளும் குவிந்து கிடப்பதை அவர்கள் காண்பதில்லை. இந்த ஏமாற்றுவித்தை இன்னும் எத்தனை நாட்களுக்குச் செல்லும்?

★

பஞ்சத்தினால் சம்மட்டி ஏந்தும் பார்ப்பானைப் பார்ப்பதில்லை. ஏன்? கல் உடைக்கும் பார்ப்பனனைத்தான் கண்டதுண்டா நீங்கள்? ஏன்? அந்தக் குலம் மட்டும் குனியாது வளையாது குந்திக் குதிர்போல் பெருகுகிறது ஏன்? அவர்கள் கட்டைவண்டி ஓட்டுவதில்லை கன மூட்டை சுமப்பதில்லை மலத்தைக் கூட்டுவதில்லை. பஞ்சம் கூட பார்ப்பானுக்கு ஒரு விதம் பாட்டாளிக்கு வேறு விதம் என்று பார்த்துத்தான்

வருமா? ஏன் நம்மவர் மட்டும் உச்சிவேளையிலே உழைக்கின்றனர் மாடுபோல்? நம்முடைய மகளிர் அனிச்சம்பூவினும் மென்மையார் என்று புலவரால் புகழப்படும் பூவையர்கள் மட்டும் காடேறி மேடேறி நாடு சுற்றிச் சுள்ளி பொறுக்குகின்றனர். கவிகள் பாடும் கருங்குவளை மலர் போன்ற கண்படைத்த நம் இனக் காரிகைகள் கடுவெய்யில் நேரத்தில் கல் உடைக்கக் காணலாம். ஆனால் பார்ப்பனப்பெண் ஒருத்திகூடப் பிறர் வீட்டில் பணிப்பெண்ணாக இருக்கக் காணோமே! பொதுவுடைமைவாதிகள் ஏன் இதைக் கவனிப்பதில்லை? இது எந்தப் பொருளாதார பேதத்தில் அடங்கியது? எவரும் இதுவரை ஏற்படுத்தாத தந்திர முதலாளி ஏற்பாடல்லவா இது? பலர் உழைப்பை ஒரு சிலர் உறிஞ்சி உண்டுகளிப்பது உத்தமம் என்று எண்ணுகிறீர்களா? ஏன் மௌனம் இது பற்றி?

★

மன்னன் ஒருவன் கானமயிலாடக் கண்டான், கார்மேகத்தைக் கண்ட களிப்பின் மிகுதியால்! கண்ட மன்னன் மயில் குளிரால் வாடுகிறது என நினைத்தான் அளித்தான் அதற்கோர் ஆடை! அதிலும் பட்டுப் பீதாம்பரம்! அவனது செயல் கருணையுள்ளதாக இருக்கலாம். கவைக்குதவுமா? அன்பு மிகுந்ததாகக் காணப்படலாம். ஆனால், அறிவு தொக்கியுளதா அதில்?

★

கோயில் உள்ளே சிலை. இடையே திரை. அதன் பின்னே ஐயர் அவர் தயவு வைத்தால் திரை விலகும். தயவுக்குத் தட்சிணை தரவேண்டும். தயாபரனைக் காணவா இத்தனை தடைகள்?

★

குடும்பம் முதற்கொண்டு கோலோச்சும் சர்க்கார் வரையிலே ஸ்தாபனங்கள்தான்! ஸ்தாபனம் ஏற்படச் செய்வதற்குக் கொள்கைகள் தேவை!

★

எண்ணங்களை வெளிப்படுத்திக்கொள்ள, மனதிற்பட்டதை எடுத்தியம்ப, நமதுகதி இதுதானா என்றென்றும் என்று கேட்டிட, இவ்விதமா நமது முன்னோர்கள் இருந்தனர் என்றுபேச, இடுக்கண் வந்தகாலை அவர்கள் யாது செய்து இன்னல் போக்கிக்கொண்டனர் என்பது குறித்துக் கலந்துரையாட, மொழி பயன்படுகிறது.

★

பற்று—வெறி—இந்த இரு நிலைகளுக்கும் இலக்கணம் காணல் எளிதல்ல—அளவு காட்டலும் ஆகும் காரியமல்ல!

★

மொழியைக் காத்திடின் உரிமை வாழ்வு நிலைத்திடும்.

★

எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக்கொண்டோம். கொற்றம் இழந்தோம். கோட்டை இழந்தோம். வாணிபம் இழந்தோம். விருது டலவற்றை இழந்து நிற்கிறோம். தொழில்வளம் இழந்தோம். தோழர்களை இழந்தோம். கலம் இழந்தோம். காவியம் இயற்றும் திறம் இழந்தோம. இத்தனை இன்னல்களும் தாங்கிக்கொண்டோம். ஆனால், தமிழ் மொழியிடம் தமிழன் காட்டவேண்டிய பற்றினை, தாய்மொழிக்குப் பேராபத்து எனின் துடித்தெழுந்து போரிடும் வீரத்தினை, தாய் மொழியைத் தாழ்த்திப் பேய்மொழி ஒன்றினைப் புகுத்திடும் கொடுமையை எதிர்த்திடும் வீரத்தினை, ஒரு தமிழன், தமிழ்நாட்டில், நாம் உயிருடன் உலவிக்கொண்டிருக்கும் நாட்களில், மொழிவெறி என்று கேலி பேசி இகழ்வது, அதனை நாம் கேட்டுக்கொண்டு நிற்பது, எனும் இந்தக் கொடுமையையுமா தாங்கிக்கொள்ளவேண்டும்?

★

எது பற்று? எது வெறி? என்பதைக் கண்டறிய, யார் இந்தக் காமராஜருக்கு அதிகாரம் அளித்தனர்? ஓட்டு அளித்தனர்? மேலிடம் அமர? மொழி பற்றிய முடிவுரை கூறவா? கன்னித்தமிழ் பற்றி இன்னும் நடத்தப்படவேண்டிய ஆராய்ச்சி ஏராளம் என்கின்றனர் கற்றறிந்தோர், வித்தகர், புலவர் பெருமக்கள்! கானூர் படையாச்சியையும் வானூர் ரெட்டியாரையும், மேனூர் முதலியாரையும், டள்ளபட்டி மரைக்காயரையும், பாப்பாரபட்டி கவுண்டரையும், வாடிப்பட்டியாரையும், வத்தலக்குண்டாரையும் தேடித் தேடிப் பிடித்து வைத்துக்கொண்டு தேர்தல வேலையைக் கவனிக்கக் கற்றுக்கொண்ட இவர் தமிழ்மொழியின் தொன்மை மென்மை பற்றியும, அதற்கு இன்று உள்ள நிலை பற்றியும் அறிந்திட வாய்ப்பு ஏது?

★

ஒவ்வொரு நாட்டுத் தலைவனும் மக்கள் வாழ தரணி தழைக்க ஒவ்வொரு விதத்தில் ஒப்பற்ற செயல் செய்து பெயரெடுத்து உலக வரலாற்றிலே இடம் பெறுகிறான். காமராஜர், பாவம் என்ன செய்து பெயரெடுக்க முடியும்? உலகுக்கோரு அறநூல் தீட்டுவாரா? போர்

ஒழிந்து புது உலகு காணத் திட்டம் காட்டுவாரா? பஞ்சம் போக்கிட வழி காண்பாரா? கடலையும் காற்றையும் ககனத்துப் பொருள்களையும் கட்டுக்குள் கொண்டுவருகிறார்கள்; அறிவாற்றல்மிக்கோர்! செயற்கைக் கோளங்களைச் சமைத்துக் காட்டுகின்றனர் விஞ்ஞான வித்தகர்கள்! அவர்களெல்லாம் மக்களுக்கு இதம் செய்து நிலையான புகழ் தேடிக் கொள்கின்றனர். இவர் எதை செய்ய இயலும்? எதற்குத் தம்மைத் தகுதியுள்ளவர் ஆக்கிக்கொண்டார்? மற்றவர்கள் மக்களை வாழ வைத்துப் பெயரெடுக்கின்றனர்; இவர் சாகவைத்துப் பெயரெடுக்கட்டுமே! சுட்டுத்தள்ளட்டும்—சூரர் என்று பெயரெடுக்கட்டும்! சாகப் பயப்படும் சமுதாயத்திலா, நாம் பிறந்தோம். தமிழ் இனம் இறவாப் புகழ் பெறவேண்டும் அதற்காக நம்மில் சிலர், செத்தால் என்ன நஷ்டம்?

★

போலீஸ், படை ஆகியவற்றினைக் கொண்டு, எதேச்சாதிகாரி மக்களைக் கொல்லக் கிளம்புகிறான். தூய உள்ளத்தோடு புனிதமான நோக்கத்துக்காகப் போரிடும் மக்களைச் சுட்டுத் தள்ளியதும் குபுகுபு வென வெளிவரும் இரத்தத்தைக் கண்டதும் சுட்டவர்களின் மனமே சுடுகிறது. தன்னலக்காரர்கள் ஏவுகிறார்கள்! நாம் தியாகச் சுடர்களை அழிக்கிறோம் கொலைத் தொழிலை நம்மைச் செய்யச் சொல்லிவிட்டு இந்தக் கொடியவர்கள் கொள்ளை இன்பத்தை அனுபவிக்க அரசு நடத்துகிறார்கள்—சே! நமக்கேன் இந்த ஈனப்பிழைப்பு? நாம் சுட்டுத் தள்ளியபோதும், அந்த இளைஞன் கண்களிலே ஆர்வம் ஒளிவிட்டதே! நாடு வாழ அவன் நின்றான்; நாமோ நாசகாலர் வாழ அந்த நல்லவர்களைக் கொன்று குவித்தோமே! இதற்கா நாம்? இதற்கா இந்தத் துப்பாக்கி? என்று எண்ணுகிறார்கள். அந்த எண்ணம் அவர்களை வீரர்களாக மட்டுமல்ல, விவேகிகளாகவும் ஆக்குகிறது.

★

பொதுமக்களின் எதிர்ப்பு வலுவடையும்போது பசப்புவதும், மக்களின் கவனம் வேறு திக்கில் திரும்பி இருக்கும்போது திணிப்பதும் இந்தி ஆதிக்கக்காரரின் போக்காகிவிட்டது.

★

கடும்பனி! உடல் வெடவெடக்கிறது! காரிருள்! எந்தப் பொருளும் சரியாகத் தெரியவில்லை. காலிடறிக் கீழே விழுந்தேன். கருங்கல்லில் தலை மோதிக்கொண்டது! கலங்கினேனா? இல்லை. நடந்தேன், நடந்தேன், தோட்டம் நோக்கி! ஆனால் அங்கோ கதவு தாளிடப்

பட்டுக் கிடந்தது. தவித்துப்போனேன். பக்கத்துச் சுவரோரம் பதுங்கிப் பதுங்கிச் சென்றேன். பழுதையென்று எண்ணித் தொடப் போனேன். அசைந்திடக் கண்டு பாம்பென்றறிந்து பயந்து விலகினேன்! நா உலர்ந்துவிட்டது. இப்படியா இருக்கவேண்டும் என் கதி என்று எண்ணினேன். துக்கம் துளைத்தது. எவரேனும் கண்டு விட்டால், என்று எண்ணும்போதே பயம் கப்பிக்கொண்டது. திடீரென்று ஏதோ ஒன்று என் மீது விழுந்தது. பதறினேன். மறுகணம், வீழ்ந்த பொருளைக் கண்டேன். என் காதலியின் கூந்தலில் இடம் பெற்றதால் மணம் பெற்ற மலர்! எடுத்தேன். கண்களில் ஒத்திக்கொண்டேன். ஆர்வத்தால் கொண்டு சென்று அகமகிழ்ந்தேன். பட்ட கஷ்டமனைத்தையும் மறந்தேன்! இதோ வெற்றி! சுவை மிகு வெற்றி! மணமிகு வெற்றி! என் காதலி தந்துள்ள அன்புக்காணிக்கை. உனை மறந்திடவில்லை, இதோ என் மலர் உனக்காக! என்று கூறுகிறாள் என் குயில்மொழியாள். இந்த பரிசுச்செய்தியைப் பெற்ற கட்டளை, காவலர்கள், கரடுமுரடான வழி, இடறிவிழுந்திடும் இன்னல் எதுவும் ஏற்படுவதாக இருந்தால் என்ன? இதைவிட ஆபத்து நிரம்பியதாக இருப்பினும் செல்வேன். வெல்வேன்.

★

சிறை இருக்கிறது. கிளர்ச்சி எங்ஙனம் வெற்றி பெறும்? என்று சீறிப் பேசுவது ஆணவ அரசுகளுக்கு அடிக்கடி ஏற்படும் நோய்!

★

அமைச்சர்கள் கொள்ளையடித்து விட்டார்கள். லஞ்சம் வாங்கினார்கள். என்றால் மட்டும்தான் நிர்வாகத்தில் ஊழல் ஏற்பட்டுவிட்டது என்று பொருள் கொள்ளக்கூடாது. அமைச்சர்கள் ஒரு துரும்புகூடத் தமக்காக எடுத்துக்கொள்ளாத தூயவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் நடத்தும் துரைத்தனத்தில் ஆறு லட்சத்தில் கட்டி முடிக்கப்படவேண்டிய ஒரு பாலம் எட்டு லட்சம் விழுங்குகிறது என்றால், அதிலே ஒரு காசுகூட அமைச்சருக்குச் செல்லாவிட்டாலும், நஷ்டம் நஷ்டம்தான். நிர்வாகம் ஒழுங்காக இல்லை என்றுதான் பொருள்!

★

ஆளுங்கட்சி தன்னை எதிர்த்து நிற்பவர் இல்லை என்று இறுமாந்து எவரையும் அழிக்கலாம், கேட்பாரில்லை; எந்த அக்கிரமும் செய்யலாம், தடுப்பார் இல்லை; எவ்விதக் கிளர்ச்சியையும் அடக்கலாம் ஒடுக்கலாம், அடக்குமுறைகொண்டு! என்று துணிந்து குடுக்

குத்தனத்தை அவிழ்த்துவிடும்போது, கொடுமைகளைக் கண்டு அஞ்சாது, கிளர்ச்சிக் களத்தில் நின்று, சித்திரவதைக்கும் சித்தமாக யிருக்கிறோம் என்று கூறிடத்தக்க வீரம் பட்டுப்போய்விடவில்லை என்று எடுத்துக்காட்டி, மண்டைகள் உடைபடட்டும், கைகால் அறுபடட்டும், உயிரே போகட்டும். கலங்கப்போவதில்லை என்ற துணிவுடன். நிமிர்ந்து நின்றிடும் ஆற்றல்கொண்டோர் நடாத்தும் கிளர்ச்சியாலும் ஆணவ அரசுகளை வீழ்த்தமுடியும். மக்கள் மனதிலே மூண்டுகிடக்கும் பீதியைப் போக்க முடியும்.

★

புரட்சிகரமான ஆட்சிகூட வேண்டாம். பொறுப்புணர்ச்சி போதும்!

★

விடுதலை பெறுவதற்கு இன்றியமையாதது, அதற்கான உணர்ச்சிக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக்கொள்வதும், உணர்ச்சி பெற்றவர்களின் தொகை வளரும் நிலையை உண்டாக்குவதுமாகும்.

★

மக்களை அணுகி ஓட்டு வாங்கவும் தெரியவேண்டும். மார்புக்கு நேரே துப்பாக்கிக்குண்டு பாயவருகிறது என்றால் அதைத் தாங்கிக் கொள்ளவும் துணிவு இருக்கவேண்டும்.

★

அவன் வீரன் என்று கூறினால், நான் என்ன கோழையா? என்று கோபித்துக் கேட்டிடச் சொல்கிறது உணர்ச்சி. அவன் அறிவாளி என்று கூறினால், நான் முட்டாள் அல்ல! என்று கொதித்தெழுந்து கூறத் தோன்றுகிறது!

★

அடுப்புக்குள் இடும் நெருப்புக்கும், அடுப்புக்குத் தேவை என்பதற்காகக் கூரையில் செருகி வைக்கும் கொள்ளிக்கட்டைக்கும் வித்தியாசம் இருக்கிறது

★

சர்வாதிகாரம்—ஜனநாயகம் சாதிக்காதவைகளைச் சில வேளைகளில் சாதித்தளிக்கக்கூடும்.

★

தாயின் மடியிலே தவழும் குழந்தைக்குக்கூட ஒரு பொருளைக் காணும்போது, எண்ணம் எழத்தான் செய்யும். பசிக்கிறது என்ற உணர்வு, புசிக்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்காமலிராது. குழந்தையின் அழுகைதான் அதற்கான அறிவிப்பு!

★

ரசம் பூசப்பட்ட கண்ணாடிபோலாகிவிடுவார்கள் பணம், பெற்று பண்பு கெட்டுவிட்ட நிலையடைந்தோர். பணம் மட்டுமல்ல, புகழ், பட்டம், பதவி எதுவுந்தான்! பழமையை மறந்துவிடச் செய்கிறது, புதிய நினைப்பு, முறுக்கு, ஏற்பட்டுவிடுகிறது. இயல்பே மாறிவிடுகிறது.

★

நாட்டிலே இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேறியும் கூட கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்களது சொந்த வாழ்க்கையில் எவ்வித மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை. சுருங்கச் சொன்னால், அவர்களது வாங்கும் சக்தி குறைந்துபோய், அகவிலை உயர்வுடன் அன்றாடம் மல்லுக்கட்டி வருகிறார்களென்றே கூறலாம்.

★

சாதாரண காலத்தில் கைத்தறி ஜவுளிகளுக்கு ஐந்து காசு ரிபேட். தீபாவளிக்காகக் கூடுதலாக ஐந்து காசு சேர்த்து ரூபாய்க்கு பத்து காசு ரிபேட் தர அனுமதித்துவிட்டு, அடுத்த பக்கம் கதர் ஜவுளிகளுக்கு ரூபாய்க்கு 31 காசு ரிபேட் தருவதற்கு அனுமதிக்கிற நியாயம் எதில் உட்பட்டதோ ?

★

தலைவர்கள், நடிகர்கள், வெற்றிவீரர்கள் ஆகியோரைக் காணவும் மக்களுக்கு ஆவல் எழத்தான் செய்கிறது. ஆனால், அந்த ஆவல் அவர்கள் தத்தமது துறைகளில் பாராட்டத்தக்க திறம்காட்டி மக்களின் மனதை ஈர்த்தபிறகே ஏற்படுகிறது.

★

பிரிட்டிஷ் பேரரசி எலிசபெத்துக்கு மணாளனாக இருப்பவர், வேறோர் நாட்டு அரச குடும்பத்தவர். எனினும் அரசர் அல்ல! பேரரசியுடன் அவர் செல்கிறார், பல நாடுகளுக்கு! பேரரசிக்குக் காட்டப்படும் சில தனிச் சிறப்புகள் இவருக்குக் கிடையாது; பெற இயலாது; கேட்

கவும் மாட்டார். நாட்டுக்கு மட்டுமல்ல, நாயகனுக்கும் எலிசபெத், பேரரசியின் கணவன் பேரரசன் அல்ல! பேரரசனின் மனைவி பேரரசி ஆகலாம்!

★

பொன்னால் சமைக்கப்பட்டு நவமணிகள் இழைக்கப்பட்ட சிம்மாசனம் எந்தச் சமயத்திலும் கடித்திடத் தயாராகயிருக்கும் சர்ப்பாசனம்.

★

அரசனாக இருப்பவர்களுக்கு அதிகாரம் இல்லையே தவிர, அவர்கள் அரசராக இருக்கும்போது பாதுகாப்பு நிரம்ப இருக்கிறது. ஜனநாயக முறைப்படி தலைவர்களாக வருகிறவர்களுக்கு அந்தப் பாதுகாப்பு இல்லை. போற்றுகிற மக்களே தூற்றிக் கீழே இறக்கி விடலாம். போட்டி ஏற்பட்டு தலைமைப் பதவி போய்விடலாம். வேறு ஒரு தலைவன் தோன்றி அதிக தீவிரம் பேசி மக்களைத் தன் பக்கம் அழைத்துக்கொள்ளலாம். அப்போது பழைய தலைவர் பாடு ஆபத் தாகிப் போகும். மன்னர் என்றால் அந்த ஆபத்து இல்லை. நிம்மதி இருக்கும். பாதுகாப்பு இருக்கும். அதிகாரம் இருக்காது ஆபத்தும் இருக்காது.

★

மறத்தமிழ் மரபினன் நீ. மார்தட்டி நின்றாய்! வஞ்சகர்களே! வாழ்ந்தால் தமிழொடு வாழ்வேன்! வீழ்வதேனும், இந்நிலை எதிர்த்த படி வீழ்வேன்! என்று சூளுரைத்தாய். துடித்தெழுந்தாய். வெற்றி உனை நாடிவந்தது, தேடி அமைந்தது.

★

கொண்டை அறுந்த பெண்டொருத்தி செண்டுகண்டு இகழ்ந் தாளாம். இந்தித் திணிப்பைத் தடுத்திடமுடியாது என்று ஒதுங்கி நின்றோர், இன்று கொண்டை அறுந்த பெண்போல நாம் பெற்ற வெற்றிச் செண்டு கண்டு இகழ்கின்றனர்.

★

வங்கத்திலிருந்து சென்று அரவிந்தகோஷ் உபதேசம் செய்தது அந்தக்காலம். வங்கம் வந்து அசாமியன் உபதேசம் செய்வது இந்தக்காலம்.

★

கழுநீர்ப் பானையினைத் தலையில் சுமந்துகொண்டு செல்பவன்! பன்னீர் செப்பினைக் கரத்தில் எடுத்துச் செல்பவனைக் கண்டு 'பூ, இந்தச் சின்னச் செம்புதான் உனக்குக் கிடைத்ததா? என் தலையில் பார்! எத்தனை பெரிய கழுநீர்ப் பானை? என்று கூறுவது எவ்வளவு பெரிய மடமை.

★

இந்த ஆட்சியை ஒழித்துக்கட்டவேண்டும். சூடு சொரணை யற்றவர்களிடம் ஆட்சி இருக்கக்கூடாது. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் செயலாற்றுவோர் வேண்டும்.

★

முப்புறமும் கடல்சூழ்ந்த தமிழ்நாடு என்று பெருமைகொள் கிறோம் நமது முன்னோர் கலம் விட்டுக் கடலுக்கப்பாலும் சென்று வாழ்ந்தனர் வகையோடு என்று இலக்கியத்தில் படித்துவிட்டு இறும்பூ தெய்துகின்றோம ஆனால் இன்றோ நம்முடைய துறைமுகங்கள் தூர்ந்துகிடக்கின்றன.

★

வேலை இருக்கிறது நிரம்ப, வெற்றிக்கோலம் பூண்ட தம்பி! செந்தமிழ் நாட்டுச் சோலையிலே நல்ல சிந்துபாடும் வேளையிலே தென்றல் அடிக்குது என்னை மயக்குது! என்று இருந்துவிடாதே!

★

தந்தைதான் நிற்கவாபோகிறான்? தடுப்பதுதான் அறமாகுமா? தாய் எனினும் தமிழச்சி அல்லவா? மொழிகாத்திட என் மகனும சென்றான் என்று கூறுவன்றோ மரக்குடியினர் மரபு! கிளர்ச்சியில் ஈடுபடும்போது என்னென்ன ஆபத்து வந்து தாக்குமோ, இடுக்கண் யாதோ, யாரறிவார்? என் கண்ணை இப்போதேனும் உண்டு உரம் பெறு வதைக்கண்டு மகிழவேண்டுமே! நாளை எப்படியோ? என்ற எண்ணம் தாயின் குரலிலே தோய்ந்து இருக்கிறது.

★

உனக்கென்னடா சிங்கக்குட்டி! மனதிற்பட்டதைச் சொல்லு கிறாய்—முடிகிறது! அறப்போருக்குத் தயாராக நிற்கிறாய்—வீடுதலை வீரன்! என்னைச்சொல்! சேற்றிலே சிக்கிக்கொண்டேன். மீள முடிய வில்லை. செய்யுந்தொழிலும இருக்கும் இடமும் என்னைச் செயலாற்ற இயலாதவனாக்குகிறது. நீ அறிந்ததனைத்தையும் நான் அறிந்து உணருகிறேன்! உள்ளம் அலைகடலாகிறது. ஆனால் .....என்று

ஆயிரத்தெட்டுத் தொல்லைகளில் தன்னைச் சிக்கவைத்துக் கொண்ட தோழன் விடுதலைக் கிளர்ச்சிக்காக எதையும் மறந்து எந்தச் சூழ்நிலையிலும் சிறைப்படாமல் ஆர்த்தெழும் நண்பனைப் பார்த்துக் கூறுகிறான், கண்களில் நீர் துளிர்த்திடும் நிலையில்!

★

எண்ணங்களை வெளியிடும் கருவி, மொழி என்று வாதாடுவது எளிது. ஆனால் எண்ணங்கள் உருப்பெற அவரவர்க்கு அவரவர் இயல்புக்கு ஏற்ப, வாழும் நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப அமையும் மொழியே துணை நிற்கிறது.

★

உடல் பெரிது! உள்ளே நுழையும் கிருமி மிகமிகச் சிறிது. அளவில்! ஆயின் என்ன? உடலை அரித்து அரித்து கிருமிகள் உயிரையே குடித்து விடுகின்றன.

★

செம்மொழி தமிழ் மொழி என்று செப்பிக்கொண்டிருக்கலாம், சின்னாட்கள்! பிறகு எம்மொழி ஆட்சிமொழி என்று உலகுகேட்குமே! என்ன பதிலளிப்போம்? இந்தி ஆட்சி மொழி என்று கூறிடின், பிறகு செம்மொழிக்கு எவர் மதிப்பளிப்பர்?

★

நமக்குக் கிடைத்திருக்கிற தாய்மொழி பிறமொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், பிறமொழியாளர்களெல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக்காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகின்றது? என்று ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும் பொறுமையோடு சிலரும் பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ்மொழி இருக்கின்றது.

★

வெட்டவெளியிலே கொட்டகை போட்டு வீதிதவறாமல் தோரணங்கள் கட்டி, சிற்றூர்களிலிருந்தெல்லாம் சிங்கநிகர்த்த காளைகள் சாரைசாரையாக வந்து மாமன்றத்தில் கூடியிருப்பதற்குக் காரணம் இந்தி மொழியைவிடத் தமிழ்மொழி சிறந்தது என்று வாதாடுவதற்

கல்ல. தமிழகத்திலே இந்திமொழி திணிக்கப்பட்டால் அதை எந்த வழியிலே ஒழித்துக் கட்டுவது; அதற்கு நம்முடைய காணிக்கை என்ன? என்று சிந்தித்து அவரவர்கள் தங்கள் காணிக்கைகளைச் சேர்ப்பிப்பதற்காக!

★

வடக்கேயுள்ளவர்கள் காடுகளிலே சுற்றிக்கொண்டும், குகைகளிலே வாழ்ந்து கொண்டும் மொழியறியாத காரணத்தாலே வாழ்க்கை வழிதெரியாமல் வழுக்கி வீழ்ந்துகொண்டும் இருந்த நேரத்தில், தமிழகத்தில் அகத்தையும் புறத்தையும் நம்முடைய பெரும் புலவர்கள் இயற்றினார்கள்.

★

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வடவர்களுக்கு ஏதுமொழி? ஏது இலக்கணம்? ஏது இலக்கியம்? அவர்கள்மொழி எந்த நாட்டில் பேசப்பட்டது? ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே—தமிழ் வணிகன் ரோம் நாட்டுக் கடைவீதியிலே பேசினானே! ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே அறவழியிலே எங்கள் இனமக்களை அழைத்துச் செல்வதற்கு எங்கள் தமிழ்மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்ததே!

★

பாடிவீடானாலும் சரி, பள்ளியறையானாலும் சரி, சாலையானாலும் சரி, சோலையானாலும் சரி, களமானாலும் சரி, எங்கேயும் பயன்பட்டுவந்த தமிழ்மொழி, பயன்படாது என்று சொல்லுகின்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்?

★

தமிழை, தாய்மொழி என்றுதானே அழைக்கிறோம். எனவே மொழிகாத்திடத் தாய்மார்களை நான் அழைக்கிறேன்.

★

சிலப்பதிகாரக் காலத்திலாவது, கண்ணகி அளிக்கமுடியாத சுகத்தை மாதவி அளித்தாள் என்பதற்காக வழிதவறிய ஒரு வணிகன் மாதவி இல்லத்துக்குச் சென்றான். இங்கு வழிதவறிய கோவலர்கள் இல்லை. வழிதவற வேண்டுமென்று நினைக்கிறவர்களும், நீ கட்டிய மனைவி அழகாகத்தானிருக்கிறாள் நான் கொண்டு வருபவள் குணத்திலேயும் குடிகேடி; பார்ப்பதற்கு அருவருப்பாகத்தானிருப்பாள். இருந்தாலும் எத்தனை நாளைக்குத்தான் அந்தக் கட்டழகியோடு நீ இருப்பது?

அவளைப் பின் அறையிலே தள்ளிவிடு, இவளை நீ முன்கட்டிலே வைத்துக்கொள் என்று கேட்கிறார்கள் என்றால், நாம்கூடச் சும்மா யிருக்கலாம். ஆனால் கூடியிருக்கின்ற தாய்மார்கள் ஆர்த்தெழ வேண்டும் ஆயிரம் ஆயிரமாக!

★

மகனைப் பறிகொடுத்தாலும் மனங்கலங்காத மாதாக்கள் இருந்ததால்தான், தமிழகத்தின் மாண்பு தழைத்தது.

★

மொழி காப்பாற்றப்படவேண்டும். இனம் அழிந்துபடாம லிருக்க வேண்டுமானால்!

★

தட்பவெப்ப நிலைக்கேற்ப மொழி உருவாக்கப் படுகிறது.

★

மொழி உணர்ச்சி ஒரு இனமக்களுக்கு உயிரூட்டம் தருகிறது.

★

மொழி, இனம், பண்பாடு என்பவை ஒன்றுக்கொன்று தொடர் புடையன.

★

இது மனுவை மறுக்கும் காலம் மட்டுமல்ல, மன்னர்களை வீட்டுக் கனுப்பிய காலம்!

★

தவறிவிடும் மனைவி, துரோகமிழைக்கும் நண்பன் இப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் மன்னிப்பு தருவதுதான் மறுமலர்ச்சி என்று நான் கூறவில்லை.

★

அமங்கலை அழகாகவும் இளமையாகவும் நாகரீகமாகவும் இருந் தால அச்சந்தானே! இச்சைதான் பொல்லாத நச்சரவு!

★

ஆலைக்குத்தானே நாயகி! ஆச்சாரத்துக்காக ஒரு அழு மூஞ்சின பயலா கட்டிக்கொள்வது?

★

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம்!

★

மலேயாவைப் பற்றிய வாலாற்றுப் புத்தகத்திலே சுவை இருக்காது. எனினும் படிப்பவர்கள் வசதி கிடைத்தால் அங்கு போய் வரலாம் என்ற எண்ணம் கொள்ளவும் செயலாற்றவும் முடிகிறது.

★

அழகு, இன்பம், காதல், மாந்தோப்பில் மங்கை நல்லாளைச் சந்திப்பது போன்ற கதைகள் கலைதந்து சில சமயம் டலனும் தருகின்றன. ஆனால் அந்த ஏடுகளிலேயே தேடும் லட்சியம் முழுவதும் இருப்பதில்லை காரணம், பருவமாற்றம்!

★

அடிமைத்தளையிலிருந்து விடுபட வீரப்போர் புரிந்த நாடுகளின் வரலாறுகள், அவைகளிலே இடம்பெறும் ஆற்றல் மிக்கோரின் வாழ்க்கைக் குறிப்புகள். ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் சொந்த வாழ்க்கையில் வறுமைத்தேள் கொட்டினாலும், பழி என்னும் பாம்பு கடித்தாலும் பதறாமல் சலிக்காமல் விடுதலைப்போர் நடத்திய வீரச் செயல்களைப் படிக்கும்போது சோம்பல் விரைகிறான்—கூனனும் சற்று நிமிர்ந்து நிற்கிறான்.

★

புத்தர் துறவு, சாக்ரட்டீஸ் வழக்குமன்றத்திலே வாதாடுவது, ஏசு சிலுவையில் அறைபடுவது, இளங்கோவடிகளின் துறவு, மணிமேகலையின் மனஉறுதி, கண்ணகியின் கேள்விக்கணைகள், மாதவியின் மனநெகிழ்ச்சி, அசோகனின் துக்கம், சகுந்தலையின் சோகம் போன்ற நிகழ்ச்சிக் கோவைகள் எப்போதுமே நெஞ்சை நெகிழச் செய்வன.

★

வழிதவறி வந்தவன், நேர்வழி தெரிந்து நடக்க ஆரம்பிக்கும் போது செந்நாய் சீறினும் சிறுத்தை உறுமினும், சிந்தை கலங்கத் தேவையில்லை. நமது பாதையைவிட்டு அகலோம் என்றே உறுதி செய்து கொள்ளவேண்டும்

★

கடலைக் கண்டால் ஓர் பாடல், கரியைக் கண்டால் ஓர்பாடல்; தளிரைக் கண்டால் ஓர் பாடல்; தனது காதலியைக் கண்டால் ஓர் பாடல் என தமிழர் தமது இன்ப உணர்ச்சியை இசை வடிவில் எத்தனையோ சிறப்புடன் வெளிப்படுத்தி வாழ்ந்தனர்.

★

கலை, தமிழனுடையதாக இல்லை. இழிவைத்தரும் கற்பனைகளும், அடக்குமுறைச் சட்டங்கள் கொண்ட ஆபாசங்களுமே தமிழனுக்குக் கலையாகத் தரப்பட்டுள்ளன.

★

வீணையை மீட்டத் தொடங்கியதும் இசைகேட்க வருபவனின் இருகாதுகளை அடைப்பது போலவும், எழிலமிகு சித்திரத்தைச் சித்தரித்துக் காணவாரீர் என்று அனைவரையும் அழைத்து, காணவரும் சிலரின் கண்களைக் கட்டுவிடுவது போலவும், பழச்சாற்றின் இனிப்பைக் கூறிக்கொண்டு பருகக்கொஞ்சம் தருக என்று கேட்பவனை விரட்டுவது போலவும—ஆலயங்களுக்கு மகிமையும், மேன்மையும், பலனளிக்கும் சக்தியும் இருப்பதாக் கூறிவிட்டு, அங்கே வரக் கூடாது—நுழையக்கூடாது என்று சிலரையல்ல; ஏறக்குறைய எட்டுக்கோடி மக்களைத் தடுத்து வருகிறோம்.

★

பொருளைக் காட்டி மறைப்பர் குழந்தைகளிடமிருந்து பெற்றோர்; நாமோ புனித ஸ்தலங்களின் பெருமையைக்கூறி அதைப் பூட்டி விடுகிறோம்.

★

நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச்சுற்றி நாலுபக்கமும் வேலிகள் அமைத்து, எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச்சுவரை எழுப்பி வைத்துக்கொண்டு, உள்ளே ஆடுது காளி வேடிக்கை பார்க்கவாடி என்பதைப்போல, தொல்காப்பியத்தைப் பாரீர்; அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அணுகுவர்?

★

சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி, நாட்டிலே நடமாடவிடவேண்டும். நடனசுந்தரிகளாகச் சிறுசிறு பிரதிகள் மூலம்

கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான், அவை ஒவ்வொருவருடைய மடியிலேயும் மனத்திலேயும் தவழும்.

★

அகநானூற்றையும் புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது கற்றறிந்தோர் ஏற்றும் கலித்தொகையைக் கற்றவரிடம் காண்பதே அரிதாகிவிட்டது பரிபாடலைப் பார்க்கவே முடியவில்லை. ஆகவே சங்க இலக்கியங்கள் மங்கி, மக்களுடைய மனத்தைப் பெறுமல் போனதற்குக் காரணம், அந்தச்சங்க இலக்கிய கர்த்தாக்களைக் காணமுடியாதபடி நமது கண்முன் திரைபோட்டு விட்டார்கள்.

★

புலவர்கள், எந்த அளவுக்குப் பொதுமக்களுக்குக் கம்பனை அறிமுகப்படுத்தினர்களோ, அந்த அளவுக்குச் சங்ககாலப் புலவர்களை அறிமுகப்படுத்தவில்லை.

★

இடைக்காலக் கவிகளும் அதற்குப் பின்னல் ஏற்பட்ட அநேக கவிகளும காலம் என்னும் சிறையிலே தங்களைத் தாங்களே ஒப்படைத்து விட்டார்கள் அவர்கள் அதினின்றும் வரமுயன்றல் அதைச்சுற்றி மதம் என்னும் மண்டபச் சுவற்றை ஏறிக்குதிக்க வேண்டும். சாத்திரம் என்னும் சப்பாத்தி வேலிகளைத் தாண்ட வேண்டுமே என்ற பயத்தினல் கவிகள் ஆண்டவனின் அவதார லீலைகளைப்பற்றியும் கைலைக்கும் திருப்பதிக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் பாடிவிட்டார்கள்.

★

தேவலோகத்தில் அனுபவிக்கப்போகும் இன்பத்தைப்பற்றி இணையிலாக் காவியங்கள், எண்ணிறந்தன இயற்றப்பட்டுள்ளன. அவ்விலக்கியங்களை வறுமையால் வாடும் மக்கள் படித்தால் அவர் தம் வாட்டம் வாடுமா? அன்றி வளருமா?

★

உபகாரம் செய்வது சுலபம். உரிமையைத் தருவது கஷ்டம். உபகாரம் செய்வதிலே காட்டவேண்டிய தியாக உணர்ச்சியும், தீரமும் குறைவுதான். ஆனல் உரிமையைத் தருவதற்கு தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகமாகத் தேவை.

★

காதல் என்பது ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் ஓர் வானவில் போன்றது.

★

ஒரு பெண்ணைப் பார்த்த ஒருவன், இவள் விபச்சாரியா? கற்புடையவளா? எனச் சந்தேகித்தால், அங்கே அன்பு நிகழ இடமில்லை.

★

ஓநாயை வேட்டைக்காரன் கொன்றுவிடாமல் பாதுகாப்பது அல்ல--நீதி! ஓநாய் ஆடுகளைக் கொன்றுவிடாமல் பாதுகாப்பது தான் நீதி—நேர்மை!

★

கம்பன் கவிதையானாலென்ன — சேக்கிழார் புராணமானாலென்ன—கேடு இருந்தால் களைந்து எறி! குப்பையிருந்தால் கூட்டித் தள்ளு! இழுக்கு இருந்தால் எடுத்து எறி! தீதினைத் தீயிடு!

★

புரட்சி என்பது இயங்கும் சக்தி! அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது. புரட்சியென்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது புரட்சி வாலிபத்தின் கூறு, பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள், யதேச்சாதிகாரிகள், சர்வாதிகாரிகள் ஆகியோருக்கு அது நஞ்சு.

★

மயில் ஆடக் கண்டும், வான்கோழி கூச்சமின்றி ஆடவில்லையா? அதுபோலவே, உலகுஅறிவொளிகண்டு, புதுப்பாதையைத் தேடிக்கொண்டு செல்லும் நிலைகண்டும், சில கபந்தங்கள் தமது போக்கிலேயே பிரேமை கொண்டுள்ளன.

★

கிளி கொஞ்சிடும் சோலை பானாலும் நடுநிசி வேளையிலே ஆந்தையும் அலறத்தான் செய்யும்.

★

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம். பெண்களுக்குச் சரியான சமத்துவமும், சுதந்திரமும், பண்பும் வசதியும் கிடைக்கும் வரை அவர்கள் இந்த ஒரே ஆயுதத்தை உபயோகித்தே தீரவேண்டியவராகிறார்கள்.

★

உடனடியான அரசியல் இலாபத்தை விரும்புபவர்கள், வெட்டுக் கிளிகள்போல், இங்குமங்கும் தாவுவர்—மரம் பழுத்தால் வௌவாலாவர், புயலடிக்குமென்று தெரிந்தால் சந்து பொந்துகளைத் தேடிக் கொள்வர்—கஷ்ட நஷ்டம் வருமெனத் தெரிந்தால், காவடி தூக்குவர், உடனுக்குடனே கணக்குப் பார்த்துக் களிப்படைவர்.

★

மக்களின் வாழ்வில் இன்பச்சுவை மிகுந்த எதிர்காலத் திட்டம் போடுவது காதலின் சக்தியேயாகும். யௌவன பருவத்தைத் தட்டி எழுப்பும் சக்தி காதலில் விளைவதேயாகும்.

★

அரைக்க அரைக்க சந்தனம் மணப்பது போல, உங்கள் அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க, திராவிட இயக்கத்தின் சக்தியைக் காணப்போகிறீர்கள்.

★

ஐயர்மார் பேசும் மொழி ஆலயங்களிலும், துரைமார்கள் பேசும் மொழி, ஆட்சி அலுவலகங்களிலும் இருக்கும் நிலை வந்ததும், தாய் மொழிக்கு இடம், தொட்டில், கட்டில், சமையலிடம், தோட்டம், கழனி என்றாகிவிட்டது.

★

கற்பனையில் கனிதருகிற கற்பகத்தருவைவிட, குப்பைமேட்டில் சேர்ந்திருக்கும் மூட்செடி மேலானது.

★

மனிதருக்குள் பேதத்தையும், அச்சத்தையும் மூட்டிவிடக் கூடிய, வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே.

★

முகர்ந்து ரசித்து, கூந்தலிற் செருகி, இன்புற்று மகிழும் மாதரிடம் மலர் சென்று பெருமையும் பயனும் பெறுவதுபோல, நல்ல பேச்சு சுவையும் பயனும் கண்டறிந்து பெறக்கூடியவர்களிடம் போய்ச் சேர்வதும் உண்டு. மலர்மாலை மதயானையின் வீசப்பட்டுக் காலில் மிதிக்கப்படுவது போல, நல்ல பேச்சுக்குப் பொல்லாத நிலை வருவதுமுண்டு.

★

வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள். அகத்திலே அருவி போல் ஆர்வம், முகத்திலே வீரக்களை, செயலிலே துடிதுடித்து காணப் படும். தலைகுனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, நம்மால் ஆகிற காரியமா? என்று இழுத்துப்பேசுவது, ஆகிய முறைகள் அவர்களுக் குப் பிடிக்காதன— அவர்கள் செயலாற்றும் வீரர்கள்.

★

இலக்கிய ஏடுகள் மக்களின் மார்க்கட்டிலே மலிந்து நடமாட வேண்டுமானால், இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பை மேட் டுக்கு வரத்தயாராக வேண்டும்.

★

வாலிபப் பருவத்தில் காதலர்கள் ஒருவாறு ஒத்துப்போய் விட்டாலும், பிற்காலத்தில் அது உண்மையான ஒரு சிறந்த கூட்டு வாழ்க்கையாக அமைவதில்லை

★

பெருங்காயம் வாங்கும் செட்டியார் கடையிலேயே கருவேப் பிலையும் கேட்டால் இல்லையென்றுதான் சொல்லுவார். கருவேப் பிலைக்கு கொத்தவால் சாவடியின் உள்ளே சென்றுதான் கருவேப்பிலை வாங்கவேண்டும் அதைப்போலவே எல்லா விஷயங்களையும ஒரு கட்சியிலிருந்தே பெற்றுவிட முடியாது.

★

வாழ்க்கை லட்சியத்தை நோக்கி முன்னேறுமல், கீழ்நோக்கிச் செல்வது சுலபமான காரியம்.

★

கிராம சீர்திருத்தம் பற்றிய பேச்சு நகர மேடைகளிலே, பேச் சலங்காரத்துக்காகக் கேட்கப்படுகிறது.

★

திறமையும் விவேகமும் உள்ள இசைவாணன், ஒரு துளி 'ஸ்ருதி' கலையும்போதே உணர்ந்து கொள்வான் – மட்டரக வித்வான், சபையோர், கைகொட்டி நகைத்த பிறகும், ஏன்? என்ன விஷயம்? என்று கேடபான்.

★

பணக்காரன் குளம், குட்டைக்குச் சமமானவன். முதலாளி நீர் சுரந்து கொண்டே இருக்கும் ஊற்றுக்குச் சமமானவன்.

★

கனியும் அழுகுவது காண்கிறோம். அந்த அழுகிய பழத்திலே பிறகு புழுநெளியவும காண்கிறோம். மதுரம் தரும் பழமாயிற்றே, மாங்கனியாயிற்றே, நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே, இதிலே, நெளிவது புழுவாக இருக்கமுடியாது. பழத்திலே சுவை இருக்கும்; புழு எப்படி இருக்கமுடியும்? என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவது போல, மணத்தை இழந்து பிறகு கெட்ட வாடை கொள்ளுவது போல, பலப்பல தத்துவங்களும, ஏற்பாடுகளும் காலச் சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும, இயற்கையாக ஏற்படும ஓர் நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பதுதான் உலகை அறியாத போக்கு.

★

பெண்களின் குளிர்ந்த பார்வை, முரடரையும், குழந்தை உள்ளங் கொண்டவராக ஆக்கிவிடும.

★

உண்டி, உடை, உறைவிடம் உள்ளக்களிப்புக்கான வாய்ப்பு இத்தனையும் மக்களுக்கு கிடைததாக வேண்டுமானால் யாக குண்டம் அமைத்து ஓமப்புகை எழுடபிப பயனில்லை! தொழிற்சாலைகள் நிறுவி இயந்திரப் புகையை எழுப்புதல் வேண்டும்.

★

குழந்தைப் பருவம், மனித சமுதாயத்துக்கு இருந்த போது தான் இடிதேவன், மின்னல்மாதா, மழைமாகாளி, தீக்கடவுள் எனக்கடவுட் கதைகள் கட்டிவிடபபட்டன. உலகிலே இதுபோலத் தோன்றிய கதைகள், அறிவுப பருவத்தை, அவனியோர் பெற்றதும் மறையலாயின.

★

கடமை அழைக்கும்போது காலத்தினால் விளையும் கஷ்டங்களை சாக்காகக் கூறி தப்பித்துக்கொள்வது மன்னிக்க முடியாத குற்றம்!

★

மதம் பகுத்தறிவுக்கு மேலானதாக மதிக்கப்படும் மனப்பான்மை ஒழிந்து, பகுத்தறிவை மதத்துக்கு மேலானதாக மதிக்கும் மனப்பான்மை மக்களுக்குத் தோன்றவேண்டும்.

★

கட்டையாலே கத்தியும், அட்டையாலே கேடயமும் செய்து பிடித்துக் கொண்டால், எதிரிக்குச் சிரிப்பு வருமா? சிந்தனை குழம்புமா?

★

அடிமைகளின் விடுதலையைப் பெற்றுத்தந்த ஆபிரகாம் லிங்கன்மீது அங்கோர் வெறியன் குண்டு வீசியதுபோல, வெற்றி வீரன் மகாத்மாவுக்கு வெறியன் தந்த பரிசு மூன்று குண்டுகள்!

★

மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம். அதுபோலவே, பேசுபவரின் கருத்து பயன்தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர்.

★

உள்ளத்தை உள்ளபடி உரைக்க அறிஞர்கள் மயங்கும் வரை உலகம் காட்டுமிராண்டித் தன்மையிலேயே இருந்துவரும்.

★

மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலரன்றோ!

★

பேச்சு மேடையிலே ஆறிய புண் அதிகம். நாவினால் சுட்ட வடுபெற்றதாக எண்ணி கல்வீசிடுவோர், நல்வழி கண்டோம் அவர் உரையால் என்று உணர்ந்து கல்தூக்கிய கரத்தால் சுகந்த மாலையைத் தூக்கிவரும் காட்சிகள் நிரம்பிய விசித்திரபுரி, மேடை.

★

நம் வீடு .. கூடம், பாதுகாப்பான அறை, படுக்கை அறை, சமையலறை, பூஜையறை இவையெல்லாமிருக்கும். புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை இருக்காது.

★

அறிவு சிரிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ அதைப் போலவே பிறரை அறிக்கவும் செய்கிறது! எனவேதான் புலவர்கள்

மாதர்களின் விழியிலே அமிர்தமும் உண்டு. நஞ்சும் உண்டு என்றனர்

★

விடாமுயற்சியிருந்தால் வெற்றி கிடைத்தே தீரும். தூற்றினோரே துதிபாடி நிற்பர். ஏளனம் பேசினோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்.

★

சொல்கிறபடி செய்யவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கும், சொன்னபடி செய்யக் காணோம், ஏன்? என்று கேட்கும் விழிப்புணர்ச்சி மக்களுக்கும் ஏற்படவேண்டும்.

★

பண்டைய முறையில் தேவையானவற்றைத் தெரிந்து எடுத்துப போற்றத் தவறக்கூடாது அதுபோலவே தேவையற்றவற்றைத தள்ளிடவும் தயங்கிடக்கூடாது!

★

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், மதச்சுதந்திரம் ஏட்டில் இருக்கும் அளவுக்கு நாட்டு நடைமுறைக்கு வருவதில்லை.

★

ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை! ஆகவே, தண்டிக்கப்படவேண்டியது ஆட்களல்ல— பொருளாதாரபேத அமைப்பு முறை.

★

நறுமலர்க் கூடையிலே நச்சரவம் இருந்திடின், மலர்தேடும் கையிலே விஷப்பல்லன்றோ தீண்டும்.

★

குற்றம் தனிப்பட்டவர்களின் குணத்தைப் பொறுத்து இல்லை, அவர்களின் சூழ்நிலையைப் பொருத்துத்தான் இருக்கிறது.

★

மனிதன் பறக்கக்கூட கற்றுக்கொண்டான். பார் முழுவதையும் பாக்கெட் சைஸ் ரேடியோவுக்குள் அடக்கிவிட்டான். ஆனால்

இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழவழி கண்டு பிடிக்க மட்டும், மனிதனுடைய அறிவு அவனுக்கு பயன்படவில்லை.

★

அமைச்சர்களுடன் பாராட்டிக் கூறுவோர் பல்லிளிப்போர், பர்மிட் கேட்போர், பட்டுப் பட்டாடைகள், பவுன் துப்பட்டாக்கள், பஸ்ரூட்கள். இப்படி ஒரு படையே வருகிறதே! எப்படி மனதி லுள்ளதை எடுத்துக் கூற உழவர்களுக்குத் தைரியம் ஏற்படும்?

★

உடலிலே தங்கம்! உள்ளத்திலே இரும்பு! அவரிடம் அண்டிப் பிழைக்கிறான் அன்றாடம் பாடுபடும் ஏழை உழவன்.

★

அதிகார அமுலைக் கண்டால் இயல்பாகவே அச்சப்படும் மக்கள் பெரும் அளவுக்கு இருக்கும் இந்த நாட்டில், இந்த நாட்களில் அமைச்சர்களாகப் பதவியில் இருந்துகொண்டே பவனிவந்து தேர்தல் நடத்துவது எப்படி நியாயமாகும்?

★

விதி, பழமைப்பிடி, ஜாதி எனும் பல கொடுமையான பிடிப்பு களிலிருந்தே இன்னும் விடுபடமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருக் கும் பாமர மக்களிடம் அதிகாரம் தரும் அச்சத்தையும் ஏவிவிட்டு, ஓட்டு வாங்குவது அறமல்ல! அரசியலை வெறும் சூதாட்டம் ஆக்கு வதேயாகும்.

★

மன்னன் எதையும் செய்யலாம் என்பது தவறு தீது, கொடுமை, என்பதால்தான் முடிஅரசு முறையை மாற்றி குடிஅரசு முறையைத் தேடினர். குடிஅரசிலோ, மந்திரிகள் எதையும் செய்ய வல்லவர்கள் என்பதை உணர்ந்து உள்ளத்தில் கிலி குடிகொண்ட நிலையில் இருக்கும் மக்களிடம் மந்திரிகளாக இருந்துகொண்டே ஓட்டுக் கேட்பது முடிஅரசு முறையின் கேடுபாட்டைவிட மிகமிக மோசமான நிலைமையை ஏற்படுத்திவிடும்.

★

குடிஅரசு முறை இந்த நாட்டைப் பொறுத்தவரையில் உண் மையான மக்களாட்சி அமைய வழிகோல வேண்டுமானால் பொதுத் தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்னாலாவது மந்திரிகள் பதவியை

விட்டு விலகிச் சொந்த அறிவாற்றலைக் காட்டி, கட்சி சாதித்தவைகளை எடுத்துக் கூறி ஓட்டு கேட்கவேண்டும்.

★

நடிகன் எந்த இடம் பெறத்தக்கவன் என்பது ரசிகர்களின் கை ஒலியில் இருக்கிறது. அதுபோல, யார் மக்களின் ஓட்டுகளைப் பெறத்தக்கவர்கள் என்பது, அவர்களின் அறிவாற்றல் செய்தவை, இவைகளைக் காட்டிப் பெறுவதாக இருக்கவேண்டும்.

★

உழவனைக் கடனாளியாக்கி நோயாளியாக்கிஉழல வைத்துவிட்டு பதவியைக் காட்டிப் பயமூட்டி ஓட்டு வாங்கினால் அது கூர்மையான கத்தியைக் காட்டி நடத்தப்படும் வழிப்பறி அல்லது சுவையான பண்டம் கொடுத்து குழந்தையை ஏய்த்துவிட்டு நடத்தப்படும் களவு போன்றதாகத்தான் ஆகிவிடும்.

★

ஆட்சியைக் கைப்பற்றியதும் அடக்கம் அழிந்துபட்டு விடுகிறது. தம்மைப் பற்றிய நினைப்பு தலைக்கேறிவிடும் போக்கினருக்கு!

★

உரிமை முழக்கத்தைக் காட்டுக் கூச்சல் என்றும், கிளர்ச்சியைக் குழப்பமென்றும் வீரர்களைக் காலிகளென்றும் அறிவாலயப் பயிற்சி பெற்றோரைச் சிறுபிள்ளைகள் என்றும் கூறலாமா?

★

தேர்தலிலே எப்படியோ வெற்றிபெற்றுக் காட்டிவிட்டால் போதும். நாடு காலடிகிடக்கும். மக்கள் மண்டியிட்டுக்கிடப்பர். எதிர்ப்பு இருக்குமிடம் தெரியாமல் அழிந்தொழியும் என்று எண்ணுவது எத்துணை பேதமை?

★

தலைவாழை இலையில் சீரகச்சம்பா சாதத்தை வெள்ளி 'அன்ன குத்தி' யால் எடுத்துப்போட்டு, அதிலே வெண்ணெய் காய்ச்சிய நெய்யை உருக்கிவார்த்து நேர்த்தியான பருப்பும் சுவைமிகு காய்கறியும் துணைக்கு இட்டு, பக்கம் நின்று பணிவிடை செய்துவரும் மிட்டா மிராசுகளுடன் கூடிக் கொட்டமடித்துக் கொண்டே, கூசாமல் நாங்கள் ஏழைபங்காளர் என்று பேசி வருகிறீரே, பெரிய பதவியில்

அமர்ந்து விட்டதால் பச்சைத் தமிழர் ஆகிவிட்ட காமராஜர், அதுக்குமா இந்தப் பேச்சு?

★

குருடனுக்கு கோல் தேவைப் படுவதுபோல, ஊரை ஏமாற்றும் குடிகெடுப்பவனுக்கு வேஷம் தேவைப்படுகிறது. வேஷமணியாத வேதாந்தி, மோடி செய்யாத மாது, ஜோடியில்லாத மாடப்புரு, சேடியில்லாத ராஜ்குமாரி இருக்கமுடியாது.

★

காளியின் கோயிலைச் சுற்றினால் கால் வலிக்குமே தவிர காரியம் என்ன ஆகும்?

★

ஒன்றே குலம் ஒருவனே தேவன்.

★

சட்டம் ஓர் இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஓர் விளக்கு. ஏழைகளால் பெறமுடியாது அப்பிரகாசமான விளக்கை.

★

கத்தியைத்தான் தீட்டினாயே தவிர உன் புத்தியைத் தீட்டவில்லை. காரியத்தைச் சாதிக்க கத்தியைத் தீட்டிப் பயனில்லை, உன் புத்தியைத் தீட்டு.

★

தலைவலிக்காக கருங்கற் பாறையில் முட்டிக்கொண்டால் வலி தீராது,' மண்டை உடையும்.

★

நீ கற்பூரமாக் கொழுத்துற, நான் சிகரட்டாக் கொழுத்துறேன்; இரண்டும் ஒன்றுதான்.

★

பூ விற்றால் பூக்காரி; நீ வேலை செய்கிறாய் அதனால் வேலைக்காரி.

★

மக்கள் கட்டளை, அதுவே மகேசன் கட்டளை.

★

தோகையைத் தனியே எடுத்து வான்கோழியுடன் இணைத்து விடுவதால், மயிலாட்டத்தை விட அழகானதாக இருந்து விடாது.

★

காளையின் கொம்பு ஒடிந்துவிடக் கூடும் — ஒடித்து விடவும் கூடும்—ஆயின் அந்தக் கொம்பு காளையை வீழ்த்திவிடவா முடியும்—அதன் காலில்பட்டு, சிதறுண்டு போய்விடக்கூடும்.

★

கடலில் கலந்த காவிரி கோபித்துக்கொண்டு, கடலிற் தான் கலந்திட்ட அளவு நீரைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, வேறிடம் செல்வதுண்டோ?

★

என்னைச் சிலர் ஏசுவதால், எனக்குச் சரி, இயக்கத்துக்கும் சரி, ஒருதுளியும் கெடுதல் ஏற்படாது.

★

போர்ச்சுகலும் ஸ்பெயினும், பிரான்சும் ஜெர்மனியும், சுவிட்சர்லாந்தும் பெல்ஜியமும், நார்வேயும் ஸ்வீடனும் கிரீசும் இத்தாலியும், அல்பேனியாவும் இஸ்ரேலும் தனி நாடுகள்—திராவிடநாடு இவைகளைக்காட்டிலும் பெரிய அளவு.

★

நல்லவர்—மதிக்கத்தக்கவர் என்ற வரிசையினரான வினோபாவினாலேயே எனக்குத் திராவிடநாடு குறித்து இருக்கும் நம்பிக்கையைக் குறைத்திட இயலவில்லை என்றால், பிறர் ஏசிப்பேசி வருவதினாலா திராவிடநாடு பிரச்சினையிலே நமக்கு இருக்கும் நம்பிக்கையும் ஆர்வமும் அதற்காகத் தொண்டாற்றும் திறனும் குறையும்; பாழ்படும்? எவ்வளவு ஏமாளித்தனம் இருக்கவேண்டும், இப்படி எண்ணிக்கொள்ள?

★

ஆதித்தனார், திராவிடநாடு வேண்டாம் என்பதற்காகவும், திராவிடர் என்ற கருத்து தீது என்பதற்கும், கூறுத எந்தக் காரணத்தைப் 'புதியவர்கள்' கூறுகிறார்கள் கூறமுடியும்?

★

காங்கிரசைவிடப் பெரும்பான்மை இடங்களைச் சட்டசபையில், தி. மு. க வினருக்குத் தருவதன்மூலம் வாக்காளர்கள், தி. மு. க. விடம் தெரிவிக்கும் நம்பிக்கையை மத்திய ஆட்சியிலிருந்து மா நிலம் பிரிவதற்கான வாக்கு என்று மாநில மந்திரிசபையும், மத்திய மந்திரி சபையும் ஏற்றுக்கொள்ளுமா?

★

வாழ்வும் இல்லை— மதிப்பும் இல்லை—எனவே, ஏன் வெறும் சோற்றுப் பிண்டங்களாக நாம் வாழவேண்டும்?

★

வடநாட்டு முதலாளிகளுக்கு இந்தியப் பேரரசின்மீது உள்ள பிடிப்பு குறையவில்லை. மாறாக நாளுக்குநாள் வலுவாகிறது. வடநாட்டு முதலாளிகள் மட்டுமல்ல, அன்னிய முதலாளிகளின் பிடியும் வலுவாகி வருகிறது.

★

நிர்வாக ஊழல் நாளும் வளருவது, ஒரு அரசின் அழிவுக்கான மூலகாரணம்.

★

நாம் விடுபடவேண்டும் என்ற எண்ணம், நம் இதயத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

★

நம்முடைய இலட்சியத்தை யார் ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் பேச்சிலே தெளிவு இருக்கும்—உணர்ச்சி இருக்கும்—எழுச்சி இருக்கும்.

★

தாசிகள் பற்றிய கதைகள் நீங்கள் நிரம்பப் படித்திருக்கலாம். தாசி—ஒருவனிடத்தில் பணம் இருக்கும் வரையில்தான், என்னைத் தழுவிக்கொண்டே இருங்கள்; நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது? நான் இல்லாவிட்டால் நீங்கள் ஏது? என்று ஈருடலும் ஒருயிரும் என்பது போலப் பேசுவாள். ஆனால் அவனிடம் இருந்த பணம் பூராவும் பறிபோன பிறகு, அவன் இனி நம் வீட்டிலிருந்தால் சோற்றுக்கு கேடு என்ற நிலைக்கு வரும்போது, அவனைக் கழுத்தைப் பிடித்து, நெட்டித்தள்ளி விடுவார்கள். அதைப் போலவேதான் ஏகாதிபத்தியங்களும்!

★

தென்னக அரசியல்', ஏதோ தி. மு. க. வாழ்வுக்காகப் புதிதாக அமைத்துக் கொண்ட மேடை என்று கருதுவதற்கில்லை.

★

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாரோ ஒருவன் கனவு கண்டதன் விளைவாகத்தான், சந்திரனை எட்டிப்பிடித்து, பூமியிலிருந்த பொருளைச் சந்திரனில் சேர்க்க முடிந்தது. இன்று சந்திரமண்டலத்தை 'ராக்கெட்டு எட்டிப்பிடிக்க வித்தூன்றியவன் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கனவு கண்டவன்தான். அப்படிக் கனவு காண்பதற்கு இன்று சிலர் தேவைப்படுகிறார்கள்.

★

பாதை புதிதாக வகுத்துக்கொண்டேன் என்று பின்பற்றுவோர் கண்மூடிக்கிடக்கும் வரை பேசலாம்.

★

வெளியே எடுக்கப்பட்டுவிட்ட முத்து மீண்டும் சிப்பிக்குள் போய்விட முடியாது!

★

கொள்கைப் பற்று என்ன, கீழேவீசினால் உடைந்து தூளாகி விடக்கூடிய கண்ணாடிப் பாத்திரமா?

★

நமது கொள்கையின் தூய்மையும் வலிவும் தரமும் பழுதுபடாதபடி நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமானால், எவர் நமது கொள்கைகளை, கழகத்தவரை மனம்போன போக்கில் ஏசினாலும் ஒரு துளியும் பதறாத நிலை — அமைதியான மனநிலை நமக்கு ஏற்பட்டாக வேண்டும்!

★

கடலில் முத்து இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எல்லா இடத்திலுமா? சுறாவும் அதற்கு இரையாகும் வேறு மீனினமும், பாம்பும் வேறு பல நச்சுப் பூச்சிகளும் நிரம்ப இருக்கின்றன. முத்து எடுக்க மூச்சடக்கி, கத்தும் கடலடி சென்றவன், கரத்தில் சிக்கியது சிப்பி என்றெண்ணி எடுத்துவந்து உடைத்துப் பார்க்கும்போது, முத்து இருக்க வேண்டிய இடத்திலிருந்து சிறியதோர் நாகம் சீறிக் கிளம்பிடக் கண்டால் எப்படி இருக்கும் நிலைமை?

மாந்தோப்பாக இருந்தாலென்ன, புளியந்தோப்பாக இருந்தாலென்ன, காலா காலத்திலே காய்த்து, காய்த்தது நல்ல விலைக்கு விற்றுக் காசு கிடைத்து வாழ்க்கையைச் செம்மைப் படுத்தினால் போதும்.

★

கூடைக்காரன் மண்வெட்டியும் கையுமாகத் திரிந்து மடை திருத்திக் கிராமத்திலே இருந்தபோது, கிடைத்த வாழ்க்கை நிம்மதியைக் காட்டிலும், பட்டணத்திலே பிழைக்க வந்தால், சிறப்பான வாழ்க்கையா கிடைக்கும்?

★

புயலாலே பூந்தோட்டம் அழிந்தது. கிணற்றிலேயோ இடி விழுந்து தூர்ந்துபோய் விட்டது. ஆறு, ஆறாவது கல்லில் இருக்கிறது. அங்கிருந்து வாய்க்கால் வெட்டிக்கொண்டு வருவதற்கோ இடையில் ஒரு சிறு குன்று கிடக்கிறது. நான் அந்தக் குன்றைக் குடைந்து வாய்க்கால் அமைக்கலாமா? அதைச் சுற்றி வளைத்துக் கொண்டு வாய்க்கால் கொணர்ந்துவருவதா? என்பது பற்றி நிபுணர்களைக் கேட்போமா, அல்லது 'நின்று தவமிருந்தான்' கோயில் பூஜாரியிடம் யோசனை கேட்போமா என்று சிந்தித்த வண்ணம் இருக்கிறேன். சிரமப்படுகிறேன் - நீயோ மல்லிகைப் பூ மாலை எங்கே? மருக்கொழுந்துக் கட்டு எங்கே? மனோரஞ்சித மலர் எங்கே? என்று கேட்டுத் தொல்லை தருகிறாயே என்று பேசும் தோரணையில், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள்.

★

குழந்தைக்காக பால் காய்ச்சி வைத்திருந்தேன். பாழாய்ப் போன பூனை உருட்டிவிட்டது என்று மனைவி சொன்னால் சமாதானம் வருவதில்லையே, நம் மனதுக்கு.

★

பொக்கைவாயக் கிழவன் தனக்கு மீசை சுருள் சுருளாக இருந்தபோது மயான காண்டத்தில் சுடலை காத்த காட்சியில் ஊன் உருகப் பாடிய கூத்துபற்றி, கேட்போர் சலிக்கும் அளவு கூறிக்கொண்டிருப்பதுபோல, வறுமை கொட்டுவதால் துடித்துக் கிடக்கும் மக்களிடம், விசித்திரமாக சுயராஜ்யப்போர் நடத்தியதுபற்றிப் பன்னிப்பன்னிப் பேசினால் எப்படி இருக்கும்?

★

சூரியன் மலைவாயிலே விழவேண்டியதுதான் பாக்கி, ஒரே இருட்டு! பாம்பு கடிச்சாக்கூட, ஒரு பச்சிலை தேடிப் பறிக்க வெளிச்சம் கிடையாதே! ஊராவா இருக்குது?

★

ஏற்றம் இறைக்கிறார்கள்! ஏர் உழுகிறார்கள்! எங்கும் உழைப்புத் தெரிகிறது, உற்சாகத்தைக் காணோம்! சிரிப்பு எழவில்லை. சலிப்புக் குரலொலிதான் கேட்கிறது. சுற்றிலும் பொட்டல், எனவே வெப்பக் காற்று வீசுகிறது. இப்படிப்பட்ட இடத்திலே காலையிலே. கடும்வெய்யிலிலே சென்று என்ன காண்பது—என்ன இனிமை பெற முடியும்?

★

உன்னால் என்ன ஆகும்? என்று ஒருவன், ஆணவத்தை அறிவின் முதிர்ச்சி என்று நம்பிக்கொண்டு, நம்மைக் கேட்டிடின் ஒன்றும் ஆகாதப்பா! என்று கூறிவிடுவதால் நமது ஆற்றலும் அழிந்துவிடாது. மரியாதையும் மங்கிவிடாது. ஆனால், உன் தமிழ் மொழியில் என்ன உண்டு? உன் தாய்மொழியால் என்ன ஆகும்? என்று கேட்க ஒருவன் முற்பட்டால், உணர்ச்சியற்றுப் பதிலளிக்காதிருந்தால், மரபும் மானமும் நாடும் மொழியும் ஏளனத்துக்கு இலக்காகிச் சிதைவுபடும்! ஈடு செய்யமுடியாத நஷ்டம், துடைக்கமுடியாத பழி, போக்கமுடியாத கறை, அப்போதுதான் ஏற்படும்.

★

தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட காரணங்களுக்காக, கோப உணர்ச்சி கொதித்தால், அவர்களுக்கு உள்ள பலமும் போய்விடும்; மற்றவர்கள் கண்டு எள்ளி நகையாடவும் செய்வர். ஆனால் பொதுநல நோக்கத்துக்காக, இனத்துக்காக, மொழிக்காக, உணர்ச்சிப் பிழம்பாக நாம் மாறும்போது புதியதோர் வலிவு பெறுகிறோம்; காண்போர் கனிவு காட்டுகின்றனர்!

★

மேதாவிலாசம் உண்டு. மேனாட்டுக் குடியினர் உண்டு. கரும்புத் தோட்டம் உண்டு. வடபாதிமங்கலத்தார், வலங்கைமான் உறைவார், பூண்டிப்பதிமேவும் வாண்டையார், வானூரார், கானூரார், வகைவகையாய் நாமறிவோம். அவரெல்லாம் சேர்ந்ததுதான் மண்டலக் காங்கிரசு.

★

செறுக்குமிக்கோர் சிரிக்கட்டும், வெட்கமே வேலாகி நம் விலாவைக் குத்தட்டும்; வெற்றி எட்டுத் திக்கும் என்று முரசு கொட்டிய இனம் வீறுகொண்டெழுந்து விடுதலை காணட்டும்; திராவிடம் மலரட்டும் !

★

ஜுர வேகத்தில் இருப்பவனை, நாலு பேர் சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும், நெம்பிக்கொண்டு எழுவான். அது வலிவின் அடையாளமல்ல; நோயின் தன்மை. கட்டான உடலை, உடற்பயிற்சி முறைகளால், மேலும் வலிவுள்ளதாகவும் பொலிவுமிக்கதாகவும் ஆக்கிக் கொண்டால், பத்துப் பேர் பிடித்திழுத்தாலும், நிலைகுலையாத தன்மை கிடைக்கும்; அது உண்மையான வலிவுக்கு அடையாளம் !

★

என் கோபத்துக்குக் காரணம் நான் இகழப்பட்டதால் அல்ல; என்னை எவரேனும் ஏளனம் செய்ததால் அல்ல. அந்த மாதிரி நேரங்களில் நான் மரக்கட்டை !

★

முட்டாளே — என்று ஒருவன் சொன்னால் ஏற்படக்கூடிய கோபத்தைவிட, முட்டாள்பயமகனே ! என்றால் எழக்கூடிய கோபம் அதிகமாக அல்லவா இருக்கும் ?

★

பக்கத்திலே யார் ? உனை ஈன்ற அன்னையா? பாதத்தை முத்தமிடு ! தந்தையோ ? தாளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள் ! அண்ணனோ ? அகமும் முகமும் மலர, அண்ணா ! என்று தழதழத்த குரலில் அழைத்து மகிழ்ந்திடு ! தம்பியானால் முதுகைத் தட்டிக்கொடுத்திடு, களிப்புடன் ! பெற்ற மகவானால், உச்சிமோந்து முத்தமிடு ! உன்னை அந்தப் பெருமைக்குரிய நிலைக்குக் கொண்டு வந்த பெருமாட்டியெனில், பேசவும் வேண்டாம். களிநடமிடும் கண்கள் போதும், வெற்றிக் கவிதை பாடிட !

★

குறுகிய வடிவம் கொண்ட பேய் ! கொழுப்பு மாலை அணிந்த பேய் ! கோடரிப் பல்லழகி ! கொட்டாவி விட்டபடி உள்ள பேய் ! இப்படிப் பேய்கள் பலவகை !

★

அப்பா காதைத் திருகு! பார்க்கலாம் உன் சாமர்த்தியத்தை! என்று நாலு வயது மகனுக்குக் கூறும் அதே தாய், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அதே வார்த்தையையே சொல்லிப் பார்க்கட்டும் — எத்தனை விபரீதமான பொருள்படும்?

★

கருத்துத் தோட்டம் ஓர் மலராகத்தான் இருக்கும் இடமாகாது. வண்ணப்பூ வகைவகையாய் இருக்கும் ஆங்கே! சிரித்திடும் முல்லைக்கும், சிங்கார ரோஜாவுக்கும், பறித்தெடுக்காமலே பார்த்து மகிழத்தக்க பாங்கான தாமரைக்கும், பகைதான் என்று பேசுவது அறிவீனம்

★

வேட்டு முறை ஆகாது; மரபுமல்ல என்பதால் அதை விடுத்தோம்.

★

கழகத்தின் ஒவ்வொரு சிறு அசைவுகளும், கழகத்தாரின் ஒவ்வொரு நடவடிக்கையும் பொதுமக்களால் மிகமிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

★

கழகத்திலே காணப்படும், ஏற்படும், ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு நிலைமைக்கும் பொருள் என்ன? நோக்கம் யாது? பயன் என்ன? என்று கழகத் தோழர்கள் மட்டுமல்ல, பொதுமக்களோ கவனிக்க — கணக்கெடுக்க — காரணம் காண விழைகின்றனர்!

★

கழகத்திலே ஏற்படக்கூடிய மாற்றங்கள் திருப்பங்கள், திருத்தங்கள் ஆகியவைகள் கழகத்தை மட்டுமல்ல; காட்டின் நிலைமைகளையே பாதிக்கப்பட்டவை என்ற கட்டம் ஏற்பட்டுவிட்டது.

★

கழகத்தின் வாழ்வும் வளர்ச்சியும் பயனும் தன்மையும் கழகத்தவர் பார்த்துச் செய்திடவேண்டிய தனித்துறைக் காரியம் என்ற நிலைமை மாறிப் பொதுமக்கள் — நாட்டு நலனில் அக்கரை கொண்டோர் தொடர்பு கொண்டு சமைத்தளிக்கும் பொறுப்பை மேற்கொள்ளவேண்டிய நிலைமை மலர்ந்து வருகிறது.

★

இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச்சுவை இருக்கிறது. அந்தச்சுவை உள்ளத்துக்குத் தூய்மையும் தாவல்லது என்பதை மலைவளம் காணின் கவர்ச்சி ஆகியவற்றினைக் காணும்போது நிச்சயமாக உணரமுடியும்.

★

ஓர் அமைப்பினைக் கட்டுங்காலை உள்ள கஷ்டத்தைவிட அதனைக் காத்திடும்போது ஏற்படும் கஷ்டம் மிக அதிகம். அமைப்புக்கு அதிர்ச்சி ஏற்படுத்துவது, அதனை அழித்திடத்தக்க ஆபத்தினைக்கூட உண்டாக்கி விடக்கூடும். தூசுபோகக் கண்ணாடிப் பலகையினைத் துடைத்திடத்தான் வேண்டும். ஆனால், பக்குவமாக! எங்கெங்கு அழுக்கேறிவிட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதனை நீக்கிடத்தக்க விதத்தில், துடைத்திட வேண்டும்—ஆர்வத்துடன்! ஆனால் ஆர்வத்துடன் பக்குவமும் சேர்ந்திடவேண்டும். இல்லையேல், துடைக்கும்போதே, கண்ணாடி பாளம் பாளமாகக் கீழே வீழ்ந்துவிடும் — பாழ்பட்டுப்போகும் — பட்டபாடு அத்தனையும் பாழாகிப் போகும்.

★

நேர்த்தியான அறுவைத்திறன் காட்டினார் மருத்துவர், ஆனால் நோயாளிதான் செத்துவிட்டார் என்று கூறிடத்தக்கநிலை ஏற்படக் கூடாதல்லவா? வேலின் கூர்பார்க்க, நம் விழியினையே குத்திக் கொள்ளப்போமா?

★

கூந்தலுக்கு இயற்கையாக அமையாத அழகினைக்கூட்டிட, மினுக்குத் தைலம் தேடுகிறார்கள். வண்ணக்கலவை நாடுகிறார்கள். வைரம் இழைத்த அணிமணியினை, கோதிமுடிந்த கூந்தலில் செருகிக் கொள்கிறார்கள் —உள்ளவர்கள்!

★

கோடிகோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும் செய்து காட்ட இடலாத காட்சியன்றோ மலைவளம்" அதிலும் தமிழகத்தின் தன்னிகரில்லா வரலாற்றுச் சிறப்பினுக்கு உள்ள சான்றுகளிலே ஒன்று கொல்லிமலை! முகிலைத் தொட்டிழுத்து — முத்தமிடும் குன்றுகள் உள்ளன—அந்தக் குன்றுகளிலே இயற்கைவளம் கொஞ்சி விளையாடுகிறது. எனினும் அது திருமாலுக்கா, அவன் மருகனுக்கா என்று மல்லுக்கு நிற்கின்றனர் பேதைகள்!

★

தேரும் திருவிழாவும் காணவும், ஊரூர் சென்று இடிபட்டு மிதி பட்டு அறிவிழந்து, கண்டகண்ட காதகர் காலடியெல்லாம் வீழ்ந்து வணங்கும் போக்கினராக உள்ள, நமது மக்கள், ஓய்வு நாட்களை கொல்லிமலை போன்ற இடங்களைச் சென்று காண்பதற்குச் செலவிட்டால் மனத்தூய்மையும் தெம்பும் ஏற்படுமல்லவா? எங்கே செல்கிறார்கள்.

★

இரட்டை நாக்கு! ஒன்று உண்மைபேச! மற்றொன்று பிழைக்கும் வழிபேச!

★

சாதி அமைப்புத் தொடர்ந்து இருக்கும்போது, ஜனநாயகம், புனித சுதந்திரம் ஆகியவை பற்றிப் பேசுவது வெறும் கேலிக் கூத்தாகும்.

★

வகையறியாதார் அல்ல, பாமரர்!—காலம் வரட்டும் என்று காத்திருக்கும் பெரறுமைசாலிகள்! அறிவற்றவர்கள் அல்ல, மக்கள்!—ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளக் கற்றவர்கள்! பிடிசாம்பலாகிப் போனவர்கள் அல்ல, மக்கள்—நீறுபூத்த நெருப்பாகி நிற்பவர்கள்!

★

யாத்ரீகர்களிடம் பக்தியைக் காட்டிலும் கவனக்குறைவும், வெளிவேஷமும் துப்புக்கெட்ட தனமுமே அதிகமாக இருக்கிறது. சாதுக்கள் கூட்டம் கூட்டமாக அங்கே வந்தவர்கள், உலக வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் அனுபவிப்பதற்கென்றே பிறந்திருப்பவர்களாக அவர்கள் தோன்றினர்

★

இந்துத் தண்ணீர் கிடைக்கும் வரையில் இந்துக்கள் காத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இதே இந்துக்கள் நோயுற்று விடும்போது டாக்டர் தங்களுக்குக் கொடுக்கும் சாராயத்தையும் மாட்டிறைச்சி சூட்டையும் குடிக்கத் தயங்குவதில்லை. தங்களுக்கு மருந்துத் தண்ணீர் கொடுப்பவர் கிறிஸ்தவக் கம்பவுண்டரா, முஸ்லிம் கம்பவுண்டரா என்பதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை, என்பது கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்.

★

கழகம் நாட்டுக்கோர் அணிகலனுய்த் திகழ்கிறது என்ற உணர்வு பொதுமக்களுக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

★

தீண்டாமை உண்மையில் ஒழிந்துவிட்டதா என்று கண்டு பிடிக்க கிராமத்திலுள்ள கிணறுகள் சாதி வித்தியாசமின்றி உப யோகப்படுகின்றனவா என்று பார்த்தாலே போதும்.

★

சுயமரியாதைக்காரன் கண்டனம் என்ருல் வெகு எளிதாக, நாத்திகப் பட்டம் கட்டிப் பொதுமக்களை அவர்களின் மீது ஏவி விடலாம். என்று மதத்தால் மந்தகாச வாழ்வு நடாத்துவோர் எண்ணிக் கொள்வர்.

★

காசி இராமேஸ்வரம் போவது, காவடி தூக்குவது, வீதியில் புரள்வது போன்றவைகள் காட்டுமிராண்டித்தனம்!

★

தம்பிகள் நாவலரும் சம்பத்தும், கருணுநிதியும் மதியும், நடராசனும், அன்பழகனும், சிற்றரசும் எனைச் சுற்றி வளையம் அமைத்துக்கொண்டனர். என் செய்வேன்! தப்பி ஓடவாமுடியும்! 'உம்' என்று இழுத்தேன், உட்கார் என்றனர், வேறென்ன செய்ய இயலும்? பொறுப்பேற்றுக்கொண்டேன்! அல்ல அல்ல! பொறுப் பேற்றுக்கொண்டேன் என்று கூறிவிட்டேன்.

★

அலைகடலில் கிடக்கிறது முத்து! மண்ணடிகிடக்கிறது தங்கம்! பிறகோ கைத்திறன், தொழில் நுட்பம் பெற்ருேரின் கரம் வந்தடைகிறது. பிறிதோர் நாள் மனதை மயக்கும் பருவத்தாளின் மார்பினில் புரள்கிறது, மாலையாகி!

★

பரபரப்புணர்ச்சிக்காகப் பலனளிக்காத் திட்டங்களை மேற்கொள் வதும் தீது பயக்கும். அமைதியே ஆனந்தம் என்ற போக்குக்காகச் சொரணையற்றுக் கிடப்பதும் அழிவு தரும். தேய்விளை உண்டாக்கும்.

★

கரிப்படைகள் மட்டுமே இருந்தால் போதும். வலிவுமிக்க கோட்டைகளையும் தூள் தூளாக்கலாம் என்றெண்ணிப் பிறவகைகளை அமைக்காதிருப்பவன் வெற்றியா பெறுவான்?

★

திறமைகள் பலப்பல—அவைகளை இணைத்திடும் முறையோ மிகப் பெரியது, மிகமிகத் தேவையானது.

★

கரிப்படை வலிவளிக்குமா? பரிப்படை வெற்றி தேடித் தருமா? என்பது பற்றிக் காலாட்படை பேசியபடி காலத்தை ஓட்டினால் களத்திலே வெற்றியா கிட்டும்?

★

ஒருதாய் வயிற்று மக்களேகூட ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதுண்டு பகையுணர்ச்சி ஏற்பட்டு—வெட்டி வீழ்த்திக்கொள்வதுண்டு, வெறி முற்றி — எனினும் இறுதியில் ஒருதாய் வயிற்று மக்கள் என்ற உண்மை வெற்றி பெறும்!

★

கறந்தபால் காம்பேருது — கருத்தழிந்தோர் துணிவினைப் பெருர்!

★

தளையை நொறுக்கிடத் துணியாதிருப்போரே! அவர்தம் திகைப்புக் கண்டோம், இடி இடியெனச் சிரித்தோம்! அடிமை சிரித்தால் பொருள் என்னதெரியுமா? கொடுமையை அலட்சியமாகத் தாங்கிக் கொண்டு, அடிமை ஆதிக்கக்காரன், காது செவிடுபடச் சிரித்தால் பொருள் என்ன தெரியுமா? அடிமை, அடிமை அல்ல என்பது பொருள்! அவனை அடக்கி வைத்திடும் ஆற்றலை, ஆதிக்கக்காரன் இழந்துவிட்டான் என்று பொருள்!

★

கொற்றம் இழந்தோம். எனினும் மொழிவளத்தை இன்னும் இழக்காதிருப்பதால் அந்த நாளில் நமமனோர் வாழ்ந்தது எத்துணைச் சிறப்புடன் என்பதனை, ஓரோர் வேளை அறிந்திடவேணும் வாய்ப்புக் கிடைக்கிறது.

★

அடிமைத்தனம், துவக்கத்திலே உணர்ச்சியற்ற நிலையை உண்டாக்கி வைக்கும் அல்லற்படும்போது அழத்தோன்றும். அழ மட்டும் தெரியும்போது, நெஞ்சிலே பீதி குடிபுகும். கொடுமை வளர வளரப் பீதி அழிந்து படும், கண்ணீர் வறண்டுவிடும், நெஞ்சிலே நெருப்பு மூண்டுவிடும்! அந்தக் கட்டம் தோன்றிவிட்டால், ஆதிக்கக்காரன் திகைப்படைகிறான்! கடைசி முயற்சி செய்து பார்க்கிறான்!

★

மொழி, இனத்தின் பண்பையும் நாட்டு வரலாற்றினையும் எடுத்துக் காட்டி வீரம் ஊட்டிடவல்லதாய் என்பதை, தன்னை மறவாதார் அனைவருமே அறிந்துள்ளனர்! தனி நாடு, தனிஅரசு என்று குறிக்கோள் கொள்ளாதவர்களும்கூட, தன்மொழி தாய்மொழி என்ற உணர்ச்சியை மதித்திடக் காண்கிறோம்.

★

கதை என்பதே கட்டுவதுதானே! சிறுசிறு உண்மைகளை வைத்துக்கொண்டு அந்தக் காலம் நிலைமை, இவைகளை விளக்க பல சம்பவங்களைச் சுவையாகச் சேர்த்துக் கட்டுவது கதை!

★

மாத்திரை தீர்ந்ததேயன்றி, மாந்தம் போகவில்லை என்பார்கள், தாய்மார்கள். அதுபோல முறைபல காட்டுகிறார்களேயன்றி குறைகள் களையப்படவில்லை!

★

கொள்கைக்காகவே வாழ்ந்து கொடியவரின் கொடுவாளுக்கோ, வஞ்சகரின் வீச்சுக்கோ, அடக்குமுறையின் கோரப்பற்களுக்கோ, இரையாகி இறந்துபடும் மாண்பினர், உயிரற்றோர் எனும் பட்டியலில் அல்ல, உயிருட்டம் தருவோர் வரிசைக்குத் தங்களை உயர்த்திக்கொள்கிறார்கள் என்பதுதான் நாம் போற்றிடத்தக்க பேருண்மையாகும்!

★

நல்லவர் மனதிலே வியப்பும் நாடாள்வோர் மனதிலே விசாரமும் ஏற்படுத்தும் நமது நிலைமை அழித்தொழிக்கும் முறையை அறமென்று எண்ணிக்கொள்ளும் அளவுக்கு மனம் அழுகிக்கிடப்போருக்கு பகை உணர்ச்சியைத்தான் ஊட்டும் — அதன் விளைவுதான் நமக்கு அவ்வப்போது ஏற்படும் விபத்துக்கள்.

★

கங்கைக்கும் யமுனைக்கும் கோடி கோடியாகப் பணம்! இங்கு காட்டாறுகளைக் கட்டுப்படுத்த, தொகையின் அளவு குறைவு!

★

உள்ளம் போதே, உண்மைக்கு உழைத்திட; ஊராருக்குப் பணியாற்றிட விடுதலைக் கிளர்ச்சிக்கு விறுவிறுப்பூட்ட தளராது பணியாற்று! பணிமுடியுமுன் பாதகரின்சதி, நம்மை வீழ்த்திடினும், அதைச் செய்யாது விட்டோமே, இதைக் கவனியாதிருந்தோமே என்று எண்ணித் துயருறும் நிலையில் நாம் இருத்தலாகாது!

★

தமிழ் வந்தபடி நடந்துகொண்டேயிருக்கும். தெய்வயானையை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக்கொண்டு முருகன் போவதுபோல், மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள், ஆனால் அந்நிலை இன்று மாறிவிட்டது. எங்கு சென்றாலும் தமிழ் தமிழர் என்ற பேச்சுக்கள்!

★

நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலுபக்கமும் வேலிகள் அமைத்து, அங்கு எட்டாத அளவுக்கு உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக்கொண்டு, உள்ளே ஆடுது காளி, வேடிக்கை பார்க்க வாடி என்பதுபோலத் தொல்காப்பியத்தைப் பாரீர். அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அணுகுவர்?

★

சுதந்திரம் சீமையிலே தயாரிக்கப்படும் சரக்கல்ல, சன்மானமாகப் பெற! அது நாட்டு மக்களின் நாடி முறுக்கினால் விளையாடக் கூடியதல்ல, அதனை இங்கேயேதான் பயிரிட முடியும்; ஆனால் அந்த வயதிலே கள்ளிபடர்ந்திருக்கிறது. அதனைக் களையாமுன்னம் பயிர் இல்லை, பண்பு இல்லை, நாட்டு நலிவு போக்கும் பச்சிலை இல்லை.

★

மெருகு கலையாத மோட்டாரில் பவனிவரும் சேட்டுகளையும் பாருங்கள். கூலிவேலைக்கு வெளிநாடு செல்ல, கிழிந்த ஆடையும், வரண்ட தலையும், ஒளியிழந்த கண்களும் கொண்ட தமிழன், கப்பல் டிக்கெட்டுக்குக் காத்துக்கொண்டிருக்குக் காட்சியையும் பாருங்கள்!

★

தலையிலே பிரிபிரியாக வர்ணத்துணிகளைச் சுற்றிக்கொண்டு பேளர்போராக உள்ள சாமான்களின் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு வட்டிக் கணக்கைப் பார்த்துக்கொண்டே வயிற்றைத் தடவிக்கொண் டுள்ள மார்வாரியையும் பாருங்கள். பாரம் நிறைந்த வண்டியை, மாட்டுக்குப் பதிலாக இழுத்துச் செல்லும் தமிழனையும் பாருங்கள்!

★

சர். சண்முகத்தை, நான் அவர் ஆற்றலறிந்தே அரசாள அழைக்காமல், அரசு அமைக்க அழைக்கிறேன். மரத்தில் பழங்குலுங் கும் வேளையிலே, மந்தி தாவுமானால் கனியுதிரும்! அதுபோலக் கட்சிக் கனியும் தறுவாயிலே, கடுவனோ, மந்தியோ களித்துக் கூத்தாடும். கனிகிடைக்குமெனும் கருத்தினால்! ஆனால் தோட்டம் அமைத்துத் தூரவு எடுத்து, நீர்பாய்ச்சி தருவளர்த்திடும் செயலே முக்கியமானது. சர். சண்முகத்தை நான் அழைப்பது தீஞ்சுவைதரும் பதவிப்பலா வைப் பறித்திட அல்ல; அதற்குக் கீச்சிடும் கருவண்டுகளும், மைய லூட்டும் மந்திரிகளும் என்றுமுண்டு, எங்குமுண்டு. நான் சர். சண் முகத்தை அழைப்பது திராவிடத் தனிஅரசு அமைக்க; வெறும் பதவி யில் அமரவல்ல!

★

உலகிலே பலப்பல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசும் நாவரையும் நானறி வேன். நெருப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுக்கும் பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை உணரவேண்டுகிறேன். அவர்கள் படித்த பக்குவமனம் படைத்த கூட்டத்திலே பேசினர். அவர்களுக்கும் எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல்வீச்சு, மண்வீச்சுக்கிடையே என்பதை அறியவேண்டும்.

★

சர். சண்முகம் கலையின் மேம்பாட்டினைச் சுவைக்*க் காப்பியக் கடலிலே மூழ்கிடுவதை நான் தடுக்கவில்லை ஆனால், அக்கடலிலே ஆரியஅலை மோதுகிறது. சநாதனமெனும் சுறுமீன்கள் உலவுகின்றன. வர்ணாசிரமம் எனும் வாயகன்ற திமிங்கலமுளது, என்று எச்சரிக்கை செய்யாவிடின் எனக்கு அவர்பால் உள்ள அன்பினை மறந்தவனாவேன்.

★

கரியைக் கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா? மலை மரங்களையன்றோ முறித்திடச் செய்யவேண்டும்? வேங்கையை அழைத்து விளாங்கனியை உடைத்திடச் செய்வதா? சர். சண்முகத்தின் அறிவாற்றலுக்கேற்ற காரியம் அரசாள்வதல்ல; அரசு அமைப்பது!

★

ஊரைக் கலக்கிவைக்கும் ஊத்துக்காட்டு அம்மையே! நாட்டைக் கலக்கிவைக்கும் நல்ல பத்ரகாளியே! வேண்டி அழைக்கின்றோமே வேலாத்து அம்மையே என்று சிலம்பைச் சுற்றி உடுக்கை முழக்கி உள்ளே சென்ற குடிவகை, ஆவியமயமாக வெளியே வருமளவு உரத்த குரலிலே அம்மனை வேண்டிக் கூவும் பூசாரிகளை நான் கண்டிக்கிறேன். அதன்பயனாக ஆவேசம் வரும். வந்ததும் ஊத்துக்காட்டாளோ, சோத்துக்குடையாளோ, பூசாரியையும் பக்தர்களையும் பார்த்து ஆடுவெட்டிக் கோழிவெட்டி பூசை ஏன் டா போடலை? ஆடி மாத நோண்புக்கு ஆறு இலை போடலே, வேண்டிக் கொண்டபடி விருந்து படைக்கவே இல்லை என்று கோபத்தைக் கக்கக் கேட்டிருக்கிறேன் அதுபோன்ற பூஜை போடும் முறை அரசியலிலே, மகா ஆபத்தாயிற்றே என்றன்றோ நான் அஞ்சுகிறேன்.

★

ஆண்மான் பெண்மானுக்குத் துணை நிற்கும் அழகிய காதல் அறத்தைக் காட்சியாக்கிப் படித்த தமிழனுக்கு, மாரீசனின் மாயமான் கதை கலையாக்கப்பட்டுவிட்டது!

★

முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை எனும் நிலப் பண்பு தெரிந்து இன்புற்ற தமிழர் இயல்பு, முன்பு! பிறகோ நாலு வர்ண மென்னும் நச்சுப் பொய்கையில் நெளியும் நிலைமை! கலையின் பேரால், ஆரியக் கற்பனைகள், தமிழரின் கருத்திலே தூவப்பட்டுவிட்டன.

★

திசைகாட்டும் கருவி தீயோனிடம் சிக்கினால் கலம் பாறையில் மோதல் போல அரசினை ஆட்டி வைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த மேடைப்பேச்சு எனும் சக்தி, சாதனம் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து, அவர்களும் அந்த சக்தியைத் தவறான காரியங்களுக்குப் பயன்படுத்துவதானால், மக்களின் நலம், பாறை மோதிய கலமாகும்!

★

காந்தியாரிடம் என்ன சொத்து இருந்தது? நூல்சாய் சிறு கரண்டி, தெர்மாஸ் பிளாஸ்க், ஒரு பவுண்டன்பேனா, ஒரு ஜதை காலணி, இவை, அருள் பெற்றவர்கள், யோகமறிந்தவர்கள், மக்களின் மோட்சலோக வழிகாட்டிகள் என்றெல்லாம் விருது பெற்று, துறவு நிலையும் கொண்டிருப்பதாகக் கூறுபவர்கள் இன்றும் பலர் உள்ளனரே அவர்களின் சொத்துக்களை சற்று உங்கள் மனக்கண் முன் கொண்டு வந்து பாருங்கள்—எவ்வளவு ஆடை ஆபரணம்—தங்கத்தால் வட்டில் தட்டு முதலியன மட்டுமா? பாதக்குறடே தங்கத்தால்!

★

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் படைத்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக்கொண்டு வந்தோர், நீரில் நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்போல் மனிதரே! அவர்களால் முடிந்தது. நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று, அவைகள் சாத்திய மானபோது! மேடைப்பேச்சா சாத்தியமாகாது? பேசாமலிருப்பது வேண்டுமானால் சிரமம்—சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது—பேசுவது எளிது. பேசுவதை ஒழுங்குக்கும், முறைக்கும் கட்டுப் படுத்துவதுதான் மேடைப்பேச்சு!

★

மகான்கள் வந்தால் தான் மழை பொழியும் என்பார்கள். மகான்களாலேயே மாபாவி என்று தூற்றப்படும் நான் வந்திருக் கிறேன், அப்பொழுதும் மழை பொழியத்தான் செய்கிறது.

★

பொருளைக் காட்டி மறைப்பர் குழந்தைகளிடமிருந்து பெற் றோர்; நாமோ புனித ஸ்தலங்களின் பெருமையைக் கூறிப் பூட்டிவிடு கிறோம்; அங்கு ஒரு குறிப்பிட்ட சமூக மக்கள் வரக்கூடாது என்று.

★

வாழ்க்கையில் நாம் சிறந்த பொருள்களை, வாழ்க்கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்டமின்றிப் பெறமுடியாது; அதற்கு ஓயாத உழைப்பும், சலியாத முயற்சியும் வேண்டும்.

★

அனுபவமற்ற யுவர்கள் காதலை உபயோகிக்கும் போதுதான் மிகப்பெரிய தீங்குகள் விளைந்து விடுகின்றன.

★

பணம் உண்டுபண்ணும் இயந்திரத்தை, பண உற்பத்தி ஸ்தாபனத்தை வைத்திருப்பவன்தான் முதலாளி.

★

பொருள்மேல் ஆசை வைக்காதே; பொருள் மாயை; அழிந்து விடக்கூடியது; அநித்தியம்; பொருள் மாத்திரமென்ன? உன்னைப் படைத்த இவ்வுலகமும் அநித்தியம் — நீர்க்குமிழி என்றெல்லாம் வேதாந்தம், நம் நாட்டின் ஏழைகளிடத்தில் மட்டுமே சொல்லப் படுகிறது.

★

சமுதாயத்தைச் சீர்திருத்த [illegible] உண்மையிலேயே உறுதி இருக்குமானால் முதலில் பிறவி முதலாளியை ஒழிக்கவேண்டும்.

★

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, பெருகிவரும் செல்வத்தைச் சிலரிடமே குவிந்துவிடாமல் பார்த்துக் கொள்வதோடு, பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.

★

விழுதுக்கு நீர் இறை [illegible], வேர் [illegible] உலர்ந்தே [illegible] விம்முகின்றீர்களே! ஆலின் வேரு [illegible] அல்லாடுகின்றனர், ஐயோ சனியனே [illegible] ஆயாசப் படுவானேன்!

★

ஏடா தம்பி! எடுடா பேனா.

★

உழைப்பவன் உள்ளத்திலே புயல் இருக்குமானால், வயலிலே வளம் காண முடியாது.

★

அடிமைப்பட்ட எந்த நாடும், எப்பாடு பட்டேனும் எத்தனை முறை தோற்றேனும் விடுதலையைப் பெறாமல் போனதில்லை.

★

சமத்துவம், சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடினம்.

★

இயற்கையாக எழும் உணர்ச்சியை அடக்கி அழிக்க முடியாது. அடக்க அடக்க, அது அழுத்திவைக்கப் பட்டிருக்கும் ரப்பர் பந்து விட்டதும் மேலே எழும்புவது போல, மிகமிக மேலுக்குத்தான் கிளம்பும்.

★

வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது. பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால் வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களால் வைதீகம் என்னும் நோயைப் போக்கடிக்க முடியுமே தவிர வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது.

★

மாணவர்களின் மனவளம் அவர்களின் குடும்ப வாழ்க்கையைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. கல்வியில் நாட்டம் பிறக்கவும், அதில் ஆர்வம் வளரவும் சுற்றுச் சார்பைவிடச் சிறந்த ஆசான் வேறு இருக்க முடியாது.

★

நம் நாட்டில் பல கோயில்களிலே லட்சக்கணக்கான ரூபாய்கள், நகைகளாகவும், வாகனங்களாகவும் மக்களுக்கு ஒரு சிறிதும் பிரயோசனமில்லாமல் முடங்கிக்கிடப்பதை எடுத்து, பல ஆலைகளையும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தலாமே!

★

எந்த மதமாயினும், அதனதன் கோட்பாடுகள், விஞ்ஞான முறைப்படி மூட நம்பிக்கைகளென்றே எண்ண வேண்டும். ஏனெனில், அவைகளின் கோட்பாடுகள் விஞ்ஞான விஷயங்களைப்போல், பார்வைக்கும் பரீட்சைக்கும் இடந்தராதவை.

★

கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு மெய்ப்பொருள் அல்லது மெய்யுணர்வென்பதே பொருளாகும். இத்தகைய சிறந்த கருத்தமைந்த கடவுள் என்ற சொல், தமிழைத் தவிர வேறெம்மொழியிலும் அமையவில்லை.

★

நம்பிக்கை மோசமும், திருட்டுத் தொழிலும், பொய்யும் கடவுள் பெயரைச் சொல்லியே நடைபெறுகின்றன வென்பது கண்

கூடு. ஆதலால், கடவுளுக்குப் பரிந்து பேசி மதப்பிரச்சாரம் செய்ப வர்களிடம், மக்கள் விழிப்பாய் இருத்தல் வேண்டும்.

★

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்லநிலை ஏற்படும்.

★

ஆயிரம் கண்ணுடையாள் என்று அர்ச்சிக்கிறார்களே உன்னை, ஒரு கண்ணால் பார்க்கலாகாதா ஏழை படும் அவதியை. உன்னை பக்தியோடு பூஜித்தால் பலன் உண்டு என்று சொன்னார்களே, நான் பூஜித்துக் கண்ட பலன் என்ன?

★

பொங்கற் புதுநாள் தமிழர் திருநாள். வாழ்வின் உட்பொருளை உணருவதற்கு உதவும் நாள்.

★

செல்வம் எவ்வளவு பெருகினாலும், அதனால் ஏற்படுகின்ற பயன் முழுவதையும் அனுபவிக்கும் ஆற்றலும் ஒருவனுக்குப் பெருகி வர முடியாது. செல்வத்தைச் சொந்தத்தில் உபயோகித்துக் கொள்ள ஒருவனுக்குள்ள சக்தி, ஓர் வரம்புக்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும்.

★

கஷ்டப்படும் மக்களின் விடுதலைக்கு, எதேச்சாதிகாரி வழி வகுப்பதில்லை. எய்த்துப் பிழைப்பவன் மயங்கவைப்பான். மதவாதி மறு உலகைக் காட்டுவான்.

★

கலப்புக் கலையும், ஆரியப்பொய்க் கற்பனைகளும் புகுமுன்பே தமிழன் தனியான கலையை, முதல் இடை கடைச் சங்க காலங்களி லேயே வளர்த்திருக்கிறான்.

★

இலக்கியங்கள் மனிதனது அறிவை வளர்க்கிறது. மனிதனுக்கு தெளிவை ஏற்படுத்துகிறது. நன்மை தீமைகளை எடுத்துக் காட்டு கிறது. மனிதனது சிந்தனையைக் கிளறிவிடுகிறது.

★

தமிழிலே நல்ல பாடல்கள் இல்லை என்பதைக் கேட்டும் தமிழன், தமிழ் இசை முன்னம் இருந்த விரிந்த பரந்த, நல்ல தன்மையை அறிந்தால், தலையைக் கவிழ்த்துக் கொள்ளத்தான் வேண்டி வரும்.

★

காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாகமாட்டான்.

★

நாட்டின் நிலையைக்கண்டு நலமுள்ள ஏடுகளைப் பண்டிதர்கள் இயற்றித்தராவிடின் நாளடைவில் நாடு இழிநிலை அடையும்.

★

பசித்த மக்களுக்கு உணவளிக்கும் முறையிலேயோ; வேலையற்றுக்கிடப்போர்க்கு வேலை தரும் வகையிலேயோ ஆளவந்தார்களின் போக்கு இருக்கவேண்டும்.

★

பஞ்சத்தால் அடிபட்டுக் கிடப்பவனுக்குப் பழங்கஞ்சி கிடைத்தால், அதுவே பாலும் தேனுமாகக் கொள்வான்.

★

பாடுபடுபவன் பசித்திருக்க, பாடுபடாதவன் பரிமள வாழ்வுடன் இருப்பது, முதலாளித்துவம். அதுதான் சுரண்டல் முறை.

★

மணவாழ்க்கை மிகவும் சக்தி வாய்ந்தது. எனினும், காதல் நிலைபெறவேண்டும் என்ற கட்டாயமில்லை.

★

வாணிபம் மூலம் வடநாடு வளமடைகிறது. அதனால் தென்னாட்டில் வறண்ட தலைக்கு எண்ணெய் இல்லை.

★

சரியானதை ஒத்துக்கொள்ளவேண்டும். ஒத்துக்கொண்டதை நடைமுறைப்படுத்த வேண்டும். இது, பண்புள்ளவர்கள் செய்யவேண்டிய கடமை.

★

உன்னத நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும். தாழ்ந்த நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு தாழ்ந்திருக்கும். நம நாட்டின் நிலையுயர்ந்த அளவிற்கு, நம் நினைப்பு உயர்ந்ததாகத் தெரியவில்லை.

★

தமிழின் பண்டைப் பெருமையை எடுத்துக்கூறி, இன்று மனதில் படர்ந்துள்ள மூடநம்பிக்கைகளை அகற்றுமாறு பகுத்தறிவுப பிரச்சாரம் செய்வதை அரசினர் நன்மை எனக் கருதவேண்டும்.

★

அறிவுப் பிரச்சாரம் என்பது ஆபத்து நிறைந்தது. அதைச் செயலாற்றும்போதுதான் உணரமுடியும்.

★

படித்தவர்கள், பண்புள்ளவர்கள், நல்ல பிரச்சாரப் பழக்கமுள்ளவர்கள், பகுத்தறிவை ஆயுதமாக உடையவர்கள், பயமறியாதவர்கள், இவர்களால்தான் வீழ்ந்த சமுதாயத்தை உயர்த்த முடியும்.

★

நம் நாட்டில் விஞ்ஞானம், பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போலவும், குருடனிடம் காட்டிய முத்துமாலையைப் போலவும், செவிடன் கேட்ட சங்கீதம்போலவும் மதிப்பற்றிருக்கிறது

★

சித்தாந்தத்திலே, வேதாந்தத்திலே, மோனத்திலே, பரமனைப் பற்றிய ஞானத்திலே, கலையிலே எதிலெல்லாம் கிடைக்கும் 'வாழ்வின் சுவை' என்று தேடிய வண்ணமிருக்கிறான் தெளிவுள்ள மனிதன்.

★

கிராமத்தைச் சீர்திருத்துவது என்றால், அஞ்சாநெஞ்சமும் ஒழுக்கமும் வேண்டும். கெட்ட பெயர் ஏற்படுமே என்பதில் கவலை கொள்ளா மனப்பான்மை வேண்டும.

★

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால், அவர்கள் மனதிலேயுள்ள மாசு, மதவெறி, ஜாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாகவேண்டும்.

★

குற்றம் செய்பவன், குற்றம் செய்வதையே தன் பிறவிக் குணமாகக் கொண்டவன் அல்லன்.

★

பிளாக் டெவலப்மென்ட் அதிகாரிகளுடைய நிலை எல்லாம் இன்றைக்கு தண்ணீரைவிட்டு வெளியே போட்ட மீன் மாதிரியும், தாயற்ற குழந்தை போலவும் இருந்து கொண்டிருக்கிறது.

★

விடுதலை ஆர்வம் — எழுச்சி எந்தத்தனி மனிதருடைய ஆற்றலையும் நம்பி அமைவதில்லை.

★

கடல் நீரில் எப்படி உப்புத் தன்மை ஒரு சேரக் கலந்து காணப் படுகிறதோ, காற்றிலே எங்ஙனம் இயங்க வைத்திடும் ஆற்றல் ஒரு சேரக் கலந்து இருக்கிறதோ, அஃதே போல விடுதலை இயக்கம், அதிலே தங்களை ஒப்படைத்து விட்டுள்ள அனைவருடைய கூட்டுச் சக்தி பரவி ஒன்றாகிக் கலந்து போயுள்ள நிலைபெற்று விடுகிறது

★

நமது கொல்லையில் காளை புகுந்து மேயக்கண்டு துரத்தினால், அது மெல்ல மேய்வதைவிட்டு அவசர அவசரமாக பயிரை அழிக்கும். கிட்டே வந்து குறுந்தடி எழுப்பின் ஒடுமுன்னம் முட்டவரும் பிறகு ஓடினாலும் நாம் ஓய்ந்த வேளையில் கொல்லையின் உள்ளே புகும்! ஆனால் கொல்லைக்கு வேலி கட்டிவிட்டால் காளைக்கு வேலை இராது. பயிர் மிஞ்சும்! இதுதான் தமிழகத்தைத் தனியாகக் காணவேண்டு மென நாம் கேட்பதன் காரணம்!

★

மனிதத தன்மையின் மேம்பாட்டுக்கு மதிப்புக் கொடுத்ததால் தான். ஒரு வகுப்பார பூதேவராகி, பூசுரராகி, ஆண்டவரின் தாசராகி பிறர் சூத்திரராகட பட்டனர்.

★

கட்சிக்குள்ளே பிளவு கற்பித்து வேடிக்கை பார்ப்பதில் விருப்பம் கொண்ட இதழாளர்களும் பேச்சாளர்களும் இனிமேலாவது இப்போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும் — மாற்றிக் கொள்ள வேண்டும். ஏதாவது குறை காணப்பட்டால் அந்தக் குறையை எடுத்துவைத்து இதில் இன்னதவறுளது; இதனை இதனால் திருத்திக்

கொள்க என்று எடுத்துக்காட்டினால் அதில் கண்ணியம் இருக்கிறது. கருத்துப் பொலிவு மிளிர்கிறது!

★

இசைக் குழல்கள் எண்ணற்றவை இருந்த இடம் இது! இங்கு இசை பயின்று, இசை நுணுக்கமுணர்ந்து ஏழிசையைப் பாடி வந்தவரே தமிழர்.

★

தமிழ் இசை மறைந்து வேற்று மொழியில் பாடல்கள் பரவியதனால், நாம் இன்பத்தை மட்டுமே இழக்கவில்லை. இயற்கையின் அழகை உணரும் அறிவையும் பகுத்தறிவுத் திறனையும் இழந்தோம்.

★

தமிழனுக்குத தமிழ்நாட்டிலே தமிழரின் பணத்தால் கட்டி, தமிழன் பணத்தால் பராமரிக்கப்படும் கோயில்களிலே தமிழருக்குச் சம உரிமை இல்லை.

★

காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாகமாட்டான். அவன் கோர்ட்டுகளில் உள்ளவர்களைப் போல ஒரு காலத்தில் நிகழ்ச்சிகளைத் தொகுத்துவைக்கும் ரிகார்டு பேர்வழியேயாவான்.

★

ஏடு, நாட்டு மக்களால் கற்கப்படுவது, கையாளப்படுவது, செய்யப்படுவது, போற்றப்படுவது அந்தந்த நாட்டில் உள்ள ஏடுகளைப் பார்த்தால், அந்தந்த நாட்டு மக்களைப் பற்றி நாகரீகத்தைப் பற்றி வாழ்க்கை வரலாறுகளைப் பற்றி பாங்குற, எளிதாக, ஏமாற மார்க்கமின்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

★

நடப்பதை வெளியிடுவது ஏடுகளின் பணி; நடந்ததை நடந்தவாறு உரைப்பது இதழ் அறம் அதை விடுத்து, இது இது இப்படி ஆகவேண்டும் என்று, எண்ணுவதை யெல்லாம் நடந்ததாக வெளியிடுவது அறம் அன்று!

★

சிறிய ஜன்னலால் போதிய காற்று கிடைக்காவிடில், அதை இடித்துப் பெரிய ஜன்னல் வைக்கிறோம். பாலம் பல மற்றதாக

யிருந்தால், அதை மாற்றிப் பலப்படுத்துகிறோம், ஜுரம் செந்தூரத்தினால் குணமாகாவிட்டால் ஜெர்மன் மருந்துகள் உட்கொள்ளுகிறோம். இதிலெல்லாம் பழமையைக் கண்மூடிக்கொண்டு கைப்பற்றுவதில்லை. அதுபோலத்தான் கடவுளுணர்ச்சியிலும் மாற்றம் செய்தாகவேண்டும்.

★

ஆண்டவன் நம்மையும் படைத்தான்; பொருளையும் படைத்தான்; கடலுள்ளே முத்தையும் படைத்தான்; முத்தைக்கொண்டுவர மனிதனுக்குத் திறமையும் படைத்தான்; பூமியிலே பொன்னைப் படைததான்; அதை வெட்டி எடுப்பதற்கு ஆளையும் படைத்தான்; கல்லூரியிலே நீ படிக்கவேண்டும். ஆனால் பரீட்சை எழுதக்கூடாது என்று ஆசிரியர் மாணவனைப் பார்த்துக் கூறுவாரா? மணம் செயது வைத்துத் திடீரென்று தமபதிகளைப் பிரித்து வைத்தால — எப்படி யிருககும்? அதுபோலவே, படைக்கப்பட்ட பொருள் ஒவ்வொன்றும் உபயோகததிற்காகவேதான்!

★

நம்முடைய காலத்தில் ரேடியோவைத் திருப்பிவிட்டால் உலகம் முழுவதும் நம்கண்முன் வருகிறது. வியாசர் கூப்பிட்டபோது வரவில்லை. நாம கூப்பிட்டபோது உலகம் நம்முன் வருகிறது. நம்நாட்டில் எத்தனைபேருக்கு விஞ்ஞானியாகிய சா சீ. வி ராமனைத் தெரியும்? ஒரு போலிப் பகல் வேஷச் சாமியாரைப் பற்றித் தெரிந்த அளவிற்குக்கூட சர். சி வி. ராமனைப் பற்றித் தெரியாதே!

★

கீதம் பாடுவதிலே உள்ள கஷ்டத்தைவிட கீதத்திலே உள்ள கருத்துக்களை தேசத்தில் உள்ள மக்களுக்குப் போதிப்பதிலே உள்ள கஷ்டம் அதிகம்.

★

களஞ்சியத்திலே புகுந்துகொண்டு தானியத்தைக் களவாடித் தின்று கொழுத்துவந்த எலி பொறியிலே சிக்கிவிட்ட பிறகு இரும்புக் கம்பிகளை, தானியத்தைக் கொறித்துத் தள்ளுவதுபோல செயதுவிட முடியாது என்று தெரியாமல், உயிர்பிழைக்க வேண்டுமே என்பதால், கூண்டுக்குள் இருந்த வண்ணம குதிப்பதும, கம்பியைக் கடிப்பதும், பலகையைக் கீறுவதும், பல வித முயற்சிகள் செய்வதையும பார்க்கிறோமல்லவா! அது போன்ற காட்சி சனாதன போக்கிடமற்றதுகள் போடும் கூக்குரலும், ஆடும் கூத்தும்! வெற்றி பெற்றுவரும் சீர்

திருத்தவாதிகளுக்குப் பொழுது போக்குக்கான கண்காட்சி — இலவசமாகத் தரப்படுகிறது!

★

முத்துக்களைப் பெறவேண்டுமானால் கடலின் கொந்தளிப்பையும் சுறுமீன்களின் உபத்திரவத்தையும் அகற்றி ஆண்மையோடு முத்துக்குளிக்கவேண்டும்; கண்ணைப் பறிக்கும் பற்பலவித ஆபரணங்கள் செய்யத் தங்கம் வேண்டுமானால், பாறையின் வெடிப்பிற்கும், மணலின் சரிவிற்கும் துணிந்த பல்லாயிரவர் பொற்சுரங்கங்களிலே அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடவேண்டியிருக்கின்றது. அது போலவேதான், ஏடுகளிலும் இலக்கியங்களிலும் சிறந்தவற்றை நாட்டுக்கு நலம் பயக்கும் ஏடுகளை, மனிதத்தன்மையுள்ளவனாக விளங்கத் தூண்டும் இலக்கியங்களை, அறிவை அகலப் பரப்பும் அந்நூதிகளையடைய முன்னம் பெரிதும் சிறிதுமான பற்பல இடுக்கண்களோடு இடறி மோத நேரிடும். பலரின் பரிதாபத்திற்கும், கேலிக்கும் கண்டனத்திற்கும் ஆளாக நேரிடும்.

★

குதிரைக்குத்தான் கூறிடும் திறமை இல்லை. குமரிகளுக்கு வாயிருந்தும் தமக்குக் கிடைக்கும் வாழ்க்கை வண்டிகளின் வக்கிரத்தை எடுத்துக்கூறி, வேண்டாம் என்று கூறமுடிகிறதா? குதிரையை இழுத்து வண்டியிலே பூட்டுவதைப்போலத்தான், குமரிகளையும் பிணைத்து விடுகிறார்கள். வாழ்க்கைச் சவாரியும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. விபத்துக்கள் நேரிடுமோ ஏது இருக்கவே இருக்கிறது விதி என்ற வெட்டிப்பேச்சு! அவள் மேனியும் முகவெட்டும அமைந்திருந்த விதம் பிறரை மயக்கும் விதமாக இருந்தது! அதோ செடியிலே கூத்தாடும் மலரின் மணம், வண்டுகளை இழுக்கவில்லையா? ஆற்றின் ஒலி காட்டுமிருகங்களுக்குக் கீதமாகவில்லையா? வானத்திலே ஒளிவீசும் நட்சத்திரங்கள் கண்களுக்கு விருந்தளிக்கவில்லையா?

★

தானே பயிரிட்டு வரும் சொந்த நிலம் தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைபோல நமது நிலத்தை, கூலிக்கோ, வாரத்திற்கோ விட்டுப் பயிர்செய்வது, தாதியிடம் பால்கொடுக்கச் செய்தோ, அல்லது தகரடப்பாவில் வரும் தயாரிப்புப்பால் கொடுத்தோ வளர்க்கப்படும் குழந்தை போலத்தான். வளராது என்று அர்த்தமில்லை; வளரும, ஆனால் அந்தப் பாலிலே வாஞ்சை கலந்திருக்க முடியாது— அது

போலவேதான் கூலிக்கோ, வாரத்திற்கோ பயிரிடும் நிலத்துக்கு எவ்வளவு வளம் ஏற்பட்டபோதிலும் உடைமைக்காரனின் சொந்த உழைப்பும், பராமரிப்பும் கண்காணிப்பும் இல்லாமற்போனால், அந்த நிலம் இருபோகம் தரினும் சரியான வளம்பெற்றது என்று கூறமுடியாது

★

கடைவீதியிலே கனிவிற்பவன், அழுகிய பாகத்தை அறுத்துப் போட்டுவிட்டு மிச்சமுள்ள பாகத்தின் மதுரத்தைப் புகழ்ந்துரைத்து கிடைத்த வரையில் கிடைக்கட்டும் என்று பார்க்கிறானே, அதுபோல ஒரு சாராரும், சாம்பிள்பழம் இனிப்புத் துண்டாகக் கொடுத்துப் புளிக்கும் பழங்களைக் கூடைகளில் நிரப்பிக் கொடுத்து விடுகிறானே அது போல சிலரும், கலைவியாபாரம் செய்கின்றனர் கனியின் தன்மையல்ல வியாபாரத்தின் காரணம்; விற்பவரின் சமர்த்து!

★

தோட்டத்தை மண்மேடாக்கியவனிடமிருந்து மீட்டு, அதைப் புன்னகைப் பூந்தோட்டமாகச் செய்வதற்காக, அழகிய மலர்ச்செடிகளுக்கான விதைகளைத்தூவ அங்கு சென்றபோது, புதருக்குள்ளிருந்து பாம்பொன்று வந்து கடித்துக் கொல்லுவதுபோல் நாட்டை மீட்டு, நல்லாட்சி அமைத்து, மக்களை நல்லவர்களாக்குவதற்காகக் கருத்தைப் பரப்பும்போது கோட்சேக்கள் கிளம்புவதைப்போல நாட்டு நிலைமை வாட்டந்தருவதாக இருக்கிறது.

★

ஒருநாட்டின் வரலாற்றிலே அரசியல் நிர்ணயசபை கூடுவது எழுச்சிக்குரிய சம்பவம்—விடுதலையைப்பெற்று விட்டோம் என்று மகிழவேண்டிய நேரம்; மலடியோ என்று சந்தேகிக்கப்பட்ட தாய்க்குப் பிறந்த குழந்தை அம்மா என்று அழைக்கும்போது; அந்தத் தாய்க்கு உண்டாகும் களிப்புக்குச் சமமானது; ஒன்றரை நூற்றாண்டு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதற்கு அறிகுறியாக அரசியல் நிர்ணயசபை கூடுவது!

★

விழிகளில்லாக் குருடன் விலங்கொடித்தேன் என்று வீரம் பேசுகிறான். தன்மீது பூட்டப்பட்டுள்ள வேறு விலங்குகளை உணராமலேயே கந்தசாமிக்கு கடும் ஜுரம். ஜுரத்தின் காரணமாகக் கைகால் பிடிப்பு. கண்ணில் பஞ்சடைப்பு, மார்புவலி இவ்வளவும், ஜுரத்தைப்

போக்க மருந்திடுகிறார், மருத்துவர். ஜுரம் குறைகிறது மறைகிறது— முகம் மலருகிறது ஜுரம் போய்விட்டது ஆனால் கைகால் பிடிப்பும், மார்புவலியும் போகக் காணோம்; என்று கூறும்போது, நாலு நாட்களாகக் கொடுத்த சூரணம் ஜுரத்தைப் போக்க மட்டுந்தான். இனி தரப்போகும் மருந்தினால் தான் கைகால் பிடிப்பும் மார்புவலியும் அலுப்பும் நீங்கும்; இரத்த சுத்தி ஏற்படும் புதிய பலம் உண்டாகும் என்று நல்ல மருத்துவர் கூறுவார். நல்லறிவுள்ள நோயாளி அதைப் போலவே நடப்பார் ஜுரம் என்பது உடலிலே முள் தைத்ததுபோல திடீரென உடலுக்குள் புகுந்தது அல்ல; முள்ளை எடுத்துவிடுவதுபோல ஜுர நோயை மட்டும் நீக்கிவிட! ஜுரம் என்பது கூட்டுச்சரக்கு அடிமைத்தனமும் அது போன்றதே! அந்நிய ஆட்சி கடும் ஜுரம் போன்றது அது நீங்கிவிட்டது இப்போது.

★

பெருங்காயம் — கருவேப்பிலை முதலியவைகளைக் கொண்டு சாம்பார் செய்ய முக்கியமாக பருப்பு வேண்டும் நாம் வாங்கும் பருப்பு வேகிற பருப்பாக வாங்கவேண்டும். அதுவும் சிறிது வாங்கி சமைத்துப் பார்த்து, நன்றாக வேகிறது என்று சொல்லிய பின்னர்தான் அதிகமாக வாங்கவேண்டும். வாழ்க்கையிலே சமையலுக்காக துவரம் பருப்பு வாங்கவும் கலை தேவையாயிருக்கிறது. வாழ்க்கைச் சந்தையிலே நீங்கள் இன்னும் எவ்வளவு கலைவளம் பெறவேண்டும் என்பதை நீங்கள் சிந்தனை செய்து பாருங்கள். வாழ்க்கைச் சந்தைக்கு வேண்டிய பல விஷயங்களையும் ஒரு கட்சியிலிருந்தே பெற்றுவிட முடியாது ஒவ்வொரு கட்சியிலிருந்தும் சில கொள்கைகளை எடுத்துக் கொள்ளத்தான்வேண்டும்.

★

காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியின் லேபிளைப் போட்டுக்கொண்டு காட்சி அளிக்கமுடியாது. திராவிடக்கட்சி என்பது ஒரு லேபிள்தான். அது வேறு லேபிளைப் போட்டுக்கொண்டு பவனி வரமுடியாது. ஆகவே லேபிளைப் பார்த்து யாரும் ஏமாந்துவிடக்கூடாது. 'சிசர்ஸ்' சிகரெட்டு பாக்கெட்டுகளில் 'அக்பர்ஷா' சிகரெட்டுகளும், 'அக்பர்ஷா' சிகரெட்டு பாக்கெட்டுகளில் 'சிசர்ஸ்' சிகரெட்டுகளும் இருக்கும். ஆதலால் லேபிளைப் பார்த்துவிட்டு சரக்கை வாங்கிவிடக்கூடாது. உள்ளேயிருக்கும் பொருளைப் பார்த்துத்தான் வாங்கவேண்டும்.

★

தன்னுடைய ஜட்கா வண்டியிலே பிரயாணம் செய்யவேண்டுமென்று விரும்பும் ஜட்கா வண்டிக்காரன் நாம் பஸ்ஸில் ஏறப் போவதைப் பார்த்து, இந்த பஸ்ஸிலா ஏறப் போகிறீர்கள்? அடிக்கடி சக்கரம் பஞ்சராய்ப் போய்விடுமே! சீக்கிரம் போய்ச் சேராதே! அந்த பஸ்ஸை நம்பி ஏறாதீர்கள்! இதோ ஜட்கா வண்டி! நொடிப்பொழுதில் போய்விடும் என்றுதான் சொல்லுவான். அதே ஜட்கா வண்டிக்காரன் அவசர அலுவலாக எங்கேயாகிலும் செல்லவேண்டியிருந்தால் அவன் சொன்ன அதே பஸ்ஸில்தான் பிரயாணம் செய்வான். அதைப்போலத்தான் புதிய புதிய மாறுதல்களும் நடக்கின்றன.

★

ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை.

★

எடுத்துக்காட்டுகள், உவமைகள், கவிதைகள், கதைகள், ஆகியவைகளைக் கொண்டு தேவையான அரசியல், சமுதாயக் கருத்துக்களை எளிய முறையிலே அனைவரும் புரிந்துகொள்ளச் செய்யும் முறை — தனிப்பட்ட ஒருவரின் கண்டுபிடிப்பு அல்ல.

★

ஒரு நாடு விடுதலை பெற்ற நாடாக இருப்பதும் ஒரு மனிதன் சுதந்திர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற்படக்கூடிய இலாப நட்டக் கணக்கல்ல — நாம் பார்க்கவேண்டியது! எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள் முழுவதும் சிறைக்கைதியாக இருப்பாயா? என்று ஒருவனைக் கேட்டால், கூலிக்காரனாக இருந்தாலும் சுதந்திர மனிதனாகவே இருக்க விரும்புவான் என்பது மறுக்கமுடியாததாகும்.

★

இரண்டு கைதிகளை, வசதிக்காகப் போலீசுக்காரன் ஒரு கைதியின் வலது கையுடன் மற்றவனின் இடது கையைச் சேர்த்து விலங்கிட்டு சிறைக்கு அழைத்துச் சென்று ஓர் அறையிலே பூட்டிவைப்பதாக வைத்துக்கொள்வோம். விடுதலை அடைந்ததும் அந்தக் கைதிகள் வீடு திரும்புகையில் அவரவர்கள் வீட்டுக்கு அவரவர்கள் போவார்கள். இதுவரை ஒன்றாகவே சிறையில் வைக்கப்பட்டிருந்தோம், ஆதலால் இனியும் ஒன்றாகவே வெளியிலும் வாழ்க்கை நடத்துவோம்;

அப்படித்தானிருக்கவேண்டும்—என்பது எப்படி நீதியல்லவோ, அதைப்போல்தான் வெள்ளைக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்ட நாம், வெள்ளையர்கள் வெளியேறியவுடன் தனித்தனியே வாழ்வது— அரசோச்சுவதுதான் நீதி எனகிறோம்

★

நாம் நமது உரிமையைக் கேட்டால், பகைமை பாராட்டுகிறோம் என்கிறார்கள் என் வீட்டுக்கு காம்பவுண்டுசுவர் போடுகிறேன் என்றால், பக்கத்து வீட்டுக்காரன் திருடனா? என்று கேட்கிறார்கள்—இது எப்படி நியாயமாகும்?

★

இந்திய அரசியல் சட்டம் என்பது, திராவிடர்களை வடவர்கள் அடிமைபடுத்த ஏற்பட்ட அடிமைச்சாசனம் ஆகும்.

★

வெள்ளைக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டுகளாகிவிட்டன? பிரெஞ்சுக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டுகளாகிவிட்டன? என்ன மாறுதல்களை வாழ்க்கையில் கண்டோம்?

★

வாழ்வு இங்கு மலர்ந்ததா என்றால், இல்லை! போதிய உணவு இந்த அரசால் நமக்கு அளிக்கப்படவில்லை! மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் வசதியாகக் கிடைக்கவில்லை! ஆயிரக்கணக்கான நகரங்களிலும், கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லை! இன்று மக்கள், குடிதண்ணீரை விலைகொடுத்து வாங்கும் நிலையினைக் கண்கூடாகக் காண்கிறோம். லட்சக்கணக்கானவர்களுக்கு குடியிருக்க வீடில்லை! மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் எனப்படுபவை, உணவு—இருப்பிடம் தண்ணீர்! இவைகள்கூட உத்தரவாதம் செய்யப்படவில்லை, இந்த அரசால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது! வறுமை ஒழிந்தபாடில்லை! கல்வி எல்லோருக்கும் அளித்தபாடில்லை! இந்நிலை ஏன்!

★

அரசு நல்ல அரசு இல்லை; திறமையான அரசு இல்லை என்ற காரணத்தால் மட்டுமல்ல—நமது அரசாகவும் இல்லை என்பதுதான் நலிவுகளுக்கெல்லாம் காரணம்.

★

மாற்றார், உடலில் உள்ள நோயை உணருகிறார்கள். ஆனால் நாம் சொல்லும் பரிகாரத்தை உணர மறுக்கிறார்கள் — ஒப்ப மறுக்கிறார்கள்.

★

தமிழ்நாடா? திராவிட நாடா? என்று பிரச்னைக்கு வடிவம் கொடுத்து, எதற்கு எது விரோதம் என்று மோப்பம் பிடித்து மோதுதலை உண்டாக்க நினைப்போர் நிறைய இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

★

திராவிட நாடு கேட்பவர்கள் தமிழ்நாட்டுக்குத் துரோகிகள் என்றோ, தமிழ் நாடு கேட்பவர்கள் திராவிட நாட்டுக்குப் பகைவர்கள் என்றோ பேசும்படி தூண்டிவிடுவது அடிப்படை பிரச்னையை மாய்க்க முனையும் மாபெரும் குற்றமாகும்; மாற்றானுக்கு, தெரிந்தோ தெரியாமலோ, கைக்கூலிகளாகி விடும் கயமைப் போக்கை ஏற்படுத்திவிடும்.

★

தமிழ்நாடா? திராவிட நாடா? என்று பிரச்னையைப் பேசத் தொடங்கி இந்த அடிப்படையை, விடுதலையை — தன்னாட்சியை — தனி அரசை மறப்பதோ, இழப்பதோ மாபெருந் துரோகச் செயலாகும்!

★

தமிழ் நாடா? திராவிட நாடா? என்று பேசும் இரு வேறு முகாம்கள், ஒன்றை ஒன்று எதிர்ப்பதற்காக அமைக்கப்படுகிறது என்று நிலைமை எழுந்தால், அது அந்த இரு முகாம்களுக்கு அல்ல, இந்தியப் பேரரசுக்குக் கப்பம் கட்டிக்கொண்டு, கட்டியங் கூறிக் கொண்டு, காவடி எடுத்துக்கொண்டு மற்றவர்கள் அனைவரும் சீரிழந்து பேரிழந்து சிற்றினமாகக் கிடக்கவேண்டும் என்று எண்ணுபவர்களின் முகாமுக்குத்தான் வாய்ப்பு — வலிவு — மகிழ்ச்சி தரும்! தமிழ்நாடா? திராவிட நாடா? என்ற பேச்சைப் பெரிதுபடுத்தி அதற்குப் பேருருவம்— போருருவம் கொடுப்பதை இந்தியப் பேரரசு புன்னகையுடன் வரவேற்கும்.

★

அடிப்படைப் பிரச்னை, 'ஏக இந்தியா' எனும் பொறி உடைக்கப் பட்டாகவேண்டும்; இந்தியப் பேரரசு எனும் திட்டம் தகர்க்கப்பட்டாக வேண்டும் என்பதுதான் என்பதை மறத்தல் ஆகாது.

★

தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கம் எழுப்பப்பட்டபோது, எலிவளை எலிகளுக்கே என்றுதான் ஏக இந்தியாக்கள் கேலிக்குரலொலி கிளப்பின. திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சிய முழக்கம் எழுந்தது; திராவிடம் தீராவிடம் என்று இரைச்சலிட்டன, ஏக இந்தியாக்கள். தமிழ்நாடு கேட்போரைக் கொண்டு திராவிடநாடு திட்டத்தைத் தாக்க வைத்து, தகர்த்திடலாம் என்பது ஏக இந்தியாக்களின் நப்பாசை!

★

விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர, வழுக்கி விழுந்தவர்கள் தவிர குறுக்கு வழியில் புகழடைய நினைப்பவர்கள் தவிர, மற்ற எவரும் ஏக இந்தியா நடத்தும் கபட நாடகத்தால், ஏமாந்து போகமாட்டார்கள் என்பது திண்ணம்!

★

வடவர்கள் நம்மவருமல்ல; நல்லவருமல்ல!

★

வடக்கு நரகலோகமுமல்ல—வடக்கே உள்ளவர்கள் யமகிங்கரருமல்ல என்ற புதிய சித்தாந்தம் மக்கள் காதுக்கு நாராசமாக இருக்கிறது.

★

இந்தியப் பேரரசு என்பது அரசியல் ஆதிக்கத்தால் இறுமாந்து கிடக்கும் ஒரு புதிய ஏகாதிபத்தியம்; வடநாட்டு முதலாளிகளுக்கு அமைந்துள்ள கோட்டை; தென்னாட்டைத் தேய வைக்கும் சுரண்டல் யந்திரம்; என்ற பேருண்மையை இப்போது மக்கள், மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டனர்!

★

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்ற கட்சியிலேயே சிலர் சுயநலமிகளாக இருக்கிறார்கள்; தங்கள் சுயநலம் பலிக்கவில்லையென்றால், வெளியே போய்விடுகிறார்கள்; புதுக்கட்சி ஆரம்பிக்கிறார்கள் என்றால் அதிக அனுபவம் பெறாத எங்கள் கட்சியிலே சிலர் கட்டுப்பாட்டுக்கு மதிப்புத் தரவில்லை என்பதிலே வியப்பு என்ன இருக்கமுடியும்?

★

விலைவாசி விஷம்போல் ஏறியபடி இருக்கிறது; இதைக்கூடக் கட்டுப்படுத்த முடியாத ஆட்சியும் ஒரு ஆட்சியா? அப்படிப்பட்ட

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் கட்சியும் ஒரு கட்சியா? அதற்கா மறுபடியும் 'ஓட்' அளித்து ஆளச் செய்வது?

★

அரும்பு மலரானால் மணமுண்டு; அறிவோம்! ஆயினும், அழகுடல் தன்னில் அரிப்புடன் வெறுப்பு பரவிடல் நன்றோ? திரு விடம் மறப்பவர் நிலை இது அன்றோ?

★

பழையசோறு! பழையசோறு! சுடச்சுடப் பழையசோறு! பானை அறுவது காசு! கலயம் இருவது காசு! கையளவு ஐந்தே காசு—என்று கூவி விற்பவனை என்னென்பர்? குறைமதியோ, குறும்போ என்பர்!

★

கொத்தடிமை செய்யாது கொடிகட்டி வாழ்ந்தார்கள், உனது முன்னோர்; குவலயத்தார் பெருமை தந்தார் அதனைக் கண்டு! ஆண்ட இனம் நாமல்லவோ? அச்சம் ஏனோ? ஆருயிரை இழப்பதேனும் அருமை மிகு திராவிடத்தை அமைப்போம்; காப்போம்!

★

குழவியின் மழலையும், யாழின் இனிமையும், பொருளின் மயக்கமும், வாழ்வின் சுவையும் தூயவர்களின் பணியினை மாய்த்திட இயலவில்லை. காற்றினிலே கலந்து வந்தார் இசையைக் கேட்டுக் களிப் புற்று மெய்மறந்து கிளம்பும் திசை நோக்கிச் செல்வார் போலே, இன்பத் திராவிடம் காண நடக்கின்றார், வீரரெல்லாம்! அவர் தமக்கு துந்துபியாய், சங்கொலியாய் இருந்த பேர்கள், இன்று வேறு ஒலி எழுப்பி நின்றால் கைகொட்டிச் சிரிப்பதன்றி கடமையையும் மறப் பரோ, கழகத்தோழர்?

★

சோப்பு விளம்பரக் கடையிலே, சொகுசான சுந்தரியின் படத்தை எடுப்பாகத் தொங்கவிட்டிருப்பது எதற்காக? அந்த ஆரணங்கின் அழகுக்கு மதிப்பளித்தா? அல்ல அல்ல! அந்தப் பாவை, தமது சரக்கு மிக நல்லதென்று கூறுவது காரணம்!

★

தமிழ்நாடா? திராவிட நாடா? என்று கேட்பவர்க்குச் சொல் வேன், ஓரணுவில் காலணு தமிழ்நாடு என்று!

★

**அமைய வேண்டியது தனிஅரசு! பெறவேண்டியது முழு உரிமை! ஒழிக்கப்படவேண்டியது வடநாட்டு ஏகாதிபத்தியம்! விலக வேண்டியது, டில்லிப் பேரரசின் பிடியில் இருந்து!**

★

கலாம் விளைவித்தல், கல்வீசுதல், கூட்டத்தில் குழப்பம், காலணி வீசுதல் போன்ற காட்டுமிராண்டித்தனம் — நாம் துவக்க முதற்கொண்டுள்ள தூய்மையான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளைக் கேலிக்கூத்து ஆக்கிவிடும் சிறுமைச் செயலாகும்!

★

கோபத்தால் கொந்தளிப்பது, கசப்புணர்ச்சியால் கல்வீசுவது என்பவைகளில் எவர் ஈடுபடினும், அவர்கள் தம்மையும் அறியாமல், தாம் வளர்த்த கழகத்துக்குத் தாமே இழிவையும் பழியையும் தேடித் தருகிறார்கள் என்பதுதான் பொருள்!

★

கழகத்துக்கு எத்தனை புதிய உறுப்பினர்களைச் சேர்த்தோம்—புதிய கிளைகள் அமைத்தோம்—என்ற கணக்குத்தான், நீங்கள் பெற்றளித்துப் பெருமையும் பெருமகிழ்ச்சியும் பெறவேண்டியதாகுமேயன்றி, வீசிய கற்கள், செருப்புகள் என்று மாற்றார் காட்டும் கணக்கு, நமக்குத் தலை இறக்கத்தைத்தான் தரத்தக்கதாகும் என்பதை உணர வேண்டும்.

★

கைகூப்பி, காலில் விழுந்தாகிலும், காலித்தனம் செய்வோரை, இந்தச் சிறுசெயலில் ஈடுபடாதீர்கள்; செம்மையாக வளர்ந்து வரும் தி. மு. கழகத்துக்கு இழுக்குத் தேடாதீர்கள் — என்று வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

★

மலையுச்சியிலிருந்து விரைந்துவரும் பேராறுகள்போல, கட்டுரைகள் ஜோலாவின் பேனா முனையிலிருந்து கிளம்பின!

★

மதமெனும் முள்ளில் கலையெனும் ஊன் அமைக்கப்பட்டிருப்பதறியாது, உணவெனக் கருதிச் சுவைத்திடச் சென்று அவ்வழி—ஆரியத் தூண்டிலிற் சிக்கி, வாழ்வினைப் பறிகொடுக்கின்றனர், தமிழர்.

★

குருடர் பலர், யானையைக் கண்டனர், தடவிப்பார்ப்பதன் மூலம்! ஒரு குருடனுக்கு யானை உரலாக இருந்தது—அவன் காலைத் தொட்டுப் பார்த்தான். இன்னொருவனுக்கு யானை துடைப்பம்போல் இருந்தது—அவன் வாலைத் தொட்டவன்! இப்படிக்கதை உண்டல்லவா? அதுபோல நமது திட்டத்தின் முழு உருவையும் பொருளையும் தெரிந்து கொள்ளாதவர்கள், தததமது பார்வைக்குப்பட்ட பகுதி மட்டுமே நமது திட்டம் என்று கருதிக்கொண்டு பேசுவர், ஏசுவர்!

★

தூற்றலைக்கண்டு தழும்பேறிவிட்ட கழகம் தி. மு. கழகம்! நம் கொள்கைகள் நியாயமானவை! நாம் காட்டுகின்ற புள்ளி விபரங்களும், சரித்திரச் சான்றுகளும் நாமே தீட்டிக்கொண்டதல்ல! கல்வெட்டுகளிலிருந்து எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

★

பயபக்தியுடன் நீங்கள் கும்பிட்டு வணங்கும் விநாயகர் யார்? முழுமுதல்வர் என்று சைவர்கள் மார்தட்டிக் கூறிக்கொள்ளும் முக்கண்ணனின் மைந்தன்! கடவுள் என்றாலே, எல்லாவற்றையும் கடந்தவர் என்று பொருள்! ஆனால், இங்கோ கடவுளுக்குக் குடும்பம், பிள்ளைகுட்டி, பரத்தை முதலிய எந்தப் பாசமும் இல்லாமலில்லை.

★

அமெரிக்காவிலே ஹரிசன் முதலியார் என காண முடியுமா? லண்டனிலே கிரிப்ஸ் செட்டியார் உண்டா? விஞ்ஞானத்தோடு போட்டியிட்டு நாடோறும் பலவித அற்புதங்களைக் கண்டுபிடித்து வரும் மேல்நாட்டவர்க்கு ஜாதி வித்தியாசமும்—ஜாதிபட்டங்களும் அவசியமானதென்று தெரிந்தால் அவர்கள் நம்மைவிட அதிக ஜாதிகளை உண்டாக்கியிருக்கமாட்டார்களா?

★

பொதுவாழ்விலே எரிமலை — அலைகடல்—பூகம்பம் — தீ—எல்லாம் உண்டு! அவைகளிலே வெந்தும் சாம்பலாகாத சித்தம் இருக்கவேண்டுமே! அதற்கான சக்தியைப்பெற வழிதேடு! ஓடாதே! எதிர்த்துச்செல்!

★

ஆடவரின் கொடும் செயல்களைத் தங்குதடையின்றி எடுத்துப் பேச—வாய்ப்பளிக்க—பெண்கள் மாநாட்டிலே ஆடவர்கள் வாரா

திருப்பதுகூட ஒரு வகையிலே பொருத்தமாக இருக்கலாம் என்று கருதுகிறேன்.

★

பலிபீடத்தில் ஏராளமான இரத்தம் சிந்தப்பட்ட பிறகே—பகுத்தறிவாளரின் குரல்—மக்கள் செவியில் விழவும்—பாமரரின் சிந்தனையில் தெளிவு பிறக்கவும் முடிந்தது.

★

கல்லும் கட்டையும் காகிதக் குப்பையும் ஏற்றிக்கொண்டு சென்ற கலம் கவிழ்ந்தால் நஷ்டம் என்ன? முத்தும் பவளமும், முழு மதிபோன்ற துகிலும், பிறவும் கொண்டுசெல்லும் கலம் கடலிலே மூழ்கி விட்டால், நஷ்டமும் மனக்கஷ்டமும் நெஞ்சை வெந்திடச் செய்யும்! அதுபோல, காந்தியாரைக் கயவன் கொன்றபோது, அவருடைய மனதிலே அருமையான திட்டங்கள், நாட்டுக்கு நலன்தரும் புதிய முறைகள் ஊசலாடிக்கொண்டிருந்தன. அதை எண்ணும்போதுதான் எவ்வளவு பெரிய நஷ்டம் இந்தச் சம்பவம் என்பது விளங்குகிறது.

★

அரபு நாட்டுக் கலையிலே, தென்றலைப்பற்றிய கவிதைகள் அதிகமிருக்க முடியாது. எஸ்கிமோ நாட்டுக் கலையிலே, கதிரோனின் ஒளிபற்றிய கவிதைகள் அதிகமிராது ஆப்பிரிக்கா நாட்டு ஜுலு வகுப்பினரின் கலையிலே அவர்களின் நாட்டியம் கவியிலே இருக்கும். அதுபோலவே, ஆரியக்கலையிலே கங்கையின் கவர்ச்சியும், கரையோரக் காட்சியும், சோலைமாட்சியும் என்பன போன்றவைகள் கவிதைகளாக, இலக்கியமாக இருக்கும்.

★

சன்யாட்சன் காலத்திலே சீனமக்கள் பல்பல தெய்வ வணக்கம் செய்து கிடந்தனர். சன்யாட்சன் அந்நாட்டு படித்தோரை அழைத்து கடவுளின் பட்டியலைக் காட்டி கேட்டாராம்! மக்களுக்குஒரு முழுமுதற் கடவுள் இருந்தால் போதுமல்லவா என்று! ஆம் என்றனர் அறிஞர் அப்படியானால் இந்தப்பெயர் வரிசையிலே ஒன்று வைத்துக் கொண்டு மற்றவற்றைச் சிவப்புக் கோடிட்டு விடுக என்று செப்பினாராம்! ஒன்றே தேவன் என்றனர் மக்கள் பிறகு! இங்கோ நமது சைவ சமயத் தலைவர்கள் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக, சிறுதெய்வ வணக்கம் கூடாது. எமது சிவமொன்றே முழுமுதற் கடவுள் என்று

கூறினர். பலன் என்ன? இன்றுவரை பெரிய பாளையத்தம்மனுக்கு வேப்பஞ்சேலை கட்டும் வழக்கத்தைக்கூட ஒழித்தபாடில்லை.

★

கிரேக்க, ரோமானியர்கள் இதிகாசகாலக் கடவுள்களாகக் கொண்டிருந்த வீனஸ், அபாலோ முதலியவற்றை ஏசுவிடம் விசுவாசம் வைத்ததும் விட்டொழித்தனர் பிரிட்டனிலே கிறிஸ்தவ மார்க்கம் பரவியதும் பழங்காலத்திலே வணங்கிய தார், ஓடின் எனும் தெய்வங்களை மறந்தனர். இங்கோ அன்றுதொட்டு இன்றுவரை ஆரிய கற்பனையான சிறுதெய்வங்களிலே ஒன்றை நீக்கவும் மக்கள் தயாரில் இல்லை.

★

வெள்ளைக்காரன் எவ்வளவு விவேகத்துடன் உணர்ந்துகொண்டான், இனி நமது ஏகாதிபத்தியச் சரக்கு விற்பனையாகாது என்பதை! எவ்வளவு புத்திசாலித்தனமாகக் கடையைக் கட்டிக்கொண்டான், ஏன் அந்த விவேகம் பார்ப்பனச் சமுதாயத்தவர்களுக்கு இல்லை?

★

கட்டடத்தின் கட்டுக்கோப்பு சிறந்த முறையிலும், உறுதியும் பயனும் நிறைந்த வகையிலும் இருக்கும் என்பதை அறிந்து அமைக்கும் அமைப்பாளர்கள் தேவை. அவர்களால்தான் ஸ்தாபனங்கள், நல்ல முறையிலே அமையும். அமைந்த பிறகும் கட்டுக்கோப்பு கெடாதபடி பார்த்துக் கொள்ளும் திறம் இருக்கவேண்டும்—அக்கறையும் இருக்கவேண்டும்!

★

காதல் என்பது இருவர் மனதில் உதிப்பது! சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது! மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது! அவன், தன் கைகளால் அவளுடைய இருதயமெனும் கதவைத் தட்டுவான்! அவள், புன்சிரிப்பு என்னும் சாளரத்தை மட்டுமே திறந்திடுவாள்!

★

தெய்வீகமானது காதல்! இதன் சக்தியே அபாரம்! அது மன்னனை மண்குடிசை முன்பும் மண்டியிடச் செய்யும்! மாவீரனையும் பணியவைக்கும் என்றெல்லாம் கூறுகிறார்களேயொழிய, ஆடவர் உலகம் பெண்ணிடமிருந்து எதிர்பார்க்கும் குதூகலமும், குடும்ப வளர்ச்சிக்கான மார்க்கமும் கிடைக்காமற் போனால் அவர்களுக்கு ஆயாசம் மேலிடுகிறது! ஆசை கருகிவிடுகிறது.

★

பாகிஸ்தான் என்ற சொல் எப்படி இலட்சிய வார்த்தையோ — அதைப்போல்தான் திராவிடம் என்பதும் ஓர் இலட்சிய வார்த்தை!

★

திராவிட இனத்தின் மார்க்கத் துறை ஆரியரிடமும்,—அரசியல் டில்லியிலும்—பொருளாதாரம் பம்பாயிலும் பிணைக்கப்பட்டிருப்பதை நாம் கூறி நாலரைக்கோடி மக்களுக்கும் தனி அரசு கோருகிறோம்! இதில் என்ன தப்பு?

★

எந்த இலக்கியமானாலும் அதன் கருத்தை — அதுதரும் பாடத்தை – போதனையை – நல்லறிவைப் பொறுத்துத்தான் அதன் சிறப்பு — அதனது தேவை அமையும் — அமைந்திடவும் முடியும்!

★

நாம் திராவிட நாடு கேட்கிறோமென்றால் உரிமையைக் கேட்கிறோம்! உபகாரமல்ல! இழந்ததை கேட்கிறோம்! இரவல்பொருளை அல்ல! நம்மிடமிருந்து பறிக்கப்பட்டதைக் கேட்கிறோம் — பிச்சையல்ல!

★

குற்றாலம் இருந்தென்ன — கொடைக்கானல் எழில் காட்டி என்ன? ஊட்டி உல்லாசம் அளித்தென்ன? எல்லாம் இருந்தென்ன? திராவிடர்க்கென்று ஒரு தனியரசு இல்லையே!

★

எரிமலை இல்லை — நீர் வீழ்ச்சி உண்டு! பாலைவனம் இல்லை— சோலைவனம் எங்கும்! திருவிடம இப்படித்தான் இருக்கிறது! சொக்க வைக்கிறது, காண்போரை! ஆனால், அதன் அடிமை நிலையை எண்ணிடும் போதோ நெஞ்சு நோகுகிறது!

★

அச்சமற்ற வாழ்க்கை என்றால், அன்னியருக்கு அச்சமற்ற வாழ்க்கை; அந்த அச்சமற்ற வாழ்க்கையைத்தான் தமிழன் நடாத்தவேண்டும்

★

மாயா வாழ்க்கை பேசுவதில் நிஜம் இருக்காது. மக்களை மயக்கி, அவர்கள் உழைப்பிலே வாழ்வதற்கு நயவஞ்சகர்களால் வகுக்கப்பட்ட சூழ்ச்சியான வழி.

★

மக்களின் மனோவேகத்தையடக்க மாயா வாழ்வைப் புகுத்தினார்கள். சில நயவஞ்சகர்கள், எத்தர்கள், நல்லவர்களைப் போல நடித்தார்கள் ஏமாளிகள், இந்த லோகத்தில் கஷ்டப்பட்டால் அந்தலோகத்தில் சுகம் கிடைக்கும் இந்த லோகத்தில் நடக்கிற அநியாயங்களுக்கு அந்த லோகத்தில் நீதிகிடைக்கும் என்றெண்ணி, எவ்வளவு கொடுமைகளை எவர் இழைத்தாலும் அது எம்பெருமான் இட்ட கட்டளை என்று சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அனுபவித்தார்கள்; அனுபவிக்கிறார்கள். மாயாவாழ்வு, விதி, அந்தரலோகம் என்பவைகளெல்லாம் புரட்சி மனப்பான்மையைத் தீய்த்து விட்டன.

★

ஆரியாது வேத இதிகாசக் கருத்துக்கள் அக நானூறு, புறநானூறு கருத்துக்களை மறைத்துப் பிரகாசிக்கத் தொடங்கியவுடன், தமிழர்களின் நினைப்புக்கெட்டு, நினைப்புக்கெடவே, நிலையும் கெட்டிருக்கவேண்டும்!

★

மனதிலேயிருந்த மூட நம்பிக்கை, பகுத்தறிவுப் பகலவனைக் கண்டு மூடு பனிபோல நீங்க ஆரம்பித்த மறுகணமே, தொழிலாளி நினைக்க ஆரம்பித்து விடுவான்! "தான் ஏன் மாடி வீட்டில் வாழக் கூடாது? பிறப்பில் ஒருவன் ஏழையாகவும், மற்றொருவன் பணக்காரனாகவும் ஏன் பிறக்க வேண்டும்? என்று தன் மனதைக் கேள்விகள் கேட்பான். அந்த நினைப்பின் வளர்ச்சியைத் தடைபடுத்த யாராலும் முடியாது!

★

எங்ஙனம் ஒரு நாடு, மற்றொரு நாட்டினிடம் அடிமைப்படுவதால் நலிகிறதோ, அதைப் போலவே தான் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்ட பிறகு, அந்த நாட்டிலேயே ஜாதி முறையினால் சிலர் ஆதிக்கக்காரர் ஆவதால், மற்றவர்களுக்கு வாழ்வில் நலிவு ஏற்படுகிறது.

★

அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்தொழிக்க விடுதலைப்போர் நடத்தியது போலவே, உள்நாட்டிலேயும் ஜாதி உயர்வு பேசும் உலுத்தர்களின் ஆதிக்கத்தையும் எதிர்த்தொழிக்கும் விடுதலைப்போர் தேவைப் படுகிறது.

★

ஒரு காலத்தில் உண்மையெனக் கொள்ளப்பட்டவைகள் பிறிதோர் காலத்தில் தவறுடையதென்த் தள்ளப்பட்டுப் புதியதோர், சித்தாந்தம் அதனிடத்தைப்பெறும்; அதுவும் பின்னர் மாறுதலுறும்! அத்தகைய மாறுதல், உடன்பாடு கொண்டு விளையினும் விளையும். நேர் மாற்றமுடையதாகத் தோன்றினும் தோன்றும். இவ்வாறு வளர்ந்து கொண்டே வரும் சக்தியையுடையது விஞ்ஞானம்.

★

ஒரு மொழியையே பேசிவரும் ஒரு நாட்டவரிடையே பல வகைப் பிளவுகளும் சச்சரவுகளும் காணப்படும் பொழுது, பல மொழிகளைப் பேசி பல்வேறு கொள்கைகளுடன் வாழும் பல பகுதியினரையும் ஒரு பொதுமொழி கற்பதனால், ஒற்றுமையாக்கிவிடலாம் என்று கருதிப் பாடுபடுவது உமி குத்திக் கைசலித்த பான்மையாக முடியும்!

★

மதம் பகுத்தறிவுக்கு மேலானதாக மதிக்கப்படும் மனப்பான்மை ஒழிந்து, பகுத்தறிவை மதத்துக்கு மேலானதாக மதிக்கும் மனப்பான்மை இந்தியர்களுக்குத் தோன்றவேண்டும்!

★

பொங்கற் புதுநாள் — தமிழரின் தனிப்பெருந் திருநாள் — அன்று தமிழர், விழாக் கொண்டாடுவது மட்டுமல்ல; விருந்துண்டு மகிழ்வது மட்டுமல்ல; தமிழகத்தின் நிலைமை பற்றியும், கூடிப்பேசி மகிழ்ச்சியும் எழுச்சியும் கொள்ளவேண்டிய நாள் — அம்மையை ஐயன் மணஞ்செய்துகொண்ட நாளல்ல; ஆவுக்கு மோட்சம் அளித்த நாளல்ல; சூரனைக் கொன்ற விழாவல்ல; தாளில் வீழ்ந்து தட்சணை தரவேண்டிய நாளல்ல!

★

வேலி இரண்டாயிரம் கொண்ட நிலவேந்தர்கள் ஓர்புறமும், ஒட்டிய வயிறுடன் கட்டிய கந்தையைக் கசக்கிப் போட்டுவிட்டுக் கையால் மெய்யைப் போர்த்துக்கொண்டுள்ள உழவர் மற்றோர் புறமும் இருப்பது நாட்டுக்கு நல்லதல்ல!

★

சாதியென்ற சொல்லே அறியாத தமிழரிடையே நால்வகை சாதியைப் புகுத்திற்று; பேதமற்ற வாழ்க்கை நடத்திய தமிழரிடையே விபரீத வர்ணசிரமத்தைப் புகுத்திற்று; இவைகளால் வேதனைப்பட்ட

நேரத்திலே விதவிதமான கற்பனைகளும் காட்டி, தமிழனின் உண்மை யுணர்ச்சியை மாய்த்தது; வீரத்தமிழனை வீணனாக்கிவிட்டது, வெளி யிடத்துச கலாச்சாரம்!

★

இயற்கையை வணங்கி இறைவன் ஒருவனே; அவன் எங்கு முள்ளான்; எவ்வுருவும் இல்லான்; என்ற சீரிய கொள்கையுடன் யாதும் ஊரே என்ற பரந்த நோக்கங்கொண்டு எல்லோரும் சகோதரர் என்ற கருத்துடன் வாழ்ந்து வந்தார் தமிழர்!

★

வாடியமலரை வீசி எறிகிறோம்; வாடைகண்டுவிட்ட உணவுப் பொருளைத் தின்பதில்லை; உடைந்த கண்ணாடிப் பாத்திரத்தைக் குப்பை மேட்டில் எறிகிறோம் ஆனால், மதிப்பிழந்த முறையை மட்டும் இனனும் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறோம்.

★

முதலாளிததுவமுறை பயனற்றது என்று கண்ட பின்னரும், அதனைத் தொலைத்துத் தலைமுழுக முதலாளிகள் தாமாக முன்வர மாட்டார்கள். அதன் அழிவைத் துரிதப்படுத்த, அது அழிந்தவிடத்தில் வேறோர் நல்ல முறையை நிர்மாணிக்க சமதர்மமே, பிணி தீர்க்கும் மருந்து!

★

மதத்தைப் பரப்ப, ஒழுக்கத்தை வளர்க்க, ஓங்காரப் பொருளை மக்களுக்குத் தெரிவிக்க, துறவிகள் தேவையென்றால், பட்டினததார் போல, பத்திரகிரியார்போல, பற்று அற்றுச் சட்டியும் அற்று உல வட்டும். மடம் ஏன்? அங்கு மகோற்சவம் ஏன்? தங்க வட்டில் ஏன்? அதிலே திராட்சை ரசம் ஏன்? வேலிகள் ஆயிரம் ஏன்? பணியாளர்கள் விலாப்புடைக்கத் தின்பது ஏன்? இது துறவு அல்ல; களவு!

★

வீரருக்கு அழகு, எதிர்ப்படும் அத்தனை ஆபத்தையும் பொருட் படுத்தாது போரிடல்! கோழைகளின் கொள்கை, எதிர்ப்பு என்ற வுடனே, என்னாகுமோ நமது கதி என்று பதைபதைத்துப் பாதகச் செயலையும் செய்யத் துணிவது, முன்னையோர் முடிவில் வெற்றியும், பின்னையோர் இறுதியில் தோல்வியும் பெற்று வந்ததாலேயே, இன்று உலகில் ஏதோ ஒரு அளவுக்காவது நீதியும் நேர்மையும் நிலைத்திருக் கின்றன!

★

மற்ற நாடுகளில் மாணவ மாணவிகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கும் முறைக்கும், இங்குள்ள கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடு மிகப் பெரிது. ஒன்றுக்கொன்று எந்தவகையிலும் பொருந்தாது. அங்கு பழமைக்கு இடம் இல்லை, இங்கு புதுமைக்கு இடம் இல்லை! ஆனால் இங்கு பழமையையும் புதுமையையும் ஒன்றாகப் பிணைத்து, மோரில் வெண்ணெய் தேடுவதுபோல் உருப்படாத காரியங்களைச் செய்வதில் ஈடுபடுகின்றனர்.

★

பாரதியார் உயிரோடு இருந்த காலத்தில், அவரை ஆதரிக்க வேண்டுமென்றும் மனிதாபிமானம் துளியும் இன்றி, ஆலயத் திருப்பணிக்கும், அம்மனின் திருடுபோன தாலிக்கு ஈடுசெய்யவும், தலைக்கு வயிரத்தால் மூடிபோடவும், உருக்குலைந்த வாகனங்களைப் புதுப்பிக்கவும், இல்லாத ஏற்பாடுகளை ஏற்படுத்தவும் — தங்கள் பொருட்களை வீணுக்குச் செலவிட்ட வள்ளல்கள்தான், இப்போது நிதி கொடுத்தனர்!

★

மற்ற நாடுகளிலே, பூஜாமனோபாவம் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே நசித்துப்போன காரணத்தால்தான் அங்கு இன்று நல்லறிஞர்களை, ஆற்றல்மிக்கவர்களை — திறமைசாலிகளைக் காண முடிகிறது.

★

அபிஷேக ஆராதனை, ஆடையணி அலங்காரம், மாலை மரியாதை, மேளதாளம், போற்றித் திரு அகவல், இவ்வளவும் பெற்றுக் கொண்ட பின்னரும் மாரியம்மன் கல்லாகவே முன்பிருந்த நிலைபோல் இன்னும் இருக்கக் கண்டு, மயக்கம் தெளிந்து பரமபரை பரம்பரையாக கொண்டிக்கொண்டு வந்த பூஜா மனோபாவம் கொஞ்சம் குறைந்து, மாரியம்மனுக்கு மனுப் போடுவதற்குப் பதில். வேறு இடத்திற்கு விண்ணப்பம் விடுக்கும் அளவிற்கு மனமாற்றம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வந்திருப்பது, வரவேற்கத் தகுந்ததேயாகும்.

★

நடமாடும் தெய்வங்களுக்கு நாட்டில் குந்தக் குடிசை இல்லை; இந்த இழிந்த நிலையில் மக்களின் ஒருசாராரின் மதி, மாரியம்மனுக்குத் தங்கத்தால் பீடம் தயாரிக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறது.

★

மதம், ஐதீகம், புராணப் பழக்கவழக்கங்கள் முதலிய அடிமைத் தனங்களிலிருந்து — கட்டுப்பாடுகளிலிருந்து — இந்தியர்கள் பூரண விடுதலையடையவேண்டும்.

★

தமிழரே ஆரியர்க்கு எழுத்தெழுதும் முறையினையும், கணக்குப் போடும் முறையினையும் கற்பித்துக் கொடுத்தனரென்று சரித்திர ஆராய்ச்சிநூல் வல்லார் சொல்லுகின்றார்கள்!

★

தமிழில் வருத்தமின்றி இயல்பால் பிறக்கும் சொற்களே நிறைந்து, கோபத்தாற் பிறக்கும் வெறுப்போசையும், துன்பத்தாற் பிறக்கும் இளைப்பொலியும் இன்றி, எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின், தமிழ் இன்பவடிவாய் விளங்கும்.

★

உலகிலுள்ள மொழிகளில் தமிழ்மொழி ஒன்றுதான், பிற மொழிச்சொற்களை எந்த ஏதுவைக்கொண்டும் இரவல் வாங்காமல் தனித்து இயங்கக்கூடியது; எந்த விதமான புதுச்சொற்களுக்கும் தமிழில் சொற்களை ஆக்கிக்கொள்ளும் திறமை, தமிழ்மொழி ஒன்றுக்கு மட்டும் உண்டு!

★

தண்ணீரை ஜலம் என்றும், சோறு என்பதைச் சாதம்என்றும், மலர் என்பதைப் புஷ்பம் என்றும், கண்கூடு என்பதை பிரத்தியட்சம் என்றும், கறி என்பதைப் பதார்த்தம் என்றும், சாறு என்பதைச் சாம்பார் என்றும், மிளகுநீர் என்பதை ரசம் என்றும் முதுகுன்றம் என்பதை விர்த்தாசலம் என்றும், மறைக்காடு என்பதை வேதாரண்யம் என்றும் தமிழ் மக்களால் மிக எளிதாகச் சொல்லக்கூடிய தூய தனித்தமிழ்ச் சொற்கள் எல்லாம் வடமொழிச் சொற்களாக ஆக்கப்பட்டுவிட்டன.

★

ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே ஊசலாடுவோர் பூசலின் போது ஏசலும் பூரித்திருக்கும்போது புன்னகையும் பெறமுடியுமே யொழிய வெற்றிபெற முடியாது!

★

ஆலயம் அமைப்பது; ஆறுகால பூஜை செய்வது; பூசாரிக் கூட்டத்தின் பேச்சைத் தேவனின் வாக்கெனக் கொள்வது; சந்தேகிப் போரைச் சித்திரவதை செய்வது, எதிர்ப்போரைக் கொல்வதுபோன்ற எந்தத் திருக்கல்யாண குணத்திலும் இங்கு இன்றுள்ள நமது பழமை விரும்பிகளுக்கு எள்ளளவும் குறைந்தவர்கள் அல்லர், அந்தநாள் மக்கள்!

★

பூமாதேவியையும் அண்ட சராசரங்களையும், ஆதிசேஷன் தாங்குவது—இரண்யாட்சதன் பூலோகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் ஒளித்துவிட்டது போன்ற கதைகளைப் புண்ணிய கதைகள் என்று நம்புவதும், அந்த நம்பிக்கைக்கு ஏற்றபடியான பூஜைகள் செய்வதும், திருவிழாக்கள் நடத்துவதுமாகக் காலந்தள்ளு கிறோம்.

★

பாட்டாளி மக்கள் பயன்பெறும் பண்டிகைதான் தைப் பொங்கல். எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்பதே தமிழனின் தனிப்பண்பு! பிறரின்பம் கண்டு, தான் இன்புறும் மாசற்ற குணம் தமிழனின் உடன்பிறந்தது!

★

நாம் இன்னமும் நரி, பரியான பதிகத்துக்கு நாற்பத்தெட்டாவது விருத்தியுரை எழுதுபவருக்கு, நாமகள் தாசனுர் விடுக்கும் மறுப்புரையைப் பிரசரிக்கும் நற்காரியத்தில் ஈடுபட்டுக்கொண்டும், நமக்கு ஏன் ஐயா, இந்த நம்பாளுக் கதைகள்? இவைதமை நம்புவாரில்லையே என்று கேட்போரை நாத்திகர் என்று தூற்றும் சத்காரியத்தில் ஈடுபட்டுக்கொண்டும் இருக்கிறோம். சரியா என்று எண்ணிப் பாருங்கள்.

★

இவ்வுலகில் உயிரோடு இருப்பது மட்டுமல்ல, வாழ்க்கை! கல்விகேள்விகளில் சிறந்து, மக்களை மக்களாக மதித்து, நடந்து, சோம்பித் திரியாது சுறுசுறுப்பாக உழைத்துச் செல்வத்தைப்பெருக்கி, தேவைக்கேற்ற அளவுபெற்று இன்பம் பயக்கும் பல சாதனங்களையும் கண்டு வாழ்வதுதான், மனித வாழ்வின் முடிந்த லட்சியம் என்பதை நாம் ஒவ்வொருவரும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

★

போர்க்காலத்திலே மலைமலையாக இலாபம் குவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் இப்போது பல நாடுகளில் ஆதிக்கம் தேடித் தரும் பட்டாளமாகிவிட்டது.

★

இடத்துக்கேற்றபடி இயல்பு அமைவதும், அங்ஙனம் அமைந்துள்ள இயல்புக்கேற்றபடி, பல்வேறு இனங்களின் கலாசாரம் காணப்படுவதும், அந்தக் கலாசாரத்துக்குத் தக்கபடி சட்டதிட்டங்கள் அமைக்கப்படுவதும் எங்கும் காணப்படும் பொதுவிதி; சில விதிவிலக்குள் இருக்கலாம். ஆனால் பொதுவிதி என்றும் பொய்யாவதில்லை!

★

பாகுமொழி கேட்டுப் பரவசமடைந்து, பாலும் சோறும், பழமும் உண்டு, பட்டாடை பூண்டு, பல வளமும் பெற்று வாழ்வில் மகிழ்ச்சியும், புதுமையும், தன்னாட்சியும், தன்மானமும், தமிழெனப் பொங்கி இன்பம் பெறவேண்டும் என்று அனைவருக்கும் எமது இந்த விருப்பத்தையே விழாப்பொருளாகத் தருகிறோம். பொங்குக இன்பம்! பூத்திடுக தன்னாட்சி! பொலிவு பெறுக திராவிடநாடு!

★

இந்தியா என்றோர் நாடுண்டு; அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு, பொன்னும் பொருளும் மிகவுண்டு; போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில், பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது.

★

படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது, இந்தியா என்றோர் நாடுண்டு; அது ஆங்கிலருக்கு நல்ல வேட்டைக்காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது.

★

காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பின்னரே, இந்தியா என்றோர் நாடுண்டு; அங்கு விழிப்பும் எழுச்சியும் உண்டு என்று உலகம் அறிந்துகொள்ள முடிந்தது.

★

புதிய மார்க்கம் துவக்கிய புத்தர், வீரத்தாலும் பிறகு விவேகத்தாலும் இந்தியாவின் புகழை வளரச் செய்த அசோகன், பெரிய வல்ல

ரசுகளைக் கட்டி ஆண்ட மன்னர்கள், ஆகியோர் படித்தவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடிய நிலை பெற்றனர். மகாத்மாவையோ, மாநிலம் முழுதும் — படித்தவர்—பாமரர் — பாராளுமன்றத்தினர் — உலகத்தி லுள்ள அனைவருமே அறிந்துகொண்டதுடன், அவர்களின் மனதிலே யும் அவர் இடம் பெற்றார்.

★

பிறப்பினால் உண்டாகும் அறியாமையினின்றும் நீங்கிச் சிறப்பைத் தருகின்ற செவ்விய பொருளை, அதாவது பகுத்தறிவைப் பெற்று அதன்படி நடப்பதே அறிவு எனப்படும்.

★

நெருப்பில் தள்ளப்பட்ட பறையன் (நந்தனார்) பார்ப்பானாக மாறினான் என்ற தெனாலிராமன் கதைகளை, இன்றைய விழிப்படைந்த உலகம் ஒப்புக்கொள்ளாது!

★

மெய்யுணர்வு, என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற தென்றால, அதற்கும் நமக்குமுள்ள தொடர்பு யாதோ என்று அச்சமோ ஐயுறவோ, கொள்ளவேண்டியதில்லை. இங்கு கடவுள் என்ற பெயரில் வரும் மெய்யுணர்வு, எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி நின்று பகுவம் வரும்போது வெளிப்படுகின்றதென்பதே பொருளாகும்.

★

கடவுள் என்ற சொல்லின் பொருளை அறியாத பலர், தாம் புரிகின்ற தீய செயல்களைப் பிறர் அறிந்துகொள்ளாதபடி மறைப்பதற் காகவே கடவுள் வழிபாடு செய்வதாகப் பாசாங்கு செய்கின்றனர்.

★

காலத்திற்கும் கருத்துக்கும் ஒத்த ஏடுகள் உண்டாக்கப்பட வேண்டும். மக்கள் உள்ளத்தில் உண்மையை உள்ளவாறு ஊட்டும் ஏடுகள்தான் தேவை. மடமையை மடியவைக்க வழிகோலும், வழி காட்டும், வளம் பொருந்திய காவியங்கள், கதைகள் தான் தேவை.

★

கவிகள் வேண்டுமானால், மேழிச் செல்வததைப் பற்றியும், ஏரடிக்கும் சிறுகோலைப் பற்றியும் வெண்பாக்கள் அமைத்துப் பாட லாம். வேளாண்மையின் சீரையும் சிறப்பையும் பற்றிப் பேசி மகிழ

லாம். ஆனால் விவசாயம் ஒன்றையே நம்பி வாழும் எந்த நாடும் நாகரீக உலகில் நல்லதொரு இடம் பெற்று இனி வாழ முடியாது என்பதை உலக வளர்ச்சிச் சரிதம் விளக்கிக் கூறுகிறது.

★

அணு குண்டு கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலே வாழும் மாணவர்களுக்கு, அனுமானுக்கு வால் வளர்ந்த கதையைப் பாடமாக்கி வைக்கும் செயல் நாத்திகத்தைக் காட்டிலும் கேடு அல்லவா?

★

கூரை வீட்டில் குறட்டைவிட்டுத் தூங்கும் உழவன், கோழி கூவும்போது எழுந்திருந்து, கோணல் கலப்பையைத் தூக்கிக்கொண்டு கொடி வழி நடந்து, நிலம் சேர்ந்து, நெற்றி வியர்வை நில மீது சிந்த, மாலை இருள் வரும் வரையில் உழைக்கின்றான். நரம்புகள் அத்தனைக்கும் வேலை, கைகால்கள் கசக்கப்படுகின்றன மேனி கருத்து அவன் ஒரு தனி ஜாதியானோவென்று ஐயுறுமாறு மாறிவிடுகிறான். இவ்வளவு கஷ்டப்பட்டும், பட்டபாட்டுக்குத் தக்க பலன் உண்டா? இல்லை!

★

செல்வம் கொழித்து, நம் நாட்டவர் சீருடன் வாழவும், தேயிலைத் தோட்டம் சென்று தேம்பி வாழ்வோர் யாவரும் தமிழகத்திலேயே தன்மதிப்போடும் வாழவும் முடியும். எப்போது? உழவு வெறும் உழைப்பாக மட்டுமின்றி உழவு தொழிலாக விஞ்ஞான முறையைத் துணைகொண்டு நடத்தப்பட்டால்!

★

எந்தக் காரணம் பற்றியோ, எப்படியோ, செல்வம் சிலரிடத்தில் குவிந்துகிடக்கவும், கோடிக்கணக்கான மக்களிடம் அது ஒன்றுமில்லாமல் வறுமையில் உழன்று உயிர் துறக்கவுமான பரிதாபகரமான நிலை, நிலைத்துப்போய் இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வை ஒழித்துக்கட்ட, சிலரிடத்தில் பயனற்று மதிப்பிழந்து குவிந்துகிடக்கும் செல்வத்தை மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் முறையில் பகிர்ந்து அளிக்க ஆட்சியாளர்கள் எடுத்துக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் வரிவிதிப்பதும் ஒரு முறையாகும்.

★

அறிவு விளக்கம் பெற்று நாகரீகமடையாத தேசங்களில் எல்லாம், குருட்டு நம்பிக்கைகளும், கட்டுக்கதைகளும் இருந்தே

வந்திருக்கின்றன. விஞ்ஞான சாஸ்திரம் விருத்தியடைய அடைய, கட்டுக் கதைகளும், குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்து விடுகின்றன.

★

எங்கும் மக்களாட்சி ஏற்பட்டுவரும் இக்காலத்திலே, மன்னர்கள் தர்பார் நீடிக்க யார் அனுமதிப்பார்கள்? ஏன் அனுமதிக்க வேண்டும்?

★

உபகாரம் — ஐயோ, பாவம் என்ற உணர்ச்சியின் விளைவு. உரிமை—ஏன் என்ற முழக்கத்தின் விளைவு!

★

நமது நாடகமேடைகளில் இதுவரையில் நிஜபுருஷர்களைக் காட்டியதே இல்லை. கண்ணுக்குத் தெரியாத—கருத்துக்கு எட்டாத கற்பனை உருவங்களையே காட்டியிருக்கின்றோம். இந்திரன் தோன்றி யிருக்கின்றான் குபேரன் வந்திருக்கின்றான். அனுமாரைப் பார்த்திருக் கின்றோம். அல்லி, பவளக்கொடியைக் கண்டிருக்கின்றோம். அசோக வனத்திலே அம்மை சீதாதேவியைக் கண்டிருக்கின்றோம். பெரும் பாலான நாடகங்களில் நாரதரைச் சந்தித்திருக்கின்றோமே தவிர, நாட்டின் மாவீரர்கள்—நாட்டின் மீது படையெடுத்தவர்கள்—அவர்களை எதிர்த்து நின்றவர்கள்—உலகப் பெரியார்கள் ஆகியவர்களைக் காட்டி யிருக்கிறோமா?

★

இரத்தம் சுண்ட, நரம்பு முறிய, உடல் உருக, கண் மங்க, கைகால் அலுக்க, மனிதன் பாடுபட்டான் அத்தகைய உழைப்பைக் கேட்டுப்பெற்ற எத்தனை எத்தனையோ காரியங்களில், விஞ்ஞான முறையில் நடைபெற ஆரம்பித்ததன் பலனாக, மனிதனின் உழைப்பு, வேதனை எவ்வளவோ குறைந்து மனிதன் மிருகத்தன்மையெனும் சிறையிலிருந்து விடுபட்டான். இன்னும் விடுபடவேண்டியிருக்கிறது.

★

நம்பிக்கை—மதத்தின் நங்கூரம் இதுதான்! ஆராய்ச்சியெனும் சுழல் மோதுமானால், மதம் எனும் ஓடம் கவிழ்ந்துவிடும். சண்ட மாருதம் எனும் அறிவுக்கிளர்ச்சி தோன்றிவிட்டால், மதஓடம் சுக்கு நூறாகிவிடும். எனவேதான், மதபோதகர்களும், மதவாதிகளும், மதத்தைக் காப்பாற்றும் பணியை மேற்கொண்ட அரசாள்வோரும் நம்பிக்கையை வற்புறுத்தி வந்தனர்.

★

அப்பன் நீ— அம்மை நீ என்று இந்துக்களால் அழைக்கப்படுவதை ஒப்புக்கொள்ளும் ஒரு கடவுள், தன்பிள்ளைகள் அதிலும்பச்சிளங் குழந்தைகள் பாலுக்காகப் பதறி அழுவதைக் கண்டும் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய பாலை, வேண்டாம் அவர்களுக்கு அந்தப் பால்; அதை என் தலைமீது கொட்டுங்கள் என்று சொல்லுமானால், அத்தகைய ஒன்று தாய்தந்தையர் நிலையில் வைத்துப் பேசக்கூடும் கடவுளாக இருக்க முடியுமா?

★

கடவுள், பசி, தாகம், மூப்பு, பிணி அற்றவராயிற்றே! அவருக்கு எங்ஙனம் பசி உண்டாகும்? பசியற்றதாகச் சொல்லப்படும் பரமனுக்குப் பசியிருப்பதாகக் கருதி, கைக்குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய பாலைக் கருத்தழிந்த முறையில் கற்கள்மீதும், கட்டைகள் மீதும், கொட்டிப் பாழாக்குவதை, எந்தத் தெய்வமாவது சகித்துக் கொண்டிருக்குமா?

★

இராமாயணத்திலே முன்னோர்கள்—முனிவர்கள் — வேதாந்திகள், இவர்கள் அத்தனை பேரும் பொருளோடுதான் வாழ்ந்தார்கள். பொருளிடத்திலே இச்சையில்லாமல் எந்த முனிசிரேஷ்டரும் வாழவில்லை உலகம் மாயை, அநித்தியம் என்று பேசியவன்கூடப் பொருள்கள் தரும் போகத்திலே புரண்டுதான் வாழ்கின்றான்.

★

மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள் இசையிலே புகுந்துள்ளன; நாடகக் கலையிலே புகுந்துள்ளன; இதிகாசங்களிலே புகுத்தப்பட்டிருக்கின்றன; புராணங்களாகப் புனையப்பட்டிருக்கின்றன; காவியங்களிலே நுழைக்கப்பட்டுள்ளன; ஓவியங்களிலே காணப்படுகின்றன. மனிதத்தன்மைக்கு மாறான கருத்துக்கள் கலையிலே புகுத்தப்பட்டால் கலைக்கே களங்கம் விளைவிப்பதாகும்.

★

ஆரியக்கலை வேறு; திராவிடக்கலை வேறு; ஆரியக்கலை நம் பொறுக்கதைகளும், கருத்துக்களும், ஆபாசமும் நிரம்பியிருப்பதுடன் திராவிட இனத்தை அடக்கவும், பண்பை அழிக்கவும், பயன்பட்டுப் பாமரரின் மனதைப் பாழாக்குகிறது.

★

கலை, இலக்கியம், கற்பனை, நூல் ஆகியவற்றின் மீதெல்லாமா எங்களுக்கு விரோதம்? இல்லை! தொல்காப்பியத்தைத் தொட்டோமில்லை; நற்றிணையை, நல்ல குறுந்தொகையைக் கற்றறிந்தோர் ஏத்தும் கலிங்கத்துப்பரணியை, அகத்தை, புறத்தை அழிக்கப் புறப்பட்டோமில்லை. ஆரியத்தை அழகுறப் புகுத்தித் தமிழை அழிக்கும் நூற்களையே கண்டிக்கிறோம்.

★

மாற்றுக் குறைந்த உலோகத்தைப் பொன் மெருகிட்டு ஏய்ப்பது சட்டப்படி குற்றமாகும்! அதுபோலவே, ஆரியக் கற்பனைகளைத் தமிழ்க்கலை எனும் நகாசு வேலை செய்தது, தமிழருக்குக் கம்பர் செய்த கேடு!

★

நந்தனார் உழுது அடிமை வேலை செய்துதான் வந்தார். தீயிலிடப்பட்டு பிராமண வடிவு பெற்றுச் சிவசோதியில் கலந்தார் என்று தான் சைவர் கூறுவர். நந்தன் ஆதித்திராவிடனாகப் பிறந்ததால், அடிமை வேலையே செய்தான்; அதுவே முறை; அதை ஆண்டவன் மாற்றவில்லையென்பதே அத்தகைய வரலாறுகள் புகட்டும் பாடம்! இது, தமிழரின் தன்மானத்துக்குப் பயன் தருவதாகாது!

★

ஒரு காலத்தில் ஜெர்மனியும், பிரான்சும், இததாலியும், இங்கிலாந்தும் வேறு பல நாடுகளும் பாவமன்னிப்புச் சீட்டுக்களைப் பாதிரிமார்களிடம் பணங்கொடுத்துப் பெற்றுப் பரமனைத் திருப்திப்படுத்தியதாக எண்ணியதுண்டு! ஏசுவின் விசுவாசிகள் அனைவரும் கத்தோலிக்கராக மட்டுமே இருந்தனர்! மார்ட்டின் லூதர் என்ற மாவீரன் தோன்றினான்; மார்க்கத்துறையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கினான் பிராட்டஸ்டண்ட் கிளர்ச்சி நடந்தது. இதன் பயனாக ஏசுவின் விசுவாசிகளின் எண்ணிக்கையும் குறையவில்லை. கிறிஸ்துமார்க்கத்தின் எழிலும் குறையவில்லை. எதிர்ப்பும் ஆபத்தும் அடக்குமுறைகளும் இருந்தன; மறைந்தன! லூதரின் புரட்சி, அறிவுப் பூங்காவிலே, அழகான மறுமலர்ச்சியை உண்டாக்கிற்று!

★

மக்களுக்குள் ஜாதியைக் கற்பித்துப் பேதத்தை உண்டாக்கும் ஏற்பாட்டை மதமென்றும், மாண்புடையது என்றும், கூறி அதனைக்

கண்டித்தலே மகாபாவம் என்று மிரட்டினால், எதற்கும் காரணம் கேட்கும்—எதையும் ஆராய்ந்து பார்க்கும் இக்காலத்திலே மருளுவார்களா ?

★

வெள்ளை ஏகாதிபத்தியமேகூட, இங்கு வியாபாரக் கோலத்திலேதான் புகுந்தது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். கடை முதலில்; கொடி பிறகு; அங்காடி வைத்தனர் ஆரம்பத்தில்! பிறகோ, ஆட்சி ஏற்படுத்தினர் ஆங்கிலேயர். அந்த ஆதிபத்தியத்தை ஒழிக்கவே குமரனின் மண்டை உடைந்தது; வீரத்தமிழன் சிதம்பரம் பிள்ளையின் சொத்து ஒழிந்தது; காசிராஜனும் ராஜகோபாலும் தூக்கு மரத்தருகே 3 ஈய்த் திரும்ப வேண்டி நேரிட்டது. ஆயிரக்கணக்கிலே வாலிபர்கள் சிறைபுக வேண்டி வந்தது!

★

காவேரி, தென்பெண்ணை, கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஜீவ நதிகள், இங்கு! ஜீவ நதிகள் என்றால், அவை வெறும் பாவத்தைப் போக்கும் விசேஷ தீர்த்தம் என்றா பொருள்? விவசாயத்துக்கு வள்ளல்கள் அல்லவோ அவை! எந்த மின்சார சக்தி தற்கால விஞ்ஞானத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற கருவியோ, அந்த மின்சாரத்தை வாரி அளிக்கும் வல்லமையைச் சரியாகப் பயன்படுத்தவில்லை.

★

[illegible]க்குச் சுரங்கங்கள் பல உள்ளன. புதைபொருட் செல்வத்தை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை. ஏறக்குறைய நாலு கோடி மக்களில் பல லட்ச மக்களை பர்மாக் காட்டுக்கும், மலேயா மண்ணுக்கும் பலிகொடுத்து வருகிறோம்

★

உயர்ந்த ஜாதிக்காரர்; கொழுத்த பணக்காரர்; தேர்ந்த தந்திரக்காரர்; மிகுந்த வலிவுள்ளவர் என்று எந்தக் காரணத்தைக் கொண்டாகிலும் ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வழி அமைந்துவிடுமானால், அங்கு ஏட்டிலே எவ்வளவுதான் சிறந்த முறையில் சுதந்திரக் கோட்பாடுகள்—சாசனம் தீட்டப்பட்டிருப்பினும், உண்மையான சுதந்திரம் மலராது; நிலைக்காது!

★

மக்களாட்சி முறைக்குத் தேவையான தேர்தல் யந்திரத்தையே விலைக்கு வாங்கிவிடக்கூடிய அளவு, பொருளாதார பலம் சிலரிடமும்,

செக்குமாடென உழைத்தால்தான் வாழவேமுடியும் நிலையிலுள்ள பொருளாதாரப் பீடை பலரிடமும் இருக்கும் பொருளாதார பேதமுறை ஒழியவேண்டும்.

★

வர்ணாசிரமதர்மம் என்ற வகையற்றவர் பேசும் ஏற்பாடு வேறொன்றுமில்லை. சூது நிறைந்த ஓர் சுரண்டல் இயந்திரம்தான் அது. அதை முறியடித்தால், பாடுபடுபவன் பதைக்கவேண்டியதில்லை; உழைப்பு வீணாகாது; உலுத்தர் உயரமாட்டார்; சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும்.

★

தமிழர், தனி இனம். தன்னலக்காரரின் சூழ்ச்சியினால் தாழ்ந்து போனோம்; நாடாண்ட இனம், எனினும் நயவஞ்சகர்களிடம் சிக்கி நசிந்துபோனோம்.

★

தமிழ்நாடு பாலைவனநாடு அல்ல; பிறரை எதிர்பார்த்து வாழ! தமிழர்களும் பேடிகள் அல்லர்; பிறர்க்குப் புறமுதுகு காட்டி ஓட! தமிழர்கள் மாவீரர்கள்; முடியுடை வேந்தரின் சந்ததியார்கள்!

★

சமூகத்திலே அடிப்படை மாறுதலை விரும்பும் நாம், கொல்லப் படக்கூடும் என்ற எண்ணத்திற்காக, இப் பணி நமக்கேன் என்று நாம் இருந்திடினும், சாவு ஓய்வு எடுத்துக்கொள்ளாது. சாந்தம் பேசி னாலும், இன்றைக்கிருப்பார் நாளைக்கு இருப்பார் என்று எண்ணவோ திடமில்லை செத்தால் செத்ததுதான்! ஆனால், கடமையைச் செய்கை யில் கொல்லப்பட்டால், அது சாகாவரம் பெற்றதாகும்!

★

எதேச்சாதிகாரிகளுக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தால், அதனை வைத்துக்கொண்டு சட்டம் கொண்டு புரட்சியை ஒடுக்கப் பார்ப்பார்; ராணுவ பலமிருடபின், புரட்சிக்காரரைச் சுட்டுக்கொல்லு வார்; இரண்டுமின்றி, அந்த நாளிலே இருந்ததாகக் கூறப்படும் ரிஷிகளாக இருப்பின் சபித்துவிடுவார்!

★

சட்டம் தாய்மொழியில் இல்லை; கடவுள் சன்னிதானத்திலே தாய்மொழி இல்லை; மருத்துவமனைகளில் தாய்மொழி இல்லை; என்றால், மக்கள் தாய்மொழியைப் புறக்கணிக்கத்தானே செய்வார்கள்.

★

ஆணவம், அலட்சியம், ஆர்ப்பரிப்பு, அடக்குமுறை, ஆயாசம் ஆகிய கட்டங்களைத்தாண்டி ஆதிக்கக்காரன், அச்சம் எனும் கட்டம் வந்து சேருவான். அப்போதுதான் வாள், வேல், தடி, நஞ்சு, நாகம், நெருப்பு என்ற பலப்பல கொடுமைக் கருவிகளைத் தேடுவான்.

★

சூதுமதியினரும், சுரண்டிப் பிழைப்போரும், சுகவாழ்வுக்காகப் பிறரைக் கசக்கிப்பிழிவோரும, ஜாதிவெறியரும், பிறரும் வெற்றிபெறவில்லை—அவர்களின் பயங்கர ஆயுதங்கள் அவர்களுக்கு வெற்றியைத் தரவில்லை. மண்ணிலே தியாகிகளின் இரத்தம் சிந்தச்செய்தன அக்கருவிகள். பூமியைப் புனிதபுரியாக்கவே உதவின! சிலருடைய வாழ்வை வதைக்க முடிந்தது, வஞ்சகர்களால்! ஆனால், குறிக்கோளைக் கெடுத்தொழிக்க முடியவில்லை.

★

நாட்டு மக்களிலே நல்லறிவாளர்கள், குறிப்பாக இளைஞர்கள், தாய்மொழிப்பற்று ஓர் உயிர்ப்பிரச்னை என்பதை உணர்ந்தால், உண்மையி[illegible] தாயகம் விடுதலை பெறும்; வீறுகொண்டெழும்; புதிய பொலிவு[illegible]லிவும் பெறும்!

★

நம் நாட்களிலே அறிவுத் துறையிலே பெரியதோர் புரட்சி ஏற்பட்டுக்கொண்டு வருகிறது இதன் காரணமாக ஆதிக்கக்காரர்களுக்கு அச்சம் பிறந்திருக்கிறது. முதலிலே அவர்கள் அலட்சியமாகத்தான் இருந்தனர்; இன்று அஞ்சுகின்றனர்!

★

சட்டம ஒரு இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம ஒரு விளக்கு: அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாது.

★

குமரிகளுக்கு வாயிருந்தும், தமக்குக் கிடைக்கும் வாழ்க்கை வண்டிகளின் வக்கிரத்தை எடுத்துக்கூறி, வேண்டாம் என்றுகூற

முடிகிறதா? குதிரையை வண்டியிலே பூட்டுவதைப் போலத்தான், குமரிகளையும் பிணைத்து விடுகிறார்கள். வாழ்க்கைச் சவாரியும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. விபத்துக்கள் நேரிடும்போது, இருக்கவே இருக்கிறது, விதி என்ற பெட்டிப் பேச்சு!

★

திராவிடன் ஆரிய வீரத்தால் வீழ்த்தப்படவில்லை ஆரியக் கருத்தினைத் தாங்கும் சுமைதாங்கியானான்; சோர்ந்தான்; சுருண்டான்; வீழ்ந்தான்!

★

எடுத்த காரியத்தை எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாமல், புகழ்ச்சிக்கும், பூசலுக்கும் மண்டியிடாமல் செய்து முடிப்பதே மனிதர் மனிதருக்கு மனிதத் தன்மையோடு செய்யும் நேரிய செயல்!

★

ஆடவரின் காம உணர்வும், கட்டுப்பாட்டுக்காகக் காதலைக் கருக்கும உள்ளமும், விபசாரிகளை உண்டாக்குகிறது.

★

சுரண்டும் பாகம், சுரண்டப்படும் பாகம் இரண்டுமே ஒன்றாக இருக்கவேண்டுமானால், தொல்லையும் துயரமும் துவேஷமும் வளருமே யொழிய, தோழமை வளராது.

★

நாட்டிலே ஜாதிதான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும முதல் சாதனம்—மக்களின் இரத்தத்திலே கலக்கபபட்டிருக்கும் கடு விஷம் மனதிலே மூடக்த நோயைப் புகுத்திவிட்ட முறை—எனவே தான், பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை சமதர்மத்தை நாம் காணவேண்டுமானால், முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

★

ஒருவரையொருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்படவேண்டும்; பயன் கருதியல்ல—பாசாங்குக்கு அல்ல—அர்த்த மற்றதுமல்ல—கண்டதும் களிப்பு; நம்மைப்போல ஒருவன் என்ற நினைப்பில் இருந்து அந்தக்களிப்பு மலரவேண்டும். அஃதே தோழமை!

★

பணத்துக்கு இருக்கும் காந்த சக்தி, விசித்திரமானது. அந்த சக்தியால் இழுக்கப்படாத பொருளே இல்லை, அரசு—புகழ் எதுவும் அந்த காந்த சக்திக்குக் கட்டுப்பட்டு விடுகிறது. அதுமட்டுமா? பணத்தைப் பணம் இழுக்கிறது, அந்தக் காந்த சக்தியால்!

★

ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம், அவர்களின் ஏழமை! ஆகவே தண்டிக்கப்படவேண்டியது ஆட்களல்ல; பொருளாதார பேத அமைப்பு முறை!

★

சிம்மாசனமென்பது ஒரு பாம்புப் புற்று! அதன் மீதமர்வோரை, ஏமாந்த நேரத்திலே புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு, பொல்லாத பற்களால் கடித்துக் கொல்லும்.

★

அறிவுக்குப் பொருந்தாதவையும் ஆராய்ச்சிக்கு நிற்காதவையும், அறிவையே அகற்றி மடமையை மக்கள் மனத்தில் புகுத்தும் போலிகளாக இருத்தல்கூடாது, ஒவ்வொரு நாட்டின் இலக்கியங்கள்!

★

[illegible]என்பது நெறி, முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் [illegible]டியதாக இருத்தல் வேண்டும்.

★

நாட்டிற்கும் ஏட்டிற்கும் சிறிதும் சம்பந்தமின்றிச் சதுர் ஆடிக்கொண்டிருந்தால், அந்நாடு நாளடைவில் நசித்துப்போகும்; கலை, நாகரிகம் யாவும் மறைந்தொழியும். நாடு மேன்மையுறுவதும், தாழ்வுறுவதும், ஏட்டிற்கும் நாட்டிற்கும் உள்ள தொடர்பைப் பொறுத்ததேயாகும். ஏடுகளால் நாட்டுமக்கள் பயனுறவேண்டுமாயின், நாட்டுமக்கள் நற்பண்புள்ள ஏடுகளைப் பெற்று, வாழ்வில் ஏற்றமுற வேண்டுமானால், ஏடுகளை மறைத்திருக்கும் மதப் போர்வையைக் கிழித்தெறியவேண்டும்.

★

எந்தப் புராணத்தை நீங்கள் நம்பினாலுஞ் சரியே; அதிலே ஏதாவது ஆபாசமற்றதாக — அறிவுக்குப் பொருத்தமானதாக—அன்புக்கு இருப்பிடமாக — அநாகரீகமற்றதாக இருக்கிறதாவென்று எண்ணிப் பாருங்கள்!

★

அறிவிலே அக்கறை; நாணயத்திலே நாட்டம்; நீதியிலே நோக்கம்; மனிதத் தன்மையிலே நம்பிக்கை; இம்மி அளவேனும் இருப்பினும் ஆண்டவன் பெயரால் அளக்கப்பட்டுள்ள ஆபாசங்களை மக்களிடை எடுத்து விளக்கி, அன்னியத் துணிகளை நெருப்பிலிடுவதற்கு நெடுநாட்களுக்கு முன்பே இந்தக் குப்பைகளைக் கொளுத்தி விட்டிருக்கமாட்டார்களா? கள்ளுக்கடை பகிஷ்காரத்திற்கு முன்னரேயே, கடவுள் பெயரைக் கூறிக் காசைப் பறிக்கும் ஸ்தாபனங்களின் முன் மறியல்கள் நடத்தியிருக்கவேண்டாமா?

★

கூர்முனைப் பேனா கொண்டு அரண்மனைகளை, அஞ்ஞானிகளின் இருப்பிடங்களைப் பழமையின் கோட்டைகளைத் தாக்கிட வேண்டும்!

★

டாடா கம்பெனியில் தயாராகிற ஆணியை அடித்து, ஜெர்மனியிலே அச்சாகிற சரஸ்வதி படத்தை மாட்டி, ஜப்பான் அனுப்புகிற கற்பூரத்தைக் கொளுத்தி அழகு பார்க்கும் பைத்தியக்காரத் தமிழா! இயற்கை எழில் நிரம்பியிருக்க இங்கேயே எல்லாம் கிடைக்கும் பொழுது—எல்லாவற்றிற்கும் மேல் நாட்டை எதிர்பார்க்கிற நீ நாட்டை ஆளமுடியுமா? என்று தமிழனைப் பார்த்து நிலமங்கை நகைக்கிறாள்!

★

தமிழ் மன்னர்களின் தலையிலே மணிமுடி இருந்த போது திராவிடநாடு மங்காது இருந்தது; போலிக் காரணங்களைச் திராவிடநாட்டைப் பிரிக்காமலிருக்க முடியாது!

★

ஐரோப்பாவிலே பிரான்ஸ் இருக்கிறது; ஸ்பெயின் இருக்கிறது, போர்ச்சுகீஸ் இருக்கிறது; லாட்வியா, லிதுவேனியா, கிரீஸ், அல்பேனியா, இத்தாலி இருக்கின்றன இவைகளெல்லாம் தனிநாடுகளாக இருக்கும்பொழுது இன்பத் திராவிடம் மட்டும் ஏன் தனிநாடாக இருக்கமுடியாது?

★

கோபுரங்களிலே அந்தக் காலத்திலே அகல்விளக்கு; இந்தக் காலத்திலே மின்சார விளக்கு; ஏன்? காலத்திற்கேற்ற மாறுதல் ஏற்படத்தான் செய்யும்!

★

சாமியார் காவியும், தண்டு கமண்டலமும் ஏந்தியிருப்பதால், அவரிடம் கள்ளத்தனம் இல்லையென்று சொல்லிவிட முடியுமா ?

★

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிய நூல்களைவிட, இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல கருத்துடைய நூல்கள் மக்கள் மன்றத்திலே உலவினால் நலம் அல்லவா ?

★

மக்கள் மன்றத்திலே திருவள்ளுவர் இடம் பெற்றுவிட்டார். பொது அறிவைப் பெற, மக்களுக்குத் திருவள்ளுவர் பெரிதும் துணை நின்றார். இந்த ஏட்டை உலகம் போற்றுகிறது. ஆகவே, ஒவ்வொருவரும் திருக்குறளை அவசியம் படித்தே ஆகவேண்டும். எல்லா நூல் நிலையங்களிலும், திருக்குறள் இடம் பெற்றிருக்கவேண்டும்.

★

எதிரிகளின் கைகளை ஒடித்து, வெட்டிப் போட்ட காலத்தைக் கடந்துவிட்டார்கள். சர்க்காரை எதிர்ப்பவர்கள் எல்லோரையும் நாடு கடத்திய காலமும் உண்டு. காங்கிரஸ் சர்க்காரிடம் நாம் முக்கியமாக இருக்கவேண்டுமென்று விரும்புவது, கருணை, அன்பு, உண்மை, அப்போதுதான் ஜனநாயகம் மலரும்!

★

... பல ஆயிரம் ஆண்டுகளாகவே, இயற்கையின் ... பெருமளவு பெற்றுத் திகழ்ந்து வந்திருக்கிறது. அந்த ... பெரும் புலவர்களின் பாக்களிலே காண்கிறோம். அவர்களின் கா...திலே, அற்புதம் செய்தளிக்கும் கருவிகள் இல்லை; உண்மை; ...யினும் வளம் கொஞ்சிக் கிடந்தது; துள்ளிடும் வளைக் கண்டனர்; புள்ளிமான் கோலம் கண்டனர்; கிள்ளைமொழி கேட்டு இன்புற்றனர்; சந்தணமணம் பெற்று மகிழ்ந்தனர்; கடலிடை முத்தும், கைத்திறனுள்ளோர் செய்தளிக்கும் அணிமணியும் கண்டனர்; பழமுதிர் சோலைகள், பாங்குநிறை வயல்கள், செங்கரும்புக் கழனிகள், என்ற இன்னோரன்ன வளம் கண்டு பாடினரேயன்றி, வெடித்துக் கிடக்கும் வயல்கள், கொதித்துக் குழம்பிடும் கும்பிகள், நெருப்பைக் கக்கிடும் எரிமலைகள், அழிவினை ஏவிடும் நிலநடுக்கங்கள்—எனும் கொடுமைகளைக் கண்டார்களில்லை. பன்னெடுங்காலமாகவே, இன்னொருவர் தயவெதற்கு? இந்நாட்டில் வாழ்வதற்கு? என்று பண்பாடியே வாழ்ந்தனர் தமிழர்!

★

உழவுமுறை எங்ஙனம் இருக்கவேண்டும் என்பதிலிருந்து, உரையாடுவது எம்மொழியில் என்பது வரையில் இன்னொருவர் தயவுகூட அல்ல, இன்னொருவரின் கட்டளையையல்லவா எதிர்பார்த்து நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது?

★

சந்தனத்தை அரைத்தெடுத்துக் கொடுக்கிறோம்—சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன்—மார்பிலே பூசிக்கொள்கிறான், அரைத்ததால் கையிலே வந்துற்ற சுளுக்குக்காக ஈரக்களிமண்ணை அப்பிக்கொண்டு, நாம் வேதனைப்படுகிறோம்.

★

அருவியின் சலசல ஒலியிலும், செந்நெல் மணிகளின் கலகல ஒலியிலும், இன்னொருவர் தயவெதற்கு? இந்நாட்டில் வாழ்வதற்கு! என்ற பண்தான் கேட்கிறோம். ஓங்கி உயர்ந்த மலைகளும் தேனினைச் சொரிந்திருக்கும் தருக்களும் நமக்கு இந்தப் பண்ணினைத்தான் இசைத்தபடி உள்ளன. அதன் வயப்பட்டு விட்டோம். மற்ற எதுவும் நம்மை மயக்கிடாது; எந்த எதிர்ப்பும் நமது எண்ணத்தை மாய்த்திடாது! உடலைச் சாய்த்திடலாம்; இருட்டு நேரம், முரட்டு ஆள்! கூர்மையான கத்தி, நேர்மை மறக்கும் அதிகாரி, இருந்தால் போதும், அதற்கு! ஆனால், எண்ணம் என்றும் இறந்துபடாது! காணும் காட்சிகள், கேட்டிடும் இசை. எல்லாம் அந்த எண்ணத்தை மேலும் வலிவுள்ளதாக்கும்!

★

குறிப்பிட்ட காரியத்துக்காக, பலநாட்டவர், பல இனத்தினர் ஒரு இடத்திலிருந்து ஒன்றுபட்டுக் காரியமாற்றலாம்! அந்தக் குறிப்பிட்ட காரியம் குறைவின்றி நடந்தேறிய பிறகு ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு இனமும் உழைத்து உயர்வினை உலகுக்கு விரும்பி அளித்து உலகப் பொதுநலனை வளர்த்திடவே முனைதல் வேண்டும்!

★

மண்ணும் விண்ணும், மரமும் மலரும், குதலைமொழிக் குழந்தைகளும் குழல்மொழிக் குமரிகளும், எல்லா இடத்திலும், உலகெங்கும் உண்டு! இதிலே ஒரு குறிப்பிட்ட எல்லையை நாமாக வகுத்துக்கொண்டு, இது எனது நாடு, இதற்கு உலகிலே எங்கும் இல்லை ஈடு என்று பேசுவது, பேதமை! எனக்கு இமயமலை பனிமூடி இருக்கும் காட்சியும், இலண்டன்மா நகரம் மூடுபனியில் மூழ்கிக்கிடப்பதும்,

நைல் நதியின் நேர்த்தியும் நேப்பிள்ஸ் நகரவசீகரமும் பெர்லின்நகர தொழிற்சாலையும், பிரான்சுநாட்டு மதுவகையும், மணிபுரி நடனமும், மாட்ரிட்நகர மாட்டுச்சண்டையும், எல்லாமே பிடிக்கும்; எல்லாம் என்னுடையவை என்ற உணர்ச்சிதான் எனக்கு! என்நாடு—அதிலே என் ஊர்—அதிலே என்தெரு—அதிலே நான் பிறந்த வீடு—நான் விளையாடிய மண்மேடு—அங்கு நான் கலைத்தெறிந்த குருவிக்கூடு என்றெல்லாம் பேசுவது கிடையாது! என்நாடு, உலகம், மதுதியும் மாதா கோவிலும், தேரும் திருவிழாவும உண்டு! இதிலே இதுதான் என்னுடையது—இது என்னுடையது அல்ல என்ற பேத உணர்ச்சி எனக்குக் கிடையாது! எனக்கு உலகம், உறைவிடம்! உலகநாதன் என் பெயர்! இப்படியெல்லாம் தத்துவம் பேசியவனிடம், உன் சொந்த ஊரில் உள்ள சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைக்கும் என்று சொன்னமை. அதற்கு அந்த தத்துவவாதி கோபங்கொண்டு கூறியவர்களைத் தாக்கினனும். எப்படியிருக்கிறது, ஒரே உலகம் பேசுவோன் செயல்?

★

இந்தியா ஒன்று என்று சந்திரகுப்தன் காலத்தில் இல்லை; சமுத்திரகுப்தன் காலத்தில் இல்லை; அசோகன் காலத்தில் இல்லை; ஹர்ஷன் காலத்தில் இல்லை; கனிஷ்கன் காலத்தில் இல்லை; அக்பர் காலத்தில் இல்லை; ஔரங்கசீப் காலத்தில் இல்லை! ஆனால், அலகாபாத் [illegible] காலத்தில் மட்டும் எப்படி இந்தியா ஒன்றாகும்?

★

மொழியால், கலையால், பண்பாட்டால், வரலாற்றால் பழக்க வழக்கங்களால், பூகோள ரீதியாகத் திராவிடர் வேறு—வடவர் வேறு; அப்படியிருக்க நாம் அனைவரும் ஒன்று என்று எப்படிச் சொல்ல முடியும்?

★

சொந்த நாட்டான், பிறந்த நாட்டில் வாழ்வதற்கு வழிவகை இல்லாமல் கூலிகளாய் சிலோனுக்கும், பர்மாவுக்கும், சிங்கப்பூருக்கும், மலேயாவிற்கும் ஆப்ரிக்காவுக்கும் சென்றவன், அங்கிருந்து தற்போது துரத்தி அடிக்கப்படுகிறான்—நாடற்றவன் என்று உதைத்துத் தள்ளப்படுகிறான் — ஏனென்று கேட்க நாதியில்லை — வாவென்று சொல்ல நமக்கு உரிமை இல்லை—ஏன் இந்த நிலை?

★

கோடை இடியாக இருக்கலாம் பேச்சில்—ஆனால், பேசும் பொருள், கழகம் ஒப்புக்கொண்டிருக்கும், திராவிடநாடு இலட்சியமாக இருக்கவேண்டும்—அதற்கு மாறாக இருந்தால், மதிப்பளிக்கக் கழகம் முன்வராது!

★

வரிக்கொடுமை தாக்குகிறது—முதலாளித்துவம் பொருளாதாரத் துறையின் கழுத்தை நெரிக்கிறது—கடன் சுமை முதுகை முறிக்கிறது! மக்கள் இவைகளுக்குச் சமாதானம் கேட்கிறார்கள்.

★

எங்கிருந்தாலும் உன்னை ஏறிட்டு ஒருமுறை பார்த்துப் பின் நட! பின்னால் நிற்கும் தலைவர்களைவிட முன்னால் நிற்கும் மக்கள் வலுவினைச் சற்று திரும்பிப்பார்!

★

அகிலொடு சந்தனமிகு அடல்கொண்ட மலைநாடா!
ஆழ்கடலின் முத்தெடுத்து அகிலத்துக்கனுப்பியோனே!
நாமணக்கும் பாமலிந்த நாட்டின் நல்லோய்!
பூமணக்கும் பொழில் சூழ்ந்த பொன்னிநாடா!
புகழ்மணக்கப் பெற்றிடுவோம் புதுமை வாழ்வு!
புறப்படுவாய்! போரிடுவாய்! வெல்வாய்!

★

தென்னாட்டார் கைராட்டினத்தில் நூற்றுக் கைத்தறியில் நெய்யவேண்டியது. வடநாட்டு முதலாளி நூல் செவாலைகளைப் பெருக்கிக் கொண்டிருக்க வேண்டியதுதானா?

★

மாற்றுக் குறையாதது தானப்பா தங்கம்! நற்குணமும் அது போல்தான்! குறைவற இருந்தால்தான் நற்குணம்! கொஞ்சநஞ்சம், துண்டுதுணுக்கு என்ற முறையிலே நற்குணம் இருத்தல் முறையாகாது!

★

வெறும் மண், மழையால் கரையும்—அதேமண் அழுத்தம் ஏற்பட்ட செங்கற்களானால், மழையைச் சட்டை செய்வதில்லை.

★

வேறுபாடான எண்ணங்கள் எழலாம். மோதிக்கொள்ளலாம். இறுதியில் குழைந்து போகலாம். வெறுப்புணர்ச்சியாக மாறிட லாகாது!

★

இது நாடு; காடு அல்ல! மக்களை நல்வழிப்படுத்த முடியும் என்று நாம் இயக்கம் நடத்த முற்படுகிறோம்—நாம் முதலில் நல்வழி நடக்கவேண்டும்!

★

கொள்கைப்பற்று என்ன, கீழே வீசினால், உடைந்து தூளாகி விடக்கூடிய, கண்ணாடிப் பாத்திரமா? இல்லையே! அது நமது குருதி யில் கலந்து விட்ட ஒன்று! அதைக் கேலிபேசுவோராலா, ஒழித்துவிட முடியும்? கண்டித்து விடுவதனாலா அழித்துவிட முடியும்?

★

திராவிடநாடு ஒருபோது நாவலந்தீவாய்த் திகழ்ந்தது; மற்றொருபோது பரதகண்டமாய் பொலிந்தது; பின்னை விந்தியம் வரை இழிந்தது; இடைஇடையே பலவித மாறுதல் அடைந்தது; இப்பொழுது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்காய் அவற்றுள் ஒன்றிக் குலவுகிறது!

★

திராவிட நாட்டில் குடியேறி நிலைத்தவர் பலர் ஒரு நாட்டில் குடியேறி நிலைத்தவர் பண்பாடும், பழங்குடி மக்கள் பண்பாடும் முடிவில் ஒன்றுபடுவது இயற்கை! இவ்வியற்கைப்படியே திராவிட மக்கள் பண்பாடும், குடியேறிய மக்கள் பண்பாடும் ஒன்று பட்டன.

★

திராவிட இயக்கம் சாதிமத வேற்றுமைகளைக் கடந்தது; மக்களை ஒருமைப்படுத்துவது; அதனடியில் இகல், பகை, காழ்ப்பு, பொறாமை முதலிய அனல் கனல்வதில்லை. திராவிட இயக்கத்தொண்டு—அருளை—அஹிம்சையை அடிப்படையாகக்கொண்டு நிகழ்வது கண்கூடு!

★

நாட்டை அரித்துவரும் வகுப்புவாதம், சாதிப்பிணக்கு, கண்மூடி வழக்கவொழுக்கம் முதலியவற்றை நீறுபடுத்தும்! மக்களை ஒருமைப்படுத்தித் தோழமையைப் பெருக்கும்!

★

திராவிட இயக்கத்தின் நோக்கங்கள், திராவிடநாடு காண்டலுக்கு இரையாகாதவாறு அதைக் காப்பதும், அதன் பொருட்டுத் திராவிடத்தின் பண்டை இயல்புக்கும் இக்காலத்துக்கும் உரிய பொதுமை அறத்தை அதன்பால் வளர்ப்பதும், அவ்வறத்தை வடபுலத்தும் அன்பால் புகுத்துவதும், அவ்வழி இந்தியாவை ஒருமைப்படுத்துவதும், உலகுடன் ஒத்துவாழ்வதும், இன்ன பிறவுமாம்!

★

கருத்து வேற்றுமைக்கு இடந்தராத நாடு, இயற்கைவழி வளர்ச்சி பெறுதல் அரிது. அதைச் சிறைநாடு என்று கூறல் மிகையாகாது! கருத்து வேற்றுமைக்கு இடந்தரும் நாடே, இயற்கைவழி வளர்ச்சியுறும்! கருத்து வேற்றுமை வளரவளர உண்மை விளங்கிக் கொண்டேபோகும்!

★

கொளுத்தும் வெயில், கொட்டும் மழை, கடுங்குளிர், பேய்க்காற்று, இவை எதனையும் பொருட்படுத்தாது, கருமமே கண்ணாயினர், பழச்சாறு பருகினர்; பூங்காற்று தேடினர்; புதுப புனலாடினர்; இசை கேட்டு இன்புற்றனர்; களிபபுத் தரவல்லனவற்றில் எல்லாம் மாறி மாறி ஈடுபட்டனர்! வாழ்க்கை ஒரு இன்பப் பூங்காவாகிவிட்டது. கேட்டது கிடைக்கிறது. தொட்டது மலருகிறது. நினைப்பது நடக்கிறது. கொளுத்தும வெயிலெனில் குன்றேறுக் குளிர்ச்சி நாடுவோம். கடுங்குளிர் எனில், கம்பளம உண்டு, அழகியதாய், வசதியதாய், குளிரைப் போக்கிக்கொள்வோம். பேய்க்காற்றும் பெருமழையும் குடிசைகளைப் பிய்த்தெறியும். மண் சுவரினைக கீழே சாய்த்திடும், நம்முடைய கோட்டை மீது வீழ்ந்து, அவைதம் வலிவிழந்து போகுமேயன்றி, வேறென்ன கெடுதலைச் செய்திடஇயலும்?

★

புரட்சி என்பது இயங்கும சக்தி! அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது; புரட்சி என்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது! பகுத்தறிவாளா ஆயுதம்; பழமை விரும்பிகள், புரட்டர்கள், எதேச்சாதிகாரிகள, சர்வாதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு!

★

குயிலுக்குக் கோட்டான் இசை கற்றுக் கொடுக்கிறது; மயிலுக்கு மந்தி நடனம் கற்றுக் கொடுக்கிறது என்றால், நம்புவரோ?

★

காவி உடையைக் கண்டு மயங்கமாட்டோம். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவி அணிந்து மக்களின் கண்களையும் மயக்க முடியும். சீலராக இருக்கிறாரா என்பதைக் கண்டறிய, உடையை அல்ல; செயலையே கவனிக்கவேண்டும்.

★

அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்த கொலம்பஸ், இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் கண்ட வாஸ்கோடிகாமா, அடிமை வர்த்தகத்தை ஒழித்த ஆபிரகாம்லிங்கன் போன்ற தொண்டர்களின் பெருமையைப் பேசுவதால், படிப்பதால், மேனாட்டவர் பலன்பெற்று வாழ்கின்றனர். இங்கு நமது புலவர்மணிகள், கோட்புலியையும், கோவணத்தை எடை போட்ட பக்தன் கதையையும் அன்றோ நமக்குப் படித்துக் காட்டுகிறார்கள்.

★

மேல்நாட்டினர் பொருளைத் தேடிக்கொள்வதிலும் அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதிலும் காலங்கழித்தார்கள். ஆனால் நம்மவர்களோ பொருளை அநித்தியமென்று கூறிக்கொண்டு அதே பொருள் தரும் சுகத்தில் வாழ்ந்தார்கள்—தாழ்கின்றார்கள்!

★

இரவு மதுரமாயிருந்த பால், காலையிலே திரிந்துவிட்டால், சாக்கடைச் சேருகிறது! மாலையிலே மாளிகையிலே மங்கைகளின் கூந்தலுடன் கொஞ்சி விளையாடிய மலர், காலையிலே கசங்கியதும் வீசி எறியப்படுகிறது குப்பையிலே! பொருள்கள் மட்டுமல்ல; எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான்! காலத்துக்கு ஏற்றதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

★

செடியிலே மலர் கூத்தாடுகிறது, மணம் வீசுகிறது; மறுநாள் வாடுகிறது. உதிர்கிறது; பிறகு வேறொரு மலர் உதிக்கிறது. இரண்டாவது மலர் பூக்கிட, அந்தச் செடிக்கு நீர்பாய்ச்சி எருவிட்டுப் பாதுகாக்கவேண்டும். அப்போதுதான்புது மலர் கிடைக்கும். அதுமட்டுமல்ல நமது பணி! வாடிய மலரையே மீண்டும் மலரச்செய்ய முயல்கிறோம்!

★

வங்கத்தின் அணைப்பிலே, கவிதாகூர் வளர்ந்தார்! தமிழகத்திலே தருக்கரின் எதிர்ப்பிலே, தழைத்தது கொங்குநாட்டு வேங்கை! தாகூர் மாசு மருவற்ற வானத்திலேயே உலவிய முழுமதி; சர். சண்முகம் முகிலைக் கிழித்தெறிந்த முழுமதி.

★

அரண்மனை மாடியிலே அம்சதூளிகா மஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடைய வேண்டி ஆங்கு சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்துக்கோ, அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், யாங்ஙனம் மங்கையைப் பெறமுடியும்? இலட்சியமெனும் எழிலுடையாளைப் பெற்று இன்புற எண்ணுவோரிற் பலர், அகழிக்கு அஞ்சி, புறத்தே நின்ற புகைபடு மனமுடன் போரிட்டுக்கொண்டே புலம்பியே கிடப்பர்!

★

கட்சிப் பணியும், களத்துப்பணி போன்றே வீரருக்கு ஏற்றதேயன்றி, விலாவிலே விரக்திப்புழு நடமாடுவோருக்கோ, மனதிலே சுயநலமெனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று! கட்சிப் பணிக்கு இத்தகைய கடமையுணர்ந்த காவலர் தேவை!

★

உழவுக்கேற்ற விளைவு எனும் மொழிவழி நடக்கும் சிலருக்கு அறிவாற்றலுண்டு அவர்தமைச சலிப்பு அண்டாது. சாகசத்துக்கு அவர் பலியாகார். போலியைக் கண்டு ஏமாறார். புல்லரின் புன்மொழி கேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத் தூக்கியெறிந்துவிட்டுப் போர்க்குப்புகின், யார்க்கும் இது நேரல் முறையே என்பது தெரிந்து, புலியுடன் போரிடுகையில் கிலியெனும் வலிகொளல் கூடாது என்பதறிந்து, உயிர்கெடுவரை, நெடுவரைபோல் நின்று போரிடுவர் வீரர்!

★

கல் உடைக்கக் கரம் உண்டு; கருத்திலே உறுதி உண்டு; என்ன இனி நமக்குக் குறை? எழுப்பிடுவோம் நம் இல்லம்; எத்தனை தான் அழகியதாய் இருந்திடினும் மற்றதெல்லாம் இன்னொருவர் இடமன்றோ? இருந்திடலாம் என்கின்றோர். தயவன்றோ காட்டுகின்றார்? கொத்தடிமை ஆக்கதற்கே கூவி அழைக்கின்றார்; இத்தரையில் நமது இல்லம் இனிதாய் அமைந்திட்டால், என் இல்லம்! எழில் இல்லம்! என்றெண்ணி மகிழ்ச்சியுடன் இருந்திடலாம் காலமெல்லாம், இன்று பாழ்வெளியாய் இருந்திடும் இவ்விடத்தில், முன்னம் ஓர்நாளில் உலவி

ளராம் முடியுடையோர்; படை நடந்த இடம் இதுவாம்; பண்புக்குப் பெட்டகமாம். பார்புகழ வந்தனராம்; பல நூலும் கண்டனராம்; அந்த இடம் தனக்கே, நாம் உரியர் என்பதனை இன்று அறிந்திட்டோம், இனி ஏற்பது இகழ்ச்சி இல்லை எனக் கூறித் தந்தது தின்று தெந்தினம்பாடி, தருக்கரின் தாளில் தலையினை வைத்து இழுக்கினைத் தேடிக் கொண்டிருப்போமோ?

★

வண்டாடும் சோலையிலே வண்ணமயில் ஆடுகையில் விளைந்த வால்காட்டி தாவிடுமாம், மந்தியுந்தான்; மந்தி நடத்திடும் ஓர் நாட்டியமே பாடமாகக் கொண்டிடுவோம் என்று அந்தக் கோலமயில் எண்ணிடுமோ? ஏதேதோ இன்ப நினைவுடனே ஏந்திழையாள் இடுப்பில் குடம் வைத்து இன்பன் இதயம் துவைத்துச் செல்கையிலே, குப்பை கிளறிடும் ஓர் குக்கல் காணின், நின்று, என்னே! இதன் திறமை! எதற்குண்டு இவ்வாற்றல்! என்று எண்ணி நின்று எக்களிப்புக் கொள்கின்றாள்!

★

எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய், திருவிழா காணச் சென்றபோது, ஒரு குழந்தை காணாமற் போய்விட்டால், பரவாயில்லை. ட்டில் ஒன்று போனால் என்ன, ஏழு இருக்கிறதே என்றெண்ணியா ருப்தி அடைகிறாள்? இல்லையே! ஏழு பிள்ளைகளையும் திக்காலொரு ாக அனுப்பி, காணாமற்போன பிள்ளையைத் தேடிக் கண்டுபிடிக்கும் அல்லவா அனுப்புவாள்? அதுபோல்தான் விலகிய, வழிதவறிய ந்தத் தம்பிகளையும் தேடிக் கண்டுபிடித்துத் திருத்தித் திரும்ப ழைத்துக்கொண்டு வருவது மற்ற தம்பிகளின் கடமை!

★

பேசத் தெரிந்தவர்களெல்லாம் இன்பத் திராவிடத்தைப் பற்றியே எழுதவேண்டும். ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் தமது ஆற்றலை அருமைத் திராவிடம் விடுதலை பெறப் பயன்படுத்தவேண்டும்.

★

காணும் செங்கரும்பு அவ்வளவும், நமது குழந்தைக்கு வேண்டும் என்று எண்ணுவது பேதை நெஞ்சம்!

★

'நான்' சொல்கிறேன் கேளுங்கள் என்று யாரும் கூறும் போது, அந்த 'நான்' என்பதற்குப் பொருள் யாது? நான்—நேரு

விலும் பெரியவன்; நேரு காட்ட இயலாத காரணம் காட்டவல்லோன். நேருவுக்கு இல்லை, உமது மனம் மாற்றும் ஆற்றல், நான் கொண்டுள்ளேன் என்று பொருளோ ?—சேச்சே !

★

இந்தியா, இந்தியன் என்ற உணர்வுதான் உண்மையானது, தேவையானது; கொள்ளவேண்டியது என்று கூறுபவ நாணயமாவது இருக்கவேண்டும்.

★

விடுதலை ஆர்வம் — எழுச்சி, எந்தத் தனி மனிதருடைய ஆற்றலையும் மட்டுமே நம்பி, அமைவதில்லை; அப்படித் தமக்கு ஒரு ஆற்றல் இருப்பதாக எவரேனும் நம்பத் தொடங்கினால், இருக்கும் ஆற்றலும் கெட்டு வருகிறது என்றுதான் பொருள்படும் விடுதலை இயக்கம் எப்படி மாயம், மந்திரத்தாலே நடைபெறுவதில்லையோ, அதுபோன்றே எந்த ஒரு தனிப்பட்டவருடைய அதிசயிக்கத்தக்க திறமையால் மட்டும் நடைபெறுவதில்லையோ, அதுபோன்றே எந்த ஒரு தனிப்பட்டவருடைய அதிசயிக்கத்தக்க திறமையால் மட்டும் நடைபெறுவது இல்லை !

★

பட்டை தீட்டி ஒளி ஏற்றியவன் வைரத்தை விட்டு விட்டுச் செல்வானாகில், நான் பட்டை தீட்டியதால் கிடைத்த ஒளியை என்னுடன் எடுத்துச் செல்வேன் என்று கூற முடியும்? அதுபோலத்தான், கூட்டு முயற்சியின் விளைவாக ஏற்பட்டுவிடும் எழுச்சியிலிருந்து, எந்த ஒரு அளவையும் எவரும், தனியாக்கி எடுத்துச் செல்லமுடியாது. உடை, உணவு, பணம், இடம், பழங்கலம், பழைய ஏடு இப்படிப் பட்டவைகளை எடுத்துச் செல்லலாம்; எழுச்சியை எடுத்துச் சென்றிட முடியாது !

★

தோகையைத் தனியே எடுத்து, வான்கோழியுடன் இணைத்து விடுவதால், மயிலாட்டத்தைவிட அழகானதாக இருந்துவிடாது !

★

போர் நடத்தியேனும் சுதந்திரம் பெறவேண்டும் என்று துணிந்து இறங்கியுள்ள அல்ஜீரியா, திராவிடநாட்டைவிட அளவிலும் சிறியதுதான் — வளத்திலும் அவ்விதமே !

★

கோபம் குடிகொண்டிருக்கும்போது, வேறு எந்த எண்ணமும் கிட்டே நெருங்கப் பயப்படும்! பாசம் என்பது பொருளற்றது ஆகத் தோன்றும். நேசம் என்பது சிலந்திக்கூடுக்குச் சமம் என்று பேசச் சொல்லும்! ஒட்டு என்ன? உறவு என்ன? என்று கேட்கத் தோன்றும்! தழதழத்த குரல் இராது; தீ மிதித்த நிலையினர் போலாவர். ஆத்திரப் படுவது, அறிவுள்ளோர் செயலாகுமோ?

★

தமிழகத்தின் அளவுகூட இல்லாத நாடுகள் பல, தனிக்கொடி பறக்கவிட்டுத் தன்னாட்சி நடத்தித்தான் வருகின்றன. திராவிடநாடு, சிறிய நாடு என்று கூறுவதில் பொருள் இல்லை; சிறிய நாடுகள் சுதந்திர நாடுகளாக இருக்கவே கூடாது என்று எந்த அரசியல் தர்மமும் கட்டளையிடவில்லை!

★

ஒரு பெண்ணால் ஆணை வசியப்படுத்தமுடியவில்லை என்ற வரலாறே இல்லை.

★

நாசமாய்ப்போனவன், மணி பன்னிரண்டாகியும் தூங்கக் காணோமே என்று கைநொடிப்புடன் கூறுவாள் கள்ளி, காமவேதனை யாலும் அதனைத் தீர்த்திடும் கள்ளப்புருடனாலும், பீடிக்கப்பட்ட கள்ளிக்குக் கணவன் விழித்திருப்பதைக்கூடக் குற்றமெனத் தோன்ற லாம். விபசாரியின் இந்த விசாரத்தைக் கண்டு, அபசாரம் அபசாரம் என்று கூறும் பேர்வழி ஆண்மையற்றவனாகத்தானே இருக்கமுடியும்! வில்லுக்கு ஒரு அம்பு; பல்லுக்கு ஒரு எலும்பு; அதுபோல் பாதிராத்திரி வேளையில் பக்கத்துக்கோர் ஆள்தேடும் பாதகியின் மொழியைத் துச்ச மெனத் தள்ளிவிடுதல்போல, நான் ஆரியஏடுகளின் கண்டன மொழி களைத் துச்சமாகவே கருதுகிறேன்.

★

வீரமற்ற வஞ்சக உள்ளங்கொண்டோர் மறைந்திருந்து தாக்குவர்; மாற்றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர். மாமரங்களுக்குப் பின்புறமிருந்து வாலியைக் கொன்ற ஆரிய ராமன்போல! நண்பனாக நடித்து நயவஞ்சகத்தால் காரி யத்தைச் சாதிக்கும் கயவரும் உண்டு! எதிர்ப்போரின் உடன்பிறந் தாரையோ, ஏவலரையோ, விலைக்குப் பெற்று, விபீஷணாஸ்திரத்தால் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு. மாயமொழி பேசியும் மாற்றானை

மாய்ப்பதுண்டு! எதிரியின் ஏமாளித்தனத்தைத் தெரிந்து அவனைச் சாய்ப்பவருமுண்டு! உலகம் பலவிதம்!

★

கரியைப் பிடித்திழுத்துக் கரகரவெனச் சுழற்றி அடிக்கும் வீரனானாலும், காமவல்லிகளின் கடைக்கண் பார்வையாலோ, புன்சிரிப்பெனும், பாணத்தாலோ, அதரமெனும் அஸ்திரத்தாலோ, அடியற்ற நெடும்பனையாவதுண்டு!

★

மனிதன் கஷ்டம் அனுபவித்தபோது மதவாதிகள் அவனுடைய கண்ணையும் கருத்தையும் எந்த உண்மைக் காரணத்தால் மனிதன் கஷ்டப்படுகிறானோ, அந்தக் காரணங்களைக் காண ஒட்டாமல் தடுத்து, கைலாயம், வைகுந்தம், காகுத்தன், காளியாயி, ஜெபமாலை, உடுக்கை இப்படி வேறு பல பொருள்கள் முறைகள் மீது திருப்பி விட்டனர். மனிதன் திக்குத் தெரியாத கலத்தைப் போலானான்.

★

உருவமற்ற ஆண்டவனை உள்ளன்போடு வணங்கி ஒருவரையொருவர் தாழ்த்தாமல், ஒன்றே குலம் என்ற தத்துவத்தோடு வாழுகின்ற இஸ்லாமியர்களைக் கண்டபிறகு—ஆண்டவன் சன்னதியைக் கள்ளர்குகை ஆக்காதீர்கள் என்று பூசாரிகளைக் கடிந்துரைத்த ஏசுநாதரின் வரலாற்றைப் படித்தபிறகு, புனிதமான எண்ணமும் நிராசையும் தேவையே தவிர நீரில் மூழ்குவதும், நீண்ட தூரம் செல்வதும், ஆரியப் புரோகிதரின் ஆணைக்கு அடங்குவதும் ஆண்டவனையடைய மார்க்கங்களல்ல என்ற அறிவுரையை, சுகபோகத்தைத் துறந்து, ஆரண்யத்தில் அலைந்து, அறிவின் எல்லையைக் கண்டு அவனிக்கு எடுத்துரைத்த புத்தபிரானின் வரலாற்றைப் படித்தபிறகு எப்படி நம்முடைய பழையகால ஏற்பாடாகிய பார்ப்பனியப் பலிபீடமாகிய இந்து மதத்தை ஏற்றுக்கொள்ளமுடியும்?

★

இருள் நிலைத்திருப்பதில்லை—ஒளி கிடைக்க தாமதம் ஏற்படினும், இடையே சொல்லொணாச் சங்கடம் விளையினும், விந்தைலைச் சுடரொளி, எப்படியும் கிளம்பித் தன் வேலையை வெற்றிகரமாகச் செய்து வந்திருக்கிறது.

★

உருட்டும் கண் ! மிரட்டும் சொல் ! ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள் !

★

மனிதன் பறக்கக்கூடக் கற்றுக்கொண்டான் ! பார்முழுவதையும் பாக்கெட் சைஸ் ரேடியோவுக்குள் அடக்கிவிட்டான். ஆனால், இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டுபிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை.

★

புலியைக் கொன்றபிறகு தோட்டக்காரன் தன் வேலை முடிந்தது என்று எண்ணிவிடுவதுபோலவே—புலி புகுந்ததால் ஏற்பட்ட சேதம், ஆகியவைகளைப் போக்குவது, வேறு ஏதேனும் துஷ்ட மிருகங்கள் புகாதபடி பாதுகாவல் அமைப்பது போன்ற காரியங்களைக்கூடத் தோட்டக்காரன் வெற்றி பெற்ற மகிழ்ச்சியால், கொஞ்சகாலம் பொறுத்துத்தான் செய்ய முற்படுவான், அதுபோலவே, அடிமைப் படிருந்தபோது ஏற்பட்ட அவதிகளையும் அல்லல்களையும் துடைத்திடும் அரும்பணியை விடுதலைப் போரில் வெற்றி பெற்ற பல நாடுகள் செய்யாமல் இருந்துவிட்டதுண்டு — காலங்கடந்தபின் செய்யத் தொடங்கியதுண்டு !

★

சங்கீதம் என்ன சார் பிரமாதம் ? சாரீரம் கொஞ்சம் நன்றாக இருக்கவேண்டும். சுருதியுடன் சேர்ந்து பாடவேண்டும். தாளம் தவறக்கூடாது. இவ்வளவுதானே என்று, பாட ஆரம்பிக்கும்போது தானே தெரிகிறது, சாரீரம் வித்வானுடன் ஒத்துழைக்க மறுப்பதும், சுருதியுடன் அவர் மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்குச் செய்யும் துரோகமும் ! அதுபோலத்தான் சமத்துவம், சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடினம் !

★

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர் — விண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர்—தொலைவிலுள்ளதைக் கேட்கவும், காணவும் கருவிகள் கண்டுபிடித்தோர் — காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டுவந்தோர்—நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்போல் மனிதரே! அவர்களால் முடிந்தது, நம்மால் ஆகும் என்ற நினைப்பு, அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று.

அவைகள் சாத்தியமானபோது, மேடைப் பேச்சா சாத்தியமாகாது? பேசாமலிருப்பதுவேண்டுமானால் சிரமம் — சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது—பேசுவது எளிது. பேசுவதை ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப்படுத்துவதுதான் மேடைப் பேச்சு.

★

திசைகாட்டும் கருவி தீயோனிடம் சிக்கினால், கலம் பாறையில் மோதுதல்போல, அரசுகளை ஆட்டி வைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த மேடைப் பேச்சு எனும் சக்தி சாதனம் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து, அவர்களும் அந்தச் சக்தியைத் தவறான காரியத்துக்குப் பயன்படுத்துவதனால், மக்களின் நலம், பாறை மோதிய கலமாகும்!

★

யாரும் பாடிவிடலாம் என்று எளிதில் கூறிவிடலாம். பாட ஆரம்பித்தால் தெரியும், சாரீரம் கெட்டிருப்பதும், மேளம் சத்தம் கேட்காததும், தாளம் ஒத்துழைக்க மறுப்பதும், கீதம் பாடுவதிலே உள்ள கஷ்டத்தைவிட, கீதத்திலே உள்ள கருத்துக்களை தேசத்திலுள்ள மக்களுக்குப் போதிப்பதிலே உள்ள கஷ்டம் அதிகம்!

★

விழலுக்கு நீர் இறைப்பானேன்? விலா நோகுதே என்று விம்முவானேன்? அலி என்று தெரியாமல் அணைப்பானேன்? ஐயோ சனியனே என்று ஆயாசப்படுவானேன்?

★

கிளி கொஞ்சிடும் சோலையிலே, நடுநிசி வேளையிலே ஆந்தை அலறுகிறதல்லவா? அதுவும் பாபம், தனது ஆலாபனத்தைக் கேட்டு, உலகு உவகையுடன் இருப்பதாகவே எண்ணிக்கொள்கிறது! தன் குறும்பையும், கோணற் சேட்டைகளையும் கண்டு உலகு மகிழ்கிறது என்கிற மனப்பான்மை மந்திக்கே இருக்கும்போது, மக்களிலே சிலருக்கு இருப்பதிலே என்ன ஆச்சரியம்?

★

விமானம் பறப்பதையும், விமானத்திற்குப் பக்கத்தில் பறக்கும் கருடனையும் பார்ப்பார். பார்ப்பதற்குக் கொடுத்து வைத்தோமே என்று சந்தோஷப்படுவார். அத்துடன் நிற்கமாட்டார் தன் பக்கத்திலுள்ள சிறுவனையும் கருடனைப் பார்க்கச் சொல்லி கன்னத்தில் போட்டுக்

கொள்ளச் சொல்வார். விமானத்தையும் பார்க்கிறார்; கருடனையும் பார்க்கிறார்; கருடனிடம் கவனம் செலுத்துகிற அளவுக்கு விமானத்தினிடம் காட்டமாட்டார்.

★

நம் நாட்டில் பல கோயில்களிலே லட்சக்கணக்கான ரூபாய்கள், நகைகளாகவும், நிலங்களாகவும் வாகனங்களாகவும் மக்களுக்கு ஒரு சிறிதும் பிரயோசனமில்லாமல் முடங்கிக் கிடப்பதை எடுத்து, பல ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தலாமே!

★

மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை தொடுத்தால் பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோல பேச்சுக்கு முதற்பொருள சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

★

பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படி செய்வது, மிகமிக முக்கியம். பூத்தமலரை அழகுறத் தொகுத்தது போல, கிடைத்த கருத்தைத் தொகுத்தும் வகுத்தும் பிரித்தும் வெல்லும் சொல் தெளிவான நடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைதல் வேண்டும்.

★

கல் வீசினோர், நல்வழி கண்டோம் அவர் உரையால் என்று பிறிதோர் நாள் உணர்ந்து, கல்தூக்கிய கரத்தால் கனத்த மாலையைத் தூக்கிவரும் காட்சிகள் நிரம்பிய விசித்திரபுரி, மேடை! எனவே, பேசும் பொருள் பயன்படத்தக்கதாகவும் வீணான வீம்புக்கு வித்திடாத வகையிலும் அமைத்துக்கொள்வது நல்லது. இனித்தே ஆகவேண்டும் என்று முயன்றால் சதங்கையும் ஜாலரும் தேடித் தீரவேண்டி வரும்.

★

பேச்சு, கருத்தின் தொகுப்பு; கருத்து, சிந்தனையின் விளைவு, சிந்தனை, காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம். ஒரே பொருள், காண்போருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி,

வெவ்வேறு கருத்தை தூண்டி, அதற்கேற்றமுறையில் பேச்சு பிறக்கச் செய்யும்!

★

கருத்திழந்தவனுக்கு நல்லுரையும், கண்ணிழந்தவனுக்குக் காட்சியும், செவிமந்தமடைந்தவனுக்குக் கீதமும் பயனில்லை.

★

மதமென்னும் முள்ளில், கலையெனும் ஊன் அமைக்கப்பட்டிருப்பதறியாது உணவெனக் கருதி சுவைத்திடச் சென்று அவ்வழி ஆரியத் தூண்டிலிற் சிக்கி, வாழ்வினைப் பறிகொடுக்கின்றனர். தமிழர்!

★

உடனடியான அரசியல் லாபத்தை விரும்புபவர்கள் வெட்டுக் கிளிகள்போல், இங்குமங்கும் தாவுவர்—மரம் பழுத்தால் வௌவாலாவார் — புயலடிக்குமென்று தெரிந்தால், சந்து பொந்துகளைத் தேடிக் கொள்வார்—கஷ்டநஷ்டம் வருமெனத் தெரிந்தால், காவடி தூக்குவார்! உடனுக்குடனே கணக்குப் பார்த்துக் களிப்படைவார்!

★

திறமையும் விவேகமும் உள்ள இசைவாணன், ஒருதுளி சுருதி கலையும்போதே உணர்ந்துகொள்வான். மட்டரக வித்வான், சபையோர் கைகொட்டி நகைத்த பிறகும், ஏன்? என்ன விஷயம்? என்று கேட்பான்!

★

தமிழ்ப் புலவர், வரலாற்றுப் போதகாசிரியர் வேலை செய்வதை, பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் அல்லவா? டாக்டருக்குத் தோட்டச்சுவர் எப்படிக் கட்டவேண்டும் என்று தெரிந்திருக்கலாம். ஆனால், அவரிடம் மருந்துக்குப் போவார்களே தவிர, கட்டிடப் பிளானுக்குப் போகமாட்டார்கள்!

★

புராண ஏடு படித்தோர், சரித உண்மைகளையா சபையிலே வீசத்துணிகிறார்கள்? கணித மேல் படிப்பிலே நேர்கோடு, குறுக்குக் கோடு, வட்டம் முதலியன உண்டு. ஆனால் நீறுபூசியும், நாமதாரியும், பொட்டுக்காரரும்—குறுக்குக்கோடு, நேர்கோடு, வட்டம் என்ற கணித சாஸ்திர உண்மைகளையே நாங்கள் தரித்துக்கொண்டிருக்கிறோம்;

ஆகவே மதக்குறிகளிலே கணித உவமைகள் உண்டு என்று பேசுவது முறையா?

★

சேரன், செங்குட்டுவன் போன்ற வேந்தர் தலைவர்களைப் பற்றி யாவது பேசினால், வீரமாவது பிறக்க வழி ஏற்படலாம். அதைவிட்டு சந்தனம் காண முழங்கையைத் தேய்த்தவன் கதையும், ஓடு மறைய் ஓலமிட்டவன் கதையும், பண்டாரங்கட்குச் சோறிட்டுப் பராரியான வன் கதையும், மூக்கறுத்தவன், நாக்கறுத்தவன் கதையும் பேசிக் காணப்போகும் பயன் என்ன?

★

உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால், வயலிலே வளம் காணமுடியாது!

★

ஒய்யார ஓடம்! அதிலே உல்லாச வாழ்வினர்! அவர்களின் உள்ளமோ, களிப்பு மது உண்ட நிலை, பாய்மரத்திலே பழுது! நிலைமை என்னவாகும்?

★

சொந்தச் சொத்தை நிர்வகிக்க முடியாத அபலை; தனவானி டம் அதைக் கொடுத்துவிட்டு, மாதந்தோறும் சீமான் வீடு சென்று, செலவுக்குப் பணம் கேட்டுப்பெறும் பரிதாப நிலைதான் மாகாணத் துக்கு! இதற்காகவா மார்தட்டித் தோள்தட்டி மொழிவழி மாகாணம் அமைத்தோம், என்று கேட்கும் தமிழர் எங்கே?

★

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

★

தொடர்பு — தோழமைக்கும் வழி தேடும், வழக்குக்கும் வம் புக்கும் இழுத்துச் செல்லக்கூடும்; அண்ணன் தம்பிகள் ஒருமனை வாழவும் முடியும்! பாகப்பிரிவினைக்கு வழக்குமன்றம் ஏறி அலுக்க வும், அவர்களால் ஆகும்! அதுபோல தமிழரும் ஆந்திரரும் ஒருமனை வாழவும் முடியும்; வேங்கடத்துக்கு இப்பக்கம் ஓர் படையும், அப்பக் கம் ஓர் படையும ஆக நின்று களம்புகு காதை நடத்தவும் முடியும்!

★

மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமை போல, குழந்தைகளுக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகிறது!

★

தமிழரின் ஏடுகளிலெல்லாம் இன்று தமிழர் திருநாள் பற்றிய் திருமுகங்கள் காண்கிறோம். ஒன்று கூடும் வேளை! ஆம் ஒன்று கூடவேண்டிய கட்டம்! திரை, நைந்து இருக்கிறது. திரை நிச்சயம் கிழிந்துவிடும்! தமிழருக்குள் காணப்படும் உட்பகை, ஒழிந்து கூடும் விடுதலை வெற்றி விழாவுக்கு வழி ஏற்பட்டுவிடும்!

★

வாழ்க்கைத் துறையிலே மிக முக்கியமான — ரசமான கட்டம், காதல்!

★

கள்ளங்கபடமற்று விளையாடும் இளைஞனைக் காணும் கபட நெஞ்சங் கொண்ட வயது வந்த நொண்டி, தான் விளையாட முடியாமலிருக்கும் போது அவ்விளைஞன் மட்டும் விளையாடுவதா என்று பொறுமையுள்ளங்கொண்டு கல்லெடுத்தெறிந்து இளைஞனின் காலில் படுகாயமுண்டாக்க நினைப்பது என்பது சாதாரணமாக நடைமுறைப் பழக்கத்தில் சில இழிகுணம் படைத்தோரிடத்து இருக்கக்காண்கிறோம். அடிபடும் இளைஞன் காயத்தைத் தேற்றிக்கொண்டு நடமாடுவது போல், திராவிட நாடும் தன்மேல் உதிர்க்கப்படும் அடக்குமுறைக் குண்டுகளைத் தாங்கிக்கொண்டு, தன் இலட்சியப் பாதையில் சளைக்காமல் செல்லவே விரும்புகிறது!

★

திராவிடநாடு தன்னைப் பின் தொடர்பவர்கள் எளிதில் வந்து சேர, நடந்து செல்லும் வழியைச் செப்பனிட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இனியும் செப்பனிட்டுக் கொண்டே செல்லும். வழியில் காணப்படும் சனாதனச் சருக்கல்களைப் போக்கியும், வர்ணாச்சிரம வளைவுகளை நிமிர்த்தியும், முடப்பழக்கமென்னும் முட்புதர்களை அழித்தும், குருட்டு நம்பிக்கை என்னும் கொடுங் கள்ளிகளை வெட்டியும், பழமைப் படுகுழிகளைத் தூர்த்தும், அவற்றிலே நெளியும் புராணப் பாம்புகளையும், இதிகாசக் கொடுந் தேள்களையும் கொன்றும், தொண்டு செய்து வருகிறது.

★

அமைவது—அமைக்கப் படுவதைவிடச் சிறந்தது! பூத்திடும் மலர்போல், பல வர்ணக் காகிதம் கொண்டு மலரைச் செய்திடலாம்; செய்யப்படும் பொருளிடம் மணமிராது!

★

கடிவாளம் சிறியது! ஆனால், குதிரை அதனிடம் படும்பாடு யாவரும் அறிந்ததுதான்! மூக்கணாங் கயிறு, தனது வால் பருமன் கூடத்தான் இல்லை, ஆனால், மாடு அதனிடம் அகப்பட்டால், அடங்கித் தான் ஆகும் அதைப்போல சிறிய சமூகமாயினும் அதற்கு ஏதேதோ மகத்துவத்தைக் கற்பித்து விட்டால், பிறகு அந்த சமூகத்தவரின் செல்வாக்கு நிச்சயம் வளரும்!

★

எந்தச் சமயத்தில் எந்தக்கட்சி வலையில் வீழ்கிறதோ, அதை வைத்துக்கொண்டு, தன் வாழ்வை நடத்தத் தீர்மானித்திருக்கிறது ஏகாதி பத்தியம். கோழிச்சண்டை — மாட்டுச்சண்டை — குஸ்தி — இவைகளை நடத்தி வைக்கும் காசுதிரட்டிகள் இருக்கிறார்களல்லவா? அது போலாகிவிட்டது, ஏகாதி பத்தியம்!

★

நல்ல மாடி வீட்டிலே அழகான பூந்தொட்டிகளை அலங்கார வரிசையாக வைத்துக் காட்டுகிறார், வ. ரா. அழகிய உயர்தரமான கோட்! அதிலே பூச்செண்டு செருகிவிடுகிறார் காண்டேகர். பாரதி தாசன் பூங்காவையே அமைத்துத் தருகிறார். காகிதப் பூஞ்சோலை, தழைமாலை, இவைகளையே தயாரிப்பவர்களும் உண்டல்லவா?

★

நல்லவர்—மதிக்கத்தக்கவர் என்ற வரிசையினரான வினோபா வினாலேயே, எனக்குத் திராவிடநாடு குறித்து இருக்கும் நம்பிக்கை யைக் குறைத்திட இயலவில்லை என்றால், பிறர், என்னையும் உன்னை யும் ஏசிப்பேசி வருவதினாலா, திராவிட நாடு பிரச்னையிலே நமக்கு இருக்கும் நம்பிக்கையும் ஆர்வமும், அதற்காகத் தொண்டாற்றும் திறனும் குறையும்? பாழ்படும்? எவ்வளவு ஏமாளித்தனம் இருக்க வேண்டும், இப்படி எண்ணிக்கொள்ள?

★

ஆந்திரம், கேரளம், தமிழகம், கருநாடகம் என்னும் நான்கு மொழிவழி அரசுகளும் கூட்டாட்சித் திட்டமான திராவிட நாடு

அமைத்துக்கொண்டு வட நாட்டு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்பதுதான் நமது திட்டம்!

★

பட்டுப் பட்டாடை பளபளக்க, பாதக்கொலுசு சலசலக்க, கட்டி முடித்த கட்டுக்கதம்பம் கறுப்புக் கூந்தலிலே குந்தியிருக்க, மொட்டு விரிந்ததுபோல் முகச்சிரிப்பை மலரவிட்டுச் சிட்டு பறப்பதுபோல் விரைவாக அந்தச் சிங்காரி நடந்த நடை...? அவளுக்கு ஏது பட்டுச் சேலை; கட்டுக்கதம்பம்; பளபளக்கும் தங்கநகை? நிழல் இருட்டிலே நின்றுகொண்டு கைவளைச் சத்தம காட்டி சஞ்சல நெஞ்சு படைத்த மிருக மனிதர்களைக் கொஞ்ச அழைத்து ஊமையின்பம் கொடுத்து விட்டு உள்ளதையெல்லாம் பறித்துக்கொள்ளுகிற உத்தியோக உயர்வுக்கு அவள் போய்விட்டாள்! ஆம்! அஞ்சலை தண்ணீர்ப்பந்தல் தகரக்குவளையாக மாறிவிட்டாள். அதைக் கண்டவனும் எடுப்பான்! கண்டபடி பயன்டடுத்துவான் அந்தத தகரக்குவளையாவது வாடகையில்லாத உபயோகம்! இவளைத் தொடுவதற்குக்கூட காசு! இதுவும் ஒருவிதம்!

★

குத்திக் குடலெடுத்துக் கணவனைக் கொன்ற ஓர் மாபாவிக்குக் கொடியவர்கள் உலா ஏற்பாடு செய்து, அதனைக் காண மஞ்சள் இழந்த மாதை அழைத்தால், அவள் எவ்வளவு வேதனை அடைவாளோ, அஃதே போன்ற வேதனையன்றோ ஏற்படும், ஆட்சிமொழி ஆகிடும் இந்திக்கு ஆலவட்டம் சுற்றத் தமிழ்த்தாயை அழைத்தால்!

★

அகம் என்பாய்; புறம் என்பாய்; அழகுதரும் இலக்கியம் என்பாய்; அவனியோர்க்கே அறிவளிக்கும் அறநூலாகும் குறள் என்பாய்; அந்தத் தமிழ்மொழி பயின்றிடும் நமக்கு ஆட்சிமொழியாக இந்தியா?

★

தமிழகம், எதை எதையோ தாங்கிக்கொள்கிறது. எனினும் இந்தியையுமா தாங்கிக்கொள்ளவேண்டும்?

★

நாம் கொண்டுள்ள கொள்கையின் தூய்மையிலே நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்குமானால், நெஞ்சார நாம் அந்தக்

கொள்கையிடம் பற்றுக்கொண்டிருப்பது உண்மையானால், எத்துணை கொடுமைமிக்க தண்டனையையும், ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும் நீண்டகாலச் சிறைவாசம், சொத்துப் பறிமுதல், போலீஸ் தடியடி துப்பாக்கிப் பிரயோகம் எனும் அடக்குமுறையின் பல்வேறு உருவங்கள், நம்மீது பாய்ந்து, நம்மைப் பிய்த்தெறியும் நிலை பிறக்கலாம்; தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோமா? எதற்கும் தயாராக இருப்பதுதான், இலட்சியவாதிகளின் கடமை—இலட்சணம்!

★

பிடிக்காதவர்கள்மீது, வேறு சிலரைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பவர்களை, மிகமிக மட்டமான மக்கள் என்பர், ஆன்றோர்!

★

நமது உடலிலே ஏற்பட்ட புண் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாவாகி, உலகுக்கு உண்மையை உரைத்திடும் சுற்றிச் சுற்றி வந்து ஊர்மக்களுக்கு, உண்மையை விளக்கி வரும் நாம், சுடப்பட்டுக் கீழே சாய்ந்தால், காட்டிலே சந்தன மரங்களின் மீது கரி உராய்வதால் காடு முழுதும் மணம் பரவும் என்பார்களே, அதுபோல் நாடெங்கும் வீரம் பரவும், வெற்றி தொட்டணைத்து உச்சிமோந்து, முத்தமிடும்! வேண்டுவது, அடக்குமுறையின் தாக்குதலை ஏற்றுக்கொள்ளும் நெஞ்சுரம்!

★

'இந்தி பேசாத மக்களின் விருப்பம் அறியாமல், இந்தி திணிக்கப்படமாட்டாது; அவர்களின் விருப்பப்படி காலக்கெடுவின்றி, ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருந்திடும்; அதற்கான முறையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படும்' என்று குடிஅரசுத் தலைவரை அறிக்கை பிறப்பித்துவிட்டுத் தமிழகம் வந்து, உலா நடத்திக்கொள்ளும்படி கூறவேண்டும் அதைவிட்டு போலீஸ் உண்டு, படைஉண்டு, சிறைஉண்டு, அடக்கிவிடுவோம்! ஒரு துளியும் எதிர்ப்புணர்ச்சி தலை காட்டாதவாறு செய்திடுவோம் என்று கூறுவார்களானால், எந்தத் தலைவரின் உலா மிகச் சிறப்பாக, அனைவரும் கண்டு பெருமைப் படத்தக்க விதத்தில் நடைபெறவேண்டும என்று அவர்கள் எதிர்பார்ப்பார்களோ, அம்முறையில் உலா அமையாது'

★

நமக்கு எத்துணை கஷ்டம் நேரிடுவதாயினும், தாயகத்துக்கு மனக்குறைவு, இனத்துக்கு இழிவு, மொழிக்குத் தாழ்நிலை, ஏற்படலா

காது, ஏற்படவிடக்கூடாது. அந்தத் தூய தொண்டாற்றவே, உயிர் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

★

எதிர்ப்பு உணர்ச்சி காட்டாதிருந்தால் இந்திக்குத் தமிழகம் தலைசாய்த்து விட்டது என்று பொருள்படும் என்று உணரும் தமிழர், அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சமாட்டார்கள்!

★

தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழி ஆகி இருப்பது, அதிசயத்திலே ஒன்றல்ல; மொழிவழி மாநில அமைப்பின் போதே, இப்படித்தான் நடந்திடும் என்பதை அனைவரும் அறிவர்; தமிழ்மா நிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்றிருப்பது போலவே, பிறமொழி பேசிடும் மாநிலங்களிலேயும் ஏற்பட்டுள்ளன. இதிலே (தமிழக) அமைச்சர் சுப்ரமணியனாரின் அலாதியான வீரதீரம் ஏதுமில்லை. இது, டில்லியால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு ஏற்பாடு!

★

வெளி நாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்த நடவடிக்கைகள், இந்தியா முழுவதுக்கும் (தமிழகம் உட்பட) என்று இயற்றப்படும் சட்டங்கள், உத்தரவுகள் எல்லாம் இந்தியில்தான்! இந்தியப் பேரரசின் கட்டுக்கு அடங்கி நடக்கவேண்டிய இராணுவத்தில் இந்திமொழியில்தான், கவாத்துப் பழகுவதிலிருந்து, காரிய விளக்கங்கள் வரையில்! இந்தியா முழுமைக்கும் என்று இருக்கிற உச்ச உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்திமொழியில்தான்! இந்தியப் பேரரசு நடைபெறப் பணியாற்றிவரும் அலுவலகங்களிலே உள்ளோர் இந்தி கற்றுத் தேறியாகவேண்டும். இவைகள் எதைக் காட்டுகின்றன! இந்தி ஆட்சிமொழியாகி விடுவதை—ஆதிக்கமொழியாகி விடுவதை!

★

அவன் அந்தச் சோற்று மூட்டையை எடுத்தானா? பிரித்தானா? தின்றானா? அந்த மூட்டை வேறொருவனுடையதா? இவை பற்றித்தான் சட்டம் கேட்கும்; அறிந்து கொள்ளும்; அறிவிக்கும்; அந்தக் கட்டம் முடிந்ததும், அந்தச் செயல், குற்றம் என்று கூறும் கட்டம், பிறகு அந்தக் குற்றத்துக்கு என்னவிதமான தண்டனை தரப்படலாம் என்ற சட்டம் காட்டப்படும் கட்டம்; பிறகு தண்டனை அளிக்கப்படும் கட்டம்; வழக்குமன்றத்தின் வேலை அவ்வளவோடு முடிகிறது. தீர்ப்பைக் கூறிவிட்டுக் கசியும் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள, குமுறி

ஏழும் பெருமூச்சை அடக்கிக்கொள்ள. வழக்கு மன்றத்தலைவர், தமது தனி அறைக்கோ, மாளிகைக்கோ செல்லலாம்—மன்றத்திலே சட்டம் காட்டும் வழியிலேதான் நிற்கவேண்டும். மாளிகையில் சென்று மலர் விழியாளைக் கண்டும் மகிழ்ச்சி பெறுது, கழலையும் யாழையும் மீட்டி நிற்கும் குழவிகளிடமும் கொஞ்சாமல் தீர்ப்பளித்தவர் கவலைகுடையும் உள்ளத்தினராகி உழலக்கூடும். ஆனால், மன்றத்தில் அவரைக் கட்டுப் படுத்துவது சட்டம்!

★

பண்ணையாள் திருமணம் செய்துகொண்டால், முதல் இரவு அவனுக்கு அல்ல! பண்ணையாருக்கு! குட்டி யார்? மான்விழி! சிற்பி செதுக்கிய சிலைபோன்ற உடல்! பருவக்கருவ மிகுந்த வயது! யார் இந்தக் காட்டுரோஜா? என்று கேட்க, என் மனைவி என்று பண்ணை யாள் பதிலளிக்க சரி சரி! போய்வா என்று அவனை அனுப்பிவைக்க, அவள் தங்கவேண்டும், மாளிகையில்! முதல் இரவு அங்குதான்! பிறகு, சீமான் வேறு சிட்டு தேடிக் கொண்டால், இந்தக் கசங்கிய மொட்டு, வீசி எறியப்படும்; கட்டியவன் அழைத்துச் செல்வான். கற்பைச் சூறையாடுவதல்லவா, இது? என்று இன்று, எவரும் கேட்பர், கொதிப்புடன். அன்று அது சட்டம்! எதிர்ப்பது பாவம்! எதிர்த்தால் அதற்கு வேறோர் சட்டம்! கடும் தண்டனை!—ஐரோப்பாகண்டத்தில்!

★

இன்று, கேட்டால் கைகொட்டிச் சிரிப்பார்கள், அல்லது கோபத்தால் கண்கள் கொவ்வைபோலாகிவிடும்; அப்படிப்பட்ட வித மான சட்டங்கள் பல இருந்திருக்கின்றன; மனிதகுலம் தாங்கிக்கொண் டிருந்திருக்கிறது; மாவீரர் பலர் மடிந்தனர்; பச்சை இரத்தம் பரிமாறிய பிறகு, சட்டம் காட்டிக் கொட்ட மடித்துவந்த சழக்கர்களின் ஆதிக்கம், அழிந்துபட்டது!

★

நாட்டிலே கருப்பர் என்பவர்கள், படும்பாடு உலகிலே உள்ள நல்லறிவாளர்களின் உள்ளத்தை வேக வைப்பதாக இருக்கிறது.

★

இப்போதுகூட, காட்டுமிராண்டிக் காலத்தவை என்று எள்ளி நகையாடத்தக்க சட்டங்கள், ஜனநாயக நாடுகள் என்ற பட்டியலில் இடம் பொறித்துக் கொண்டுள்ள சில நாடுகளில், அமுலில் உள்ளன. மறந்துவிடாதே, முறைப்படி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்!

எவனே எதேச்சாதிகாரியின் இறுமாப்பின் விளைவு அல்ல; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களாட்சி நடத்திவரும், மக்களின் தலைவர்கள், மக்களுக்காக, மக்களின் ஆதரவுபெற்று, மக்கள் மன்றத்திலே பேசி, முடிவு எடுத்து, நிறைவேற்றப்பட்டு, அமுலில் இருந்து வரும் சட்டங்கள்!

★

மருத்துவராக இருக்கலாம். மதகுருவாகப் பணியாற்றலாம். வழக்கறிஞராக, பேராசிரியராக, வணிகராக, எப்படிப்பட்ட அறிவாற்றல் மிக்கவராக, இருப்பினும் சரி, கருப்பர் என்றால் ஊரிலே, ஒரு ஒதுக்கிடம்! வாழுமிடங்களில் மட்டுமல்ல, இந்த வேதனை தரும் வேற்றுமை! தொழிலிடம் — கல்விக்கூடம் — தொழுகை இடம்— கேளிக்கைக்கூடம் எங்கும்—வேறு வேறுதான்! பலப்பல அலுவலகங்களில், வேறு வேறு இடங்களில்தான் இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல— நுழைவு இடங்களே தனித்தனி! வெள்ளையருக்கு மட்டும் என்று இருக்கும் நுழைவு இடத்தில், கருப்பர் சென்றால், கடும் தண்டனை—கசையடிகூட!

★

வழக்கு மன்றம், தரப்பட்டுள்ள சட்டப்படி, குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையைத் தருகிற இடம்! சட்டத்தின் பிறப்பு வளர்ப்பு, பெற்றோர் உற்றார் இவை பற்றிய விசாரணை நடத்தும் இடம் அல்ல!

★

மக்களாட்சி முறைப்படி, பெருவாரியான இடங்களை மக்கள் மன்றத்திலே பெற்ற கட்சியினர் என்ன தேவை என்று நினைக்கிறார்களோ, அவ்விதம் சட்டம் இயற்றிக்கொள்ள முடிகிறது!

★

சட்டம், தூய்மையான உள்ளத்துடன், நெறிதவறா முறையில் இயற்றப்பட்டாலும், இயற்றியவர்கள் சமூகத்தில் எவ்விதமான அமைப்பு, இருக்கவேண்டும் என்று விரும்பி, அதனைத் தமது குறிக்கோள்கள் ஆக்கிக்கொள்கிறார்களோ அதனை நிலை நிறுத்தவும், மற்றவர்களும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஏற்றுக்கொள்ளவும் செய்வதற்காக வடித்தெடுக்கப்படும், கருவி!

★

வாழ்ந்து கெட்டவர்கள், தமது நிலைமை வெளியே தெரியாதபடி மூடி மறைத்தாலும், பூசிமெழுகினாலும், மற்றவர் கண்களுக்கு,

உண்மை நிலைமை பளிச்செனத் தெரிந்துவிடும். உடை, உண்மை நிலைமையையா மூடிடும் உடலை மட்டுந்தான் !

★

வாழ்ந்து கெட்டவர்கள், இருப்பது போனதால் ஏற்பட்ட வருத்தத்தை மட்டுமல்ல, கேலி கிண்டலையும் சுமந்து தீரவேண்டி இருக்கிறது ! தனிமனிதராலோ, வாழ்ந்து கெட்ட நிலையால் ஏற்படும் இழிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல், தனக்கு நிரம்பத் தெரிந்தவர்கள் இருக்கும் இடத்தை விட்டு, அவர்கள் கண்காணு இடம் சென்று காலத்தை ஓட்டவேண்டியிருக்கிறது.

★

பெற நினைக்கும் பொருளுக்குத் தக்க விலை கொடுக்க எவர் தயங்குவர்? தயங்கிடின், தரணி இந்த அளவு செழித்திருக்கத்தான் முடியுமா ?

★

வீரம் நிரம்ப இருக்கிறது — அளவுக்கு அதிகமாகவே கூட ! ஆனால், விவேகம் அல்லவே, பொறி பறக்கப் பேசுவது ?

★

ஏழைநாடு! இன்னும் சரியாக எழுந்து நிற்கக் கூடிய வலிவு கிடைக்காத நிலையிலே உள்ள நாடு! எனினும் அந்த நாட்டுத் தலைவன், என் நாட்டை அடிமைப் படுத்த எண்ணும் நாடு, எத்துணை பெரிதாக இருப்பினும் எனக்கென்ன? அங்கு தங்க ஓடுகள் வேயப்பட்ட மாட மாளிகைகள் இருக்கலாம் சீமான்கள் பவழம் பதிக்கப்பட்ட கோப்பையிலே பழரசம் ஊற்றி, வைரம் ஜொலிக்கும் உடலினள், மின்னிடும் கண்ணினள், இடை துவள நடையழகு காட்டிவந்து கொடுக்கலாம். மலைமலையாகப் பண்டங்கள் இருக்கலாம். என்ன இருந்தால் என்ன? என் நாட்டின் உரிமைக்கு ஈடோ அவை? என்ற நினைப்பால் உந்தப்பட்டு, எதிர்த்து நிற்கிறன், எடுத்தேன், கவிழ்த்தேன் என்று கூடப் பேசுகிறன். என் நாட்டுச் சர்க்கரை வாங்குவதைக் கொஞ்சம் கொஞ்சமாக, அமெரிக்கா குறைத்துக் கொண்டு வம்புக்கு நின்றல், என் நாட்டிலுள்ள, அவர்களுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றி விடுவேன்! அவர்கள் இங்கு தொழிலில் போட்டிருக்கும் மூலதனத்தைப் பறிமுதல் செய்து, கடைசியில் அவர்களுக்கு ஒரு காசும் மிச்சமில்லாதபடி செய்துவிடுவேன்! வணிகத் துறையிலே, வஞ்சகத்திட்டத்தைப்

புகுத்தி, என் நாட்டுப்பொருள்களை வாங்காமல், முடக்கு, பணத் தட்டுப்பாடு ஏற்படச்செய்து, எங்களைப் பட்டினி போட்டுப பணிய வைக்கலாம் என்று, சூது நிரம்பிய அமெரிக்க நாடு கருதினால், அமெரிக்க நாட்டுப் போர்வீரர்களின் கால் செருப்பிலே, அடித்திருக்கும் ஆணிகூட அவர்களுக்குக் கிடைக்க முடியாதபடி செய்து விடுவேன்! என்று கொக்கரிக்கிறான், அரசியல் செல்வாக்கில், பொருளாதாரத் துறையில் குறைந்த நிலையில் உள்ள க்யூபா நாட்டுத் தலைவன், காஸ்ட்ரோ!

★

விடுதலை முழக்கம் எழுப்புபவனை வெறியன் என்று ஏசுவதும், அவன் கையாளும் முறைகளைக் காட்டுமிராண்டித்தனம் என்றுகூறிடுவதும், கூர்த்தமதியற்ற காரணத்தால், மிகப பலருக்கு வாடிக்கையாகிவிட்டது! வெற்றிகிட்டியதும் வியர்க்க வியர்க்க ஓடோடிச் சென்று வீரனே. தீரனே என்று புகழ்பாடி புன்னகைக்குக் காததுக் கிடப்பதும் அத்தகையோரின் வாடிக்கை !

★

விடுதலை இயக்கம் இருட்டடிப்பினால் மாய்ந்து போகாது; புகழ் பாடுவோர் கிடைக்காததால் புகைந்து போய்விடாது!

★

விடுதலை இயக்கம, பலிகேட்கும், தன்னிடம் பற்றுக்கொண்டவர்களை! பலி, பயங்கரமானதாகக் கூட இருக்கும் பலர், டலியான பிறகு கடைசி அணிவகுப்புக்கு வெற்றி கிடைக்கக்கூடும்! அந்த அணி வகுப்புத்தான், உலகிலே பளிச்செனத் தெரியும் !

★

முதல் தாக்குதலில் கொல்லப்பட்ட கொள்கை வீரர்களின் புதை குழிகளை, வெற்றிக்குப்பிறகு, நாட்டவரும், மற்றவரும் தேடிக்கண்டறிவார்கள். பிறகு அவை வழிபடும் இடங்களாகும்! திருத்தலங்களாகும்!

★

ஒரு அரசியல் கட்சி நடத்தி, அதிலே தேர்தல் பலன்கிட்டவில்லை என்றால், அந்தக்கட்சி கலகலத்துப்போகும். விடுதலை இயக்கம் அப்படி அல்ல; ஒரு அணிவகுப்பு அழிக்கப்பட்டால், புதியது தோன்றும் எழும்! அழிப்பவனின் கரம் துவண்டுவிழும் வரையில் அணி வகுப்புகள் எழுந்த வண்ணம் இருக்கும், வெற்றி கிட்டும்வரை!

★

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் துச்சாதனன் என்றால் திரௌபதிக்கு என்றைய தினம் துணி கிடைக்கும்? திரௌபதைக்கு எந்தத்துணி தேவை என்பதை தருமன் கூற உரிமைபெற்றால், ஏதோ ஒரு நாட்டுச் சேலையாவது கிடைக்கக்கூடும். அர்ச்சுனனுக்கு அந்த உரிமை இருப்பின் ஒரு அலங்காரச் சேலை வாங்கித் தருவான். துரியோதனனுக்கோ, துச்சாதனனுக்கோ அந்த உரிமை அளிக்கப்பட்டால், எந்தச்சேலை கிடைக்கும்? இருக்கிற சேலையையே உருவியவர்கள் அல்லவா, அவர்கள்!

★

இந்துமத ஆதிக்கத்துக்கு முழுக்க முழுக்கப் பயன் படுவார் மகாத்மா என்று நம்பி, அவரிடம் பயபக்தி விசுவாசம் காட்டிவந்த இந்துமத வெறியர்கள், காந்தியார் ராமும் — ரஹீமும் ஒன்றேதான் என்று கூறுமளவு பெருங்குணம் காட்டியதும், இனி இவர் நமக்காக இருக்கமாட்டார்! இவரால் நமது ஆதிக்கத்துக்கே ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும் என்று கூறி வெறிகொண்டு கோட்சே எனும் பார்ப்பனன் சுட்டுக் கொன்றுவிட்டான்!

★

அறப்போரில் ஈடுபட்டு அடக்குமுறையால் நம் குருதி கொட்டப் பட்டால், அந்தக் குருதி கலந்த மண் இருக்கிறதே, அதைவிடப் புனிதப் பொருள் வேறு இல்லை!

★

கானம் பாடிடும் வானம்பாடியிடம் என்ன பேசமுடியும்? சிறிது நேரம் 'இனிய இசை' என்று மகிழ்ந்து கேட்கலாம்!

★

கர்த்தரின் கருணை பற்றிய பாசுரமும், அதற்கான பொருள் விளக்கமும் ஒருபக்கம்; பிறிதோரிடத்தில், பெற்ற குழந்தையின் கழுத்தை நெரித்துச் சாக்கடையில் வீசிடும், கன்னித்தாய் பற்றிய குறிப்பு!

★

நேசக்கரத்தை நீட்ட வேண்டிய நேரத்தில் தானா, அமெரிக்கா, சோவியத் நாட்டின்மீது வேவு பார்க்க விமானத்தை ஏவவேண்டும்? கூடிப் பேச, ஏற்றதோர் சூழ்நிலை அமைக்கும் செயலாகுமா இது?

★

பிடிபட்ட வேங்கையைப் பற்றிய செய்தியும், பிடிபடாத கொலைகாரனைப் பற்றிய தகவலும் ஒரே இதழில்! புதிதாகக் கட்டப் பட்ட அரசமாளிகைக்குச் செலவான பணத்தின் கணக்கு ஒருபக்கம்; மற்றோர் பக்கமோ, புற்றுநோய்க்குப் பலியானவர்களின் தொகை பெருகி வருவதைக் காட்டிடும் புள்ளி விபரங்கள்! சீமாட்டி வாங்கிய வைரமாலையின் மதிப்பு பற்றி ஒருபக்கம்! பசிக்கொடுமைக்காகத் திருடிய சிறுவனுக்கு இருபது சவுக்கடி கொடுத்திடச் சொல்லி வழக்கு மன்றம் தீர்ப்பளித்ததைப் பற்றிய கருத்துக்கோவை வேறுபக்கம்!

★

விஞ்ஞானத்தின் துணையை, மற்ற எந்த நாட்டினையும்விட மிக அதிகமாகவும், வேகமாகவும், நேர்த்தியாகவும் பெற்று, உலகின் எந்தக் கோடியினையும் கண்டறிய, படமெடுக்க, வசதியினைப் பெற்று, செயற்கைக் கிரகங்களை அடுக்கடுக்காக அனுப்பிக்கொண்டிருக்கும் சோவியத் முறை, விஞ்ஞான வளர்ச்சியை மட்டுமா காட்டி வருகிறது! புதியதோர் வேவு பார்க்கும் முறை அல்லவா, அது?

★

குட்டக் குட்டக் குனிந்து கொடுப்பதா? கோழையாகிக் கிடப் பதா? தனிப்பட்ட முறையில் இழிவு என்றால்கூடப் பரவாயில்லை. நாட்டுக்கு இழிவு ஏற்படும் நடவடிக்கையில், ஒரு அன்னியநாடு ஈடு படுவது; அதைப் பார்த்தும் கைகட்டி வாய்பொத்தி நிற்பதா? அது ஈனனும் ஏற்கக்கூடாத இழுக்கல்லவா?

★

தாங்கிக்கொள்ளவேமுடியாது—சகித்துக்கொள்ளவேமுடியாது என்று தோன்றும்போது, சகித்துக்கொள்வதும், தாங்கிக்கொள்வதும், தலை இறக்கத்தை அல்ல, மனிதத்தன்மையின் மாண்பினை மலை அளவு ஆக்கிடவல்லது. மிகச் சிலராலேயே, இது முடியும்!

★

தனிப் பெருந் தலைவர்களாகிவிட்டவர்களின் சொந்த விருப்பு, வெறுப்புகள், கோபதாபங்கள் காரணமாகவே போர்கள் மூண்ட துண்டு; போரிலே, அவர்கள் அல்ல, அவர்களுக்கு வாழ்த்தொலி கூறிய மக்கள்தான் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

★

தனிப்பட்டவர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களே காரணமற்றுக் கோபத்திலே சிக்கியதால் பெரும் போர் மூண்டதுண்டு !

★

ஒரு சிறு வதந்தி, செய்தி வடிவமெடுத்தால்கூடப் போதும், மக்களை ஆத்திரம் கொண்டிடச் செய்திடும் ! அமளி மூண்டுவிடும் ! பெருந்தலைவர்களே, மிக எளிதாக ஆத்திரப்பட்டுவிடுகிறார்களே—விவரம் விளக்கம் கிடைக்கப் பெறாமல் இருக்கும், மக்களைப் பற்றிக் கூறவாவேண்டும்?

★

பிரச்னைகளை நாமாகவே, அலசிப்பார்த்துக் கருத்தினைக் கொள்ளவேண்டும்; நமக்காக வேறொருவர் தயாரித்துத் தரும் 'கருத்து' கவைக்கு உதவாது.

★

விடாதே! விடாதே! பார், பார்! அவன் கர்வத்தை! என்று தூண்டிவிடுவதும் தூபம் போடுவதும் எளிது மட்டுமல்ல; சுவை கூடத்தரும்!

★

பெருந் தலைவர்களில் தமக்குப் பிடித்தமானவரைப் பற்றி விமரிசனம் செய்வோர், புகழ்ந்து எழுத, அதனாலேயே அருவருப்பு அடைந்த மற்றவர், அந்தத் தலைவரைப் பற்றித் தாறுமாறாக ஏசி எழுதுகிறார்!

★

ஒரு அணு ஆயுத கிடங்குக்காரர்; பீரங்கி தயாரிக்கும் தொழிலதிபர்; விமானம் கட்டும் தொழில் முதல்வர்; விஷப்புகை தயாரித்து விற்போர், கலந்து பேசுவதிலே இடம் பெற்றிருப்பார்களானால், பகை கூடாது. போர் ஆகாது என்று பேசியிருப்பர்!

★

வாழப் பிறந்தோம், அதற்கேற்ப வையகத்தைமாற்றி அமைப்போம்; அவரவர் தத்தமக்குக் கிடைத்திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப் பொது நோக்கம் வெற்றிபெறப் பணியாற்ற வேண்டும்!

★

கேட்டுக்கொண்டே இருந்தா, கொடுத்துக் கொண்டே இருக்க முடியுமா?—மனம் தான் வருமா? நம்ம நாட்டுத் தொழிலை வளர்த்து

வருமானம் கிடைக்கச் செய்தால்தான் நல்லது! வெளிநாட்டிலிருந்து கண்ட கண்ட சாமான்களை வரவழைத்து, பணத்தைப் பாழாக்குகிற பழக்கமும் ஒழிக்கப்பட வேண்டும். இப்போதுகூட, என்னென்ன சாமான்கள், வெளி நாடுகளிலிருந்து வருகின்றன, தெரியுமோ?

★

நோய்களெல்லாம் நம்மநாட்டிலே, திருவிழாக் காலங்களிலே, திருவிழா நடக்கிற ஊர்களிலே தீமூன்று, கிளம்பும்!...

★

உள்றுவது, குளறுவது, உருண்டுகிடப்பது, வயிறு வெடிக்கக் குடிப்பது, கூத்தடிப்பது, இவை எல்லாம், அந்தத் திருவிழாவிலே! ஆணும் பெண்ணும், கிழவரும் குமரியும், பானத்தைப் பருகி, பாடி ஆடி பக்தியைக் காட்டுவார்கள்! ஆடை நெகிழ்ந்துவிழும்! அலங்கோலக் கூச்சல் கிளம்பும்! ஆள் மாருட்டம் ஏற்பட்டுவிடும்! ஆபாசங்கள் நடந்துவிடும்! ஒருவரும் கண்டிக்கமாட்டார்கள்! எல்லாப்பாரத்தையும் தெய்வத்தின் தலையில் தூக்கிப் போட்டுவிடுவார்கள். அந்தத் திருவிழாவைக் கோலாகலமாக நடத்தாவிட்டால் தெய்வத்தின் சாபம் வந்துவிடும்—தேசமே நாசமாகிவிடும், என்று நம்பினார்கள் கிரேக்க மக்கள்!

★

படித்தவன், பழனி சென்று மொட்டை அடித்துக் கொள்ளாமல் இருக்கிருனு? பாதபூஜை செய்யாமல் இருக்கிருனு? பால்காவடி எடுக்கிருன். பண்டரி பஜனை நடத்துகிருன்!

★

பணம் சேரச்சேர, பக்தியைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று ஒரு ஆசை—பலபேருக்கு! அதைப் போலவே, பணத்தில் பெருத்தவர்கள் பக்திமான்களாகி பூஜை செய்தார்கள் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வதிலே, கோயில் குளத்தை நம்பி வாழ்பவர்களுக்குத் தனி ஆசை!

★

சினிமாக்கார அழகிகளின் படம் போட்டு, இன்ன குமாரி, இன்ன சோப்பு தேய்த்துக்கொள்வது வாடிக்கை! கூந்தல் இவ்வளவு அழகாக இருப்பதற்குக் காரணம், இன்ன தைலம்! இதை இந்த நட்சத்திரம் தேடிப் பெறுவது வழக்கம்! என்று இப்படியெல்லாம்

விளம்பரம் பார்க்கிறோமல்லவா? அதே பெண்கள், நட்சத்திரம் ஆகாத முன்பு, என்ன சோப்பு, என்ன தைலம் உபயோகித்தார்கள் என்று யாராவது கேட்டார்களா? கேட்பார்களா? அவர்களாவது சொல்வார்களா?

★

ஏழை எளியவர்கள் நடுத்தரக் குடும்பத்தினர் எத்தனையோ பேர் வந்து போவார்கள் திருப்பதிக்கு! வெளியே பேசப்படுகிறதா? பேப்பர்களிலே போடப்படுவது உண்டா? கிடையாது! ஆனால் ஒரு சினிமா நட்சத்திரம் போய் வந்தால் என்ன பிரமாதப்படுகிறது; பார்க்கிறோமல்லவா? திருப்பதிசாமிக்கே, புதிய விளம்பரம்!

★

தேவாலயத்திலே பலகன்னிப் பெண்கள் பணிவிடை செய்வது, கிரேக்க நாட்டுப் பழக்கம்! அவர்கள் கடவுளின் கடாட்சம் பெற்றவர்கள என்பது நம்பிக்கை! மலர் பறிப்பது; மாலை தொடுப்பது; கோயிலைக் கூட்டுவது; விளக்கு ஏற்றுவது; பக்தர்களுக்குப் பணிவிடை செய்வது; இது அவர்கள் வேலை பெரிய குடும்பத்துப் பெண்களெல்லாம்கூட, கோயில்கன்னி ஆகிவிடுவதுண்டு அப்படிப் பட்ட ஒரு கோயில்கன்னி, பாப நெருப்பையே நீந்திக்கரை கண்ட பூஜாரியிடம், உபதேசம் பெற்றுக்கொள்ள நினைத்தாள். பக்குவமான பருவம்தான்—அருள் பெறுவதற்கு ஏற்ற பாத்திரம்தான்—என்று பூஜாரி முந்திரிக்காட்டன் கூறினன். காரிருளில் நட, கடவுளை நினைத்தபடி! காலம் பிறக்கும், அவன் கருணை பிறக்கும் என்று கூறினன். அவளும் அதன்படியே நடந்தாள்! பூஜாரி முந்திரிக் காட்டான் பூரித்தான், நினைவு செயலாகிவிட்டதென்று! இப்படியும் கடவுள்; பூஜாரி; பக்தைகள்!

★

நாமே ஒரு காரியத்தைச் செய்துவிட்டாலும்கூட அது தீமையானதுதான் என்று தெரிந்தால் ஒப்புக்கொள்வதுதான் பெருந்தன்மை.

★

இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்றோ பலவோ ஆட்சிமொழியாவதற்கான தகுதியற்றதாகக் கருதப்படுகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும்!

★

வழியே கிடக்கும் எருக்கஞ் செடியினையும், எலும்புத் துண்டுகளையும்; சோளக்கொல்லை பொம்மைகளையும், வயல் வளைவாழ் எலிகளையும், கத்திக் கத்திச் செத்த தவளைகளையும், காலில் உதையுண்டு சிதறிய ஓட்டாஞ்சல்லிகளையுமா, கூர்ந்து கவனிப்பார்கள்? உலகம் என்ன, அவ்வளவு விவரமறியாதவர்களின் இருப்பிடமாகவா, உளது?

★

மாலைவேளை! ஆற்றோரச்சோலை! அழகு தமிழ்ப்பாடலை இசைத்த படி நடக்கிறான், ஒரு இளைஞன்! கெண்டை விழியாளைக் கண்டு, அவள் தனக்குச் செண்டு தந்து, பின்னர் இன்பம் மொண்டு உண்டிடச் செல்லும் காதலன் இது தித்திப்பு உணர்ச்சி!

★

பரபரப்புணர்ச்சிக்காகப் பலனளிக்காத் திட்டங்களை மேற்கொள்வதும் தீதுபயக்கும்; அமைதியே ஆனந்தம் என்ற போக்குக்காகச் சொரணையற்றுக் கிடப்பதும் அழிவு தரும், தேய்வினை உண்டாக்கும்!

★

கரிப்படைகள் மட்டுமே இருந்தால்போதும் வலிவுமிக்க கோட்டைகளையும தூள் தூளாக்கலாம் என்றெண்ணிப் பிறவகைகளை அமைக்காதிருப்பவன் வெற்றியா பெறுவான்?

★

வாளுக்குவாள்! வேலுக்கு வேல்! இதுதான் போர் முறை. ஆனால், இங்கோ (எகிப்து) ஒளிப்பிழம்புகள் தாக்குகின்றன! கண் கூசுகிறது; வழி தெரியவில்லை! பாதை தவறுகிறது! ஒளிப் பிழம்பைக் காணமாட்டாமல் வீரர்கள் விழிகளை இறுக மூடிக்கொள்கிறார்கள்! குதிரைகள் மிரண்டோடுகின்றன, வழி தவறி! படையிலே குழப்பம்! கிலி! விவரமறியாததால் திகில்! படை, மலைமுகடு சென்று படுகுழியில் வீழ்கிறது! சின்னாபின்னமாகிறது! தாக்காமலேயே, தாக்கவந்த படையை வீழ்த்துகிறான் சாலமன். அறிவாயுதம் கொண்டு! பளபளப்பான கேடயம், கூர்மையான வாளேந்திய குதிரை வீரர்களை வீழ்த்தி விடுகிறது! ஒளிப்பிழம்பு கிளம்பி, பெரும் படையைப் பிளந்தெறிகிறது!

★

மாற்றார், நமது முறை, முகாம், வரிசை, திறமைகளின்வகை என்பன பற்றி, அறிந்திடவும் அறிவதால் கலாம் விளைவித்திடவும், வழி ஏற்படச் செய்து வைப்பது, நமது படை வரிசையை நாமே நம்மையும் அறியாமல், காட்டிக்கொடுத்துவிட்டுப் பிறகு கண் கசக்கி நிற்கும் கருத்தற்றோர் ஆக்கிவிடும்!

★

கேட்பவர்கள் கிடுகிடுக்க, எதிரிகள் படை நடுங்க, நமது படை எக்களிக்க, சம்மட்டி அடி கொடுப்பதுபோல மொழியும் விழியும் உறுதியையும் உணர்ச்சியையும் கொட்டிடத்தக்கபடி பேசினால் மாற்றார் மமதை மடியும்!

★

நெஞ்சம் நெக்குருக, இதயம் விம்மிட, கண்களில் நீர் துளிர்த்திட, நரம்புகள் புடைத்திட, ஓசைநயமும், சொல்லடுக்கு அழகும் துலங்கிடப் பேசி நமது கொள்கைவழி, கேட்போரை ஈர்த்திட வேண்டும்!

★

ஒருவர், முன்பு—இப்போது அதே பணியினைச் செம்மையாகவும் வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணமும் நடத்திச் செல்லப் பலர்! உள்ள திறமைகள் அவ்வளவையும் திரட்டிப் பயன்படுத்தவேண்டிய நேரமிது! ஒவ்வொருவரும் ஒவ்வோர் துறை நின்று, முன்நின்று வழி கண்டு, வல்லமையை ஈந்து, பணிபுரிந்து, பொதுநோக்கம் ஈடேறப் பாடுபடவேண்டிய வேளை இது!

★

ஆரியப்படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும் படை நடாத்தியவனின் பெருமை, சாவகம், யவனம், சிங்களமெனும் பல நாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சாநெஞ்சம், பரணிபாடித் தரணியாண்ட பைந்தமிழ் வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்ட மாட்சி, இவைதமை, முகபடாம் போர்த்த யானை மீதமர்ந்து முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், தமிழழகும், இலக்கியச் செறிவும் தெளிவும் மிளிர, இனிமை துள்ளிட ஏறுநடையில் பேசினால் தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர், கழகத்தின் மாண்பறிவர்!

★

நாடு நமது ஆகாதிருப்பதால் வந்துற்ற நலிவு, நாடாள்வோர் எதனையும் நன்முறையில் கவனியாது இருப்பதால் ஏற்படும் இன்னல், வடவரிடம் சிக்கியதால் வந்துற்ற சீர்கேடு, இவை குறித்துக் கேட்போர் மனதில் குமுறல் எழவேண்டும், எனில், உருக்கமும் உழைப்பாளியின் உள்ளமறிந்த தன்மையும், வேதனையைக் காட்டிடும் குரல் கம்மலும், எளியார்க்கே இக்கழகம் என்பதனை எடுத்துக் காட்டிடும் தோற்றமும், கொண்ட முறையில் பேசிப் பாட்டாளிகள், நமக்கேற்ற பாசறை தி. மு. க. என்று உணரச் செய்தல் வேண்டும்.

★

வந்திருக்கும் விருந்தினரிடம் எதனையும் வற்புறுத்திப் பெறும் போக்கு உண்மையிலேயே பண்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்! என்றபோதிலும், அவசியமான அரசியல் விவகாரங்களை ஒரு நாட்டு முதல்வரோடு இன்னொரு நாட்டு முதல்வர் கலந்து பேசும் வாய்ப்பு ஏற்படும்போது, அவரவரும் தம் நாட்டுக் குறைகளை எடுத்துக்கூறி, அவை தீர்க்கப்படுவதன் அவசியத்தை வற்புறுத்துவது ஒன்றும் நாகரீகமற்ற முறை ஆகாது!

★

லுமும்பாவின் உடலிலிருந்து கீழே விழுந்த ஒவ்வொரு துளி இரத்தமும் மனித குலம் வடிக்கும் கண்ணீராகும். வெட்டிச் சாய்க்கப் பட்டது லுமும்பா அல்ல; அறம் வெட்டிச் சாய்க்கப் பட்டிருக்கிறது. உலகு மாவீரனுக்கு வீர வணக்கம் செலுத்துகிறது. லுமும்பா கொல்லப்பட்டார்; கொடுஞ் செயல் புரிந்தோர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து தண்டித்தால் ஒழிய அறம் நிலைக்காது; அவனியில் நீதி தழைக்காது.

★

திராவிட வரலாறுகளிலோ, வீரமே முதலிடம் பெற்றிருக்கும்! ஆரிய இனம் போரிட்டுப் புகழ் ஈட்டியதில்லை; பிறர் புத்திகெட்டபோது தான் ஆரியரின் கொட்டம் வளரும்!

★

போதை ஏறியவன், கல் தடுக்கியோ, காற்று அடிப்பதாலோ கீழே வீழ்வான். ஆரியரும் திராவிட இனத்திடையே, கருத்திலே போதை மூண்டிடச் செய்துவிட்டுப் பிறகு கீழே உருட்டிவிட்டனர்!

★

போர்வீரர்கள் செல்வதற்குமுன், பாதை போடுவோர் காடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு முன்னே செல்வதுபோல, நம்முடைய எதிர்கால சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதாயத்தில் அடர்ந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும், அறவே ஒழித்து. நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்!

★

தமிழரிலே தடித்ததோலர் உளர்! நாற்கால் பிராணிகளிலே எருமை இருத்தலைப் போல!

★

குழந்தைப் பருவம் மனித சமுதாயத்துக்கு இருந்தபோதுதான் இடிதேவன், மின்னல மாதா, மழை மாகாளி, தீக்கடவுள் என கடவுட் கதைகள் கூட டிவிடப்பட்டன!

★

அபின்விற்று வாழுபவன், போதை கூடாது என்ற பிரசங்கம் புரிவானா?

★

மற்ற மக்களுக்குத் தெரியாதது, தங்கட்குத் தெரியுமென்றும், மற்றவர்களால சாதிக்க முடியாததைத் தாங்கள் சாதிக்க முடியும் என்றுங் கூறுபவனை ஆராய்ச்சியுடையோர் அவன் ஓர் புரட்டன் என்று ஏசி ஒதுக்குபவர்; ஆராயுந் திறனற்றோரோ, அப்படியா? என்று ஆச்சரியத்தால் வாய்பிளக்க நின்று கேட்பர்; கை கூப்புவர்!

★

வீராவேசங்கொண்ட வேங்கையானாலும், சதுப்பு நிலத்திலே—படுகுழியிலே வீழ்ந்துவிட்டால், சாகத்தானே வேண்டும்! நீள்வையம் எதிர்த்தாலும், எமக்கு நிகர் இல்லை என்று கூறிப் போரிடும் மறத் தமிழரும், ஆரியமதக் குழியிலே வீழ்ந்ததால் அறிவு, ஆற்றல், ஆண்மை, மானம் எனும் பண்புகளை இழக்கவேண்டி நேரிட்டது!

★

கஜினி, கோரி, குத்புதீன், அலாவுதீன், துக்ளக், பாபர், அக்பர், அவுரங்கசீப் ஆகியோர் காலத்திலும் திராவிடத்தை எந்த வல்லரசும் அடக்கி அழிக்கமுடியாது போயிற்று!

★

வதனமே சந்திர பிம்பமோ, மலர்ந்த சரோஜமோ, என்று நீ சிந்து பாடுகிறாயே, சற்று சபலத்தை ஒதுக்கிவிட்டு அந்த முகத்தை உற்றுநோக்கு! நல்ல இரத்தமில்லாததால் வெளுத்து, காலத்தின் கீறல்கள் நிறைந்து, காமுகரின் கரத்தினால் கசங்கிக் கிடக்கும் மோசமும் அதை மாற்ற அவள் அணிந்துள்ள பூச்சு வேஷமும் புலனாகும்!

★

சித்த வைத்தியர் செந்தூரம் கொடுத்து அலுத்து, பஸ்பத்தைக் கொடுத்துப் பயந்து, கஷாயம் காய்ச்சிக் கொடுத்தும் பலனில்லாதது கண்டு கவலைகொண்டு, கடுகு, துவரையாகி, துவரை, அவரையாகி, அவரை, சுரைபோலாகிவிட்டதே! கட்மொத்திரையால் முடியாது, கத்தியே இனித்துணை என்று கூறும் போதுதான், காமுகன் கலங்கி, நடுங்கி, கைகூப்பிக் கதறி, கத்தியா என்று கேட்டுக்கூவி, கனிவுடன் அன்று நீ சொன்னாயே நண்பா, கசடன் நான், கேட்டேனில்லையே! கண்டவர் ஏசும் நிலை பெற்றேனே! கள்ளியின் கூட்டுறவால் கெட்டேனே! என்று, புத்திகூறிய நண்பனைக் கட்டித்தழுவி அழுவான், மோக போதைக்காரன்.

★

இந்துஸ்தானம் என்ற பகுதி, குஜராத், ராஜஸ்தான், ஐக்கிய மாகாணம ஆகிய பிரதேசம் கொண்ட இடம!

★

ஆரிய ராஜ்யங்களாசக் காந்தாரம், காம்போஜம், விதேகம் முதலியன இருந்தபோதும் திராவிடம் தனியாட்சியாகவே இருந்தது.

★

சரிதமும் இலக்கியமும் சான்றோர் சொல்லும் திராவிடம் தனி நாடாக இருந்ததை மெய்ப்பிக்கின்றன. வேதகால முதற்கொண்டு, வேற்று நாட்டு மன்னர்கள் படையெடுப்புக் காலம் வரை, திராவிடம் தனி நாடாகவே இருந்தது!

★

சாணக்கிய தந்திரம் தந்து சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்ட சந்திரகுப்தன் காலத்திலும், திராவிடம் தனியாகவே இருந்தது!

★

திராவிடர் காட்டிய வீரம், அசோகருக்கு அறத்தின்மீது அளவிலாப் பற்றுப் பிறக்கும்படி செய்தது.

★

வீணை வாசிப்பதால் விற்பன்னர்களைப் பரவசப் படுத்தவும், வாள் எடுத்து வீசுவதால் வீரர்களைப் பயங்கொள்ளச் செய்யவும் ஒருங்கே ஆற்றல் பெற்றவரும், இந்திய நெப்போலியன் என்ற பட்டத்தைச் சரித்திராசிரியர்களிடமிருந்து பெற்றவரும், சூரனுமாகிய சந்திரகுப்தன், தனது வீரம் முழுவதையும் நர்மதை ஆற்றுக்கு மேலேதான் காட்ட முடிந்தது. திராவிடம் புகவில்லை!

★

மலத்தை மிதித்துவிட்டால், காலைக் கழுவினாலே போதும்; மனிதனைத் தீண்டிவிட்டால் குளிக்கவேண்டுமே, பிராமண குலோத்தமர்கள்! இதுதான் தாராளமா? பெருந்தன்மையா?

★

பாகிஸ்தான் ஏற்பட்டால்தான், இந்துஸ்தான் ரணகளமாகாதிருக்கும். இல்லையேல், இந்துஸ்தான் ரணகளமாகும்!

★

பாற்கடல் மீது பள்ளிகொண்டவா! பக்தர் துயரைத் தீர்க்க வந்தவா! பத்மநாபா! பரந்தாமா! என்று ஆரம்பித்து ஒருமூச்சு அர்ச்சித்துவிட்டால் போதாதா? முப்பத்து முக்கோடி தேவர்கள்; நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்; கின்னரர்; கிம்புருடர் கந்தர்வர்; இந்திரன்; சந்திரன்; பிரமன், வீரபத்திரன்; முருகன், விநாயகன், சிவன், விஷ்ணு மற்றுமுள்ள இந்துக் கடவுள்கள், தம் குடும்ப சகிதமாகப் புறப்பட்டு வந்துவிடுவார்களே!

★

ஆபாசத்தை ஆண்டவன் திருவிளையாடல் என்று கூறிக்கொள்ள அறிவு இடந்தரவில்லை!

★

பிச்சை கேட்பது, தமிழர்களால் இழிவாகக் கருதப்படுகிறது. ஆனால், பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஆரியர்கள் அதுதான் சிறந்தது என்று எண்ணுகிறார்கள்!

★

நாலுதலைச் சாமிகள், மூன்றுகண் சாமிகள் மூன்றுதலைச் சாமிகள், ஆயிரம்கண் சாமி, ஆறுதலைச்சாமி, ஆனைமுகச்சாமி, ஆளிவாய்ச்சாமி, பருந்தேறும்சாமி காளைஏறும் கடவுள், காக்கை மீது பறக்கும் கடவுள், தலைமீது தையலைத் தாங்கி நிற்கும் தெய்வம், ரிஷிபத்தினிகளிடம், ரசம் அனுபவிக்க நடுநிசியில் போகும் தெய்வம் என்று புராண அட்டவணைகளிலே உள்ளனவே! நாம் இந்து என்று கூறிக்கொண்டால், இவைகளை நமது தெய்வங்கள் என்று ஒப்புக் கொண்டு தொழவேண்டுமே! இந்தச் சேதியைக் கேட்டால், உலக நாகரீக மக்கள் நம்மை நீக்ரோக்களைவிடக் கேவலமானவர்கள் என்று கேலி செய்வார்களே!

★

ஆள் நடமாட ஓர் உலகம்; ஆவி உலவ மற்றோர் உலகம்; இந்திரன் இருக்க ஓர் உலகம்; நாகன் தங்க ஒருலகம்; மேலே அதல, விதல, சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதாளம் என ஏழாம்! பூலோக, புவலோக, சுவலோக, சனலோக, தபோலோக, மகாலோக, சத்தியலோகம் என, மேல் உலகம் ஏழாம்! இத்தனை உலகங்கள் உண்டு, இந்துக்களுக்கு, ஏட்டிலே!

★

நாம் யாருக்கும் மேல் அல்ல! யாரும் நமக்கு மேலோர் அல்ல! நாம் ஆள ஆட்கள் வேண்டாம்! நம்மை ஆளவும் அய்யர்மார் வேண்டாம்! நமமிடையே தரகர் கூடாது; தர்ப்பை ஆகாது; சேரியும் கூடாது; அக்கிரகாரமும் ஆகாது; யோகயாகப் புரட்டுக்கள், புரோகிதப் பித்தலாட்டம், மனுக்கொடுமை வேண்டாம்; மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்!

★

பழைய் கோட்பாட்டில் பற்றுடையவர்கள் எல்லாம், பள்ளர், பறையர் என்ற பதினெட்டு ஜாதியினர்களாக வகுத்துக்கொண்டு, ஒரு பகுதியினர்களாக விளங்கிறார்கள்.

★

ஒரு பார்ப்பனன் ஒரு பார்ப்பனரல்லாத பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால் செல்லத்தக்கதென்றும், ஒரு பார்ப்பனரல்லாதான் ஒரு பார்ப்பனப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டால், செல்லத் தகாது என்றும் கூறுவது எவ்வளவு பெரிய விநோதம்?

★

பாம்பை எடுத்து, படுக்கையில் விட்டுக்கொள்வரா? விஷத்தை எடுத்து உணவில் சேர்ப்பரா? வீதிக்குப்பையை வீட்டுக்குள்கொண்டு போய்ச் சேர்ப்பரா? மதிதுலங்கும் விஷயங்களை விட்டு, மதிகெடுக்கும் கற்பனைகளைக் கட்டி அழுவாரா? நேர்மார்க்கம் தேடுவதை விட்டு, மாள் வழி தேடிக்கொள்வரா? விடுதலைக்கு வழிபிறந்த பின்னர், அடிமை முறிச்சீட்டில் கையொப்பமிடுவரா? கண்தெரியும்போது குழியில் வீழ்வரா, தாம் திராவிடர் என்று தெரிந்த பிறகு?

★

ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளுவோர்கள், ஏர் உழுவது பாவமுள்ளதென்றும் இழிவான தொழில் என்றும் நினைக்கிறார்கள்.

★

பிராமணனால் சூத்திரப் பெண்ணிடத்தில் பிள்ளை பிறந்தால், அவனுக்குத் தந்தையின் சொத்தில் உரிமையில்லை என்பது மனுதர்ம சாஸ்திரம்! — ஆரியக் கொடுமை!

★

ஒரு பார்ப்பனரல்லாதான், ஓர் ஆரியப் பெண்ணையோ அல்லது ஒரு திராவிடப் பெண்ணையோ மணந்துகொண்டாலும் சரி, மணக்காமல் சேர்த்து வைத்துக்கொண்டாலும்சரி, அவளுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குத் தந்தை சொத்தில் உரிமையுண்டு என்பது சட்டம், இச்சட்டப்படி, பல தீர்ப்புக்கள் ஆகியிருக்கின்றன. ஆனால், பார்ப்பனன் மாத்திரம், மற்ற இனத்துப் பெண்ணிடம் பெற்ற பிள்ளைக்குச் சொத்தில் பங்கு கொடுக்கவேண்டியதில்லையாம். என்ன அநீதி? இதுவா, திராவிடர் ஆரியர் வேற்றுமையில்லை என்பதற்கு அடையாளம்?

★

ஓர் இனம், பாடுபட்டு வதைகிறது; மற்றோர் இனம் நோகாமல் வாழ்கிறது; ஏய்த்துப் பிழைக்கிறது; இது இந்தக் காலத்திலே கிடையாது என்று, இளித்தவாயர் கூறுவர்!

★

காதல் என்றால், உடல் அதாவது புலன் இன்பத்தில் தமிழர்கள் மூழ்கவில்லை. அன்று தமிழர்களிடத்தில் கொக்கோகம் கிடையாது. கேவலம், மெய் உணர்ச்சியை மட்டும் தமிழன் விரும்பவில்லை

★

அன்னமிடுவது மக்களின் கருணையைக் காட்டும் செயல் எனில், ஏன் பிராமணருக்கு மட்டும் இடுகின்றனர்? ஏழை எளியவர் எவரெனினும் அன்னமிடுவோம் என்று ஏன் நடத்தவில்லை? ஏட்டிலே எழுதிவிட்டான் ஆரியன்! பிராமணனுக்குத்தான் சமாராதனை நடத்த வேண்டும். அதுதான் பகவத் கடாட்சத்தைத் தரும் என்று, ஏமாந்த சோணகிரிகள், இன்னும் அதை நம்பி அழிகின்றனர்!

★

திராவிடநாடு திராவிடருக்கானால், பாடுபடாத பேர்வழிகளுக்குப் பருப்பும் பாயாசமும் பாடுபடும் மக்களுக்குக் கம்பும் கூழும் கிடைக்கும் நிலையா இருக்கும்? உழைத்து வாழு; ஊராரை ஏய்க்காதே என்பதன்றோ, நீதியாக இருக்கும்?

★

திராவிட மக்கள், சூத்திரநிலை, தீண்டாமை; முதலிய ஆரியப் படுகுழிகளில் வீழ்ந்து உழல்வதற்கும், விரல்விட்டு எண்ணக்கூடிய சிறு வகுப்பினராகிய ஆரியர் சுகவாழ்வு வாழ்வதற்கும் ஆதாரமாயிருக்கிற ஆரியப் பழக்க வழக்கங்களை ஏன் கட்டி அழுகிறீர்கள்?

★

வேதகால வேதியர், சிந்துக்கரையிலும், கங்கைக் கரையிலும் வாழ்ந்ததிலிருந்து தொடங்குவது மாறி, வைகை, காவிரி, பாலாறு ஆகிய ஆற்றோரங்களில் அமைந்த அரசுகளின் பழமையிலிருந்து தொடங்கப்படவேண்டும்! அதுவே உண்மையான வரலாற்றை உணர வழி என்று பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியதை மறைக்க, மறுக்க, மறக்கமுடியாததோர் உண்மையாகும்!

★

இரண்டாம் நூற்றாண்டில் (கி. பி. 144) சேர நன்னாட்டில் ஆண்ட சேரன் செங்குட்டுவன், வடநாட்டில் கனகன் விசயன் என்ற அரசரிருவர் விருந்திடை புகன்ற பொருந்தா மொழிகேட்டு, கண்ணகிக்குக் கற்சிலை எடுக்க எண்ணியதுடன், ஆரியர்க்கும் சிலைவலி காட்டக் கருதி, வடநாடு சென்று வாகைசூடி, வடஇமயத்தில் கற்கொண்டு கனக விசயர் தலை மீது ஏற்றி, கங்கை கடந்து கான் நடந்து, மலை பலகடந்து, தென்னாடு கொண்டுவந்த செய்தி, ஏன் வரலாற்றில் இடம் பெறவில்லை?

★

போர்முனையிலே வாளுடன் வாள் பேச, ஈட்டிக் குத்தைக் கேடயம் தடுக்க, தைத்திட்ட வேலினைப் பறித்து எதிரியின் உயிரினைப் பறித்து எதிரியின் உயிரினைப் போக்கி நகைத்து அஞ்சாவன்மையுடன் வெற்றி கொண்ட தமிழர், பஞ்சாங்கப் படைமுன் மண்டிகொண்டு வேதியக் கூட்டம் ஓதியவற்றை நம்பி, தர்ப்பைப்புல்லிற்குத் தலைவணங்கி நின்றனர்!

★

கலையென்னும் பெயரால், ஆரியம் வீசிய வலையில் வீழ்ந்திடும் தமிழர் நிலையும், ஓவியத்தின் அழகு, சிலையின் நேர்த்தி, காவியத்தின் அமைப்பு, இலக்கியத்தின் போக்கு, சொல்லினிமை பொருள்நயம் என்று பற்பல கூறி மயங்கிடும் மனக்குலைவும், வருத்தத்தை விளைவிப்பன.

★

இலக்கியத்துக்குக் கற்பனை துணையென்றாலும், இலக்கணத்துக்குக் கற்பனை கேடுபயப்பதன்றோ?

★

பார்ப்பனரை வெண்பாவாலும், அரசரை ஆசிரியப்பாவாலும், வணிகரைக் கலிப்பாவாலும், சூத்திரரை வஞ்சிப்பாவாலும் பாட வேண்டுமாம். இது இலக்கிய வழக்கற்றது ஆனால், இலக்கணத்தில் விதியாகப் புகுந்துள்ளது.

★

இயற்கையிலேயே முப்புறம் கடலும், ஒருபுறம் மலையும் தமிழர்கட்கு அரணாக இருந்தன. இதனால்தான், தற்காப்பு வேண்டாது, தனித்து வாழும் சிறப்பையே வேண்டினான் தமிழன், ஆதிமுதல், தனிக்குடித்தனம நடத்துவதே தமிழன் வழக்கம்!

★

அபினைக் கொடுத்து உடலைக்கெடுத்துப் பின்னர், அவ்அபின் கிடைக்காவிட்டால் எதைக் கொடுத்தேனும், அதே அபினைப் பெற்றே தீரவேண்டிய கேவலமான நிலைமைக்குக் கொண்டுவரப் பட்டவர்கள் போல, ஆரியம், பையப் பையத் தன் நஞ்சினை ஊட்டித் தமிழனைச் செயலற்றவனாக்கி விட்டது! ஆரியக்கலை, தமிழ் இனப் பண்பை அழித்தது!

★

கலியாணம் செய்தபின், மனைவியிடத்து அன்பைச் செலுத்து என்பது ஆரியர் கொள்கை. காரணம் என்ன? தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டி ஆண் பிள்ளைகளைப் பெறுவதற்காக! ஒரு பிள்ளை பெறும் கருவியாக எண்ணியே திருமணம் செய்துகொண்டனர். ஆனால், தமிழர்களைப்போல் வாழ்க்கையில் இன்பம்பெற, வாழ்க்கைக்கு ஒரு கூட்டாளியே மனைவி எனக் கருதினார்களில்லை. தமிழன், ஒரு பெண்ணிடத்து முதலில் அன்பு சென்றாலொழிய, அவளை மணக்க விரும்பினானில்லை. பெண்ணும் அது போலவே!

★

பல மொழிகளிலும் இல்லாத ஒரு கிறுக்கு — தனிச் சிறப்பு தமிழுக்குண்டு! உயர்திணை என்ற பிரிவுக்கொள்கை தமிழில்தான் உண்டு. திணையென்றால், ஒழுக்கம் ஆகும்!

★

சரித ஆதாரங்களையும், சான்றோர் மொழிகளையும் சிந்தையுட் கொண்டு சீரிய முறையில் சுயமரியாதை உணர்வுடன் சூட்சமத்தைத் தெரிந்துகொண்டு, சொந்த விருப்பு வெறுப்புகளை மாற்றிச் சோர்வின்றிப் பணிபுரிவோருக்கு நிச்சயமாக ஆரியமாயையிலிருந்து தாம் விலகவும், பிறரை விலகச் செய்யவும் வழி பிறந்தே தீரும்!

★

கற்பனையை ஊட்டி, கருத்திலே துலங்கும் அறிவினை ஓட்டி, பழங்குடி மக்களை வாட்டிப்பார்ப்பனியம் எனும் பொறியிலே தமிழரை மாட்டியதும் ஆரியம்! அந்த ஆரியம், வேதனைச் சாட்சிக்கு இழுக்கும்! மந்திரம் கூறி மக்களை மிரட்டும்! மாதேவன் கட்டளை எனக் கூறி மயக்கும்! மட்டற்ற மடமைத் தனத்திலே மக்களை அழுந்தச் செய்து களிக்கும்! விளை நிலத்துக் களைபோலே, தமிழகத்திலே தோன்றி வீறுகொண்டோரை விம்மிடச் செய்துவிட்டது!

★

வீழ்ச்சியுற்ற இனத்தினைக் காப்பாற்ற வீறுகொண்ட இளைஞர்களே தேவை! — விலா ஒடிந்த வீணரல்ல!

★

இந்து என்ற பதத்திற்கு இதுவரை ஆராய்ச்சியாளர்களும், சரித்திரம் எழுதினோரும் அகராதிக்காரர்களும் கொடுத்துள்ள பொருள் என்ன?

★

இணையில்லா வீரத்துடன் வாழ்ந்து வந்த இனத்திலுதித்த வீரர்கள், எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கலாமா? இமயத்திலே புலிபொறித்த கரிகாலன் வழிவந்த நாம், இதயத்திலே தூசு நிரப்பிய ஆரியத்தின் அடிபணிவது கேட்டால், உலகு நகையாதோ?

★

சேரன் புகழ், கனக விசயரின் சென்னியிலே சூடேற்றியதாம்! அலைகளை ஆலவட்டமாகக்கொண்டு, மரக்கலத்தை ஆட்சிபீடமாகக் கொண்டு, அஞ்சா நெஞ்சுடன் அரசோச்சிய இராசேந்திரனின் பெயரைக் கூறவும், உரிமை இலாதவரானோம்; ஊமைகளானோம்; குருடரானோம்; அடிமைகளானோம்!

★

பொன் ஒரு புறமும், மணி மற்றோர் புறமும், திகழப் பூங்காவிலே தூங்கா விளக்கென ஒளிவிடு கண்களுடன் ஓடியாடிய குமரிகள், மணி என விளங்கினராம் இங்கு! வீரரின் வேலின் ஒளியும், வேல்விழியாரின் புன்னகைப் பார்வையும் ஒன்றையொன்று எதிர்த்திடும் மாட்சியினைத் திறம்பட உரைத்திடும் நாவலர் நடமாடிய நாட்டிலே, இன்று சோறு இல்லை. சோறு இல்லை என்று அழும் வேதனை வெண்பாவே, மிகுந்திடக் காண்கிறோம். மாடமாளிகை மண்மேடாகி விட்டது! மதி கெட்டதால் நமது நிதி கெட்டது! கதி கெட்டது! சதிகாரர்விட்ட சரங்கள், நமது உயிரைத் துளைத்திடக் காண்கிறோம். என்னே நம் நிலை?

★

இந்து என்றால், சனாதன தர்மானுசாரி! இந்துஸ்தானம் என்பதற்கு பியர்ஸ் என்ஸைக்ளோபீடியா தந்துள்ள பொருள், இமயத்துக்கும் விந்திய மலைக்கும் இடையே உள்ள பிரதேசத்தில் ஒரு பகுதி என்பதாகும்! இந்து என்பது ஆரியரையும், இந்துஸ்தானம் என்பது ஆரிய வர்த்தத்தையும் குறிக்கும்.

★

துரதிர்ஷ்டமான நாட்டிலே நானாவிதமான கட்சிகள் நடமாடுகின்றன. அக்கட்சிகள் என்னும் கூடாரத்திலே கவிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்ற வெட்ட வெளியிலே கொண்டுவந்து உலவச் செய்ய, தமிழர்களுக்குப் போதிய உள்ளம் இருக்குமானால், உரம் இருக்குமானால், வீரம் இருக்குமானால், தடை சொல்லமாட்டோம்.

★

அம்பெய்யும் பொறி, கரிய விரலையுடைய குரங்கு போன்ற கடிக்கும் பொறி, கல்லெறியும் கவண், கோட்டை மீதேற முயற்சிக்கும் எதிரிமீது காய்ச்சி ஊற்றும் எண்ணெய், இரும்புக் கம்பிகளாக காய்ச்சும் உலை கல்லும் கவணும் வைக்கும் கூடை, கோட்டை மதில் மீது ஏற முயற்சிக்கும் எதிரிமீது மாட்டி வலிக்கும் தூண்டில் போன்ற கருவி, சங்கிலி, அகழியைத் தாண்டி மேலே ஏறும் எதிரியைத்தாக்கிக் கீழேதள்ள இரும்பு உலக்கை, அம்புக்கூடம், எதிரிகள்மீது தீ வீசும் பொறி, மதிலில் ஏறினவன் உடலைக் கிழிக்கும் இரும்பால் செய்த பன்றி உருவுடைய எந்திரம், மூங்கில் போன்ற உருவுடைய இரும்புக் கம்பிகள், கோட்டைக்கு ஆதரவாகப் போடப்படும் பெரிய மரக்கட்டைகள், அவைகளுக்குக் குறுக்கே போடும் உத்திரங்கள், தடி, ஈட்டி, வேல், வாள்வீசும் பொறி முதலியன கொண்டு போரிட்டனர் திராவிடர்! சிலப்பதிகாரத்தைப் படிப்போர், இந்த நெஞ்சை அள்ளும் சேதியைக் காண்பர்!

★

இப்பொழுது தமிழிலிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும் எம்மதத்தினராயினும், எக்கொள்கையினராயினும், செய்கிற தொண்டு தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பயன்படுகிறது என்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான். பாராட்டுகிறான பரிசளிக்கிறான. இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக் காட்டு!

★

இவ்வளவு நாளுமில்லாததோர் விழிப்பு; ஓர் உணர்ச்சி; தாய்மொழிப்பற்று; தன்னினப்பற்று; தமிழர்களிடையே ஏற்பட்டதற்கு தமிழன் தன்நிலை உணர வந்ததற்குக் காரணம், புரட்சிக்கவி பாரதிதாசன்.

★

ஏமாற்றி வாழ்பவன் எத்தன்; ஏமாறுபவன் ஏமாளி; தன்னுணர்வு அற்ற மக்களால் தமிழும், தமிழ் அறிஞர்களும் போற்றப்படாமல் மூலை முடுக்குகளிலே தூங்கிக் கிடந்தனர்!

★

இன்றைய புலவர்கள், உண்மையிலேயே இனிமையைச் சங்க இலக்கியத்துடன் சேர்த்து மக்களுக்கு ஊட்டியிருப்பார்களானால்

சங்ககாலப் புலவர்களைப் போற்றவேண்டும், என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால், ஒவ்வோர் இல்லத்தையும் இலக்கியப் பூங்காவாக்கும் உழவர்களாக இருந்திருக்கவேண்டும். ஆனால், அப்படியில்லை என்பதை நினைக்கும்பொழுதுதான், அவர்கள் இவ்வளவு நாட்களாக நாட்டுக்குச் செய்தது தொண்டு அல்ல, துரோகம்!

★

கம்பனுக்கும் இளங்கோவுக்கும் ஓட்டுப் போடச் சொன்னால், தேர்தலில் கம்பன்தான் வெற்றி பெறுவான்.

★

அகத்தையும் புறத்தையும் அதிலே காட்டப்பட்ட கருத்துக்களையும், அணிகளையும், உவமைகளையும் நாம் அறியாமற்போனதற்குக் காரணம், பத்திரிகைகள் ஒரு கவியைப் பற்றியே புகழ்வதும், ஒருசில கவிதைகளிலேயே, ரசம் ததும்புவதுமாகவும், விளம்பரப் படுத்துவதும், மிதிலைச் செல்வியைப் பற்றியும் கோசலைச் செல்வனைப் பற்றியும் மாதாந்திர வெளியீடுகளும் ஆண்டுமலர்களும் பிரத்தியேகப் புத்தகங்களும் வெளியிடுவதும்தான்!

★

கம்பனையும், சேக்கிழாரையும் அடிக்கடி பலப்பல நிறங்களிலே, காட்டுவதன் மூலம், வள்ளுவனையும் மக்கள் அதிகம் காணமுடியவில்லை.

★

அகநானூற்றையும், புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது. கற்றறிந்தோர் ஏற்றும் கலித்தொகையைக் கற்றவரிடம் காண்பதே அரிதாகிவிட்டது. பரிபாடலைப் பார்க்கவே முடியவில்லை. ஆகவே, சங்க இலக்கியங்கள் மங்கி, மக்களுடைய மனத்தைப் பெறாமல்போனதற்குக் காரணம், அந்தச் சங்க இலக்கியக் கர்த்தாக்களைக் காணமுடியாதபடி நமது கண்முன் திரைபோட்டுவிட்டார்கள்!

★

ஜெர்மனி நாட்டில், ஹிட்லர், தம் ஆட்சியில் கல்வித்துறையில் புகுத்திய புதுமுறைதான் பிள்ளைப் பருவத்திலேயே ஜெர்மனிய நாட்டு இளைஞர்களுக்கு ஹிட்லர் பக்தியும், இராணுவத்தினிடம் மரியாதையும், நாசிசத்திடம் நம்பிக்கையும் கொள்ளச் செய்தது!

★

கம்பனுக்குப் பிறகு எவ்வளவு கவிவாணர்கள் தோன்றினாலும், கம்பனுக்குமுன் பலர் இருந்தபோதிலும், அவர்கள் வெறும் கவிகளாயிருக்கலாம். ஆனால் கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்றுதான் சொல்கிறார்கள்! கவிதை காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவியாக இருந்தபோதிலும், அவைகளை இயற்றியவர்களை கவிச்சக்கரவர்த்தி என்று சொல்லமாட்டார்கள்!

★

இளங்கோவைப் பற்றி மக்கள் அறிய ஆரம்பித்துவிட்டால், சிலம்பு நாட்டிலே ஒலிக்க ஆரம்பித்துவிட்டால், கம்பனுக்கும் கம்பராமாயணத்துக்கும் அவ்வளவு மதிப்பு இராது! மேன்செஸ்டர், கிளாஸ்கோ, முதலிய இடங்களிலிருந்து மெல்லிய துணிகள் வருகின்றன என்றால், லாங்கிளாத்துக்கு அவ்வளவு கிராக்கி இருக்காது என்பது மட்டுமல்ல; சேலம் வேட்டிகளுக்கும் மதிப்பு இருக்காது. ஆமதாபாத் புடவைகள் அமோகமாகக் கிடைக்கின்றன என்றால், ஆரணங்குகள் பெங்களூர் புடவையை எப்படி விரும்புவர்?

★

பாரதிதாசனின் காவியத்தைப் பார்க்க, படித்து உணர, இலக்கணம் தேவையில்லை; இலக்கியங்களைப் படித்திருக்கவேண்டுவதில்லை; நிகண்டு தேவையில்லை; பேராசிரியர்கள் உதவி தேவையில்லை!

★

தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது, நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால், சுகமும சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலபபதிகாரமே போதுமென்றிருந்தால், கலிங்கத்துப பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப்பரணியே போதுமென்றிருந்தால், மனோன்மணீயம் தோன்றியிருக்கமுடியுமா? மனோன்மணீயமே போதுமென்றிருந்தால், பாரதியாரின் தேசிய கீதங்களைக் கேட்டு இருக்கமுடியுமா? பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றிருந்தால், தேசிகவிநாயகம்பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைந்தூட்டும் பாக்களைப பார்த்திருக்கமுடியாது. தேசிகவிநாயகம்பிள்ளையே போதுமென்றிருந்தால், நாமக்கல்லாரின் 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற புதுமாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? நாமக்கல்லாரே போதும் என்றிருந்தால், 'கொலைவாளினை எடடா! மிக கொடியோர் செயலறவே' எனும் பாரதிதாசனின் உணர்ச்சிமிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்கமுடியாது!

★

பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நமது இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கிறது; உணர்ச்சி, நரம்புகளிலே ஊறுகிறது; சுவைத்தால் ருசிக்கிறது, படிக்கிறோம்; பாரதிதாசன் ஆகிறோம். படிக்கிறோம், நாமும் பாடலாமா என்று நினைக்கிறோம். படிக்கிறோம்; தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்கிறோம்!

★

ஒரு காலத்திலே, தமிழகத்திலே சாலைகளையும் கண்டுகளித்து, சந்தனக் காடுகளிலே சந்தம் அமைத்துப்பண் பாடினார்கள். பிற்காலத்திலே, அதாவது இடைக்காலத்திலே, வாழ்வு இந்த லோகம், அந்த லோகமாகப் பிரிந்தது. பேரம்பலம், சிற்றம்பலம் என்பதுபோல, மாயா வாழ்வு மனித வாழ்வு என்று ஏற்பட்டது.

★

குன்றைப் பற்றிப் பாடுகின்ற நேரத்தில் அந்த லோகம், அந்த வாழ்வு என்ற எண்ணங்கள் தோன்ற, அந்தக் குன்றை முருகனுடைய தோளாகவும், அதுவும் வள்ளியிடம் கொஞ்சிய தோளாகவும் காட்சி யளித்ததே தவிர, மலைச்சாரிலே வளைந்து ஓடும் ஆறு, கரடுமுரடான பாதை, இலைகளைத் தாண்டி மலைமீதிருந்து கீழே பார்த்தால், காடு தெரியும் காட்சி, காடுகளில் சிறுத்தையும், புலியும் உலவும் மாட்சி; அங்கு வேடுவரும்வில்லியரும் ஆடுகிற வேட்டை—ஆகிய இயற்கை எழில், அந்த விநாடி தோன்றவில்லை!

★

காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாகமாட்டான். அவன் கோர்ட்டுகளில் உள்ளவர்களைப்போல ஒருகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து வைக்கும் ரிகார்டு பேர்வழி. அவன் அழகாக நெல்மணிகளைச் சேகரித்து மிராசுதாரருக்குக் கொடுக்கும் பண்ணையாள். அவன் சிறந்த கவியாகமாட்டான். சிருஷ்டிகர்த்தாவாகமாட்டான் எக்காலத்திலும் ஜீவித்திருக்கும் உயிர்க்கவியாகமாட்டான்.

★

நான் வேதாந்தத்தைப் பற்றிப் பேசினால் வேடிக்கையாயிருக்கும்; சங்கராச்சாரி பொருளாதாரத்தைப் பற்றிப் பேசின் வேடிக்கையாயிருக்கும் என்பதுபோல!

★

ஓர் தலைமகன் காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறான். தன் வேல் தைத்த யானை எப்பக்கம் ஓடிவிட்டது என்று தேடிக்கொண்டு வந்தவன் முன் ஓர் ஆரணங்கு எதிர்ப்படுகிறாள். நல்ல அழகி. பக்கத்திலே பளிங்கு நீரோடை. கட்டழகன் அந்த மங்கையை மணந்துகொள்ள இச்சைப்படுகிறான். காதலரிருவரும் கண்களாற் பேசினார்கள். வாய், அச்சப்படுவதுபோலிருந்தபோதிலும் அருகே சென்றான். வஞ்சி அஞ்சினாள்; அஞ்சாதே அஞ்சுகமே என்றான். ஆனால், சற்று நேரத்தில் ஓர் அலறல் கேட்கிறது. அது என்னவென்று கேட்கிறாள், அந்த ஏந்திழையாள். அது என வேல் வலிக்குத் தாங்க முடியாமல் பிளிறும் யானையின் குரல் என்கிறான். பாவைக்கு ஏனோ என்றால், பயம்! அச்சமாயிருக்கிறதென்றாள். அச்சமானால், அருகே வா என்றான். வந்தாள்; அணைத்துக்கொண்டான். திருமணம் முற்றிற்று. இப்படித்தான் வள்ளி திருமணம் நடந்திருக்கும்!

★

கூர் இல்லாத வாளைக் கூராக்குவோம் என்கிறார், பாரதிதாசன். படி இல்லாத குளத்திற்குப் படி கட்டு என்கிறார்; குன்று இல்லாத இடத்திலே செய்குன்றாவது செய் என்கிறார்; குள்ள உள்ளத்தைக் கொலை செய் என்கிறார்; கூனாதே! நிமிர்ந்து நட என்கிறார்; மேகத்திலிருந்த நிலவொளி வெளியே வரட்டும் என்கிறார்; அந்த லோகத்தைப் பற்றிப் பாடாதே! இந்த லோகத்தைப் பற்றிப் பாடு என்கிறார்; காலத்துக்கு அடிமையாகாதே என்கிறார்; அதனால்தான், அவரைப் புரட்சிக்கவி என்றழைக்கிறோம்; உயிர்க்கவி, உண்மைக்கவி என்று அழைக்கிறோம்!

★

அலையையும் மலையையும் மயிலையும், மடந்தையையும் பற்றிப் பாடவேண்டிய புலவர்கள் ஆறுமுகத்தைப் பற்றியும், ஆறுமுகத்தில் எந்த முகம், வள்ளிக்கு முத்தம் கொடுத்த சொந்தமுகம் என்பதைப் பற்றியும், பரமசிவத்தின் வேலாயுதத்தைப் பற்றியும், அந்த வேல் மொட்டையாயிருந்தால், மேருமலையின் எந்தப் பாகம் தீட்ட உபயோகப்படும் என்பதைப் பற்றியும் பாடினால், வேடிக்கையாயிருக்கும் என்பது மட்டுமல்ல; ஏதோ புலவர் கஞ்சாப் போதையில் கப்சா அடிக்கிறார் என்றுதானே நினைக்க நேரிடும்!

★

உனக்குக் கவிதை பாட கயிலாயம்தானா தேவை? கடவுள் தானா வேண்டும்? சுனையைப் பற்றிப் பாடு; பாறையைப் பற்றிப் பாடு; தென்றலைப் பற்றிப் பாடு; நீலவானைப் பற்றிப் பாடு; கோல விழியைப் பற்றிப் பாடு; கூர்வாளைப் பற்றிப் பாடு; வீரனின் தோளைப் பற்றிப் பாடு; வட்ட தாமரையைப் பற்றிப் பாடு; அவைகள் உனது பேனா முனையின் கட்டளைக்குக் காத்துக் கிடக்கின்றன! இதை ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட என்னும் அவரது கவிதையிலே காணலாம். அது அவரது கவிதை மட்டுமல்ல; அவரது சுய சரித்திரமுமாகும்!

★

நாம் விதவைகளைப் பார்க்கிறோம்; அவர்கள் பூவணியாத கோலத்தைப் பார்க்கிறோம்; அவர்கள் கன்னத்தில் வந்து காய்ந்து போன நீரைப் பார்க்கிறோம்; தேம்புதலைக் கேட்கிறோம்; மமதையாளர்கள், அவர்களுக்கு மணவாளர்களும் தேவையா என்று சொல்லுவதைக் கேட்கிறோம்; அதே மமதையாளர்கள் மாளவேண்டிய வயதிலே, காமரசம் பருகுவதற்காகக் கன்னிகைகளைத் தேடுவதைப் பார்க்கிறோம்; தாத்தாவுக்கு வாழ்க்கைப்பட்ட பெண், தாழ்வாரத்திலே தனியே புலம்புவதைப் பார்க்கிறோம்; பார்த்துக் கருத்துக்களை வெளியிட கவிதைகள் கட்டலாமா என்று நினைக்கிறோம்; ஆனால், முடியவில்லை! கவிஞர் பாரதிதாசன் அதைக் கவிதையால் பாடுகிறார்—சாடுகிறார்!

★

பத்து வயதிலேயே பரதேசியாகி, பரலோகத்தைப் பற்றி, காயத்தைப்பற்றி காயமே இதுபொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா என்று பாடுகிறோம்; இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு சுகம்? எல்லாம் மாயவாழ்வு; இது சதம் என்று கருதுகிறீர்கள்? என்று உண்மையிலேயே தெரிந்தோ தெரியாமலோ எண்ணுகிறவர்கள், ஏட்டிலே தீட்டுகிறவர்கள், நம்மவரில் அநேகம் பேர் இருக்கின்றனர்!

★

விழுப்புரம் ஜங்ஷனிலிருந்து கொண்டு பாண்டிக்குப் போகிறவன் வழிபார்ப்பது போலவும், திருச்சி ஜங்ஷனிலுள்ளவன் மதராசுக்குப் போவதற்கு விழிப்பதுபோலவும், மக்கள் பிறந்தவுடனேயே அண்ணாந்து மேலே பார்த்துக்கொண்டு, அப்பா! இதைவிட்டு எப்போது அந்த லோகத்துக்கு வருவேன் என்று இந்த லோகத்தை ஒரு ஜங்ஷனாக்கிவிட்டார்கள்.

★

பாரதிதாசன் முகத்திலே அமைதி தவழாது; அதற்குப் பதிலாகப் புரட்சி வாடை வீசும். அவருடைய முகத்திலே யோகத்தின் சின்னங்களைக் காணமுடியாது. தியாகத்தின் தழும்புகளைக் காணலாம்!

★

ஏ தமிழ்நாடே! ஏ தமிழ்நாடே! ஏ தாழ்ந்த தமிழ்நாடே! தேய்ந்த தமிழ்நாடே! தன்னை மறந்த தமிழ்நாடே! தன்மானமற்ற தமிழ்நாடே! நன்றிகெட்ட தமிழ்நாடே! கலையை உணராத தமிழ்நாடே! கடவுளின் லட்சணத்தை அறியாத தமிழ்நாடே! மருளை மார்க்கத்துறை என்றெண்ணிடும் தமிழ்நாடே! ஏ சோர்வுற்ற தமிழ்நாடே! வீறுகொண்டெழு! உண்மைக் கவிகளைப் போற்று! புரட்சிக் கவிகளைப் போற்று! புத்துலகச் சிற்பிகளைப் போற்று!

★

ஒரு நாட்டின் நிலை அதன் நினைப்பை உருவாக்குகிறது. உன்னத நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும்; தாழ்ந்த நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு தாழ்ந்திருக்கும். அதாவது நிலை உயர்ந்திருந்தால் நினைப்பும் உயர்ந்திருக்கும்! நிலைதாழ்ந்திருந்தால் நினைப்பும் தாழ்ந்திருக்கும்! சிலவேளைகளில் நிலைக்கேற்றபடி நினைப்பு இருப்பதில்லை.

★

பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால்தான் மக்களுக்குப் பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும்! மனத்திலுள்ள மாசு நீங்கும்! காலத்திற்குத் தக்கதுபோல் கருத்து வளரும்!

★

இங்கு நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயரவில்லை. மூன்றடுக்கு மாளிகையில், மாடியில் படிக்கட்டுக் கட்டும் தொழிலாளி நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயராதிருப்பதற்கு, அவன் விதியின்பால் கொண்ட நம்பிக்கை காரணமாயிருப்பதைப்போல, இந்த நாடு, நிலை உயர்ந்திருந்தும், நினைப்பு உயராததற்குக் காரணம் மூடநம்பிக்கை!

★

பகுத்தறிவுப் பிரச்சாரம் கடினமானதுதான்! ஆனால், வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களைவிட, வேறு யாரும் லாயக்கு இல்லை. மாணவர்களே, கிராமாந்திரத்திலுள்ள மக்களிடம் அறிவு எடுத்துச் சொல்லுகிற தூதுவர்களாக அனுப்பப்படவேண்டும்.

★

மக்கள், மாணவர்களிடம் இல்லாததை எதிர்பார்க்கிறார்கள். இல்லாததை இருவர்களும் இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் இருவர்கள் இருப்பதும் வெவ்வேறு இடம். இருவர்கள் எண்ணங்கள் இருப்பதும் வெவ்வேறு இடம்!

★

கிராமத்து மக்கள், நம்பவேண்டியதை நம்பமாட்டார்கள்; நம்பக்கூடாததை நம்புவார்கள்; தெரிந்துகொள்ள அவசியமில்லாததைத் தெரிந்துகொண்டிருப்பார்கள்; தெரிந்துகொள்ளவேண்டியதைத் தெரிந்துகொள்ளமாட்டார்கள். அவர்களை இடைவிடாத பிரசாரத்தால் திருத்தவேண்டும்.

★

நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது!

★

குருடனிடம் காட்டிய முத்துமாலையைப்போல, பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டிபோல, செவிடன் கேட்ட சங்கீதம்போல விஞ்ஞானம் மதிப்பற்றிருக்கிறது, நம் நாட்டில்!

★

மதிப்புற்றிருக்கவேண்டிய பொருள், மதிப்பற்றிருப்பது நல்லதல்ல; விஞ்ஞானம் மதிப்புப் பெற மாணவர்கள் உழைக்கவேண்டும். மாணவர்கள் மக்களிடம் சென்று அவர்கள் மனதிலே உள்ளமாசை நீக்கவேண்டும். மனதிலுள்ள மாசை நீக்கி, பகுத்தறிவைப் பரப்பி விட்டு பிறகு விஞ்ஞானத்தைப் பற்றி பிரச்சாரம் செய்யவேண்டும். அப்போதுதான் மக்கள் மனம் தெளிவடைவர்; அறிவைப் போற்றுவார்கள்; அஞ்ஞானத்தைக் கைவிடுவார்கள்; உண்மையை நம்புவார்கள்; பொய்யை நம்பமாட்டார்கள்!

★

விவாதங்கள் என்றால், நான் வெருண்டு விடுபவனல்ல! விவாதம் நிகழ்த்துவது மிக்க சந்தோஷம். விவாதம் மிக மேலான முறையினதாக இருக்கும்!

★

நாங்கள் துவக்கிய எக்காரியத்துக்கும், நாங்கள் புகுத்திய எக்கருத்துக்கும் எதிர்ப்பு ஏற்பட்டு, மக்கள் கோபித்து, பின்னர் எம்முடன் சேர்ந்து எமது பாசறைகளுக்கு வந்துற்றனர்!

★

கலையைக் குலைக்கும் செயலல்ல, எமது! கலையிலே புரட்சி உண்டாக்க விழைகிறோம்—தக்க காரணங்களோடு!

★

கலை, ஓர் இனமக்களின் மனப் பண்பு இவ்வினமக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை, இனவளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வருமென்பதே; நுண்ணறிவாளரின் துணைபு கலை உலகம் அவ்வப்போது மாறுதல் உண்டாகும். இனத்துக்கோர் கலையும், நாட்டின் இயல்பு தட்ப வெட்பம் ஆகியவற்றுக்கு ஏற்றமுறையிலும் கலை உண்டாகும், வளரும், மாறும்!

★

தமிழருக்குத் தமிழ்நெறி, தமிழ்முறை ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியன கலையாக இருத்தல்வேண்டும்.

★

தொல்காப்பியமே அதற்கு முன் இருந்த புலவர்களின் பொன்னுரைகளின் பெட்டகம் என்றால், 700 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய கம்பராமாயணம் பழம்பெரும் புலவர்களின் இலக்கியங்களின் கூட்டாகவே இருக்கும், பழைய மூலநூற்கள் இருக்கும்போது, இடையே ஆரியத்தைப் புகுத்த வந்த இராமாயணத்தை அழிப்பதனால் இலக்கியம் இறந்துபடுமா? கலை கெடுமா?

★

இராமாயணம் ஆரியக்கதை என்பதும், ஆரிய திராவிடப் போராட்ட விபரம் என்பதுமாகும்! அதனைக் கம்பர் எழுதிய முறை, தமிழர் ஆரியத்தை ஏற்றுக்கொள்ளும் தூண்டுகோலாகவும், தமிழ் இனம் ஆரிய இனத்தலைவனிடம் தோற்றுவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளச் செய்வதாகவுமிருப்பதனால், அந்நூலைப் படித்திடும் தமிழ் இனம், தன்னம்பிக்கை, தன்மானம் இழந்து கெடுகின்றது! தமிழ் இனம் புத்துயிர் பெற, இத்தகைய ஆரியக் கலையை அழிப்போம்! இது இன எழுச்சியின் விளைவு!

★

எமது நோக்கம், கலையைக் கெடுத்தலுமல்ல; இலக்கியத்தை அழித்தலுமல்ல; கலைப்புரட்சி மூலம், இன எழுச்சி — இன விடுதலை கோருவதேயாகும்!

★

ஆரியக் காதையைப் பாடுவது அடாது என்பதையும் அதற்குப் பூச்சுவேலை செய்து வைப்பது தமிழருக்குத் தீங்காகும் என்பதையும் ஒருவாறு உணர்ந்தே கம்பர் சஞ்சலமடைந்தாரோ?

★

காடேக இராமன் கிளம்பும்போது, உடன்வரப் புறப்பட்ட சீதையுடன் வாதிடுகையில், சீதை கூறும் மொழியின் தன்மையையும், இலக்குவன் கைகேயியை நிந்திக்கும் பகுதியையும் சீதையை இராவணன் எடுத்துச் சென்ற விதத்தையும் வால்மீகி கூறியுள்ளபடியே, கம்பர் எடுத்தெழுதியிருப்பின், அந்த ஆரியப் பாத்திரங்களிடம் ஆபாசக் குணங்கள் கிடந்ததைத் தமிழர்கண்டு, அவர்களைத் தெய்வங்களென்று போற்றும் கீழ் நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள். கம்பரோ, தமது கவித்திறமையால் ஆரிய இராமனைக் குற்றங்குறையற்ற சற்பாத்திரனாக்கிக் காட்டி, வழிபாட்டுக்குரிய தெய்வமாக்கிவிட்டார்.

★

இராவணன் மிக்க வல்லமைசாலி; திறமையுடையோன்; வேதம் பயின்றோன்; சிவபக்தன்; இலங்கை, சகல சுகமும் நிரம்பிய இடம் என்று வர்ணித்துவிட்டு, இவ்வளவு குணமும் திறமைசாலியுமான இராவணன், ஓர் ஆரிய மங்கையைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்து, அறம்விட்டு அழிந்தான் என்று முடிப்பது, திராவிட இனப்பெருமைக்கே ஊறு தேடுவதாகும்.

★

ஆற்றல்மிக்க ஓர் திராவிடத் தலைவன், அறிவுமிக்க ஓர் அரசன், ஆரிய மங்கையைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்தான் என்ற கதையைப் படிப்பது, திராவிடருக்கும் ஆபத்து, ஆரியருக்கும் ஆபத்து!

★

வீரம் செறிந்துளது, கம்ப இராமாயணத்திலே என்றால், தமிழ் நாட்டவருக்கு வீரத்தை உணர்த்த, ஆரிய இராமகாதையன்றி வேறு வழி இல்லையா உண்மையில்?

★

காதலுக்கும் கற்புக்கும் இராமகாதையிலிருக்கும் இன்ப நுணுக்கப் பொருள்களைவிட, மிகச் சிறப்புடைத்தான பொருள்கள் நமது அகப்பொருளில் உண்டு. எனவே, கம்பராமாயணமழியின், காதலுக்கும் கற்புக்கும் கவிதை இராதே என்று பண்டிதர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை!

★

நட்பு குறித்துக் கூறுவரேல், குகன் இராமனைக் கண்ட அன்றே நட்புக்கொண்டான் என்று கூறுகிறார், கம்பர்! நட்பின் சிறப்புச் சாற்ற இராமனும் குகனுமாவது கண்டதும் நட்புக்கொண்டனர். ஆனால், கோப்பெருஞ்சோழனெனும் அரசனும் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் காணாமலே—ஒருவரையொருவர் கேள்விப்பட்டே மாறாநட்பினராக இருந்ததை விளக்கும் சங்கக்கவி, நம்மிடமிருக்கும் மாண்பு!

★

தன் மனைவி சீதையை, இராவணன் எடுத்துச் சென்றான் என்று கேள்விப்பட்டதும், இராமன் வீரமாகச் செய்திருக்க வேண்டியது என்ன? எங்கே அந்த இராவணன் என்று முழக்கமிட்டு, இலங்கை சென்றிருக்க வேண்டும். இராவணனை எதிர்த்தொழித்திருத்தல்வேண்டும். அதுவே வீரம்!

★

மக்களின் பொது அறிவு வளர்ந்த நாடுகளில் தெளிவுகொண்ட மக்கள் உள்ள தேசங்களில், இத்தகைய கற்பனைக் கதைகள் இருப்பினும் கவியழகை மட்டும் கண்டு, கருத்துரையிலே உள்ள ஆபாசத்தை, மூடத்தனத்தை நீக்குகின்றனர்!

★

அக்காலப் போர் முறையிலே, ஆநிரை கவர்தல், மாதரை எடுத்தல், கோட்டை தாக்குதல் என்பன முறைகள்.

★

திராவிட இனத்தை அடக்கவும் பண்பை அழிக்கவும், பயன்பட்டுப் பாமரரின் மனதைப் பாழாக்குகிறது என்ற குற்றச்சாட்டுகளைக் கூறி, கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் கண்டிக்கிறோம். கொளுத்துக என்று கூறுகிறோம்!

★

கலை என்ற பெயரால் எவ்வளவு இழிவுகளையும் ஓர் இனத்துக்கு உண்டாக்குவது ஆகுமா?

★

செடி கொடிகள் முளைத்த கோபுரங்கள், இடிந்த மதில்கள் முள் முளைத்த பிரகாரங்கள், குப்பைகள் நிறைந்த மண்டபங்கள், ஆடுமாடு மேய்ந்த தளவாடங்கள், பாசிபடர்ந்த தடாகம் பெரிய கட்டை சிந்திய படிகள், இருண்டு வௌவால் புழுக்கை நிறைந்த மண்டபங்கள், தடுக்கி விழக்கூடிய நடைபாதை எண்ணெய் சிந்தியபடி அது தடவிய சுவர், மினுக் மினுக்கென தீபம் புகை நிறைந்த உள், புகைதூசி விழும் தளம், நாற்றம் வீசும் தீர்த்தத் தொட்டி, புழுக்கள் உறையும் ஆவுடையார், காப்பான் உலாவும், திருமேனி பெருச்சாளி பூனை வசிக்கும் கர்ப்பககிருகம், அழுக்கு அகலாமேனியும், பொடி முதலிய லாகிரி நுகரும் திருமுகத்தம் வாயும் கொண்ட திருமேனி தீண்டுவார் முதலிய அநேக புனிதங்களையும் காணாமல், ஆலயம் செல்லும் ஓர் அன்பன் தன் வீட்டிலிருந்து திரும்பினால், அவன் பாக்கியமே பாக்கியம்!—இதுதானே இன்றைய நிலை!

★

பிள்ளைக்கறி கேட்பதும், பெண்டை அனுப்பிவைக்கச் சொல்லுவதும், கண்ணைப் பறித்துக் கொடுக்கச் செய்வதுமான கடவுட் சோதனைகள் இங்கு மட்டுமே உள்ளன காரணம் என்ன?

★

இராவணன் வடமொழி பேசினான். ஆகவே, ஆரியன் என்றுரைப்பது பொருந்தாது! ஆங்கிலம் பேசும் தமிழ், ஆங்கிலேயராகார். இன்றும் வடமொழியறிந்த தமிழர் உளர்! அவர்கள் ஆரியராவாரா? சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே, சமஸ்கிருத பண்டிதராக உள்ளவர் ஓர் தமிழர். இராவணனும் வடமொழி தெரிந்த தமிழன், ஆரியனல்லன்.

★

இராமாயணம் வைணவருக்கு மேலான நூல், பெரிய புராணம் சிவனடியார்களின் பக்தியை விளக்கிடும் நூல், சைவம் வைணவம் எனும் இரு மார்க்கங்களையும் பின்பற்றும் தமிழ் மக்கள், முறையே புராணம், கம்ப இராமாயணமாகிய இரு நூற்களையும் தமது மார்க்க நூற்களாகக் கொள்கின்றனர்.

★

பார்ப்பனன் காலில் வீழ்ந்து தட்சணை தந்து, மானத்தையும் பொருளையும் இழக்காதே; அவன் சாதியிலே உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்பதை ஏற்காதே! மேலுலகம் என்று நம்பி பொருளைப் பார்ப்பனத் தரகனிடம் தந்து, அவனை உயர்த்தாதே!

★

அவதார மகிமைக்காகவே கம்ப இராமாயணம் எழுதப்பட்டதனுல்தான், இராமர் கோயில்கள் எழுந்தன. அயோத்தி மன்னன் மகனை, ஆண்டவனவதாரம் என்றுரைக்கும் ஆரியத்துக்கு அடிமையாயினர். இந்த அடிமைத்தனம் போக்கப்படவேண்டுமென்பதற்காகவே, ஆரிய நூற்களைத் தீயிலிடுங்கள் என்று கூறுகிறோம்!

★

கம்ப இராமாயணம் கம்பர் காலக் கருத்துக்குச் சரியாக இருப்பினும், இக்காலக் கருத்து அதற்கு நேர்மாருக இருக்கும்போது இன்று எப்படித் தமிழர் கம்ப இராமாயணத்தை ஏற்றுக்கொள்ளமுடியும்?

★

தமிழர், தங்கள் கலையை, கலப்பற்ற தமிழ்க்கலையை மறந்தனர். தமிழ் வீரரைப் போற்றுவதில்லை; தமிழ்ப் பத்தினிகளைப் போற்றுவதில்லை;

★

ஆரிய நோய் கொண்ட தமிழ் மக்களுக்கு உள்ளுக்கு மருந்து தருவதுபோல, பாரதியார் போன்றவர்களின் அறிவுரைப் பிரச்சாரம் செய்து பார்த்து, நோய் தீராததால் ஆபரேஷன் செய்வதுபோல, ஆரிய ஏடுகளைத் தீயிலிடும் தீவிர முறையைச் சுயமரியாதைக்காரர்கள் கையாள்கின்றனர்!

★

தமிழர்கள் தங்கள் கலப்பில்லாத கலை நலத்தையும், குற்றமில்லாத மொழி நலத்தையும், நிகரில்லாத இலக்கிய நலத்தையும் பெற்றிருந்தனர்.

★

ஆலயங்களிலே பலவகையான சீர்திருத்தம் வேண்டும் என்று பேசுபவர்களைகூட, அங்கு ஆதித்திராவிடர்கள் வருவதைத் தடுக்கிருர்கள்.

★

வள்ளுவர் வழங்கிய வான்புகழ் குறளும், அகத்துறை நிரம்பிய கலியும், குறுந்தொகையும் குறுநூலும், பொருட்முறை காட்டிய புறநானூறும், இளங்கோ அருளிய வளங்கெழுமிய சிலப்பதிகாரமும், பண்டைத் தமிழ்மக்கள் புதுப்பொருள் கண்டு ஆராய்ந்து உணர்த்தும் மதுகை உடையர் என்பதை விளக்குகின்றன! இவ்வளவு தனிக் கலைகள் கொண்ட தமிழர், ஏன் பிறகு கலப்புக் கலையை மேற்கொண்டனர்?

★

தமிழ்நாட்டிலே எங்கு பார்த்தாலும், சிற்பிகளின் சிந்தனையைச் சிறப்புற விளக்கிடும், எழில் மிகுந்த கோயில்கள் உள்ளன; முடியுடை மூவேந்தர்களும், பல்லவரும் கட்டிய ஆலயங்கள்—அவை ஒவ்வொன்றுக்கும் சிறப்புகள் மகிமைகள், கூறப்பட்டுள்ளன. பாடல் பெற்ற ஸ்தலங்கள் என்று புகழப்படுகின்றன. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு அற்புதம் கூறப்படுகிறது. தாயுமானுர், தயாபரர், தீராத வல்வினையைத் தீர்த்தவர், தில்லையில் திருநடனம் புரிபவர். திருவரங்கத்து அண்ணல் என்று பெயரிலேயே பொருட்செறிவும் வைத்துப் பேசப்படுகிறது. பாடல் கேட்டுக் கதவு திறக்கப்பட்ட கோயில், படிக்காசு கிடைத்த கோயில், தூது சென்ற தலம் என்று பல்வேறு, மகிமைக் கதைகள் கூறப்படுகின்றன. கூறிவிட்டு, வரக்கூடாது—நுழையக்கூடாது என்று கூறுவது நீதியா?

★

மதுரை மீனுட்சி அம்மனைக் காணமுடிகிறது. அரங்கநாதரைச் சேவிக்கமுடியாது! பழனியாண்டவரைப் பார்க்கமுடியும்! திருமலையப்பனைத் தரிசிக்கமுடியாது! நந்தனுக்கு முக்திதந்த தில்லைச் சபேசன் பெருமையை நவரசங்களுடன் எடுத்துக் கூறுவரேயன்றி அவரைக் காணமுடியாது! மக்களிடை காட்டிய பேத உணர்ச்சி இன்று கடவுள்வரை சென்றுவிட்டது! காண அனுமதிக்கும் சாமி சில, காணக்கூடாத கடவுள் சில என்னும் நிலைமை வந்துவிட்டது—ஏன்?

★

உபகாரம் செய்வது சுலபம்; உரிமையைத் தருவது கஷ்டம். உபகாரம் செய்வதிலே காட்டவேண்டிய தியாக உணர்ச்சி குறைவு! தீரமும் குறைவுதான்! ஆனல் உரிமையைத் தருவதற்குத் தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகமாகத் தேவை!

★

கெட்ட பொருளைத் தொடக்கூடாது—குப்பைகூளம் நாற்றப் பொருள், ஆகியவைகளிடம் நிச்சயமாகத் தீண்டாமை அனுஷ்டிக்கத்தான் வேண்டும். அக்கினித்திராவகம், வெடிகுண்டு, விஷம் சீறும் நாகம், கொட்டும் தேள் இன்னும் பலப்பல உண்டு. ஆபத்து தரக் கூடியவை. அவைகளைத் தீண்டாதிருக்கவேண்டும்—நியாயம் அது. ஆனால் பலகோடி மக்களை, தாய்நாட்டாரை, மூதாதையர் கால முதற் கொண்டு நம்முடன் வாழ்ந்து வருபவர்களைத் தீண்டமாட்டோம் என்று கூறுவது, தீண்டாமையை அனுஷ்டிப்பது எவ்வளவு வேதனை—எவ்வளவு அர்த்தமற்றது?

★

கள்ளக் கையொப்பக்காரன் கரம்கூப்புகிறான் — விபச்சாரி விசேஷ அபிஷேகம் செய்விக்கிறாள்—குடி கெடுப்பவன் கும்பாபிஷேகம் செய்கிறான்—கொள்ளைலாபமடித்தவன் வெள்ளிரிஷபம் செய்து வைக்கிறான். ஒழுக்கக் குறைவு உள்ளோர், அழுக்குமனம் படைத்தோர், இழுக்கான வழி செல்பவர்கள் ஆலயங்களிலே நுழைய முடியாதபடி தடை உண்டா?

★

சந்தனக்காட்டைக் கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல், அது போன்றது வாலிபம்.

★

வாலிபர்கள் உரிமைப் போர் படையின் ஈட்டிமுனைகள்; அவர் தம் உள்ளத்தில் புரட்சிப் புயலிருக்கும்; வாழ்க்கை எனும் பொய்கையிலே விசாரம் என்னும் நஞ்சு கலக்கப்படாத பருவம்!

★

வாலிபர்கள் ஆசிரியராகவேண்டும். உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்கவேண்டும்.

★

பணம்; படிப்பு இவைகளின் மூலம் ஜாதி பேதத்தின் கொடுமையை ஓரளவுக்குக் குறைக்க முடியுமேயொழிய அடியோடு அழிக்க முடிவதில்லை!

★

உற்றார் உறவினர், அண்ணன் தம்பி, பெற்றோர் பெரியவர்கள், எங்கிருந்தோ எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் எதிர்ப்பு கிளம்பும் இவைகளைக்கண்டு அஞ்சாமல் அயராமல் பணிபுரியும் பண்பு வாலிபருக்குத் தேவை!

★

அறிவுடன் தொடர்புகொண்ட ஆற்றலும், மக்களிடம் மட்டற்ற அன்பும், அவர்களை வாழச்செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், அவர்கள் அனைவரும் கெஞ்சிக்காமல், சுரண்டாமல், அடக்கி ஆளாமல், அடிமைப்படாமல் வாழக்கூடிய விதத்தில் நாட்டின் வளத்தையும் முறையையும் புதுப்பிக்க முடியும் என்ற எண்ணமும் வாலிபர்களுக்குத் தேவை!

★

சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன் வேலைக்கான மூலப்பொருள்—இனி அவனுக்குத் தேவை. சிறிய உளியும் பெரிய உள்ளமும் சுதந்திர இந்தியாவிலே, இது போலவே, வாலிபர்களுக்கு பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை— புதுவாழ்வு பெற —முழு வாழ்வு பெற!

★

அரசியலில் சமத்துவம் ஏற்பட்டுவிட்டால் மட்டும், சமூகத்திலுள்ள பேதங்கள் போய்விடுவதில்லை! அந்த பேதம் இருக்கும்வரையில் சமதர்மம் என்ற இலட்சியம் கனவில் காணும் காட்சியாகவே இருக்கமுடியும்!

★

ஜாதிமத குலபொருளாதார பேதங்கள் மக்களை முன்னேற ஒட்டாதபடி, மூச்சுத் திணறும்படி முதுகெலும்பை முறிக்கும்படி அழுத்துகின்றன!

★

ஒற்றுமை—கூட்டுறவு— ஒப்பந்தம்—கூடிவாழ்தல் — நட்பு அன்பு—என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை! முழுத்திருப்தி தருபவை அல்ல!

★

ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவையிருக்கும் மட்டும் ஜீவகாருண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும்?

★

தோழமைதான் சமத்துவத்தின் கனி. சமதர்ம மணம். இதைக் காணத்தான், ஜாதி தொலையவேண்டும் என்று பாரதியார் சொன்னார்.

★

மணிமுடி, வாள், ஜெபமாலை இவைகளின் இடத்தை இப்போது மேடைப் பேச்சு கைப்பற்றி இருக்கிறது!

★

ஆள்பவர், ஆளப்படுபவர் எனும் இருசாராருக்கும் மேடைப் பேச்சு ஒரு சமயம் வாளாக, பிறிதோர் சமயம் கேடயமாக, ஒரு சமயம் விளக்காக, வேறோர் சமயம் தீப்பந்தமாகப் பயன்படுகிறது!

★

வானத்தில் வட்டமிடும் பறவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு, பிறகு அதுபோன்று பறக்கும் சாதனம் கிடைத்தால் பயன் அதிகமாக இருக்குமே என்று மனிதன் எண்ணத்தொடங்கினான். அந்த எண்ணம் ஆகாய விமானத்தை ஆக்கித்தந்தது!

★

மேடைப்பேச்சு தென்றலா, புயலா? தீஞ்சுவையுள்ள இளநீரா? அல்லது வேம்பின் சாறுபோன்றதா? எங்ஙனம் இருத்தல் வேண்டும்? இந்த எண்ணம், ஒரு சருக்குமேடை!

★

தென்றல் என்பர் சிலர், புயல் என்பர் சிலர், தேனினும் இனிய தென்பர் சிலர், கர்ணகடூரம் என்பர் சிலர், வீணுரை என்பர் சிலர், விவேகசிந்தாமணி என்பர் சிலர். இதிலே கவனம் செலுத்தக்கூடாது மேடைப்பேச்சு ஒரு பொறுப்புள்ள பணியாகவும் பயன்தரும் கருவியாகவும் இருத்தல் வேண்டும் என்ற நோக்கமுடையோர்!

★

அச்சம், தயை தாட்சண்யத்துக்குக் கட்டுப்பட்டு கருத்தை அடகுவைக்கும் குணமும் இருத்தலாகாது; காட்டுக்குதிரை மீதேறிச் செல்லும் முரட்டு சுபாவக்காரன் கைத்தடி போன்ற போக்குதான் வீரமுழக்கம் என்றும் கருதலாகாது. இந்த இரண்டு வழுக்குப்பாதைகளுக்கும் இடையே உள்ள நல்வழி இன்னது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது!

★

பேசும் பொருள் பயன்படத்தக்கதாகவும், வீணான வீம்புக்கு வித்திடாத வகையிலும் அமைத்துக் கொள்வது நல்லது. இனித்தே ஆகவேண்டும் என்று முயன்றால், சதங்கையும் ஜாலரும் தேடித் தீரவேண்டிவரும்!

★

இனிமையுங்கூட, கொள்கையின் உறுதியிலே இருந்து பிறப்பதுதான்!—கொள்கையை விட்டுக்கொடுப்பதால் வராது!

★

பேசுபவருக்கு முறைகூறிய வள்ளுவர், கேட்பவருக்கும் முறைகூறி இருக்கிறார்!

★

நீதியை நிலைநாட்ட நேர்மையை வலியுறுத்த, நாட்டிற்கேற்ற திட்டங்களை எடுத்துரைக்க, மடமையை மாய்க்க, கொடுமைகளைக் களைய, சிறுமைகளைச் சீரழிவுகளைப் போக்க ஆர்வம் தோன்ற வேண்டும். அந்த ஆர்வம் ஏற்படுத்தும் சிந்தனையிலே பூத்திடும் நல்ல கருத்துக்களை அழகுறத் தொடுத்து அளிப்பதே மேடைப் பேச்சு!

★

நாம் அரசுரிமை இழந்திருந்தபோது மகாத்மா காந்தி பிறந்தார்! அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்!

★

காந்தியார் பிறந்தபோது உலக மன்றத்திலே நமக்கு இடம் கிடையாது. இன்று நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும்நிலை ஏற்பட்டுவிட்டது அவர் பிறந்தபோது, இங்கு தேவைபபடும் எந்தச் சாமானுக்கும் வெளி நாட்டின் தயவை நாடி ஏங்கிக் கிடந்தோம். இன்று வெளிநாடுகள் நமது சரக்குகளைப்பெற நம்முடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்குத் தமது ராஜதந்திரத்தை உபயோகிக்கும் அளவு மாறுதலைக் காண்கிறோம்!

★

வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளிமானை வேங்கையின் முன்பு துள்ளி விளையாடவிடுவதா?

★

உலக வரலாற்றிலேயே முதன்முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, புதியதோர் தத்துவத்தைக்கொண்ட திட்டத்தை,' ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப்படையாக, தூய்மையுடன் விடுதலைப் போர் நடத்தலானார், அதிலே வெற்றி கண்டார் அண்ணல் காந்தியடிகள்!

★

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு, போர்த்திறனால்! நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு, அறிவின் மேம்பாட்டினால்! மக்களை நல்லவர்களாக்கினவர்கள் உண்டு, தூய்மையினால்! மூன்று அரும்பணிகளையும் ஒருசேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு, உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

★

புத்தர் காலத்திலே நடந்தேறியதுபோல, புதிய வழியைக் கொள்வோம் என்ற உறுதி கொண்டு உழைப்பதே, நாம் உத்தமர் காந்தியாருக்கு எழுப்பக்கூடிய நிலையான ஞாபகச்சின்னம்!

★

தேன் இருந்த கரமானாலுங்கூட, தேன் சாப்பிட்டான பிறகு கழுவிவிடவேண்டுமே! இல்லையென்றால், சிற்றெறும்பு கடிக்குமே கரத்தை!

★

தமிழர்மீது ஏற்றப்பட்டுள்ள மூட்டைகள், வாழ்வை வளைத்து விட்டன! ஆரியம், புராணம், ஜாதி, வடநாட்டு முதலாளித்துவம் முதலிய பல உள. இவைகளைச் சுமந்து சுமந்து தமிழர் வாழ்வு வளைந்து கிடக்கிறது.

★

திராவிடம், ஏன் தனக்குச் சம்பந்தமும் அவசியமும் இல்லாததும், கேடுதரக்கூடியதுமான தொடர்பு கொண்டு தேயவேண்டும்?

★

இந்திய உபகண்டத்திலே பல்வேறு பகுதிகளிலே இருந்த மக்களும், கோழைகளல்ல!

★

சிற்பி, ஓவியக்காரன், தொழிலாளி, இசைவாணன், இவர்களெல்லாம் மாயாவிகளே! அந்த மாயாவி இனந்தான் பெரியார்!

★

கன்னியரின் கடைக்கண் வீச்சினால் ஆடவர் விழ்ந்ததுண்டு என்ற காவியசுசுவை மட்டுமல்ல, கன்னியரின் வாள்வீச்சின் திறத்தைக் கண்டு இங்கு களம்பல ஆச்சரியப்பட்டதுண்டு!

★

இக்ஷ்சுவாகு வமிசம்—இரவிகுலம் — ரணபத்ரகாளிவம்சம்—விரவாகுவம்சம்—பாலர்—சேஸர்—கடம்பர்—ராஷ்ட்ரகூடர் — ரஜபுத்திரர்—மராட்டியர் மொகலாயர்— சீக்கியர் என்ற பல்வேறு விருதுகள் பெற்றவர்களெல்லாம், கொக்கு சுடும் துப்பாக்கி தூக்கியவர்களின் முன்பு தாக்குட பிடிக்க முடியாது போய்விட்டது. வீரம், வீணரின் சுட்டுறவால் மங்கிப் போயிருந்த வேளை! ஆகவேதான், ஆங்கிலர் கூடாரமடித்தவர்கள், பின்னர் கொலுவீற்றிருக்கும் நிலைபெற்றனர்!

★

தேசத்தை தேவியாக உருவகப்படுத்திப் படம் வெளியிட்டார்கள், அநதச் சம்பவம், பழைய படம்கூட எங்காவது கிடைக்கக்கூடும். அதிலே பார்த்தால் தெரியும் பர்மா, தேவியின் சேலைமுந்தானையாக இருக்கும்! இன்று—முந்தானை இல்லை; பர்மா பிரிக்கப்பட்டு விட்டது; தனி அரசு ஆக்கப்பட்டது!

★

ரயில்வே லயனில் தனியாக விடப்பட்டுள்ள கம்பார்ட்மெண்டுகள், ஒவ்வொரு சமயம் ஒவ்வோர் என்ஜினுடன் தொடர்பாக்குவது போல—அங்ஙனம் தொடர்பு படுத்தப்பட்டதும் என்ஜின் சென்ற திக்குக் கம்பார்ட்மெண்டுகள் செல்கின்றனவோ, அதுபோல வடநாட்டிலே பல பகுதிகளில், வரலாறு இருக்கக் காணலாம்!

★

ஒன்றுபடமுடியாத பகுதிகளை ஒன்றுபட்டிருக்கச் செய்யும் நிர்ப்பந்தமுறை, நேசத்தை அல்ல; துவேஷத்தைத்தான் மூட்டிவிடும்! அந்த துவேஷத்தை நல்லுரை தணியச் செய்யாது. மனிதனுக்குள் உறங்கிக் கிடக்கும் மிருகம், துவேஷம் முற்றுகிறபோது வெளிக்கிளம்பும்! மனிதன் மிருக உணர்ச்சி அடிமைப்படுகிறான். அதோ நவகாளியில், பீகாரில், பாஞ்சாலத்தில், எல்லையில் பச்சை இரத்தத்தைக் கொட்டுகிறது மனித மிருகம்! பரங்கி பார்க்கிறான்! என்ன எண்ணுவான்?

★

உடல், நோய் காரணமாக வீங்கிவிட்டால், அது உடல் வளர்ச்சியாகுமா? உடலின்மீது இரத்தக்கட்டி புறப்பட்டால், புதிதாகச் சதை உருண்டை கிடைத்துவிட்டது மற்றவர்களுக்குக் கிடைக்காதது நமக்குக் கிடைத்தது. எனவே, இலாபம் என்று ஏமாளியல்லவா கருதுவான். அதுபோலவே, ஏகாதிபத்தியம் தன்னுடைய சுகவாழ்வுக்காக அமைத்துக்கொண்ட ஏகஇந்தியா—மத்திய சர்க்கார்—மாகாண அமைப்பு முறைகள்—இவைகளெல்லாம் நமக்கு இலாபமுமல்ல—பலமுமாகாது!

★

ஒன்றுபட முடியாத அளவுக்குப் பாழ்பட்டுப்போன பகுதிகள், நமது பூர்வீகச்சொத்து என்றாலும்கூட அதனை விட்டுவிட்டு, உள்ளதை ஒன்றுபட்டிருப்பதை, ஒன்றுபட்டிருக்கச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை ஊட்டும் இடத்தை, கட்டிக்காத்து, வளப்படுத்தி மக்களுக்கு வாழ்வளிக்கவேண்டும். இந்த அரசியல் யூகம், இதுபோது நமக்கு மிகமிகத் தேவை!

★

அளவில் குறைகிறதோ, அன்றிக் கேட்ட அளவே கிடைக்கிறதோ, எது நடப்பதானாலும், ஒரே இந்தியா என்பது உருக்குலைந்துவிட்டது. இந்நிலையில் நமக்கு, திராவிடத்துக்கு, வடநாட்டுத்தொடர்பு ஏன் என்று கேட்கிறோம்?

★

திராவிடத் திருநாட்டினிலே ஆரிய அரசா? அதற்குப்பார்ப்பன முரசா? என்ற கேள்வி பிறந்துவிட்டது. ஆங்கிலேயரை மிரட்டி அரசஉரிமை பெற்று அதை அக்கிரகாரத்துக்குத் தானம தந்துவிடுவதா? அழகாகுமோ? ஆண்மையாமோ?

★

சொந்த நாட்டிலேயே அடிமைகளாகிச் சோற்றுத்துருத்திகளுக்கும் பாதந்தாங்கி, வீரமிழந்து விவேகமிழந்து அவதிப்படும் திராவிட இனம், இன்று தன்னை அறிந்து எழுச்சி பெறவும், தனது நாட்டை மீட்டவும் துணிந்தது!

★

நீக்ரோ தன்னை நீக்ரோவென்று கூறிக்கொள்வதைப் பெருமையாகக் கருதுகிறான். எஸ்கிமோவும் அப்படியே! நாடே இல்லாத யூதனுக்கும், இனப்பெயர் என்றால் ஓர் எழுச்சி! காடன்றி, நாடு ஏதும்

சொந்தமன்றி, கால்நடையாக இங்கு வந்து, திராவிடரின் காலடியிற் கிடந்து இன்று தங்கள் காலடியிலே திராவிடரைக் கிடத்திக்கொண்டு, பூதேவர்களாய், புண்யசீலர்களாய், போக புருஷர்களாய், ஆண்டவனின் அர்ச்சகர்களாய் வாழும் இனம் ஆரிய இனம் என்று கூறிப் பூரிக்கிறது. முடியுடைய வேந்தரையும், படையுடைய மாந்தரையும், வளம்மிகு தரணியையும் பெற்று வாழ்ந்த நாம் நம்மைத் திராவிடர் என்று கூறிக்கொள்ளக் கூசுவது, மடமையன்றோ?

★

இனமறியாது இடர்ப்படும் இழிகுணமக்களல்ல, நாம்! பண்டைப் பெருமையும், பண்பும் செறிந்த மக்கள்! வளமும் வசீகரமும் மிளிரும் நாட்டுக்குடையோர்! ஆனால், நம்மை நாம் மறந்தோம். நாட்டை இழந்தோம். நலிந்தோம்!

★

நாலுகோடி நாடாண்ட இனம் தன்னரசு பெற உரிமையுண்டு; உரிமைப்போர், உபதேசத்தினால் மங்கிவிடாது!

★

பூகோளத்துடன் விஞ்ஞானம் சேரவில்லையானால், சூயஸ் கால்வாய் ஏது? சொகுசான வியாபார வாழ்வு மேனாட்டாருக்கு எங்ஙனம் கிடைத்திருக்கமுடியும்?

★

அயர்லாந்திலே ஒரு அல்ஸ்டர் ஏற்படுவதற்குள்ள காரணங்களைவிட ஆயிர மடங்கு அரிய பெரிய ஆதாரமுள்ள காரணங்கள் திராவிடநாடு பிரிவினைக்கு உண்டு!

★

முன்னாளிலே இருந்த ஐம்பத்தாறு அரசுகளும் ஆரியக் கூடாங்கள்! ஆகவே, அந்த நிலை பாரதமாதாவை வெட்டுவதாகத் தோன்றவில்லை. இப்போது தனி அரசுகள் அமையக்கூடாதென்று ஆர்ப்பரிக்கின்றனர். எவ்வளவு கடுமையான கூக்குரலைக் கிளப்பினாலுஞ் சரியே! இந்தப் பிரிவினைக் கிளர்ச்சி அடங்காது. வேரூன்றி விட்டது! அடிப்படையான கோட்பாடு இனி மாய்க்கமுடியாததாகி விட்டது!

★

பலப்பல ஆண்டுகளுக்கு முன்பு, எதிரி எப்படி வருவான், எடுத்துவீசு துளசியை எங்கும்! என்று கூறினாராமே, தஞ்சை மன்னனுக்கு ஒரு கனபாடி! விழியிருந்தும் வழிதெரியாத இத்தகைய் வித்தகர் இந்தியாவில்தான் உண்டு!

★

நமது கிளர்ச்சிக் குரல் உள்நாடு, வெளிநாடுகளிலும் கேட்குமாறு செய்யவேண்டும். எந்தத் திட்டம் வந்தாலும், எத்தனை அரசுகள் அமைக்கப்பட்டாலும், இயற்கைசரிதம், இனப்பண்பு, இலக்கியம், இன்றைய நிலைமை முதலிய எந்த ஆதாரத்தைக் கொண்டு அரசுகள் அமைப்பதானாலும், நர்மதை ஆற்றங்கரையிலிருந்து கன்னியாகுமரி வரையிலே, திராவிடநாடு அமைக்கவேண்டும என்பதே நமது கோரிக்கை!

★

விவேகசிந்தாமணிக்கு விளக்கஉரை ஆற்றும் காரியத்திலோ, அரசியல் தந்திரங்களுக்கு அட்டவணை தயாரிக்கும் வேலையிலோ, அஞ்சா நெஞ்சு படைத்த ஆயிரமாயிரம் தோழர்களுக்கு அக்கறை கிடையாது. பட்டம் பதவி கிட்டுமா என்று பக்குவம் பார்த்துப் பொதுவாழ்வு நடத்தும் பண்பினரல்ல! ஒரு பெரிய பண்டைப் பெருமை வாய்ந்த இனம் பாழாகிவிடுவதா? உலக வரலாற்று ஏடுகளிலே இடம்பெற்ற ஒருநாடு உதவாக்கரைகளுக்கு உலவுமிடமாவதா? அந்த நிலையை மாற்றப் போரிடாது ஆண்மையாளர் என்ற பெயரைத் தாங்குவதா? என்ற தீ உள்ளே கொழுந்துவிட்டெரியும் கோலத்துடன் கூடிய அந்த வீரர்கள் விரும்புவது, உரிமை ஆம்! திராவிடநாடு திராவிடருக்கே என்ற உரிமையைத்தான் அவர்கள் விரும்புகின்றனர்!

★

மாற்றுக் கட்சிகளால் கேலி செய்யப்பட்டு, ஆரியர்களால் அவமதிக்கப்பட்டு, வடநாட்டவரால் வாட்டப்பட்டு, மண் இழந்து, மானம் இழந்து, பொருளைப் பறிகொடுத்து, மருளைத் துணைக்கழைத்து, மார்க்கமின்றி மமதையாளரிடம் மண்டியிட்டுக் கிடக்கும் ஒரு இனம், விடுதலை பெற்றுத் தீரவேண்டும். அதற்காக நான் உழைப்பேன். உயிர் அளிப்பேன்! இடையே இன்பம் என்ற பெயரிலே எதுவரினும் மயங்கிடேன்! போரிடுவேன்! பெற்றால் வெற்றிமாலை, இல்லையேல் சாவு ஓலை!

★

நாங்கள், வழக்கமாகக்கூடி, வசீகரமாகப் பேசி, வளையாது குனியாது வாய்வீரம் காட்டிவிட்டு, வாகைசூடியதாக மனப்பால் குடித்துவிட்டுத் தோகையர் புடைசூழப் போகபூமிக்குச் செல்லும் சுக போகிகளின் கூட்டம் அல்ல; வறுமையின் இயல்பைத் தெரிந்தவர்களின் கூட்டம்!

★

பட்டம் ஏன்? பதவி ஏன்? பரங்கியும் பார்ப்பனனும் பார்த்தா, பாராண்ட தமிழனுக்குப் பட்டம சூட்டவேண்டும்? கடல் கடந்தவன், தமிழன்; இமயத்தில் புலிபொறித்தவன் தமிழன்; கடாரத்தைக் கொண்டவன் தமிழன்: ரோம் நகருக்குப் பொன்னுடை விற்றவன் தமிழன்; இலக்கியச் சுவையைக கண்டவன் தமிழன்; எந்நாடும் வியக்கும் வீரன் தமிழன்; ஏறுநடையுடையான் தமிழன்; இன்னல் கண்டும் புன்னகை புரிவான் தமிழன்; அவனுக்குப் பட்டம், சோப்பும் சீப்பும் கண்ணாடியும் விற்க வந்து, பின்னர் அரசாள ஆரம்பித்த துரைமார்கள் தருவதா? ஏன்?

★

உழைக்க வாருங்கள்! பிழைக்கும் வழி என்ன என்று என்னைக் கேட்காதீர்கள்! உங்கள் இனத்தை மீட்க வாருங்கள்! அதற்கு ஏற்ற வசதி உண்டா என்று என்னைக் கேட்காதீர்கள்! போருக்கு வாருங்கள். அது எப்படி முடியும, எப்போது முடியும் என்று என்னைக் கேட்காதீர்கள். ஓய்வை விரும்புவோர் ஒதுங்கி நிற்கலாம், சாய்வு நாற்காலியினர் சாய்ந்து கிடக்கலாம் பதவிப் பிரியர்கள் பாதையை விட்டு விலகலாம். மானத்தைப் பெற, உயிரையும் இழக்கும் மனப்போக்குடையோர் வரலாம்!

★

தமிழர் என்றால், தமிழ்மொழியினர் என்பது மட்டுமல்ல, மொழி, விழி, வழி மூன்றிலும் தமிழர்! நோக்கம், நெறி இரண்டும் தமிழருக்குத்தனி! ஆரிய நோக்கம் வேறு, மார்க்கம் வேறு, தமிழர் எனில் தனி இனம்!

★

ஜாதியால், மதத்தால் பேதப்பட்டுக் கிடக்கும் தமிழர்! கல்வியிலே பிற்போக்கடைந்துள்ள தமிழர்! கண்டவன் கை பிடித்திழுக்கும் கேவல நிலைக்கு வந்துவிட்ட தமிழன்! தரணி இழந்து, பரணி மறந்து தாசனாகி, ஏசுதலைத் தாங்கித் தவிக்கும் தமிழன்! வளமிழந்து, களம் மறந்து, வாழ்வு கசந்து தாழ்வடைந்துள்ள தமிழன்! மொழிசிதைந்து

பழிமிகுந்து, கழிகொண்டோன் காட்டும் குழியிலே குதித்திடும் குணம்கொண்ட தமிழன்! வாணிபம் இழந்து, அரசு இழந்து அணைந்த விளக்காய், கவிழ்ந்த கலமாய், தூர்ந்த அகழாய்க் கிடக்கும் தமிழன்! ஆங்கிலேயனுக்கு அடிமை, ஆரியனுக்குத் தாசன், வடநாட்டானுக்கு எடுபிடி எனும் வெட்கமூறத்தக்க நிலைபெற்ற தமிழன்! கூலியாகி வெளிநாடு செல்லும் ஏழை! காலிலே பிறந்தோம்; கர்மவினையை அனுபவிக்கிறோம் என்று கருதும் கோழை! நம்மால் ஆகாது, நாதன் விட்டவழி என்று நம்பும் நடைப்பிணம்! ஆம்! இன்றையத் தமிழன், வாள் ஏந்திய கரத்தோடில்லை, ஆரியனின் தாளேந்திக் கிடப்பவன், அவனிடம் இன்று செங்கோல் இல்லை; ஒரு ஜாதிக்கு மற்றோர் ஜாதி எந்த அளவு உயர்வு, அல்லது மட்டம் என்பதைக் கண்டறியும் அளவுகோல் வைத்துக்கொண்டிருக்கிறான்! தன் இனம், பிற இனம், தன்மொழி, பிறமொழி எனும் பாகுபாடுணர முடியாத நிலையிலே உள்ளான தமிழன்! இழிந்த நிலையிலே உள்ள இன்றையத் தமிழனின் படப்பிடிப்பு இதுதான்!

★

கல்லூரி காணாத கிழவர்! காளைப்பருவ முதல் கட்டுக்கடங்காத முரடர்! அரசியல் நோக்கத்துக்கான முறையிலே கட்சி அமைப்பு இருக்கவேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரர்! பொதுமக்கள் மனம் புண்படுமே, புண்பட்ட மக்கள் கோபத்தால் தாறுமாறாகப் பேசுவரே, ஏன் வீணாக அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்பவேண்டும் என்று யூகமாக நடந்துகொள்ள மறுப்பவர்! யார் யாரைத் தூக்கி விடுகிறாரோ, அவர்களாலேயே தாக்கப்படுபவர்! கவர்னரைக் காண வேண்டுமே, அதற்கேற்ற கோலம் வேண்டாமோ என்ற யோசனை அற்றவர்! தமிழ் ஆங்கில தினசரிகளின் ஆதரவு இல்லாதவர்! ஆரிய மதம், கடவுள் எனும் மூடுமந்திரங்களைச் சாடுவதன் மூலம் கேடுவரும் என்று எச்சரிக்கும் போக்கினரின் இசைக்குக் கட்டுப்பட மறுப்பவர்! தேர்தலா? வேண்டாம்! பதவியா? கூடாது! துரைமார் தயவா? தூ... அது இனிப்புப் பூச்சுள்ள எட்டி! சிறைச்சாலை என்ற பேச்சுக் கேட்டால், முகம் மலருகிறது! கிளர்ச்சி என்ற கருத்து இனிக்கிறது இந்தக் கிழவருக்கு! ஒரு சர் பட்டம் பெற்றாரா? ஜினிவா போனாரா, சர்க்கார் செலவில்? அமெரிக்கா போனாரா, அரசாங்கத்தின் செலவில்? எதைக் கண்டார்? எட்டுமுறை சிறைக்கோட்டம் போய்வந்தார். இவர்தான் ராமசாமிப் பெரியார்!

★

நாலைந்து சிறு வட்டில்கள், அவைகளிலே பல வர்ணக் குழம்புகள், கையிலே ஒரு பூச்சிடும்கோல், எதிரே ஒரு திரை, இவ்வளவுதான் இவைகளைக்கொண்டு, கடலை, கன்னியரை, கனிகுலுங்கும் சோலையை, காவலர் அஞ்சும் களத்தை, புன்னகையை,மெல்லிடையை கண்ணீரை, விண்ணழகை, மாலைக்கதிரோனை, மாலைமதியை,இன்னோரன்ன பிறவற்றைச் சிருஷ்டிக்கிறான் சிற்பி எனும் மாயாவி!

★

தமிழன் ஆண்டு பழக்கப்பட்டவன், இன்று ஆண்டவனுக்கு அன்பு செலுத்துவதாகக் கருதிக்கொண்டு ஆரிய அடிமையாக உழல்கிறான்!

★

ஆட்சிக்கேற்ற அருங்குணமும், நாட்டைப் பாதுகாக்கும் நல்வீரமும் தமிழனுக்கு உண்டு; இகபரம் என்று ஆரியன் மொழி கேட்டு ஏமாந்ததால் இகத்தை அவன் இகழ்ந்து வாதைப்படுகிறான்!

★

சென்னை மாகாணத்தின் அளவையே நாம் இப்போது திராவிட நாடு என்று கொள்கிறோம். இந்த அளவு 1,42,000 சதுர மைல் ஆகிறது இதனைக் கொண்டு மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், திராவிடநாடு என்று நாம் எல்லைக் கோடிடும் இடம் இங்கிலாந்தைப்போல ஏறக்குறைய இரு மடங்கு பரப்பளவுள்ளது. 14 அல்பேனியாவுக்குச் சமம். 27 அல்ஸ்டர்களுக்குச் சமம் 4 ஆஸ்டிரியாக்களைக் கொண்ட பரப்பு. 10 பெல்ஜியம், 2 செக்கோஸ்லவேகியா, 3 கிரீஸ், 4 அயர்லாந்து, 10 ஹாலந்து, 4 போர்ச்சுகல், 14 பலஸ்தீன் இவைகளுக்குச் சமம்!

★

அறிவுப்பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது இங்கு! ஆண்மையாளர்கள், அஃதிலாருக்கு அடிமையாயினர். திராவிடம் இன்று கேவலம் ஓர் கேலிச்சித்திரமாகிவிட்டது.

★

அஞ்சாநெஞ்சமும் ஆரியத்திடம் 'அடிமைப்படாத உரமும் கொண்ட உழைப்பாளிகள் தேவை! விடுதலைப் போருக்கு வீரர்கள் தேவை!

★

திராவிடநாடு ஆரியத்தின் வேட்டைக்காடு! ஆங்கிலேயருக்கு அடிமைகள் வாழும் கூடு! வடநாட்டவருக்கு, வகையில்லார் வாழும் சந்தை! இந்நிலையில் திராவிடர் எடுப்பார் கைப்பிள்ளையாகி, நாடு, இனம், மொழி யாவும் மறந்து, சிறுவாழ்விலே உள்ளனர்! களை நிரம்பிய கழனி, சேறு நிரம்பிய குளம், கரைபடிந்த துகில் என்றாகிவிட்டது!

★

ஒரு இனம், அழிக்கப்படுவது கொடுமை; அதனினும் கொடுமை, அந்த இனத்தவரையே அதனை அறிந்துகொள்ள முடியாதபடி அறியாமையில் ஆழ்த்திவைத்திருப்பது. வாழ்ந்த வணிகனிடம் கையாளாக இருந்தவன், வஞ்சகத்தினால் உயர்ந்து, உயர்ந்த நிலையிலே, வீழ்ந்த வணிகனைத் தனக்குக் குற்றேவல் புரிபவனாக்கிக்கொள்ளல் கொடுமை. காணச் சகிக்காத கொடுமை!

★

வெற்றி பெற்ற ஆங்கிலேயனால் இந்திய பூபாகத்தைக் கிறிஸ்து நாடு ஆக்கமுடியவில்லை. வெற்றிபெற வாள் எடுக்காத ஆரியத்தால், திராவிடத்தை ஆரிய சேவா பீடமாக மாற்றிவிட முடிந்தது. உலக வரலாறு முழுவதும் தேடினாலும் இதற்கு ஈடான வேறோர் கொடுமையைக் காணமுடியாது!

★

ஜாதிக்குள் ஜாதி, குலத்துக்குள் குலம், ஒன்றுக்கொன்று சச்சரவு, என்ற பேதத்தின் பெருங்கூடத்தைப் பார்க்கிறீர்கள். பேச வாயில்லையா? கேட்கத் துணிவில்லையா? எதிர்க்கத் தைரியமில்லையா? இதற்கெல்லாம் நேரம் இல்லையா? இவை உமது கடமை அல்லவா?

★

பாடுபடுபவன் பசித்திருக்கப் பாடுபடாதவன் பரிமள வாழ்வுடன் இருப்பது, முதலாளித்துவ முறை, சுரண்டல்முறை அல்லவா? சுரண்டல்முறையை ஒழிக்கவேண்டுவது அவசியமல்லவா? பாடுபடாத பார்ப்பன இனம், பாடுபடும் திராவிட இனத்தின் உழைப்பிலே வாழ்கிறதே, இதை ஏன் திருத்தவில்லை?

★

விளைபொருள்களை வெளியே அனுப்பிவிட்டு, செய்பொருளை வாங்கியே ஒருநாடு இருக்குமானால், அந்நாட்டுச் செல்வநிலை சீரழியாதா?

★

பரங்கியின் பிடியிலிருந்து விலகி பனியாவின் பிடியிலே சிக்கிக்கொள்வது, விடுதலை அல்ல! இந்திய விடுதலை என்ற இனிப்புப் பூச்சின் சுவையைக் கண்டு, மனு, மார்வாரி கம்பெனி தயாரிக்கும் மாத்திரையையும் உட்கொண்டு, வீணராய், வறிஞராய், திராவிடர் ஆகிவிடக்கூடாது.

★

அரசியலை வாழ்க்கைக்குச் சுவைதரும் விபசார மார்க்கமாக்கும் போக்கினர், அரசியலிலே யதத்தைப் புகுத்திவிடுகின்றனரே, என்று கூறி ஆயாசப்படுவதாக நடிப்பது, நகைப்புக்கு இடம் மட்டுமல்ல; பொதுமக்களை எவ்வளவு சுலபமாக ஏய்த்துவிட முடியும என்று அவர்கள் கருதுகிறார்கள் என்பது விளங்கும்போது, இச்செயல், சீரியோர்க்குச் சீற்றத்தை மூட்டாதிருக்கவும் முடியாது!

★

அரசியலின் மூலம், நாம் வேண்டுவது சில்லறைப் பதவிகளை அல்ல! சிங்கார வாழ்வையல்ல! நமது இனத்தின் விடுதலையை நாம் விரும்புகிறோம்! அதற்கே அரசியலை நாம் துணைக்கொள்கிறோம்!

★

விழி, சரியாக இருந்தாலன்றோ, வழிதெரிந்து நடக்கமுடியும்? எதிரியின் வஞ்சக வலையாகிய ஆரிய மார்க்கத்தை அறவே நீக்கா முன்னம், நமக்கு அரசியல் வாழ்வு எங்ஙனம் சிறப்பாக இருக்க முடியும்?

★

இந்து மார்க்கத்துக்கு காந்தியடிகள் செய்ய எண்ணிய திருத்தங்களை, மதவெறி கொண்டோரும், ஆதிக்கக்காரர்களும் விரும்பவில்லை.

★

உலகைத் திருத்தவேண்டுமென்று உழைத்த உத்தமர்கள் எத்தகைய தியாகக் கடலிலே வீழ்த்தப்பட்டனரோ, அதே நிலைக்கு மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாரின் வாழ்க்கையும், உத்தமர் அனைவரும் சென்ற வழியே சென்று தீரவேண்டி நேரிட்டுவிட்டது.

★

யமுனை நதிக்கரையிலே, 31—1—48 மாலை 5 மணிக்கு மூட்டப்பட்டதீ, அங்கு காந்தியாரின் சடலத்திற்கு மட்டுமல்ல; உல

கிலே இலட்சக்கணக்கான மக்களின் அடிவயிற்றிலேகூட அல்ல; இருதயத்தையே தீண்டிய தீ ஆகும்! உலக வரலாற்றிலே, இது போன்ற துக்ககரமான, துடிதுடிக்கச் செய்யும், திடுக்கிட்டுத்-திகைக்கச் செய்யும் நிகழ்ச்சி, வேறு இல்லை!

★

திலகர் காலத்திலே விடிவெள்ளி தோன்றுவதுபோல விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது, என்றபோதிலும் காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே இந்தியா என்றோர் நாடுண்டு; அங்கு விழிப்பும் எழுச்சியும் உண்டு என்று உலகம் அறிந்துகொள்ள முடிந்தது!

★

காந்தியாரின் புகழொளியை அல்ல; அவருடைய உழைத்து அலுத்த உடலைத்தான், வெறியன் சுட்டு வீழ்த்தினான். எனவே, கண்ணீரைத் துடைத்துக்கொள்வோம்; மனவேதனையைக் கட்டுக்குக் கொண்டுவருவோம்; அவரவரும் தத்தம் வாழ்நாளில், மக்கள் பணி செய்வதே, மறைந்த மாபெருந் தலைவருக்குக் காட்டும் மரியாதை—செலுத்தும் காணிக்கை!

★

உலகிலேயே படைபலமும் ராஜதந்திரபலமும் மிகுந்ததோர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காணமுடியும், ஆயுத பலமுமின்றி!—என்ற திடமனதை எந்த உத்தமர் உண்டாக்கினாரோ, அவரை, ஏகாதிபத்தியமே பணிந்துவிட்ட நேரத்தில், எவனோ வெறியன் சுட்டுவிட்டான் இந்த நாடும் உலகமும் இதனை மறப்பதற்கில்லை. நமது வாழ்நாளிலே, நாடு விடுதலைபெறக்கண்டோம் நாம் சாகுமுன் ஆங்கில நாட்டுக்கு நாமோர் அடிமை என்று இருந்த இழிவு நீக்கப்பட்டு, அதனால் நமது மக்களெல்லாம் தலைநிமிர்ந்து நின்று, பூரித்து, நமது தலைமுறை மகத்தானது என்று மார்தட்டினோம்! இன்றோ, மாபாவியினால் மகாத்மா கொல்லப்பட்ட காலத்திலே வாழ்ந்தவர்கள் நாம் என்ற துக்கம், மனதைப் பிய்த்துத் தின்னுகிறது!

★

மனிதருள் இருந்துகொண்டு, சமயம் கிடைக்கும்போதெல்லாம் வெளிவந்து வெறிச்செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

★

காந்தியாருடைய முப்பதாண்டுப் பணியிலே, ஒரு கடுமையான சொல்—ஒரு நேர்மையற்ற செயல்—ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும் ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாகக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று!

★

உண்மையிலேயே டில்லியிலே முன்னம் அமைக்கப்பட்ட பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் அவ்வளவும், சதிச்செயலால், படுகொலையால், பாவிகளின் துரோகத்தால் சரிந்து போயின! சவக்காடு—சாம்ராஜ்யங்களின் சவக்காடு—அதுமட்டுமல்ல, இப்போது உலகைத் திருத்த உழைத்த உத்தமரையே சாகவைத்த துரோகபுரியாகிவிட்டது!

★

கட்சிகளை, கட்டுகளை, ஆசாபாசங்களை, கோபத் துவேஷங்களைக் கடந்து நின்ற ஒரு உத்தமரை இழந்துவிட்டோம்!

★

விடுதலைப்போர் நடத்தப்படும் காலம், நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி—வீரச்செயல்கள், தியாக நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி! குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர்முகாமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி நாட்டு மக்கள் வீரர்களாகும் வேளை, அது! அப்போதெல்லாம் அவர்களின் ஒரே நோக்கம், ஒரே லட்சியம், தன்னாட்சி பெறுவது என்பதுதான்!

★

காந்தியார் காண விரும்பிய காட்சி, இந்தியர் ஆளுகின்ற இந்தியா என்பது மட்டுமல்ல; தீண்டாமை அடியோடு ஒழிந்து, மதத்தின் மாசும் தூசும் போக்கப்பட்டு, ஜாதிபேதம் களைந்தெறியப்பட்டு, ஏழையின் வாழ்விலே புதியதோர் கிளர்ச்சி ஏற்பட்டு, நாடு, இலட்சிய பூமியாக இருக்கவேண்டும் என்பதாகும்!

★

வெள்ளையரின் ஆதிக்கமே இந்நாட்டில் இல்லாது ஒழிந்ததற்கு உத்தமர் காந்தியாரின் ஓயா உழைப்பே காரணமாயிற்று!

★

காந்தியார் காணவிரும்பிய இந்தியாவில் கோட்சே இருக்க முடியுமா?—இருக்க இடமுண்டா? அவர் காண விரும்பிய இந்தியாவில் ஜாதிபேதக் கொடுமை இருக்குமா? அவர் காண விரும்பிய இந்தியாவில், ஏழையின் வாழ்வு இருண்டு கிடக்குமா? ஏழைக்கு வாழ்வு தரும் இந்தியாவை—எல்லோரும் ஓர்குலம் என்ற இலட்சியத்தைக் கொண்ட இந்தியாவைக் காண விரும்பினார். அந்த இலட்சிய பூமியை உருவாக்குவதையே பணியென்று கொள்வதுதான், அவருடைய காலத்திலே பிறந்தவர்களின் கடமை!

★

இந்த நாடு, காந்தி நாடு—காண்பதுதான், நமது தலைமுறைக்கு உள்ள வேலை இதைச்சாதிக்க அனைவரும் ஒன்றுபட, நமது தலைவர்களெல்லாம் கூடிப்பேசி, அனைவரின் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி, இந்த அரும்பணியை வெற்றிகரமாக முடிக்கவேண்டும்.

★

மாயாஜாலம், மகேந்திரஜாலம் தெரியும் என்று கூறிக்கொண்டவர்கள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்! ஆருடம் கணித்து இனி இன்னின்னபடி ஆகும் என்று கூறும் ஆற்றல் எமக்குண்டு என்று கூறுபவர்கள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்! யோகம் தெரியும்; ஆண்டவனைக் காட்ட எம்மால் முடியும், அகிலமெல்லாம் அடக்கிடும் வித்தை தெரியும் என்று பேசினவர்கள் இருந்தனர்—இன்றும் இருக்கின்றனர்.

★

தலைமுறை தலைமுறையாக, பழக்கமாக, யார்யாரை—அதாவது மகாராஜாக்களை—மத அதிபர்களை—யோகிகளை—சித்துவிளையாடுபவர்களை மற்றும் இது போன்றவர்களைப் பாராட்டியும் வணங்கியும் காணிக்கை செலுத்தியும் வந்தார்களோ, அவர்கள் யாரும், நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நற்குணமும் ஏற்படவேண்டுமென்பதற்காக, உத்தமர் காந்தியார் போல் உழைத்து, வெற்றி கண்டது போலக் கண்டதில்லை!

★

தேன் இனிப்பாகத்தான் இருந்து தீரும். வாதம் தேவையில்லை, அதை விளக்க! சிபார்சு தேவையில்லை. அதைப் பருக!

★

கலமின்றிக் கடலைக் கடப்பது எப்படி அற்புத சக்தி என்று கருதவேண்டுமோ, அது போலவே, அற்புதப் பிறவி என்ற நிலை இன்றி எல்லோரையும் போலவே பிறந்து, எல்லோருக்கும் மேம்பட்டவராக மகாத்மாவாக, மாநிலத்தவரால் கொண்டாடப்படுவது என்றால், அதுதான் உண்மையிலேயே உயர்வு!

★

அழகிய ரோஜாவுக்கு அற்புதமான வர்ணம் தீட்டிப் பார்க்க வேண்டாமல்லவா? நம்மைச் சொக்கவைக்கும் மயிலின் தோகைக்கு பட்டாடை போர்த்த தேவையில்லை அல்லவா? முல்லைக்கு மணமும், தேனுக்கு இனிப்பும், நாம் கூட்டத் தேவையில்லை அல்லவா?

★

பல கோடி மக்களுக்குப் பார்வை, பேச்சு, செயல், திறமை இவ்வளவையும் உண்டாக்கினார், உத்தமர் காந்தியார்!

★

அன்பு நெறியை, அனைவரும் ஒரு குலம் என்ற அறநெறியைக் கைக்கொள்வோம், வேறு வழி வேண்டாம் என்று கூறி, புது வாழ்வு துவக்கவேண்டும். அந்தப் புது வாழ்வு பிறக்கவே, காந்தியார் இரத்தம் சிந்தினார்!

★

இவ்வளவு பெரிய இந்தியத் துணைக்கண்டத்துக்கு விடுதலையை வாங்கித்தந்தவர் நாட்டு மக்களின் ஏழ்மைக் கோலத்தைக் கண்டார்—கருத்திலே அக்காட்சி கலந்தது. அவர்களில் ஒருவராகவே காந்தியார் வாழலானார்!

★

ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி, விடுதலை தருவான்; மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி, நல்லாட்சி அமைப்பார்! பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி, மக்களுக்கு நல்வழி காட்டுவார்! உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது!

★

எங்கு ஒரே கட்சி ஆதிக்கம் செலுத்துகிறதோ, அங்கு ஜனநாயகத்திற்கு உறைவிடம் சவக்குழிதான்!

★

அனைவரும் ஒன்று எனும் அன்பு மார்க்கக் கருத்தை காந்தியார் தூவிவந்தார். அதை நாம் செய்து முடிப்போம் என்பதே நமது உறுதியாக இருக்கவேண்டும்!

★

ஜாதி பேதமற்ற—பொருளாதார பேதமற்ற—அறிவுத் தெளிவு பெற்ற அன்னியனின் சுரண்டலுக்கு ஆளாகாத ஓர் இனம் அதன் உரிமையுள்ள ஆட்சியை அமைத்துக்கொண்டு, உலக மன்றத்திலே வீற்றிருக்கவேண்டும்.

★

இது என் நாடு!—இயற்கை, இதைப் பொன்னாடு ஆக்கும்!—இங்கு ஜாதி கூடாது!—மதத்தின் கொடுமை கூடாது! பொருளாதார பேதம் கூடாது! வடநாட்டுச் சுரண்டல் கூடாது! உரிமைவேண்டும்! புதுவாழ்வு வேண்டும்!

★

வெட்டும் குத்தும் இனி நம்மை விரைந்து தேடிவரும்; வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே அமைந்துள்ள ஊஞ்சலிலேயே நாம உலாவ வேண்டியவர்களாக இருப்போம்! வைகைக் கரையிலே நடந்த அமளி, நமக்கு அறிவுறுத்தும் பாடம் அதுதான்!

★

யுகம் யுகமாக இருந்து வருவதாகக் கூறப்படும் ஏற்பாடுகளை நாம், திருத்தி அமைக்க விரும்புகிறோம். மமதை மலைக்கு வேட்டு வைக்கிறோம். நம்மீது சிறுசிறு துண்டுகள் சிதறிவிழுந்து, மண்டையைப் பிளக்கின்றன என்றால், நாம் வைத்த வேட்டு மலையைப் பிளந்து வருகிறது என்று பொருள்! மலையைப் பிளக்கும் காரியத்தில் இறங்கி விட்டு, மலர் தலை மீது விழும் என்று எதிர்பார்க்கமுடியாதல்லவா?

★

நமக்கு இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால், நமது உழைப்பு ஒருநாளும் வீணாகாது!

★

கடுவிஷம் கொடுத்துக் கொல்லப்பட்டோர், காரிருட் சிறையில் ஆயுட்கால முழுதும் தள்ளப்பட்டோர், கல்லால் அடித்துத் துரத்தப் பட்டோர், சிலுவையில் அறையப்பட்டோர், சிறுத்தைக்கு இரையாக்கப்பட்டோர், கழுத்து நெறிக்கப்பட்டோர், கனலில் தள்ளப்பட்டோர்,

கண்டதுண்டமாக்கப்பட்டோர், நாட்டு மக்களாலேயே துரத்தி அடிக்கப்பட்டோர், நாதியற்றுப்போனோர், என்று இவ்விதமாகத்தான் இருக்கும், சமூகப் புரட்சிப் பணியிலே ஈடுபட்டவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள்! நாம் அந்த இனம்! அவர்களெல்லாம் இன்று அறிஞர் உலகின் அணிமணிகளாயினர். நம்மையும் பின் சந்ததி மறவாது.

★

காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிய காலம், கட்டிப்போட்டு வீட்டுக்குத் தீயிட்டகாலம், கிணற்றில் தள்ளிக் கல்லிட்ட காலம் கண்களைத் தோண்டி எடுத்த காலம், நாவைத் துண்டித்த காலம், கழுவிலேற்றிய காலம், தலையைக் கொய்த காலம், தணலில் தள்ளிய காலம்; சீர்திருத்தம் பேசியோர் இவைகளிலேதான் உழன்றனர்! பெரும்பாலானவர்கள் சாகவில்லை; கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டதாலேயே அவர்கள் இன்று சாகாதவராக உள்ளனர். எனவேதான், மரண சாசனம் தயாரித்துக்கொண்டு, மகத்தான போராட்டத்திலே இறங்கவேண்டும்!

★

கடமையைச் செய்கையில் கொல்லப்பட்டால், அது சாகாவரம் பெற்றதாகும்! நாம் வாழ்வோம். நமது உழைப்பின் பயனால் புது வாழ்வுபெறும்; நமதுபின் சந்ததியாரின் பேச்சில், பாட்டில், தொட்டிலருகே, பூந்தோட்டத்தருகே, சட்டிலருகே, பட்டிமண்டபத்திலே, நாம பேசப்படுவோம்; நமக்கென்ன, மரணம் நேரிடுகையில், மாளிகை என்னகுமோ, மனோகரிகள் என்ன ஆவரோ, தோட்டம் துரவு என்ன கதியோ, தேடு தொங்கட்டம் யாருக்குப் போகுமோ, வாணிபம் குறையுமோ, வட்டித்தொகை கெடுமோ, என்ற எண்ணம் குறையப் போகிறதோ? இல்லையே! எனவே, மரண சாசனம் தயாரித்து விடுங்கள்!

★

ஆர்வமும், ஆவேச உணர்ச்சியும் கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள், சிலர் மதுரைத் தழும்புகளுடன், பணிபுரியத் தயார் என்று முழக்கமிட்டனர். மதுரை ஒய்ந்துவிட்டது.

★

தமிழ் மக்கள் இந்தி கற்றுக்கொண்டாலும், கற்றவர்களில் நூற்றுக்கு எத்தனை பேருக்கு வடநாட்டில் உத்தியோகம் கிடைக்கும்?

★

தமிழ்நாட்டில் இந்தி கட்டாய பாடமாக இருக்கவேண்டுமென்று கருதுபவர்கள் தங்களுடைய தவறை உணரும்படி செய்வது இன்றியமையாததாகும்!

★

ஆங்கிலத்தையே பொதுமொழியாக வைத்துப் பேசிவரும் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய மூன்று தீவுகளிலுமுள்ள நாலேகாற்கோடி மக்களுள்ளும் பிளவுகளும், இல்லாமலா இருக்கிறது?

★

தாய்மொழியாகிய தமிழைப் படியாதவர்கள் நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு மேல் காணப்படும் இந்த இரங்கத்தக்க நிலைமையில் இந்தியைக் கட்டாயபாடமாக்குவோம் என்று கங்கணம் கட்டி நிற்கும் தமிழ் மக்கள் சிலரின் ஒரு செயலை நோக்குமிடத்து, அது, தாய் தந்தையில் தன்கைப் பிச்சை எடுக்கத் தனயன் குடந்தையில் கோவீகை புரிந்தது போலுமன்றோ இருக்கிறது! என்னே, இவர்களது அறிவுடைமை!

★

இந்தி மொழியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக்கினால் தமிழ்மொழி தன் சிறப்பை இழந்துவிடுமென்பதையும், தமிழ் மக்கள் தம் தாய்மொழியாகிய தமிழை மறந்துவிடுவார்கள் என்பதையும் நம் தமிழ்ச் சகோதரர்கள் நன்குணர்ந்து தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் தமிழ் மொழிக்கும ஆக்கந் தேடுவார்களாக!

★

தமிழர்கள் ஏமாந்த சோணகிரிகள் என்று அறிந்தவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்?

★

தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றென்பதை உணராது, தான்தோன்றித் தம்பிரான்களாய்த் தடுமாறித் திரியும் தமிழ் மக்கள் சிலரைப் பார்த்து வருந்துவதைவிட வேறு என்ன செய்ய இயலும்?

★

பொன்விலங்கைக் கழற்றி இரும்பு விலங்கை மாட்டிக்கொள்வதுபோல் ஒருசாராரின் அடிமைத்தனத்திலிருந்தும விடுபட்டு, இன்னொரு சாரரின் அடிமைதனத்தில் சிக்கிக்கொள்வதா?

★

காளைகள் பலர் பலப்பலர் உள்ளனர். கட்டாய இந்தியை எதிர்த்துக் கடுஞ்சிறை சென்று; கல் உடைத்தவர்கள், செக்கும் இழுத்தவர்கள், சமையலறையிலிருந்து நேரே சிறை நோக்கிச் சென்ற சிலமிகு செந்தமிழ்த் தாய்மார்கள் உள்ளனர்! சிறையிலே, தாயுடன் இருந்து, குழந்தைப் பருவத்திலேயே சிறைக்கஞ்சாராகி வளர்ந்த குழந்தைகள், சிறுவர் சிறுமியராக உள்ளனர்!

★

காவி அணிந்தோர் — கலைபயின்றிருந்தோர் — காடு, கழனி உழுதுகொண்டிருந்தோர் அனைவரும் களம் வந்தனர்—அற்பமென் போம் அந்த இந்திதன்னை; அதன் ஆதிக்கம் தன்னை வளரவிடோம்! என்று முழக்கமிட்டுக்கொண்டு!

★

தமிழர் அறப்போர் புரிய, என்றுமே தயங்கினதில்லை—சேரன் செங்குட்டுவன் காலத்திலிருந்தே தமிழா தயங்கினதில்லை, தமது மொழிக்காகப் போரிட!

★

ஆட்சியைப் பிடித்துக்கொள்ள ஆஷாடபூதி வேஷமிட்டு நின்று, நல்வாக்குக் கூறி, நான் உமக்கு ஊழியஞ் செய்யவே அனுமதி கேட்கிறேனே ஒழிய, ஊராளும் பதவியா கேட்கிறேன் என்று உள்ளம் உருகக்கும் பேச்சுப் பேசி, பதவியில் அமர்ந்துகொண்டதும், தமக்கும் பதவிக்கும், ஏதோ பரம்பரைப் பாத்தியதை இருப்பதுபோல எண்ணிக்கொண்டு, பிடி! அடி! சுடு! என்று பிதற்றிக்கொண்டு, யாா எத்தகைய நியாயமான விஷயத்தைச் சொன்னாலும், நீதிக்காக வாதாடினாலும் அவர்கள் மீது அடக்குமுறையை வீசி, அட்டகாச வாழ்வு நடாத்தியதால், அவதியுற்று, அழிந்துபல ஆளவந்தார்களின் தொகுப்பு நூல், சரிதம் ஆளவருவோருக்கு அற்புதமான வழிகாட்டி—எச்சரிக்கை—ஒரு வரலாறு!

★

அன்று, தமிழ்மொழி, கலை, ஆகியவைகளிலே, உள்ளூரப் பற்று இருந்தாலும், வெளியே காட்டிக்கொள்ளவோ, அதற்காகப் போரிடவோ முடியாத நிலையில் ஆயிரமாயிரம் தமிழர்கள் இருந்தனர்!

★

இது விடுதலைப் போர்க்காலம்; மொழிப் பிரச்னைக்காக மோதிக் கொள்ள இதுவல்ல நேரம்! இது அன்னிய ஆட்சியின் பிடியிலிருந்து நாட்டை மீட்கவேண்டிய மகத்தான போர் புரியும் காலம்; மற்ற விஷயங்களைக் கவனிக்க இதுவல்ல நேரம்! என்று கூறினர்! எனவே, அவர்கள் மொழிப்போர் நடைபெற்றபோது ஆடவரும் பெண்டிரும், குழந்தையும் கிழவரும், சிறை சென்றபோது, தாளமுத்துவும் நடராசனும் இறந்தபோது, கண்ணீர் பெருக்கெடுத்தது என்றாலும், துடைத்துக்கொண்டு துரைமார்களை எதிர்க்கும் தூயபோரில் ஈடுபட்டு, தாய்மொழிப் போரில் ஈடுபடாமலிருந்துவிட்டனர்!—அது அன்று!

★

கிடைத்த சுதந்திரத்தைக் கொண்டு, நாட்டிலே அமைதியை நிலவச் செய்து, உற்பத்தியைப் பெருக்கி, முதலாளித்துவத்தை முறியடித்து, தொழிலாளரை வாழ வழி செய்யவேண்டும் என்பது நமது குறிக்கோளாகிவிட்டது!

★

இந்தி, கட்டாய பாடமாக இருப்பதைவிட, இஷ்ட பாடமாக இருப்பதே உண்மையில் பலன்தரக்கூடிய முறை. சர்க்கார், தமிழரின் வெறுப்புக்கு ஆளாகாதிருக்க வேண்டுமானால், இம்முறையைக் கடைப்பிடிப்பதே காலச்சிறந்தது. இதனால் நாம் இந்தியை வேண்டாமென்று சொல்லுவதாக யாரும் கருதிவிடக்கூடாது. இந்தி மட்டுமல்ல, வேறு எத்தனை பாஷைகளை வேண்டுமானாலும் மக்கள் தெரிந்து கொள்ளுவது நல்லது என்பதே நமது அபிப்பிராயம்!

★

ஜஸ்டிஸ் கட்சியிலே சீமான்களும் துரைமார்களின் செல்லப் பிள்ளைகளும் இருந்துகொண்டு, தியாகரும், நாயரும் அமைத்த கொள்கையை வெறும் கேலிக்கூத்தாக்கி கட்சியை, அரசியல் கழைக் கூத்தாடிகளின் கொட்டகை ஆக்கிவைத்திருந்தனர்!

★

அரண்மனைக்காரருக்கு ஒரு தீவிரத் திட்டம் தீட்டுவதென்றால் திகில்! கிளர்ச்சி என்றால கிலி! போராட்டமென்றால் பீதி! காருண்யமிகுந்த சர்க்காருக்கு விநயமாக விஷயத்தைக் கூறிவந்த காலம் மலை ஏறிப்போய்விட்டது. அந்தக் கறையை தாளமுத்து நடராசனின் ரத்தத்தைக்கொண்டு கழுவி சுத்தப்படுத்தியாகிவிட்டது

★

ஒரு இலட்சியத்தைப் பெறுவதும் அதனை ஈடேற்ற எத்தகைய தியாகம் செய்யத் தயாராகிவிடுவது என்ற உள்ள உரம் பெறுவதென் பதும், சாமான்யமான காரியமல்ல!

★

கற்கள் விழுந்தன—கண்டனச் சொற்கள் வீழ்ந்தன—நமது உடலிலிருந்து இரத்தம் கொட்டிற்று, கண்களிலிருந்து நீரும் சொட் டிற்று—நாம் களைத்து விடவில்லை—பாதையினின்றும் விலகிவிட வில்லை—கற்கள் விழுவது குறையலாயிற்று—கற்களை வீசினோர் இப் போது, தமிழ்மொழி, தமிழரசு, தமிழ் சோஷலிச அரசு, வடநாட்டு வாணிப ஆதிக்க ஒழிப்புமுறை என்ற பலப்பல பகுதிகளில்—நாம் செல்லும் பாதையிலே உள்ள பகுதிகளில் வரக்காண்கிறோம்—வாழ்க அவர்தம் ஆர்வம்!

★

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணாயிருக்கும் அர சியல் கழைக்கூத்தாடிகளும், யார் ஆண்டாலும் நமது வாழ்வு ஆனந்த மாக இருந்தால் போதும் என்று கருதும் அரசியல் தரகர்களுமல்ல, ஒரு நாட்டின் ஜீவநாடி!

★

மயிலையும், திருவல்லிக்கேணியும் மனோரம்மியமான இடங்கள்! ஆனால் மக்கள்மன்றம் அங்கு இல்லை!

★

ஏனய்யா அரிசி கிடைக்கவில்லை? என்று கேட்டால், மழை இல்லை என்று கூறுகிறார்கள். ஏனய்யா மழை இல்லை? என்று கேட் டால், ஒழுக்கம் இல்லை, எனவே மழை இல்லை—இது அமைச்சரின் வாயிலிருந்து உதிர்ந்த முத்துக்கள். அமைச்சராக இருப்பானேன்? எங்காவது மூலைக்காளிகோயிலிலே பூசாரியாக அமரலாமே!

★

பாமரரைப் பசப்ப, பத்திரிகை பலம் இருக்கிறது என்ற கார ணத்துக்காக, இவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஆண்டுகொண் டிருப்பது, அனைவரும் நாமென்ன செய்வது என்று இருந்துவிடுவது என்ற நிலைமை வளர்ந்தால் அதற்குப் பெயர், பாசிசம்தானே?

★

பாசமும் பயமும் ஒன்று கூடினால் பிறப்பது பாசிசம்—அது பாமர மக்களைப் பாழ்படுத்தும் நஞ்சு நம்மை அந்த நஞ்சு கொல்லா முன்னம், நாம் அதை நசுக்கியாகவேண்டும்.

★

தமிழர்கள் வம்புச்சண்டையில் ஈடுபடுபவர்கள் அல்ல, ஆனால் வந்த சண்டையை விடாதவர்கள். ஆட்சியாளரின் ஆணவத்திற்கு அடிபணிவதும் அருமைத் தமிழினத்தவரின் பண்பல்ல!

★

ஆட்சியாளர்கள் தமிழின் இனிமையைக் குறைப்பதற்காகவோ, அல்லது அதன் தொன்மையை மறைப்பதற்காகவோ, அல்லது அதைப் பழிப்பதற்காகவோ, இன்று இந்தியை இந்நாட்டில் நுழைக்கவில்லை.

★

அடிக்கட்டும், அஞ்சோம்! சுட்டும், அதற்கும் அஞ்சோம்! இவற்றால் ஏற்படும் தழும்புகள் திர விடத்தனி அரசுக்கு முத்திரை யாக அமையும்!

★

தமிழர்கள் எந்த அளவுக்கு உரம் படைத்தவர்களோ, அந்த அளவுக்குப் பொறுமையும் படைத்தவர்கள்!

★

நமது போர் அறப்போராகத்தான் இருக்கும். அதை அமைச்சர் விரும்பினால் ரத்தப்போராக்கலாம். ஆக்கமாட்டார் என்று நினைக்க ஆதாரமொன்றுமில்லை, நம்மிடம்! அமைச்சர் ரத்தத்தை விரும்பினால், அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கிறோம்!

★

அடிக்கு அடி, உதைக்கு உதை கொடுப்பதுதான் திராவிடர் களின் பண்பு!

★

போராட்டத்தில் கலந்துகொள்ளப் பிரியமில்லாதவர்கள். தயவு செய்து எட்டியிருந்து அமைதியாக நடப்பதைப் பாருங்கள்!

★

மரக்கிளையிலே பிணம்; வெந்த புண்ணிலே வேல்.

★

சாலையோரத்திலே வேலையற்றதுகள். வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள். அதுதான் காலக்குறி!

★

எது முறையோ, அதன் வழி நடவுங்கள். எதிர்ப்புக்கு அஞ்சாதீர்கள். ஏளனத்தைக் கேட்டு ஏமாறாதீர்; மதத்தின்முன் மண்டியிடாதீர்; கடவுளைக் கண்டு கருத்தழியாதீர் அதுவே துணை மானமே மனிதனை மனிதன் ஆக்குகிறது என்பதை உணருங்கள். உலுத்தர் பேச்சை உதறித் தள்ளுங்கள். சமத்துவம் நாடுங்கள். சகோதரத்துவம் கோருங்கள். சாதிமதபேதத்தை சாடுங்கள். தோல்வி கண்டு துவழாதீர்கள். மாற்றார் மமதையைக் கண்டு மனம் மருளாதீர்கள். சிந்தித்து முடிவுக்கு வாருங்கள் அதன் வழி செயலாற்றுங்கள்.

★

நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். நான் என்னைத் திராவிடன் என்றழைத்துக் கொள்வதிலே பெருமை காண்பவன். நானிப்படிக் கூறுவதால் வங்காளிக்கோ, மற்றமற்ற மாநில மக்களுக்கோ விரோதி என்பதல்ல!

★

நாங்கள் ஒரே உலகத்தை—ஒரே அரசாங்கத்தை விரும்புகிறவர்கள்தான் என்றாலும், எங்கள் தேசிய எல்லைகளை மறக்க—இழக்க நாங்கள் தயாராக இல்லை

★

ஐம்பத்தாறு தேசங்களைக் கொண்டிருந்த பரதகண்டம் வெள்ளையர்கள் நிர்வாக சௌகரியத்துக்காக ஒன்றாக்கி வைத்திருந்த காரணத்தினாலேயே இது ஒரு நாடு என்று வாதடுவது பொருத்தமற்றது

★

ஒருவர் துயரிலே ஒருவர் பங்குகொள்கிறோம். ஒருவர் கண்ணீரை இன்னொருவர் துடைக்க முயலுகிறோம். கண்ணீர்த்துளிகளைக் காணிக்கை ஆக்குகிறோம்.

★

நாம், அறப்போரில் ஈடுபட்டவர்கள், அடக்குமுறைக்காளானவர்கள், சிறைசென்று மீண்டவர்கள், தடியடி வாங்கியவர்கள், கல்லடியைப் பெற்றவர்கள், சொல்லடி வாங்கியவர்கள், மீண்டும் போர்க்களம் நோக்கிப் புறப்படத் தயாராக இருப்பவர்கள், சீறும் அரசைக் கண்டு சிரிப்பவர்கள், சிறைசெல்லத் துணிந்தவர்கள்!

★

அரசியல் லாபவேட்டைக்காரர்களின் லட்சியங்கள் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். நாம் நம்முடைய நாட்டின் விடுதலைக்காகப் பணிபுரிவோம்!

★

ஆகஸ்ட் பதினைந்து துக்கநாள் அல்ல. சுதந்திரத் திருநாளைத் துக்கநாளாக நாம் கருதக்கூடாது. பெரியாரின் கருத்துக்கெதிராக நான் இடப்படிக் கூறுவதற்காக என்னைக் கட்சியைவிட்டு விலக்கினாலும் சரி, நான் வேறு கட்சிகளில் சேரமாட்டேன். இலக்கியப் பணி புரிந்துகொண்டே இருப்பேன்.

★

நமது தாய்மொழியாம் தமிழ், உலகின் உயர்தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய்மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் அது உலகப் பொதுமொழி ஆகியிருக்கும்.

★

திராவிட சமுதாயம், ஜாதிகளைக் கடந்து மதப்பிடிப்புக்களை விட்டொழித்து, பொருளாதாரத் துறையில் சமதர்மமும், அரசியல் துறையில் எந்த நாட்டிற்கும் அடிமைப்படாத தன்னியல்பும் பெற்று விளங்கவேண்டும் என்பதே நமது குறிக்கோள்.

★

தலைவருக்கும் பெரும்பான்மைத் தொண்டர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு அற்றுப்போகும் நிலை நீடிக்குமானால், நாட்டிலே மீண்டும் பழமையும் பாசிசமும் கொக்கரித்துக்கொண்டு கிளம்பும் என்பதை மறுக்க முடியாது.

★

பாசிசத்தின் கோர உருவமும், பழமையின் பயங்கரமும் நம்மை இன்னும் திறம்படப் பணிபுரியவே தூண்டுகிறது.

★

கனி கொய்ய மரம் ஏறும்போது, கருநாகம் காலைச் சுற்றிக் கொள்வதைப் போல, பெரியாரிடமிருந்து நாம கழகத்தை மீட்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கும் சமயமாகப் பார்த்து பாசிசமும் பழமையும் நம் காலைக் கௌவிக் கொள்ளக் கூடும்.

★

நாங்கள் எல்லாம் ஒரு அதிசயமான அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்பதை நாடறியும — நீங்களும் அறிவீர்கள்.

★

புகழ்மிக்கதோர் பாரம்பரியத்துக்கு சொந்தக்காரன் என்ற பெருமையோடு இந்த பூபாகத்தின் தென்கோடியில் இருந்து வந்திருக்கிறேன். ஒருமைப்பாடு பற்றி ஓயாது பேசுகிறீர்கள். நீங்கள் உண்டாக்க விரும்பும் ஒருமைப்பாடு உணர்ச்சிப் பூர்வமானதாக இருக்க வேண்டுமேதவிர, சட்டம் மூலம் மிரட்டி வரவழைக்கப் பட்டதாக இருக்கக் கூடாது.

★

குடி மக்கள் எரியக் கொள்ளை லாபம் அடிக்கும் கள்ள விலைக் காரர்களைப் பிடித்து வந்து குற்றவாளிக் கூண்டிலேற்றாமல், விலை உயர்வைக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். என்ன நியாயம்? குற்றவாளி யார்?

★

ஜனநாயகம் பலவீனமானதல்ல — பலமிக்கது. ஆழமற்ற குட்டையல்ல அது—அமைதியான — பொங்கியெழுந்தால் பிரமிக்கத் தக்க பேராற்றல் உடையது.

★

மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல! மாண்புகளை மாய்க்கும நச்சுப் பூச்சிகளை மாய்க்கும் முறை! தமிழர்கள் மறுமலர்ச்சியே, தமிழகத்தில் இந்தி கட்டாய பாடமா என்ற கிளர்ச்சி நடத்தச் சொல்லிற்று.

★

கானம் பாடும் வானம்பாடியைப் போலத் திரிந்தவர்கள் நாங்கள். எங்களைப் பிடித்து கூண்டுக்குள் அடைப்பதுபோல் பதவியில் அமர்த்தியிருக்கிறீர்கள். பொறுப்பு தீர்ந்துவிட்டதாகக் கருதிப்

போய்விடாதீர்கள்! பொறுப்பு இனிமேல்தான் அதிகமாக இருக்கிறது. என்னை உங்கள் குடும்பத்துச் சகோதரனாக எண்ணிக் கொள்ளுங்கள். ஆட்சிக்கு முற்றிலும் புதியவர்கள் நாங்கள். எனவே தவறு நிகழ்ந்தால் தயங்காமல் எடுத்துக் கூறுங்கள்.

★

எண்ணிக்கை அளவைக் கொண்டுதான் விஷயங்கள் கணிக்கப்படவேண்டும் என்றால், நாம் நமது தேசியப் பறவையாக மயிலைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடாது. காகத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

★

எந்தப் பணி மூலம் தமிழகத்தை அறியவும், உலகத்தை உணரவும், தமிழ்ப் பண்பை நுகரவும் வழி கிடைத்துவந்ததோ, அந்தப்பணியினைச் செய்ய முடியவில்லை என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, சூழ் நிலையின் கைதியாக்கப் பட்டுக்கிடக்கிறேன்.

★

வறுமையிலே பலர் வாடிக் கிடக்கும்போது செல்வம் ஒரு சிலரிடம் மட்டும் இருப்பது முள் குவியலுக்கு மேலே போர்த்தி வைக்கப் பட்டிருக்கும் பீதாம்பரம் அது. சுழல் அடிக்கும் கடலிலே மிதக்கும் தோணி!

★

காய்ந்த மாடு கம்பங் கொல்லையைக் கண்டதுபோல் பணத்தையே காணாதிருந்தவனிடம் ஏராளமான பொதுப்பணம் இருக்குமானால் சபலம் தட்டும். இவ்வளவு பணமிருக்கும்போது நாம் ஏன் கொஞ்சம் சுகம் அனுபவிக்கக்கூடாது என்று ஆசை பிறக்கும். அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று தூண்டும் இச்சை மிகக் கெட்டது.

★

பனியிலே குளிர் உண்டாகிறது. வெயில் உடல் எரிச்சலைத் தருகிறது. வறுமையும் அப்படித்தான். அதை அனுபவிப்பவர்களுக்கு வேதனை ஊட்டி அவர்களின் சுபாவத்தை மாற்றுகிறது. தர்மப் பிரபுக்கள் என்று சிலரும் தரித்திரப் பூச்சிகள் என்று பலரும் இருக்கும் வரையில் மனித சுபாவமும் அந்தப் பொருளாதார நிலைக்கு ஏற்றபடி தான் அமையும்.

★

சமதர்மம் என்றால் சாவடியிலே தூங்குபவனிடம் பொருளை வாரிக் கொடுப்பதல்ல.

★

சிங்காரச் சீமான்கள் தலைவர்களாகிவிட சமதர்மம் மக்களை மயக்கும் தாலாட்டு! நீலாம்பரி இராகம்! ஆனால் உண்மைச் சமதர்ம வாதிகள் நீலாம்பரியை நிலையற்றதாக்கி விடுவார்கள்.

★

பொன் உருக்கு மேனி. பூவைப் பதிக்கும் விழியினர். கொவ்வை இதழினர். குயில் மொழியினர். கோமளவல்லிகளின் நடையே நடனம்! இடையோ ஆண்டவனுக்குச் சமானம். உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்க வேண்டிய சிற்றிடை!

★

மலையாள நாட்டின் எழிலை என்னென்பேன்! தென்றல் கமழும் நாடு! சிங்காரச் சிற்றாறுகளும் அலங்கார அருவிகளும் உள்ள மண்டலம். கிள்ளைமொழிக் குமரிகளின் கீதம், வானுலகம் வேண்டாம் என்று எவரையும் கூறிடச் செய்யும் வீடுகள் தோட்டத்தின் நடுவே! ஒருபுறம் ஓடை! மற்றோர்புறம் கனிதரும் மரங்கள்! இடையே அந்தக் கன்னிகா ரத்தினங்கள்! சேரநாட்டு இளநங்கையர் என்று செந்தமிழில் பாரதியார் செப்பியதும் வீணல்ல

★

சீமான்களின் சொகுசுக்குச் சுந்தரிகளைப் பலியிடும் சூழ்ச்சியே நாட்டியக்கலை.

★

மக்களைப் பாழ்படுத்தச் சமதர்மவாதி என்று முகமூடியணிந்து கொண்டு திரிவதைவிட கலை கலையென்று கூறிக் காலங்கழித்துக் கொண்டிருப்பதால் சமுதாயத்திற்கு கேடு ஒன்றும் அதிகமாகப் பெருக சந்தர்ப்பமிராது.

★

யாரையேனும் கொட்டிவிட்ட பிறகு தேள் அவன் எப்படித் துடிக்கிறான்? என்ன மருந்து தேடுகிறான் என்பதைக் காண விரும்பு கிறதா? வேலை முடிந்ததும் வேறிடம் செல்லும். அப்படித்தான் காதல் மயக்கத்தில் ஈடுபட்ட கன்னியரிடம் காளையர் நடந்துகொள்வதும்.

★

காதலுக்குச் சாதி கிடையாது. உண்மைதான். ஆனால் காதலுக்குக் கண்ணும் கிடையாது.

★

பார்ப்பன குலத்தவர் நாகரிகமோ நடையுடை பாவனைகளோ தெரியாதவர்களல்ல. அந்தக் குலத்தவர்தான் அவைகளைத் திறம்படச் செய்வதில் வல்லவர்கள். சமரச ஞானம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிவது மட்டுமா? சமரச ஞானபோதகர்களாகவும் அவர்கள் திகழ்வர். ஆனால் எல்லாம் பேச்சளவோடு நின்றுவிடும்.

★

கள்ளனுக்குக்கூடத் தனக்குக் கிடைத்த பொருளை இழந்துவிட மனம் வருவதில்லை. கொண்ட கணவனைத் திண்டாடவிட்டுக் கொல்லைப்புறத்தின் வழியாக கள்ளப்புருடனைச் சேர வருபவளை அந்தச் சோரநாயகன், 'அவனைப் பார்த்துச் சிரித்தாயாமே? இவனுடன் பேசினாயாமே?' என்று அதிகாரம் செய்து ஆர்ப்பரிப்பானும் கணவனுக்குத் துரோகம் செய்த அந்தக் காதகி அன்புடனிருக்கும் புருஷனை ஆட்டிப் படைக்கும் அந்த அடங்காப்பிடாரி சோரநாயகனுக்கு அடங்கி ஒடுங்கி நடப்பாளாம். அதுபோல இருக்கிறது சமுதாயம்!

★

சூரியனுக்குத் தெரிகிறதா தாமரை தன்னிடம் இலயித்தே மலருகிறது என்ற உண்மை? மேகத்துக்குத் தெரியுமா மயிலின் நடனத்திற்குக் காரணம் அப்பறவை தன்னிடம் கொண்ட காதல் என்று?

★

ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து தப்பவேண்டுமானால் பெண்களுக்குத் தந்திரம்தான் தாரக மந்திரம். பெண்களை ரம்பையே, ஊர்வசியே என்று புகழ்வதாலும் உன் மீதுதான் எனக்கு உயிர் என்று பேசுவதாலும் உன்னை நான் எப்போதும் கைவிடமாட்டேன் என்று சத்தியம் செய்வதாலும் ஏமாற்றுகிறார்கள். முகத்திலே ஜொலிப்புக் குறைந்தால் தீர்ந்துவிட்டது. வழக்கமாகச் செய்துகொள்ளும் அலங்காரங்களிலே கொஞ்சம் குறைந்தாலும் போதும் வேறு அழகிகளிடம் ஆண்களுக்கு மோகம் பிறந்துவிடுகிறது. ஆகவேதான் பெண்கள் தந்திரத்தைக் கொஞ்சமும் தளரவிடலாகாது.

★

எந்தக் குலம் செருக்குடன் வாழுகிறதோ அதனிடம் பயபக்தியுடன் பாடுபடும் கூட்டம் அடங்கி நடக்கிறது.

★

சேற்றிலேதான் தவளை இருக்கும். தவளைக்கும் சேறுதான் கிடைக்கும்.

★

ஒரு மங்கையைத் தழுவ ஆவலுடன் ஒரு ஆடவன் செல்லும் நேரம் எப்படிப்பட்டது? அந்தச் சமயத்திலே அவனுடைய உணர்ச்சியும் உயிர்த் துடிப்பும் உடல பதைப்பும் எடுத்துரைக்கும் கவியும் உண்டோ? மலை கடுகாகவும் பாம்பு பழுதாகவும் தோன்றுமாம் அப்படிப்பட்ட சமயத்திலே.

★

சுகத்தைத் தியாகம் செய்ததினால் அன்றோ சித்தார்த்தர் புத்தரானார்.

★

சொந்த வாழ்க்கையிலே அக்கறை காட்டுவது ஒரு சபலம். அதனை நீக்காதவர்களால் பொது வாழ்க்கை என்னும் போர்க்களத்திலே உலவமுடியாது.

★

பளபளப்பு வைரததிலும் உண்டு கத்தியிலும் உண்டு. ஆனால் விளைவு இரண்டுக்கும் ஒன்றாகுமா?

★

எரிமலை நெருப்பைக் கக்கும். சுற்று வட்டாரத்தையே அழித்து விடும். ஆனால் அதற்குப் பயந்து அதனருகே வாழாமலா இருக்கிறார்கள்? கவிழ்ந்தால் உயிர்போகும் என்பதைத் தெரிந்துகொள்ளாமலா கடலிலே பிரயாணம் செய்கிறார்கள்? பூகம்பங்கள் எவ்வளவோ ஏற்பட்ட பிறகுதானே பூமியிலே நாம் வாசம் செய்கிறோம். பொது வாழ்விலே எரிமலை, அலைகடல், பூகம்பம, தீ எல்லாம் உண்டு. அவைகளிலே வெந்தும் சாம்பலாகாத சித்தம் வேண்டும்.

★

அச்சிட்டோர்: ஜோதிமணி பிரஸ், மதுரை—69.